# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க,*
## *ஊழல் எதிர்ப்புச் சட்டம்*

---

[*2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2023*, ஓகத்து மாதம் *11* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *324.00*** **தபாற் செலவு : ரூபா *200.00***

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க,**
**ஊழல் எதிர்ப்புச் சட்டம்**

*[2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

*ச.வ.- ஓ. 61/2018*

***ஊழலுக் கெதிரான ஐக்கிய நாடுகள் சபைச் சமவாயத்தின் குறித்தசில ஏற்பாடுகளுக்கும் மற்றும் வேறு சர்வதேச ரீதியில் ஏற்றங்கீரிக்கப்பட்ட நெறிகள், நியமங்கள் அத்துடன் மிகச்சிறந்த செயல்முறைகள் என்பற்றுக்கும் பயன்கொடுப்பதற்கும்; இலஞ்சம், ஊழல்பற்றிய சார்த்துதல்களை மற்றும் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தலுடன் தொடர்பு பட்ட தவறுகளை மற்றும் இணைந்த தவறுகளைக் கண்டுபிடித்து புலனாய்வு செய்வதற்கும், இலஞ்சம், ஊழல்பற்றிய தவறுகளுக்காகவும் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தலுடன் தொடர்பு பட்ட தவறுகளுக்காகவும் மற்றும் வேறு இணைந்த தவறுகளுக்காகவும் குற்றவழக்குகள் தொடுக்கப்படு வதனைப் பணிப்பதற்கும் அவற்றைத் தொடுப்பதற்கும் சுயாதீனமான ஆணைக்குழுவொன்றைத் தாபிப்பதற் காக ஏற்பாடுசெய்வதற்கும்; ஊழற் பழக்கங்களைத் தடுப்பதனை ஊக்குவிப்பதற்கும் முன்னெடுத்துச்செல்வ தற்கும்; ஊழலை முறியடிப்பதற்கு பொதுமக்களுக்கு அறிவு புகட்டுவதற்கும் அவர்களிடையே விழிப் புணர்ச்சியை எழுப்புவதற்கும்; (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டம், 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம் மற்றும் 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தற் சட்டம் என்ப வற்றை நீக்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்பு பட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்க ளுக்குமானதொரு சட்டம்.***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்*

***1.*** *(1)* இச்சட்டம், *2023* ஆம் ஆண்டின் *9* ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*(2)* இப்பிரிவு தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியில் நடைமுறைக்குவருதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தின் ஏற்பாடு ஒவ்வொன்றும் இப்பிரிவு நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து பதினெட்டு மாதங்களுக்குப் பிந்தாமல் நடைமுறைக்குவருதல் வேண்டும்.

*(3)* இப்பிரிவின் ஏற்பாடுகள், அரசியலமைப்பின் *79* ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றுரை அதன்மீது புறக்குறிப்பிடப்பட்ட தேதியன்று நடைமுறைக்குவருதல் வேண்டும்.

*சட்டத்தின் குறிக்கோள்கள்*

***2.*** *(1)* இச்சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) ஒரு சனநாயக சமூகத்தின் பொது நல்வாழ்வின் நீதியான தேவைப்பாடுகளை எதிர்கொள்வதற்கென இலஞ்சத்தையும் ஊழலையும் தடுத்தலும் அடியோடு அழித்தலும்;

(ஆ) ஆளுகையில் வெளிப்படையானதன்மையை அதிகரித்தல்;

(இ) ஆளுகையின் ஒருமைப்பாட்டை வலுப்படுத்துதலும் வகைகூறவேண்டியமையை அதிகரித்தலும்;

(ஈ) அரசாங்கம் தொடர்பில் பொதுமக்களின் நம்பிக்கையை அதிகரித்தலும் ஊழலை அடியோடு அழிப்பதற்குப் பொதுமக்களின் பங்குபற்றுகையை வலுப்படுத்துதலும்;

(உ) இச்சட்டத்தின்கீழான தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் இச்சட்டத்தின்கீழ் அதன்மீது சுமத்தப்பட்ட பொறுப்புடைமைகளை நிறைவேற்றுவதற்கும் சுயாதீனமான ஆணைக்குழுவொன்றைத் தாபித்தல்;

(ஊ) இலஞ்சம், ஊழல், சொத்துக்களும் பொறுப்புக்களும் தொடர்பான தவறுகள் மற்றும் இணைந்த தவறுகள் என்பனபற்றிப் பூர்வாங்க விசாரணைகளையும் புலனாய்வுகளையும் நடாத்துவதற்கும் அவற்றுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்கும் சொல்லப்பட்ட ஆணைக்குழுவுக்குப் பணிப்பாணை விடுத்தல்;

(எ) இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுத்தல் பற்றிக் கல்விசார் செயற்பாடுகளை நடாத்துதலும் ஒருங்கிணைத்தலும்;

(ஏ) பகிரங்க உத்தியோகத்தர்கள் கள்ளமானமுறையில் செல்வந்தராவதனைத் தடுப்பதற்கென சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துவதற்கான பயனுள்ள முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல்;

(ஐ) இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதில் முகவராண்மைகளுக்கிடையிலான ஒத்துழைப்பையும் சர்வதேச உடனுழைப்பையும் ஊக்குவித்தல்; அத்துடன்

(ஒ) இலங்கையானது திறத்தவரொருவராகவுள்ள ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சபைச் சமவாயத்தின்கீழும் ஊழல் தடுப்புத் தொடர்பான வேறேதேனும் சர்வதேசச் சமவாயத்தின்கீழுமான கடப்பாடுகளுக்குப் பயன் கொடுத்தலும் இலங்கையில் நேர்மைக் கலாசாரத்தை நிலைநாட்டுவதற்கென சர்வதேச நியமங்களையும் மிகச்சிறந்த செயல்முறைகளையும் ஏற்றங்கீகரித்தலும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ''ஆளுகை'' என்பது, வகைகூறவேண்டியமை, வெளிப்படையானதன்மை, பதிலிறுக்குந் தன்மை, சட்டவாட்சி மற்றும் நிலையுறுதி என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்ட முறைமைகளையும் நடைமுறைகளையும் உள்ளடக்கும்.

பாகம் I

அத்தியாயம் I

**ஆணைக்குழுவைத் தாபித்தல்**

இலஞ்சம் அல்லது ஊழலுக்கெதிரான சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான சுயாதீன ஆணைக்குழுவைத் தாபித்தல்

**3.** (1) (இதனகத்துப்பின்னர் ''ஆணைக்குழு'' எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) இலஞ்சம் அல்லது ஊழலுக்கெதிரான சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழு எனவழைக்கப்படவேண்டியதும் அறியப்படவேண்டியதுமான ஆணைக்குழுவொன்று இச்சட்டத்திற்கான நோக்கங்களுக்காகத் தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தலும் இடையறா வழியுரிமையையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டதாகவிருத்தலும் வேண்டுமென்பதுடன் அத்தகைய பெயரில் வழக்குத்தொடுக்கலாம் மற்றும் அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

(3) ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்து வதற்காகவும் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காகவும் பணிகளைப் புரிவதற்காகவும் இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தத்து வங்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத் தின்கீழ் அதற்களிக்கப்பட்ட பொறுப்புடைமைகளை நிறைவேற்று தலும் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது அதன் தத்துவங்களையும் பணிகளை யும் அத்தகைய தத்துவங்களை அல்லது பணிகளைப் பிரயோகிப்ப தில் அல்லது புரிவதில் ஆணைக்குழுவை பணிப்பதற்கு அல்லது மேற்பார்வை செய்வதற்கு சட்டத்தின்கீழ் உரித்துடையதாகவுள்ள ஒரு நீதிமன்றம் அல்லது நியாயசபை தவிர வேறு எவரேனும் ஆளிட மிருந்து வருகின்ற ஏதேனும் பணிக்கு அல்லது தலையீட்டுக்கு அமை யாமல் பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும்.

(5) இப்பிரிவில் (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறாக ஆணைக்குழுவின் தத்துவங்களை அல்ல பணிகளை பிரயோகிப்ப துடன் அல்லது புரிவதுடன் சட்ட அதிகாரமின்றி தலையிடுகின்ற அல்லது தலையிடுவதற்கு எத்தனிக்கின்ற ஒவ்வோராளும், யூரர் சபை இல்லாத விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பக்கப்படுவதன் மீது ஓராண்டு காலப்பகுதிக்கு நீடிக்கக்கூடிய, ஒரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற் தண்டனையினால் அல்லது குற்றப்பணத்தினால் அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டினாலும் மேல்நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், அத்துடன் சேர்த்து மேலதிமாக-

(அ) அத்தகைய குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு ஆண்டுகளை விஞ்சாத ஒரு காலப்பகுதிக்கு-

(i) மக்கள் தீர்ப்பொன்றில்;

(ii) குடியரசின் சனாதிபதியின் ஏதேனும் தேர்த லில்; அல்லது

(iii) பாராளுமன்றத்தின் மாகாணசபையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவரின் ஏதேனும் தேர்தலில் தேருநர் ஒருவராக இருப்பதிலிருந்தும் வாக்களிப்பதிலிருந்தும் தகைமையற்றவர் ஆகவிருக்கலாம்; அல்லது

(ஆ) ஏதேனும் பகிரங்க பதவியை வகிப்பதிலிருந்தும் பகிரங்க அலுவராக தொழிலுக்கமர்த்தப்படுவதிலிருந்தும் தகமைய்றவராகவிருக்கலாம்.

ஆணைக்குழுவின் அமைப்பு

**4**. (1) பின்வருவோருக்கிடையிலிருந்து அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது சனாதிபதியினால் நியமிக்கப்பட்டவர்களான மூன்று உறுப்பினர்களை ஆணைக் குழுவானது கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) சட்டத்தில் நிபுணத்துவம் கொண்டவரும், மேன்மையடைந்துவரும் மற்றும் ஆகக்குறைந்தது இருபதாண்டுகளைக் கொண்ட அனுபவத்தை கொண்டுள்ளவருமான ஆளொருவர்; அத்துடன்

(ஆ) பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறைகளில் நிபுணத்துவம் கொண்டவர்களும், மேன்மையடைந்தவர்களும் மற்றும் ஆகக் குறைந்தது இருபதாண்டுகளைக் கொண்ட அனுபவத்தை கொண்டுள்ளவர்களுமான இரண்டு ஆட்கள்:-

(i) குற்றப்புலனாய்வு மற்றும் சட்ட வலுவுறுத்தல்;

(ii) சட்ட - மருத்துவக் கணக்காய்வு;

(iii) சட்ட - மருத்துவக் கணக்கியல்;

(iv) பொறியியல்;

(v) சர்வதேசத் தொடர்புகளும் இராஜதந்திரச் சேவைகளும்;

(vi) பகிரங்க அலுவல்களின் முகாமை; அல்லது

(vii) பொது நிருவாகம்.

(2) ஆணைக்குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும் -

(அ) இலங்கையின் பிரசையொருவராக இருத்தல் வேண்டும்;

(ஆ) ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்ட தேதியன்றுள்ளவாறாக அறுபத்திரெண்டு வயதுக்கு மேற்பட்டவராக இருத்தலாகாது;

(இ) உடல்ரீதியிலும் உளரீதியிலும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்;

(ஈ) தகுதிவாய்ந்தவராகவும், நேர்மையானவராகவும், உயர் ஒழுக்க நேர்மையுடையவராகவும், நன்மதிப்புள்ளவராகவும் இருத்தல் வேண்டும்;

(உ) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுமுன்னர் ஊதியம்பெறும் வேறெல்லாப் பதவிகளையும் கைதுறந்தவராக இருத்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் ஊதியம்பெறும் பதவியை வகிக்கின்ற ஆளொருவர், அத்தகைய உறுப்பினராகப் பதவியேற்குமுன்னர் அத்தகைய ஆள் ஊதியம்பெறும் எல்லாப் பதவிகளையும்

கைதுறந்தால், ஆணைக்குழுவின் உறுப்பினரொரு வராக நியமிக்கப்படுவதற்காகக் கவனத்துட்கொள்ளப் படலாம்;

(ஊ) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக இருக்கையில் ஏதேனும் தொழிலைக் கொண்டுநடாத்துதலாகாது அல்லது ஏதேனும் உயர்தொழிலைப் பின்தொடருதலாகாது; அத்துடன்

(எ) அத்தகைய உறுப்பினராகப் பதவியேற்குமுன்னர் நிலவுகின்ற எழுத்திலான சட்டங்களுக்கிணங்க அரசியலமைப்புப் பேரவைக்கு அவரது சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துதல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் உறுப்பினர்களுள் ஒருவர், ஆணைக்குழுவின் தவிசாளராகவிருப்பதற்கு அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது சனாதிபதியினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக இருப்பதிலிருந்தான தகைமையீனங்கள்

**5**. ஆளொருவர், பின்வருமாறிருப்பின், ஆணைக்குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து, அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையற்றவராதல் வேண்டும்; அத்தகைய ஆள் -

(அ) குற்றப்பணமொன்றினால் மட்டும் தண்டிக்கப்படற்பாலதானவொரு தவறல்லாத குற்றவியல் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(ஆ) தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுள்ளவொரு நீதிமன்றத்தினால் ஒரு கடனிறுக்க வகையற்றவராகத் தீர்ப்பளிக்கப்படின்;

(இ) சித்தசுவாதீனமற்றவராகவிருப்பின் அல்லது வரின் அல்லது சட்டத்தின்கீழ் தனது கடமைகளை நிறைவேற்ற இயலாதவராகவிருப்பின்;

(ஈ) அத்தகைய ஆளின் கடமைகள் தொடர்பாகப் பாரதூரமான துர்நடத்தைக்குக் குற்றவாளியாகவிருப்பின்;

(உ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தனது கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறின்;

(ஊ) ஏதேனும் அரசியற் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியொருவராக இருப்பின் அல்லது இருந்திருப்பின்; அல்லது

(எ) தேர்தல்களுக்கு ஏற்புடையற்பாலனவான முறையான சட்டங்களினது ஏற்பாடுகளின்கீழ் நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தல்களின், பாராளுமன்றத் தேர்தல்களின், மாகாணசபைத் தேர்தல்களின் அல்லது எவையேனும் உள்ளூராட்சித் தேர்தல்களின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் அரசியற் கட்சியில் ஏதேனும் பதவியை அல்லது உறுப்பாண்மையை வகிப்பின் அல்லது வகித்திருப்பின்.

ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரைப் பதவியிலிருந்து அகற்றுதல்

**6.** (1) எண்பிக்கப்பட்ட துர்நடத்தை அல்லது நிரந்தரத்தன்மையினதான உடல், உள அல்லது வேறு உடற்றகுதியீனம் அல்லது இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழான தகைமையீனம் என்ற ஏதுவின் மீது ஆணைக்குழு உறுப்பினரொருவரின் பதவி அகற்றுகைக்காக (சமுகமளிக்காதோருட்பட) பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையினரின் பெரும்பான்மையோரினால் ஆதரிக்கப்பட்ட பாராளுமன்ற உரையொன்றுக்கான தீர்மானத்தின் மீது அத்தகையவோர் உரையின் பின்னர் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்று அத்தகைய பதவி அகற்றுகைக்காக முன்வைக்கப்பட்டிருந்தால்தவிர, அவர் பதவியிலிருந்து அகற்றப்படுதலாகாது:

ஆயின், அத்தகையவோர் உரையை முன்வைப்பதற்கான தீர்மானமெதுவும், அத்தகைய தீர்மானம்பற்றிய அறிவித்தல் பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையினரின் மூன்றிலொரு பங்கினருக்குக் குறையாதோரினால் கையொப்பமிடப்பட்டு சார்த்தப்பட்ட துர்நடத்தை அல்லது உடற்றகுதியீனம்பற்றி முழுவிபரங்களையும் எடுத்துக்காட்டினாலொழிய, சபாநாயகரினால் ஏற்றுக்கவனிக்கப்படுதலோ அல்லது பாராளுமன்றத்தின் ஒழுங்குப்பத்திரத்தில் இடப்படுதலோ ஆகாது.

(2) உறுப்புரை 107 இன் (3) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட உயர்நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதியொருவரைப் பதவி அகற்றுவதற்காகப் பாராளுமன்றத்தின் உரையொன்றை முன்வைத்து நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை முறை, ஏற்ற மாற்றங்களுடன் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரின் பதவி அகற்றுகைக்காகப் பாராளுமன்றத்தின் உரையொன்றை முன்வைத்து நிறைவேற்றுவதற்கு எல்லாம் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டும்.

*ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் பதவிவிலகுதல்*

**7.** (1) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர், அதற்கெனச் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதமொன்றின்மூலம் அவரது பதவியிலிருந்து எந்நேரத்திலும் விலகலாமென்பதுடன் அத்தகைய பதவிவிலகுகை எழுத்தில் சனாதிபதியினால் ஏற்றுக் கொள்ளப்படுவதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

(2) சனாதிபதி, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது, பதவிவிலகிய உறுப்பினரின் இடத்தில் புதியவோர் உறுப்பினரை, அத்தகைய உறுப்பினர் பதவிவிலகியதிலிருந்து இரு வாரங்களினுள் நியமித்தல் வேண்டும்.

*ஆணைக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம்*

**8.** (1) ஆணைக்குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், அத்தகைய உறுப்பினர் இறப்பின்மூலம், பதவிவிலகுவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் பதவியை முன்னரே வறிதாக்கினாலொழிய, மூன்றாண்டுக்காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலுமாகாது:

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்ட முதலாவது ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், பின்வரும் முறையில் நியமனத் தேதியிலிருந்து பதவிவகித்தல் வேண்டும்:-

(அ) தவிசாளர் ஐந்தாண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்;

(ஆ) தவிசாளர் அல்லாத வேறோர் ஆணையாளர் நான் காண்டு காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும்; அத்துடன்

(இ) எஞ்சியுள்ள ஆணையாளர் மூன்றாண்டுக் காலப்பகுதி யொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(2) பதவிக்காலப்பகுதி முடிவுறுவதன் காரணமாக ஆணைக்குழுவின் உறுப்பினரொருவரின் பதவியில் வெற்றிட மொன்று எழுகின்றவிடத்து, அத்தகைய உறுப்பினர் அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டு மூன்று மாதங்களினுள் அரசியலமைப்பு பேரவையினால் விதப்புரையின்மீது சனாதிபதியினால் அவரினி டத்தில் புதிய ஓர் உறுப்பினர் நியமிக்கப்படும்வரை அத்தகைய பதவியில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

ஆணைக்குழு உறுப்பினர்களின் ஊதியம்

**9**. ஆணைக்குழு உறுப்பினர்களின் ஊதியங்கள் -

(அ) பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதல் வேண்டு மென்பதுடன் அவர்களின் பதவிக்காலங்களின்போது குறைக்கப்படுதலுமாகாது.

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஏதேனும் அக்கறையை வெளிப்படுத்துதல்

**10**. (1) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் அத்தகைய உறுப்பினராகப் பதவியேற்குமுன்னர் அத்தகைய நியமனத்தேதி யன்றுள்ளவாறு அவரது அக்கறைகள் பற்றிய பொது வெளிப் படுத்துதலொன்றை அரசியலமைப்புப் பேரவைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின்முன்னர் எடுக்கப்படவுள்ள ஏதேனும் கருமத்தில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் அக்கறை கொண்டுள்ள ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் அத்தகைய அக்கறையின் தன்மையை ஆணைக்குழுவுக்கு வெளிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அக்கருமம் தொடர்பான ஆணைக்குழுவின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிபில் பங்குபற்றுதலுமாகாது.

வெற்றிடமொன்று காரணமாகச் செயல்கள் செல்லுபடியற்றனவாகாது

**11.** ஆணைக்குழுவின் செயல் அல்லது முடிபு அல்லது நடவடிக்கை எதுவும், உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினரொருவரின் நியமனத்திலான ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

ஆணைக்குழுவின் இலச்சினை

**12.** (1) ஆணைக்குழுவின் இலச்சினையானது ஆணைக்குழுத் தவிசாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் இலச்சினையானது ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) ஆணைக்குழுவின் இலச்சினையானது ஆணைக்குழு உறுப்பினரொருவரினதும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியினதும் சமுகத்தில்தவிர அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி இல்லாதிருப்பின் ஆணைக்குழுவின் எவரேனும் இரு உறுப்பினர்களின் சமுகத்தில்தவிர ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுதலாகாது; அவர்கள் தாம் சமுகமாயிருந்தனர் என்பதற்கத்தாட்சியாக அச்சாதனத்தில் அவர்களின் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும்.

ஆணைக்குழு பாராளுமன்றத்துக்கு வகைகூற வேண்டியதாகும்

**13.** ஆணைக்குழுவானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்துக்குப் பொறுப்புள்ளதாகவும் வகைகூறவேண்டியுள்ளதாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின் பிரிவு 159 இன் ஏற்பாடுகளுக்

கிணங்க, ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும் அத்தகைய ஆண்டின்போது அதன் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கைகளைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.

ஆணைக்குழுவின் கூட்ட நடப்பெண்

**14.** (1) பிரிவு 41 இன் கீழும் 65 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழும் ஆணைக்குழு அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்குமான அதன் கூட்டநடப்பெண் இரண்டு உறுப்பினர்களாதல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் உடன்பாடின்மை ஏற்படும் பட்சத்தில் பெரும்பான்மையோரின் முடிவு மேலோங்கி நிற்றலும் வேண்டும்.

(2) பிரிவு 41 இன்கீழும் 65 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழும் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களும் பணிகளும்தவிர இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிப்பதற்கான அல்லது ஏதேனும் பணியை நிறைவேற்றுவதற்கான ஆணைக்குழுவின் கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

நடத்தைக் கோவை

**15.** (1) ஆணைக்குழுவின் உறுப்பினர்களும், ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியும் மற்றும் பணியாட்டொகுதியினரும் ஆணைக்குழுவின் நடத்தைக் கோவைக்கு அமைந்தோராதல் வேண்டும். நடத்தைக் கோவையானது ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய கோவையின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது எவையேனும் ஏற்பாடுகளை மீறுகின்றவராகக் காணப்படுகின்றவரான இவ்வாணைக்குழுவின் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் அல்லது அவரது சேவைகள் 27 ஆம் பிரிவின்கீழ் தக்கவைத்துகொள்ளப்படுகின்றவரான வேறெவரேனுமாள், இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட விதிகளின் மூலம் குறித்துரைக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைக்கு அமைந்தவராதல் வேண்டும்.

ஆணைக்குழுவின் பொறுப்புடைமைகள்

**16.** (1) ஆணைக்குழுவானது விதிகளை அழுத்திக் கூறுவதன் மூலமும் வலுவுறுத்துவதன்மூலமும் ஊழலைத் தடுத்தல் தொடர்பான தோதான கல்வியை அல்லது பயிற்சியை வழங்குவதன்

மூலமும் அதன் பணியாட்டொகுதி உறுப்பினர்களினால் அவர்களின் பதவிதொடர்பாக அதனைத் தடுப்பதற்கு நியாயமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(2) முறைகேடான நிருவாகத்தை உட்படுத்துகின்ற அல்லது ஆணைக்குழுவின் நடத்தைக் கோவைக்கு வேறுவகையில் ஒவ்வாததாகவுள்ள சட்டமுறையற்ற, ஒழுங்கீனமான அல்லது நன்னெறியுடன் ஒவ்வாதமுறையில் செயலாற்றுவதற்கு நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் எவரேனுமாளினால் கட்டாயப் படுத்தப்படுகின்ற ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர், பணிப்பாளர் தலைமையதிபதி, ஊழியர் அல்லது 27 ஆம் பிரிவின் கீழ் அவரது சேவைகள் தக்கவைத்துக்கொள்ளப்படுகின்ற எவரேனுமாள், ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கிணங்க அதுதொடர்பில் முறைப்பாடொன்றைச் செய்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஒரு முறைப்பாட்டைச் செய்யும் எவரேனுமாளுக்குப் பங்கமெதுவும் விளைவிக்கப்படாதிருப்பதனை ஆணைக்குழு உறுதிப்படுத்துதல் வேண்டும்.

அத்தியாயம் II

## ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியும் பணியாட்டொகுதியினரும்

*பணிப்பாளர் தலைமையதிபதியை நியமித்தல்*

**17.** (1) சனாதிபதி, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின்மீது (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பணிப்பாளர் தலைமையதிபதியொருவரை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் கலந்தாலோசனையின் பின்னர் இச்சட்டத்தின்கீழ் அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும், கடமைகளைப் புரிவதற்கும், பணிகளை நிறைவேற்றுவதற்கும் என ஆணைக்குழுவுக்கு நியமித்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதியாகப் பதவியேற்குமுன்னர், பணிப்பாளர் தலைமையதிபதி அவரது நியமனத்தேதியன்றுள்ளவாறாக அவரது அக்கறைகள்பற்றிய பொதுவான வெளிப்படுத்துதலொன்றை அரசியலமைப்புப் பேரவைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின்முன்னர் எடுக்கப்படவுள்ள ஏதேனும் கருமத்தில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறையைக்கொண்டுள்ள பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய அக்கறையின் தன்மையை வெளிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் ஆணைக்குழு வேறுவகையாக முடிபுசெய்தாலொழிய, அக்கருமம் தொடர்பாக ஆணைக்குழுவின் ஏதேனும் கலந்தாராய்வில் அல்லது முடிபில் பங்குபற்றுதலுமாகாது:

ஆயின், ஆணைக்குழுவின் உறுப்பினர்களது பணிப்பின்மீது குற்றப்பகர்வுகளைக் கையொப்பமிடுவதற்குப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குள்ள பொறுப்புடைமையை இது தடைசெய்ய மாட்டாது.

பணிப்பாளர் தலைமையதிபதியின் தத்துவங்களும் பணிகளும்

**18.** பணிப்பாளர் தலைமையதிபதி -

(அ) ஆணைக்குழுவின் பணிப்பின்மீது குற்றப்பகர்வின் மீது அல்லது குற்றச்சாட்டுப்பத்திரத்தின்மீது குற்றவியல் வழக்கு நடவடிக்கையைத் தொடுத்தல் வேண்டும்;

(ஆ) ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும்;

(இ) ஆணைக்குழுவின் பிரதான கணக்கீட்டு அலுவலராக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான அத்தகைய வேறெல்லாக் கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுதல் வேண்டும்.

*பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமிக்கப் படுவதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும்*

**19**. (1) பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்பட்ட ஆள் –

(அ) இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் வேண்டும்;

(ஆ) உடல்ரீதியிலும் உளரீதியிலும் தகுதியானவராக இருத்தல் வேண்டும்;

(இ) குற்றவியல் குற்றவழக்குகளை நடாத்துவதில் ஆகக் குறைந்தது பதினைந்தாண்டுகள் அனுபவத்தையேனும் சிறந்த அறிவையேனும் கொண்டுள்ளவொரு சட்டத் தரணியாக இருத்தல் வேண்டும்;

(ஈ) நியமனத்தேதியிலுள்ளவாறாக ஐம்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டவராக இருத்தலாகாது;

(உ) தகுதிவாய்ந்தவராகவும், உயர் ஒழுக்க நேர்மையுடைய வராகவும், நன்மதிப்புக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்;

(ஊ) பணிப்பாளர் தலைமையதிபதியாகப் பதவியேற்கு முன்னர் வேறெல்லா ஊதியஞ்செலுத்தப்பட்ட பதவி களையும் கைதுறந்திருத்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் ஊதியஞ்செலுத் தப்பட்ட பதவியை வகிக்கின்ற ஆளொருவர், அத்தகைய ஆள் பணிப்பாளர் தலைமையதிபதியாகப் பதவியேற்கு முன்னர் ஊதியஞ்செலுத்தப்பட்ட எல்லாப் பதவிகளை யும் கைதுறந்தால், பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்படுவதற்காகக் கவனத்துட் கொள்ளப்படலாம்;

(எ) பணிப்பாளர் தலைமையதிபதியாகப் பதவியேற்கு முன்னர் நிலவுகின்ற எழுத்திலான சட்டத்தின்கீழ் அவரது சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தியிருத்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், (ஊ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள், பணிப்பாளர் தலைமையதிபதியாக மாற்றுச்சேவையின்மீது அரசாங்க சேவையிலுள்ள எவரேனும் பகிரங்க அலுவலரின் நியமனத்தைத் தடுத்தலாகாது.

(2) ஆளொருவர் பின்வருமாறிருப்பின், அத்தகைய ஆள், பணிப்பாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையற்றவராதல் வேண்டும்:-

(அ) ஒரு குற்றப்பணத்தினால் மட்டுமே தண்டிக்கப்படற்பால தான ஏதேனும் தவறல்லாத ஒரு குற்றவியல் தவறுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(ஆ) தகுதிவாய்ந்த நியாயாதிக்கங்கொண்டவொரு நீதிமன்றத்தினால் கடனிறுக்கவகையற்ற ஒருவரெனத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(இ) சித்தசுவாதீனமற்றவராக அல்லது சட்டத்தின்கீழ் அவரது கடமைகளை நிறைவேற்றுவதற்கு இயலாதவராக இருப்பின் அல்லது வரின்;

(ஈ) அத்தகைய ஆளின் கடமைகள் தொடர்பாகப் பாரதூரமான துர்நடத்தைக்குக் குற்றவாளியாகவிருப்பின்;

(உ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அவரது கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறின்;

(ஊ) ஏதேனும் அரசியற் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியொருவராகவிருப்பின் அல்லது இருந்திருப்பின்; அல்லது

(எ) தேர்தல்களுக்கு ஏற்புடையற்பாலனவான முறையான சட்டங்களின் ஏற்பாடுகளின்கீழ் நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தல்கள், பாராளுமன்றத் தேர்தல்கள், மாகாணசபைத் தேர்தல்கள் அல்லது எவையேனும் உள்ளூராட்சித் தேர்தல்கள் என்பவற்றின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் அரசியற் கட்சியில் ஏதேனும் பதவியை அல்லது உறுப்பாண்மையை வகிப்பின் அல்லது வகித்திருப்பின்.

பணிப்பாளர் தலைமையதிபதி பதவியிலிருந்து விலகுதல்

**20**. பணிப்பாளர் தலைமையதிபதி, அதற்கெனச் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்படும் கடிதத்தின் மூலம் எந்நேரத்திலும் அவரது பதவியிலிருந்து விலகலாம்.

பணிப்பாளர் தலைமையதிபதியை பதவி அகற்றுதல்

**21**. சனாதிபதியானவர் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் 19 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள தகமையீனத்துக்கான ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஏதுக்களின்மீது அல்லது பணிப்பாளர் தலைமையதிபதியின் நடத்தை ஆணைக்குழுவின் தத்துவங்கள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதன் மீது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துமிடத்து மற்றும் நேரடியாக அல்லது முறையாக நியமிக்கப்பட்டவொரு பிரதிநிதி மூலமாகக் கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றை பணிப்பாளர் தலைமையதிபதிக்கு கொடுத்த பின்னரும் அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய, பதவியிலிருந்து அகற்றலாம்.

பணிப்பாளர் தலைமையதிபதியின் இறப்பு, பதவிவிலகுகை அல்லது பதவி அகற்றுகை

**22**. விடயத்துக்கேற்ப, இறப்பு, பதவிவிலகுகை அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுகின்றமை காரணமாகப் பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவி வறிதாகவருமிடத்து, சனாதிபதியானவர், 17 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை முறையாகக் கருத்திற்கொண்டு மூன்றுமாதங்களினுள் வேறோராளைப் பணிப்பாளர் தலைமையதிபதிப் பதவிக்காக நியமித்தல் வேண்டும்.

பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவிக்காலம்

**23**. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, இறப்பின்மூலம், பதவிவிலகுவதன்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, ஐந்தாண்டுக் காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலுமாகாது.

(2) பதவிக்காலப்பகுதி முடிவுறுவதன்மேல் பணிப்பாளர் தலைமையதிபதி பதவியை வறிதாக்குவதன்மீது, புதிய பணிப்பாளர் தலைமையதிபதியொருவர் நியமிக்கப்படும்வரை பணிப்பாளர் தலைமையதிபதியென்ற அவரது தன்மையில் அவர் தொடர்ந்து பணியாற்றுதல் வேண்டும்.

(3) சனாதிபதி அத்தகைய முடிபின் மூன்று மாதங்களினுள் புதிய பணிப்பாளர் தலைமையதிபதியொருவரை அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் மீது நியமித்தல் வேண்டும்.

பணிப்பாளர் தலைமை யதிபதிக்கான ஊதியம்

**24.** பணிப்பாளர் தலைமையதிபதியின் ஊதியம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதலும், திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதலும் வேண்டுமென்பதுடன் ஆணைக்குழுவுடனான அவரது சேவைக் காலப்பகுதியின்போது குறைக்கப்படுதலுமாகாது.

பணிப்பாளர் தலைமையதிபதி தத்துவங்களைக் கையளிக்கலாம்

**25.** (1) பணிப்பாளர் தலைமையதிபதியானவர், ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்ட வேறெவரேனும் தகுதிவாய்ந்த அலுவலருக்கு, இப்பிரிவினால் அவருக்கு அளிக்கப்பட்ட கையளித்தல் தத்துவம் மற்றும் 18 ஆம் பிரிவின் (அ) மற்றும் (இ) என்னும் பந்திகளின்கீழான தத்துவங்கள் மற்றும் பணிகள் என்பன தவிர, பணிப்பாளர் தலைமையதிபதியின் ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையைக் கையளிக்கலாமென்பதுடன் அத்தகைய வேறு அலுவலர், பணிப்பாளர் தலைமையதிபதியின் கட்டுப்பாட்டுக்கும் மேற்பார்வைக்கும் அமைய, அத்தத்துவங்களைப் பிரயோகிக்கலாம் மற்றும் அத்தகைய பணிகளைப் புரியலாம் அத்துடன் அத்தகைய கடமைகளை நிறைவேற்றலாம்.

(2) இறப்பு, பதவிவிலகுகை, பதவி அகற்றுகை அல்லது பதவிநீக்குகை காரணமாகப் பணிப்பாளர் தலைமையதிபதியின் பதவி வறிதாகவரும் பட்சத்தில், பணிப்பாளர் தலைமையதிபதியின் தத்துவங்கள், பணிகள் அல்லது கடமைகள், 22 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதிலிருந்து மூன்று மாதங்களினுள் புதியவொரு நியமனம் செய்யப்படும்வரை ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையின் மீது ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்ட வேறெவரேனும் தகுதிவாய்ந்த அலுவலருக்குச் சனாதிபதியினால் கையளிக்கப்படுதல் வேண்டும்.

ஆணைக்குவின் அலுவலர்களும் ஊழியர்களும்

**26.** (1) ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கமைய, அதன் பணிகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய வேறு அலுவலர்களையும் ஊழியர்களையும் நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கும் ஊழியர்களுக்கும் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன் ஆணைக்குழுவினால்

தீர்மானிக்கப்பட்டு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதலும் அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அவர்கள் அமைந்தவர்களாகவிருத்தலும் வேண்டுமென்பதுடன் அவர்களுக்குச் செலுத்தப்பட்ட அவ்வூதியமானது திரட்டு நிதியத்தின்மீது பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(3) இருபத்தேழாம் பிரிவின்கீழ் எவ்வாட்களது சேவைகள் தக்க வைத்துக்கொள்ளப்படுகின்றதோ அவ் ஆட்களுக்கு, ஆணைக்குழு வினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டுமென்பது டன் அவர்கள் அத்தகைய சேவை நிபந்தனைகளுக்கு அமைந்தோ ராதலும் வேண்டும். அவ்வூதியமானது ஆணைக்குழுவின் நிதியத்தின்மிது பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(4) ஆணைக்குழுவின் கோரிக்கையின்பேரில் 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தின்கீழ் அமைத்துருவாக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவையின் எவரேனும் உறுப்பினர் அல்லது ஓர் உள்ளூரதிகாரசபையின் வேறெவரேனும் அலுவலர் அல்லது உத்தியோகத்தர், விடயத்துக்கேற்ப, அத்தகைய உறுப்பினரினதும் அல்லது அலுவலரினதும், 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவின தும் அல்லது உள்ளூரதிகாரசபையினதும் சம்மதத்துடன், அதே போன்ற சம்மதத்துடன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது விடயத்துக்கேற்ப, ஆணைக்குழுவினாலும் உள்ளூராட்சிச்சேவை ஆணைக்குழுவினாலும் அல்லது அந்த உள்ளூரதிகாரசபை யினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறாக ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவையுட்பட்ட அத்தகைய நியதிநிபந்தனைகளின்மீது அத்தகைய பணியாட் டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(5) ஆணைக்குழுவின் கோரிக்கையின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அத்தகைய அலுவலரினதும் பகிரங்க சேவை ஆணைக்குழுவினதும் அத்தகைய அலுவலரின் நியமிக்கும் அதிகாரியினதும் சம்மதத்துடன், அதேபோன்ற சம்மதத்துடன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய காலப்பகுதிக்கு ஆணைக்குழுவுக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(6) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் ஆணைக் குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படு மிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(7) பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர் ஆணைக்குழு வின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(8) ஆணைக்குழுவின் கோரிக்கையின்பேரில், ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர், அத்தகைய அலுவலரின் அல்லது ஊழியரின் மற்றும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையின் சம்மதத்துடன், அதே போன்ற சம்மதத்துடன் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது ஆணைக்குழுவினாலும் அத்தகைய கூட்டுத்தாபனத்தின் ஆளும் சபையினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறாக, ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவையுட்பட்ட அத்தகைய நியதிநிபந்தனைகளின் மீது ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(9) ஆணைக்குழுவின் கோரிக்கையின்பேரில், 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை அரச கணக்காய்வுச் சேவையின் எவரேனும் உறுப்பினர் அத்தகைய உறுப்பினரின் மற்றும் கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் சம்மதத்துடன் ஆணைக்குழுவினால் அதேபோன்ற சம்மதத்துடன் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது ஆணைக்குழுவினாலும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப் பட்ட கணக்காய்வு சேவை ஆணைக்குழுவினாலும் உடன்பட்டுக் கொள்ளப்படக்கூடியவாறாக, ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவையுட்பட்ட அத்தகைய நியதிநிபந்தனை களின்மீது ஆணைக்குழுவின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

ஆணைக்குழு வேறு ஆளணியினரின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளுதல்

**27**. ஆணைக்குழுவானது, அதன் தத்துவங்களையும் பணிகளை யும் முறையாகவும் பயனுள்ளவகையிலும் புரிவதற்கு அவசியமென அது கருதுகின்றவாறாக நிர்ணயிக்கப்பட்ட கால ஒப்பந்தங்களின்மீது அத்தகைய வேறு அலுவலர்களினதும் ஊழியர்களினதும் சேவை களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கடமைகளை ஏற்குமுன்னர் வெளிப் படுத்துகை கையொப்ப மிடப்படுதல்

**28**. (1) ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர், ஆணைக்குழு வின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் அல்லது 27 ஆம் பிரிவின்கீழ் அவரது சேவைகள் தக்கவைத்துக்கொள்ளப்படுகின்ற வேறெவரேனுமாள், இச்சட்டத் தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காகத் தவிர அல்லது தகவல்களைப் பகிர்வதற்கு இச்சட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவிடத்துத் தவிர, இச்சட்டத்தின்கீழ் அவரது தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் நிறை வேற்றுவதிலும் அவரினால் பெறப்பட்ட, அல்லது அவரது அறிவுக்கு வருகின்ற எவையேனும் தகவல்களை வெளிப்படுத்துதலாகாது.

(2) ஆணைக்குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும், ஆணைக்குழு வின் பணிப்பாளர் தலைமையதிபதியும் மற்றும் ஒவ்வோர் அலுவலரும் அல்லது ஊழியரும் அல்லது 27 ஆம் பிரிவின்கீழ் அவரது சேவைகள் தக்கவைத்துக்கொள்ளப்படுகின்ற வேறெவ

ரேனுமாளும், அவரது பதவிக்குரிய கடமைகளை ஏற்குமுன்னர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக் காகவன்றி, இச்சட்டத்தின்கீழான அவரது தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் அவரினாற் பெறப்பட்ட அல்லது அவரது அறிவுக்கு வருகின்ற எவையேனும் தகவல்களைத் தான் வெளிப்படுத்தமாட்டாரென்ற பொருள்பட்ட வெளிப்படுத்துகையொன்றைக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், பணிப்பாளர் தலைமையதிபதி, 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமையவும் ஆணைக்குழுவின் அனுமதியுடனும், பொதுமக்களுக்கான ஆணைக்குழுவின் வெளிப்படையானதன்மையையும் வகைகூறவேண்டியமையையும் அதிகரிக்கும் நோக்குடன் பத்திரிகைகளிலும், ஊடகத்திலும் மற்றும் சமூக ஊடகத்திலும் வெளியிடும் நோக்கங்களுக்காக, பொதுமக்கள் நலன்கருதி அவசியமென ஆணைக்குழு கருதுகின்றவாறான அத்தகைய தகவல்களை வெளிப்படுத்தலாம்.

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் முதலியவர்கள் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல்

**29.** (1) ஆணைக்குழுவின் உறுப்பினர்களும், ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியும் மற்றும் அலுவலர்களும் ஊழியர்களும் 27 ஆம் பிரிவின்கீழ் அவரது சேவைகள் தக்கவைத்துக்கொள்ளப்படுகின்ற வேறெவரேனுமாளும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்பட பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட ஒவ்வொரு புலனாய்வும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்பட ஒரு நீதிமுறை வழக்குநடவடிக்கையாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதியும் ஒவ்வோர் அலுவலரும் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்பட சமாதான அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

வழக்குகளுக்கான பாதுகாப்பு

**30.** (1) ஆணைக்குழுவின் உறுப்பினர், ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் அல்லது 27 ஆம் பிரிவின்கீழ் எந்த ஆளின் சேவை

கள் தக்கவைத்துக்கொள்ளப்படுகின்றதோ அந்த வேறு எவரேனுமாள் என்போருக்கெதிராக அல்லது எவ்வழியிலும் ஆணைக்குழுவுக்கு உதவுகின்ற வேறெவரேனுமாளுக்கெதிராக, ஆணைக்குழுவின் அத்தகைய உறுப்பினர், ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி, அலுவலர் அல்லது ஊழியர், 27 ஆம் பிரிவின்கீழ் அவரது சேவைகள் தக்கவைத்துக்கொள்ளப்படுகின்ற ஓர் ஆள் அல்லது அவர்களின் கடமைகளை நிறைவேற்றுவதில் ஆணைக்குழுவுக்கு உதவுகின்ற ஓராள் என்ற அவரது தன்மையில் அவரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட ஏதேனும் செயலுக்காக, அவமதிப்புக்காகத் தவிர, குடியியல் அல்லது குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலாகாது.

(2) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் அல்லது ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் அல்லது 27 ஆம் பிரிவின்கீழ் அவரது சேவைகள் தக்கவைத்துக்கொள்ளப்படுகின்ற எவரேனுமாள், இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட ஏதேனும் புலனாய்வின்போது ஆணைக்குழுவினாற் பெறப்பட்ட ஏதேனும் ஆவணத்தை ஏதேனும் நீதிமன்றத்திற்குக் காண்பிப்பதற்கு அல்லது ஆணைக்குழுவின் கவனத்துக்கு வருகின்ற ஏதேனும் கருமத்தை அல்லது காரியத்தை ஏதேனும் நீதிமன்றத்துக்கு வெளிப்படுத்துவதற்கு, அவமதிப்புக்காக ஒரு சட்ட நீதிமன்றத்தின் முன்னரான வழக்குநடவடிக்கைகளின் நோக்கங்களுக்காக அல்லது இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்காக அல்லது (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக் கோவையின் அத்தியாயம் XI இன்கீழான தவறொன்றுக்காக அவசியமாகக்கூடியவாறாகவன்றி, தேவைப்படுத்தப்படுதலாகாது.

(3) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட ஏதேனும் அறிக்கை தொடர்பில் ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினருக்கெதிராக அல்லது அத்தகைய அறிக்கையின் பொருளளவில் உண்மையான விபரம் வேறெவரேனும் ஆளினால் வெளியிடப்படுகின்றமை தொடர்பில் அத்தகைய வேறெவரேனும் ஆளுக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தில் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலாகாது.

அத்தியாயம் III

## நிதி

தேசிய வரவுசெலவுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதற்காக ஆணைக்குழுவானது வருடாந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளைச் சமர்ப்பித்தல்

**31.** (1) (அ) ஆணைக்குழுவானது, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதியினுள் ஆணைக்குழுவின் வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல் வேண்டும்.

(ஆ) சொல்லப்பட்ட மதிப்பீடுகள், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட சொல்லப்பட்ட அமைச்சருடனும் ஆணைக்குழுவுடனுமான கலந்தாலோசனையின்பின்னர் சபாநாயகரினால் முடிபுசெய்யப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று சபாநாயகருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். சபாநாயகர் சொல்லப்பட்ட மதிப்பீடுகளை, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அவதானிப்புகளுடன் பாராளுமன்றத்தின் பரிசீலனைக்காக அதன்முன்னர் இடுதல் வேண்டும்; அத்தகைய வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள் சபாநாயகரிடமிருந்து அவரினால் பெறப்பட்டதிலிருந்து பத்து வேலைநாட்களினுள் அமைச்சர் தனது அவதானிப்புக்களைச் சபாநாயகருக்கு வழங்குதல் வேண்டும். பாராளுமன்றமானது, ஆணைக்குழுவின் வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைப் பரிசீலனைசெய்தபின்னர், பாராளுமன்றம் தகுதியானதெனக் கருதுகின்றவாறாக, அத்தகைய திரிபுகள் எவையேனுமிருப்பின் அவற்றுடன், தேசிய வரவுசெலவுத்திட்டத்தில் சேர்க்கப்படுவதற்காக நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருக்கு மதிப்பீடுகளை அனுப்பிவைத்தல் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கமையவும் மற்றும் (1) ஆம் உப்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட ஏதேனும் தவறு பற்றியவையுமான விசாரணைகளுக்காகவும் புலனாய்வுகளுக்காகவும் குற்றவழக்குகளுக்குமான எல்லாச் செலவுகளையும் திரட்டு நிதியத்தின் மீது அறவிடப்படுதல் வேண்டும்.

(3) ஆணைக்குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) பின்வருவன நிதியத்தினுட் செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) ஆணைக்குழுவின் பாவனைக்காகப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக்காலம் வாக்களிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஆ) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அங்கீகாரத்துக்கமைய, இலங்கையினுள்ளாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி, எத்தகையதுமான ஏதேனும் மூலத்திலிருந்து நன்கொடைகள், கொடைகள், மரணசாதனக்கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையாக ஆணைக்குழுவினால் பெறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(இ) இச்சட்டத்தின் 90 ஆம் பிரிவின்கீழ் நிதியத்துக்கு நிருவாகக் குற்றப்பணங்களாகச் செலுத்தப்படுவதற்குக் கட்டளையிடப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்;

(ஈ) இச்சட்டத்தின் 131 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் நிதியத்துக்கு நட்டஈடாகச் செலுத்தப்படுவதற்குக் கட்டளையிடப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(உ) இச்சட்டத்தின் நியதிகளின்படி ஆணைக்குழுவினால் பெறப்பட்ட அல்லது ஆணைக்குழுவினால் பறிமுதல் செய்யப்பட்ட ஆதனத்தின் விற்பனையிலிருந்தான வரும்படிகளாகவுள்ள அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.

(5) ஆணைக்குழுவானது அதன் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்பட்ட அத்தகைய எல்லாப் பணத் தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(6) நான்காம் உட்பிரிவின் (ஆ) எனும் பந்தியின் கீழ் நன்கொடைகள், கொடைகள் அல்லது மானியக்கொடைகள் என்றவயாக ஏதேனும் பணம் பெறப்படுமிடத்து, கிடைக்கக்கூடியன

வாகச் செய்யப்பட்ட நன்கொடை, கொடை அல்லது மானியக்கொடை என்பவற்றின் மூலம் மற்றும் நோக்கம் என்பன அத்தகைய பெறுவனவின் ஒரு மாதத்தினுள் பகிரங்கப்படுத்தப்படுதல் வேண்டும்.

அத்தியாயம் IV

## ஆணைக்குழுவின் தத்துவங்களும் பணிகளும்

**32.** (1) ஆணைக்குழுவின் அலுவலர்களினதும் ஊழியர்களினதும் நியமனம், பதவியுயர்வு, ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்குதல் என்பன ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன்சார்பில் ஆக்கப்பட்ட விதிகள் மூலம் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான முறையில் நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

*ஆணைக்குழுவின் அலுவலர்கள் முதலியவர்களை நியமித்தல், பதவியுயர்த்துதல் முதலியன*

(2) ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவின் அலுவலர்களும் ஏனைய ஊழியர்களும் தொடர்பாக, அவர்களின் நியமனங்கள், பதவியுயர்வுகள், ஊதியங்கள், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, பதவி நீக்குதல், நடத்தை மற்றும் லீவு வழங்குதல் என்பனவுட்பட, விதிகளை ஆக்குதல் வேண்டும்.

**33.** ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின் பாகம் II இன்கீழ் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வெளிப்படுத்துகைகள் மீது மத்திய அதிகாரியாகச் செயலாற்றுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நோக்கத்துக்காக இச்சட்டத்தின்கீழ் மத்திய அதிகாரியின் தத்துவங்களைப் பிரயோகித்தலும் கடமைகளைப் புரிவதிலும் மற்றும் பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

*சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் வெளிப்படுத்துகைகள் மீதான மத்திய அதிகாரி*

**34.** (1) ஊழலைத் தடுப்பதற்கு இலங்கை பொறுப்பேற்றுள்ள ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சபைச் சமவாயத்துக்கும் வேறேதேனும் சர்வதேசக் கடப்பாடுகளுக்கும் பயன்கொடுப்பதற்கு ஆணைக்குழு இயன்ற எல்லா வழிமுறைகளையும் எடுத்தல் வேண்டும்.

*சர்வதேசச் சமவாயங்கள், உடன்படிக்கைகள், கடப்பாடுகள் முதலியவற்றை நடைமுறைப்படுத்துதல்*

(2) இலங்கை திறத்தவரொருவராகவுள்ள ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சபைச் சமவாயத்திற்கும் ஊழலைத் தடுத்தல் தொடர்பான வேறெவையேனும் சர்வதேசச் சமவாயங்களுக்கும் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதி இலங்கையில் தகுதிவாய்ந்த அதிகாரியாக இருத்தல் வேண்டும்.

*ஊழல் நடத்தை பற்றி ஆணைக்குழு பொதுமக்களின் விழிப்புணர்ச்சியை அதிகரித்தல்*

**35.** ஊழல் நடத்தையின் தீங்குவிளைவிக்கும் விளைவுகள்பற்றிப் பொதுமக்களின் விழிப்புணர்ச்சியை அதிகரிப்பதற்கும் பொது மக்களுக்குத் தகவல்களைப் பரப்புவதற்குமான இயன்ற எல்லா வழிமுறைகளையும் ஆணைக்குழு எடுத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஏதேனும் ஊழல் நடத்தையை முறியடிப்பதில் பொதுமக்களின் ஆதரவைப் பெறுதலும் வளர்த்தலும் வேண்டும்.

*ஊழல் எதிர்ப்புக் கொள்கைகளின் நடைமுறைப் படுத்துகையைக் கண்காணித்தல்*

**36.** ஆணைக்குழுவானது, அரசாங்கத்தின் பயனுள்ள, ஊழல் எதிர்ப்புக் கொள்கைகளினதும் செயல்முறைகளினதும் நடைமுறைப்படுத்துகையைக் கண்காணிப்பதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

*ஊழற் செயல்களைக் கண்டு பிடிப்பதற்குச் சட்டங்கள் முதலிய வற்றைப் பரிசோதனை செய்தல்*

**37.** ஆணைக்குழுவானது, ஊழற் செயல்களையும் அதன் அபிப்பிராயத்தில் ஊழலுக்கு உகந்தனவாகவிருக்கக்கூடிய வேலைமுறைகளையும் அல்லது நடவடிக்கைமுறைகளையும் கண்டுபிடிப்பதற்கென ஏதேனும் பகிரங்க அதிகாரசபையின் சட்டங்கள், செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைமுறைகளைப் பரிசோதனைசெய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

*பகிரங்கக் குழுக்களுக்கு மதியுரை யளித்தலும் உதவி வழங்குதலும்*

**38.** ஊழற் செயல்கள் ஒழிக்கப்படக்கூடிய வழிகளும் வழிவகைகளும் பற்றியும் பொது நிருவாகத்தின் நேர்மையையும் நன்மதிப்பையும் எவ்வாறு ஊக்குவிப்பது என்பது பற்றியும் ஆணைக்குழுவானது, ஏதேனும் பகிரங்க அதிகாரசபைக்கு மதியுரையளிப்பதற்கும் உதவுவதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

*ஊழலை மிகக்குறை வாக்குவதற்குச் சட்டவாக்கச் சீர்திருத்தங்களுக் கான விதப்புரை களை அரசாங் கத்துக்கு வழங்கு தல் முதலியன*

**39.** (1) ஆணைக்குழுவானது ஊழலை மிகக்குறைவாக்குவதற்கு அவசியமென அது கருதுகின்றவாறான எதிர்காலச் சட்டவாக்கச் சீர் திருத்தங்களுக்காகவும், ஊழலுக்கெதிரான சர்வதேசச் சாதனங் களைக் கடைப்பிடிப்பதற்காகவும் ஏற்புறுதிசெய்வதற்காகவும் அரசாங்கத்துக்கு விதப்புரைகளைச் செய்யலாம்.

(2) ஆணைக்குழு ஊழலின் நிலைத்திருப்பு, காரணங்கள் மற்றும் பாரதூரத்தன்மை மற்றும் ஏற்படுத்தும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் பொதுமக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு ஊழலைத் தடுப்பதிலும் அதற்கு எதிராகப் போராடுவதிலும் சிவில் சமூகம், அரசசார்பற்ற மற்றும் சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புகளின் முனைப்பான பங்குபற்றுகையை ஊக்குவித்தல் வேண்டும்.

ஊழலைத் தடுப்பதற்கான வழிமுறைகளும் அதன் பணிகளின் முறையான நிறைவேற்றுகை முதலியனவும்

**40.** ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக -

(அ) சட்டவாட்சியின் கோட்பாடுகள், பகிரங்க அலுவல்களினதும் பொது ஆதனத்தினதும் முறையான முகாமை, ஒருமைப்பாடு, வெளிப்படையானதன்மை, வகைகூறவேண்டியமை என்பவற்றை ஊக்குவிப்பதனை வசதிப்படுத்துவதற்கு ஏதேனும் பகிரங்க அதிகாரசபையுடன் இணையலாம்;

(ஆ) ஓரியல்பான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட ஊழல் எதிர்ப்பு மூலோபாயத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இயைபான நிறுவனஞ்சார், சட்ட மற்றும் நடவடிக்கை முறைசார் ஏற்பாடுகளைப் பரிசீலனைசெய்வதற்கு அரசாங்கத்துடன் இணையலாம்;

(இ) ஊழற்பழக்கங்கள் இடம்பெறும் சாத்தியத்தைக் குறைப்பதற்கு அவசியமென ஆணைக்குழு கருதுகின்ற, அரசாங்கத் திணைக்களங்களின் அல்லது பகிரங்க அதிகாரசபைகளின் கடமைகளைப் பயனுற நிறைவேற்றுவதுடன் ஒத்ததாகவுள்ள செயல்முறைகளிலான அல்லது நடவடிக்கைமுறைகளிலான மாற்றங்கள் பற்றி, அத்தகைய ஆணைக்குழுக்களின் அல்லது பகிரங்க அதிகாரசபைகளின் தலைவர்களுக்கு மதியுரையளிக்கலாம்;

(ஈ) பகிரங்க அதிகாரசபைகளினால் அத்தகைய ஊழலுக்கெதிரான வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுவதனைக் கண்காணிக்கலாம் மற்றும் அதன் நடைமுறைப்படுத்துகை நிலைமைபற்றி அதற்கு அறிக்கை செய்யும்படி அத்தகைய பகிரங்க அதிகாரசபைகளைத் தேவைப்படுத்தலாம்;

(உ) ஊழலை அடியோடு அழிப்பதற்கான தடுப்பு மூலோபாயங்கள் பற்றி அல்லது வழிமுறைகள்பற்றி ஏதேனும் பகிரங்க அல்லது தனியார் நிறுவனத்துக்கு ஆலோசனை, வழிகாட்டுகை மற்றும் மதியுரை வழங்கலாம்;

(ஊ) எவரேனுமாளினால் ஊழல் ஒழிக்கப்படக்கூடிய வழிகள்பற்றி அத்தகைய ஆளுக்கு அறிவுறுத்தலாம், மதியுரையளிக்கலாம் மற்றும் உதவலாம்;

(எ) சிறந்த வர்த்தகச் செயல்முறைகளை ஊக்குவிப்பதற்காகத் தொழிலின் முறையான நடாத்துகையை அபிவிருத்தி செய்வதற்கெனத் தனியார்துறை உருவகங்களினால் அமைந்தொழுகப்படவேண்டிய இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கும் அடியோடு ஒழிப்பதற்குமான நடத்தைக் கோவைகளை அறிமுகப்படுத்தலாம்;

(ஏ) பொது நிருவாகத்தில் அமைந்தொழுகப்பட வேண்டிய பகிரங்க துறையில் இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கும் மற்றும் அடியோடு ஒழிப்பதற்குமான நடத்தைக் கோவைகளை அறிமுகப்படுத்தலாம்;

(ஐ) அரசாங்கத்துக்கும் தனியார்துறை உருவகங்களுக்குமிடையேயான ஒப்பந்தஞ்சார் தொடர்புகளில் ஊழலைத் தடுப்பதற்கான வழிமுறைகளை எடுக்கலாம்;

(ஒ) ஊழலுக்கெதிராகப் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான வழிமுறைகளை எடுக்கலாம்; அத்துடன்

(ஓ) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான சேவையின் அத்தகைய நிபந்தனைகளுக்கமைய அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை திறம்பட நிறைவேற்றுவதற்கு அவசியமென ஆணைக்குழு கருதக்கூடியவாறான உள்ளக பயிற்சியாளர்கள் மற்றும் பயிற்சி பெறுநர்களை ஆட்சேர்க்கலாம்.

*புலனாய்வுகள்*

**41.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஆணைக்குழுவானது, 42 ஆம் பிரிவின்கீழ் அதற்கு அளிக்கப்பட்ட எவையேனும் தகவல்களில் அல்லது செய்யப்பட்ட ஏதேனும் முறைப்பாட்டில் அடங்கியுள்ள சார்த்துதல்கள் தொடர்பாக அல்லது அதனால் பெறப்பட்ட ஏதேனும் விடயம் தொடர்பாக, பெறப்பட்ட அத்தகைய எவையேனும் சார்த்துதல்கள் அல்லது விடயம் பின்வருவனவற்றின் புரிகையை வெளிப்படுத்துமிடத்து, விடயத்துக்கேற்ப, பூர்வாங்க விசாரணையொன்றை நடாத்துதல் வேண்டும் அல்லது புலனாய் வொன்றை நடாத்துதல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்துக்கான அட்டவணை அ வில் குறித்துரைக் கப்பட்ட ஏதேனும் தவறல்லாத இச்சட்டத்தின் பாகம் II இன் மற்றும் பாகம் III இன் அத்தியாயம் I மற்றும் அத்தியாயம் II என்பவற்றின் கீழான தவறொன்று; அத்துடன்

(ஆ) 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட சட்டமுறையற்ற செயற்பாடு, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான தவறொன்றுடன் சேர்த்து அதே கொடுக்கல்வாங்கலில் புரியப்படும்போது அச்சட்டத்தின் கீழான தவறொன்று;

(இ) இச்சட்டத்துக்கான அட்டவணை அ வில் குறித்துரைக் கப்பட்ட தவறொன்று, இச்சட்டத்தின் நியதிகளின்படி தவறொன்றாகவமைகின்ற செயலொன்றுடன் சேர்த்து அதே கொடுக்கல்வாங்கலில் புரியப்பட்டுள்ளவிடத்து அத்தகைய தவறொன்று; அல்லது

(ஈ) இச்சட்டத்துக்கான அட்டவணை ஆ இல் குறித்துரைக் கப்பட்ட தவறொன்று இச்சட்டத்தின் நியதிகளின் படியான தவறொன்று சம்பந்தமாகப் புரியப்பட்டுள்ள விடத்து அத்தகைய தவறொன்று,

அத்துடன் தோதான நீதிமன்றத்தில் அத்தகைய தவறுதொடர்பில் அத்தகைய ஆளுக்கெதிராக வழக்குநடவடிக்கைகளைத் தொடுக்கும்படி பணிப்பாளர் தலைமையதிபதியை அது பணித்தல் வேண்டும்.

பூர்வாங்க விசாரணையும், புலனாய்வும், வேறு வழிமுறைகளும்

**42.** (1) ஆணைக்குழுவானது, 41 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட தவறொன்றின் புரிகையை வெளிப்படுத்தக்கூடிய ஏதேனும் செயலின் புரிகை தொடர்பாக –

(அ) ஏதேனும் தகவல் பெறப்பட்டதன்மேல்;

(ஆ) ஒரு முறைப்பாடு பெறப்பட்டதன்மேல்;

(இ) ஆணைக்குழுவினால் தன்னியக்கத்தின் மூலம்; அல்லது

(ஈ) ஆணைக்குழுவினாற் பெறப்பட்ட வேறேதேனும் விடயத்தின் அடிப்படையில்,

ஒரு பூர்வாங்க விசார ணையை நடாத்தத் தொடங்கலாம்.

(2) பூர்வாங்க விசாரணையொன்றை நடாத்துவதற்கான நோக்கம், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான தவறொன்று புரியப்பட்டுள்ளதா என நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளனவாவென்பதைத் தீர்மானித்தலாக இருத்தல் வேண்டும்.

(3) ஒரு பூர்வாங்க விசாரணையை நடாத்தியபின்னர், 41 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டவொரு தவறு புரியப்பட்டுள்ளது என ஆணைக்குழு திருப்திப்படின், ஆணைக்குழுவானது புலனாய்வொன்றை நடாத்தும்படி பணிப்பாளர் தலைமையதிபதியைப் பணித்தல் வேண்டும்:

ஆயின், 41 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட தவறொன்று புரியப்பட்டுள்ளது என நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளனவென ஆணைக்குழு திருப்திப்படின், ஆணைக்குழுவானது, ஒரு பூர்வாங்க விசாரணையை நடாத்தாமல் புலனாய்வொன்றை நடாத்தும்படி அதிகாரமளிக்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட புலனாய்வின் நோக்கம் பின்வருமாறாகும்:–

(அ) பிரிவு 41 இல் குறிப்பீடு செய்யப்பட்டவொரு தவறு புரியப்பட்டுள்ளதாவென்பதனைத் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் தவறு புரியப்பட்டமைக்கான சாட்சிகளையும் வேறெவையேனும் இயைபான நிகழ்வுகளையும் அடையாளங் கண்டு தேடிக்கண்டுபிடிப்பதற்கும்;

(இ) பிரிவு 41 இல் குறிப்பீடு செய்யப்பட்டவொரு தவறைப் புரிதல் தொடர்பான நிகழ்வுகளுடனும் சூழ்நிலைகளுடனும் பரிச்சயமாகவிருக்கக்கூடிய ஆட்களைத் தேடிக்கண்டுபிடிப்பதற்கும், நேர்காணல்செய்வதற்கும், அவர்களின் கூற்றுக்களைப் பதிவதற்கும்;

(ஈ) குற்றவியல் வழக்குநடவடிக்கைகளில் சான்றாக மாற்றப்படும் இயல்திறனைக்கொண்ட ஆவணங்களையும் விடயங்களையும் சேகரிப்பதற்கும்;

(உ) பிரிவு 41 இல் குறிப்பீடு செய்யப்பட்டவொரு தவறைப் புரிந்துள்ள ஆட்களின் ஆளடையாளத்தைத் தீர்மானிப்பதற்கும்;

(ஊ) பிரிவு 41 இல் குறிப்பீடு செய்யப்பட்டவொரு தவறைப் புரிந்துள்ள எவரேனுமாளைத் தேடிக்கண்டுபிடிப்பதற்கும், கைதுசெய்வதற்கும், நேர்காணல்செய்வதற்கும், அவரின் கூற்றைப் பதிவதற்கும்;

(எ) பிரிவு 41 இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தவறுக்காக, எவரேனுமாளுக்கெதிராகக் குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடுப்பதா அல்லது

வேறேதேனும் சட்டமுறையான நடவடிக்கையை எடுப்பதாவென்பதுபற்றித் தீர்மானிப்பதற்கும்; அல்லது

(ஏ) இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட வேறேதேனும் தோதான வழிமுறையை எடுப்பதற்கும்.

(5) ஆணைக்குழுவினால் பெறப்பட்ட ஏதேனும் தகவலின்மீது அல்லது முறைப்பாட்டின்மீது, அல்லது ஆணைக்குழுவினால் தன்னியக்கத்தின்மூலம் முடிபுசெய்யப்படின் அல்லது ஆணைக் குழுவினால் பெறப்பட்ட வேறேதேனும் விடயத்தின்மீது, ஆணைக்குழுவானது, பிரிவு 41 இல் குறிப்பீடு செய்யப்பட்ட தவறொன்று புரியப்படுவதற்கான சாத்தியம் உண்டெனத் திருப்திப்படுமிடத்து, அத்தகைய தவறு புரியப்படுவதனைக் கண்டுபிடிப்பதற்கான வழிமுறைகளை அது எடுக்கலாம் என்பதுடன் அதற்கான புலனாய்வுகளையும் செய்யலாம்.

(6) இச்சட்டத்தில் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவானது (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டவொரு விசாரணை ஆணைக்குழுவினாலான அல்லது 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டவோர் ஆணைக்குழுவினாலான, விடயத்துக்கேற்ப, ஒரு புலனாய்வின் அல்லது விசாரணையின்போது அல்லது ஒரு புலனாய்வு, விசாரணை ஆகிய இரண்டின்போதும் சேகரிக்கப்பட்ட விடயங்களைக் கவனத்துட்கொண்டதன்மேல் 41 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டவொரு தவறு புரியப்பட்டுள்ளதெனத் திருப்திப்படுமிடத்து, இச்சட்டத்தின் நியதிகளின்படி அத்தகைய தவறைப் புரிந்துள்ளவரென அல்லது புரிந்துள்ளவர்களெனச் சார்த்தப்பட்ட ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு எதிராகக் குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடுக்கும்படி அது பணிப்பாளர் தலைமையதிபதியைப் பணித்தல் வேண்டும்.

(7) ஆணைக்குழுவானது, (6) ஆம் உட்பிரிவின் கீழான வழக்குநடவடிக்கைகளைத் தொடுக்குமுன்னர், பின்வருமாறு பணிக்கலாம்:-

(அ) அத்தகைய ஏதேனும் தவறு புரியப்பட்டமைபற்றி மேலதிக புலனாய்வுகளை நடாத்தும்படியும்;

(ஆ) (6) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விடயங்கள் பெறப்படுமுன்னர் ஆணைக்குழுவினால் நடாத்தப் பட்டவொரு புலனாய்வின்போது சேகரிக்கப்பட்டிருக் கக்கூடிய விடயங்களைக் கவனத்துட்கொள்ளும்படி யும்; அத்துடன்

(இ) வேறெவரேனும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரியிட மிருந்து ஆணைக்குழு பெற்றிருக்கக்கூடிய விடயங் களைக் கவனத்துட்கொள்ளும்படியும்.

(8) இச்சட்டத்தில் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவானது, தோதானதென அது கருதின், (1), (3), (5), (6) மற்றும் (7) ஆகிய உட்பிரிவுகளின்கீழ் சேகரிக்கப்பட்டு பெறப்பட்ட விடயங்களை, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் ஏதேனும் தோதான நடவடிக்கையை எடுப்பதற்குச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு அல்லது வேறெவரேனும் அதிகாரிக்கு அனுப்பிவைக்கலாம்.

(9) ஆணைக்குழுவானது, அது தோதானதெனக் கருதினா லொழிய, ஒரு விசாரணை ஆணைக்குழுவுக்கு அல்லது ஒரு விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்குக் கூற்றொன்றை அளித்துள்ள அல்லது அத்தகைய ஏதேனும் ஆணைக்குழு வின்முன்னர் சான்று அளித்துள்ள ஆளொருவரின் கூற்றொன்றைப் பதிவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது.

(10) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதனாற் பெறப்பட்ட ஒரு தொடர்பாடலினால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தைப் புலனாய்வுசெய்வதற்கு, அத்தகைய கருமம்

நியமிக்கப்பட்ட தேதிக்குமுன்னரானவொரு காலப்பகுதியுடன் தொடர்புபட்டதாகவிருப்பினுஞ்சரி அல்லது இல்லாதிருப்பினுஞ்சரி, மற்றும் வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், தத்துவமுடையதாதல் வேண்டும்.

(11) ஆணைக்குழுவானது, இப்பிரிவின் (1), (3), (5) அல்லது (6) ஆகிய உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கிணங்கச் செயலாற்றாதிருப்ப தற்கு முடிபுசெய்தால், அத்தகைய முடிபுக்கான காரணங்கள் எழுத்தில் பதியப்படுதல் வேண்டுமென்பதுடன் ஆணைக்குழு வினால் முறைப்பாட்டைச் செய்தவரான ஆளுக்கு ஆணைக்குழு வினால் அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

தவறுகள் பற்றிய முறைப்பாடுகள்

**43.** (1) பிரிவு **41** இல் குறிப்பீடு செய்யப்பட்டவொரு தவறு புரியப்படுகின்றமை தொடர்பான ஒரு முறைப்பாடு அல்லது தகவல்கள், ஆளொருவருக்கெதிராக, அத்தகைய ஆள் எந்தப் பதவியை அல்லது தொழிலை வகிப்பதன் பயனைக்கொண்டு தவறாகவமைகின்ற செயலைப் புரிந்துள்ளாரெனச் சார்த்தப்படு கின்றதோ அந்தப் பதவியை அல்லது தொழிலை ஆணைக்குழு வினால் முறைப்பாடு அல்லது தகவல்கள் பெறப்படுகின்ற தேதியன்று அத்தகைய ஆள் வகித்தாலுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரி, செய்யப்படலாம் அல்லது அளிக்கப்படலாம். அத்தகைய முறைப்பாடு அல்லது தகவல்கள், வாய்மொழிமூலமாக, எழுத்தில் அல்லது இலத்திரனியல் தொடர்பாடலின்மூலம் ஆணைக் குழுவுக்கு வழங்கப்படலாம்.

(2) வாய்மொழிமூலமாகக் கொடுக்கப்பட்ட முறைப்பாடு, இயன்றளவு விரைவாக, ஆணைக்குழுவினால் பணிக்கப்பட்டவாறு ஆணைக்குழுவின் எவரேனும் அலுவலரினால், அது எம்மொழியில் கொடுக்கப்பட்டதோ அம்மொழியில் எழுத்தில் இடப்படுதல் வேண்டும்:

ஆயின், முறைப்பாடு எம்மொழியில் கொடுக்கப்படுகின்றதோ அம்மொழியில் முறைப்பாட்டைப் பதிவதற்கு அலுவலர் இயலாதிருப்பின், முறைப்பாடானது எழுத்தில் கொடுக்கப்பட வேண்டுமென அவ்வலுவலர் கோரிக்கை விடுத்தல் வேண்டும். முறைப்பாட்டாளர் அதனை எழுத்தில் கொடுப்பதற்கு இயலாதவராகவிருப்பின், தேசிய மொழிகளுள் ஒன்றில், அவ்வாறு செய்வதற்கான காரணங்களைப் பதிந்தபின்னர், அவ்வலுவலர்

அம்முறைப்பாட்டைப் பதிதல் வேண்டுமென்பதுடன் பதிவை முறைப்பாட்டாளருக்கு வாசித்துக்காட்டுதலும் வேண்டும் அல்லது அத்தகைய ஆளுக்கு விளங்குகின்ற மொழியில் அதனை உரைபெயர்த்தலும் வேண்டும்.

(3) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஒரு பகிரங்க அதிகாரசபை அல்லது சட்ட வலுவுறுத்தல் அதிகாரசபை அதன் பணிகளைப் பிரயோகிக்கையில், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான தவறொன்று இடம் பெற்றிருக்கக்கூடும் அல்லது புரியப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்டிருக்கக்கூடும் என அபிப்பிராயப்படுமிடத்து, அத்தகைய பகிரங்க அதிகாரசபை அல்லது சட்ட வலுவுறுத்தல் அதிகாரசபை அக்கருமத்தைப் புலனாய்வுக்காக ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

முன்னேற்றத்தை முறைப்பாட்டாளர் அறிந்து கொள்ளலாம்

**44.** (1) நாற்பத்திமூன்றாம் பிரிவின்கீழ் முறைப்பாடொன்றைச் செய்துள்ள ஆளொருவருக்கு 42 ஆம் பிரிவின்கீழ் நடாத்தப்பட்டவொரு புலனாய்வு தொடர்பாக எடுக்கப்பட்ட அடிப்படை நடவடிக்கைகள் பற்றிய நாளதுவரையாக்கமொன்று அத்தகைய புலனாய்வின் முன்னேற்றத்தைத் தடங்கல்செய்யாதவொரு முறையில் வழங்கப்படுதல் வேண்டும்.

(2) இரண்டாயிரத்துப்பதினாறாம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக வழங்கப்பட்ட, பகிரப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட எவையேனும் தகவல்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) நாற்பத்து மூன்றாம் பிரிவின்கீழ் முறைப்பாடொன்றை செய்கின்ற எவரேனும் ஆளுக்கு, அத்தகைய ஆளின் சார்பில் செய்யப்பட்ட கோரிக்கையின்மேல், கோப்பொன்றின் மூடுகைபற்றி ஆணைக்குழுவினால் விபரமானவொரு நியாயப்படுத்துகையொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

தேடுதலும் கைப்பற்றுதலும்

**45.** (1) ஆணைக்குழுவானது -

(அ) பிரிவு 41 இல் குறிப்பீடு செய்யப்பட்ட தவறொன்று புரியப்பட்டுள்ளதெனச் சந்தேகிப்பதற்கான நியாயமானவோர் ஏது உள்ளதென்றும் அத்தவறு புரியப்பட்டமைபற்றிய சான்று எவையேனும்

வளவுகளில் அல்லது ஏதேனும் கலத்தில், வாகனத்தில் அல்லது வானூர்தியில் அல்லது எவரேனும் ஆளிடம் காணப்படுகின்றதென்றும்; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அதனால் நடாத்தப்பட்டவொரு புலனாய்வின்போது காண்பிக்கப்பட்டிருக்க வேண்டியதும் மற்றும் அவ்வாறு காண்பிக்கப்பட்டி ராததுமான ஏதேனும் புத்தகம், கணக்கு அல்லது வேறு ஆவணம் அல்லது வஸ்து அத்தகைய வளவு களில் அல்லது அத்தகைய ஏதேனும் வாகனத்தில், கலத்தில் அல்லது வானூர்தியில் அல்லது எவரேனும் ஆளிடம் காணப்படுகின்றனவென்றும்,

திருப்திப்படின், ஆணைக்குழுவானது, எழுத்திலான கட்டளைமூலம், ஆணைக்குழுவின் அலுவலரொருவருக்கு, விடயத்துக்கேற்ப, அத்தகைய வளவுகளினுள் அல்லது அத்த கைய வாகனத்தினுள், கலத்தினுள் அல்லது வானூர்தியினுள் பிரவேசிப்பதற்கும் அத்தகைய வளவுகளை அல்லது அத்தகைய வாகனத்தை, கலத்தை, வானூர்தியை அல்லது அத்தகைய ஆளைத் தேடுவதற்கும் அதிகாரமளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் அதிகார மளிக்கப்பட்ட அலுவலரொருவர், வளவுகளில் அல்லது வாகனத்தில், கலத்தில் அல்லது வானூர்தியில் அல்லது ஆளிடம் காணப்படுகின்றதும் இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறைப் புரிந்தமைபற்றிய சான்றாகவுள்ளதென நம்புவதற்கு அவருக்கு நியாயமான ஏதுக்கள் உள்ளதுமான ஏதேனும் பொருளை, அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்டவொரு புலனாய்வில் காண்பிக்கப்பட்டிருக்கவேண்டியதென நம்புவதற்கு அவருக்கு நியாயமான ஏதுக்கள் உள்ள ஏதேனும் புத்தகத்தை, கணக்கை அல்லது ஆவணத்தை அல்லது வஸ்துவைக் கைப்பற்றலா மென்பதுடன் இப்பிரிவினால் அத்தகைய அலுவலருக்களிக்கப்பட்ட தத்துவங்களைப் பின்பற்றி அவரினால் கைப்பற்றப்பட்ட அத்தகைய ஒவ்வொரு பொருளும், புத்தகமும், கணக்கும், ஆவணமும் அல்லது வஸ்துவும் ஆணைக்குழுவுக்கு முன்னர் அவரினால் காண்பிக்கப் படுதலும் வேண்டும்:

ஆயின், ஒரு பெண், இப்பிரிவின்கீழானவொரு தேடுதலைப் பின்பற்றி, ஒரு பெண்ணினால்தவிர தேடப்படுதலாகாது.

(3) இப்பிரிவின் பயனைக்கொண்டு எவையேனும் வளவுக ளினுள், ஏதேனும் கலத்தினுள், வாகனத்தினுள் அல்லது வானூர்தியினுள் பிரவேசிப்பதற்கு ஆளொருவருக்கு ஏதேனும் தத்துவம் உள்ளவிடத்து, அத்தத்துவத்தைப் பிரயோகிக்கின்ற நோக்கத்துக்காக நியாயமானமுறையில் அவசியமாகவுள்ளவாறான அத்தகைய வலோத்காரத்தை அவர் பயன்படுத்தலாம்.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளைப் பின்பற்றிக் கைப்பற்றப்பட்ட எல்லா இனங்கள்பற்றியதும், அவை முறையாகக் காணப்படுகின்ற இடங்கள்பற்றியதுமான நிரலொன்று கைப் பற்றுகையைப் பயனுறுத்துகின்ற ஆணைக்குழுவின் அலுவலரினால் தயாரிக்கப்பட்டு அவரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(5) மேலேயுள்ள உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட நிரலின் பிரதியொன்று, இயன்றளவு விரைவாக அத்தகைய ஆதனத்தின் சொந்தக்காரருக்கு அல்லது ஆதனமானது எவ்வாளிடமிருந்து கைப்பற்றப்பட்டதோ அவ்வாளுக்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(6) மேலே விதிக்கப்பட்டவாறு கைப்பற்றுகைக்கு உட்பட்ட ஏதேனும் அசைவுள்ள ஆதனம் ஒரு வங்கியின் உடைமை, கட்டுக்காப்பு அல்லது கட்டுப்பாட்டில் உள்ளவிடத்து, 49 ஆம் பிரிவின் (2), (3), (4), (5) மற்றும் (6) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் அதற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(7) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர், அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய உதவியுடன், இப்பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்கு அரசாங்கத்தின் ஏதேனும் திணைக்களம், அலுவலகம் அல்லது தாபனத்தினுள் பிரவேசித்து அதனைத் தேடலாம்.

(8) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது ஆணைக்குழுவின் எவரேனும் அலுவலர் இச்சட்டத்தின்கீழ் அவரது தத்துவங்களைப் பிரயோகிப்பதிலான அல்லது அவரது பணிகளை நிறைவேற்று வதிலான உதவிக்காக எவரேனும் பகிரங்க அலுவலரின் அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் ஆளின் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம்.

(9) ஓராம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், இப்பிரிவின்கீழான ஏதேனும் தத்துவம் பிரயோகிக் கப்படுமிடத்து, 46 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய அலுவலருக்கு வழங்கப்பட்ட பிடியாணைப்பத்திரத்தை எப்போதும் கொண்டு செல்லுதல் வேண்டும்.

*பிடியாணைப் பத்திரங்களை வழங்குதல்*

**46.** பணிப்பாளர் தலைமையதிபதி, ஆணைக்குழுவின் எவரேனும் அலுவலருக்குப் பிடியாணைப் பத்திரமொன்றை வழங்குதல் வேண்டும்; இது 45 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய அலுவலருக்கு வழங்கப்பட்ட அதிகாரவளிப்பின் முதற்றோற்றச் சான்றாகவிருத்தல் வேண்டும்.

*பிடியாணையின்றி ஆட்களைக் கைது செய்தல் முதலியன*

**47.** (1) ஆணைக்குழுவின் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், நீதிவானொருவரின் கட்டளை ஒன்றின்றியும் பிடி யாணை ஒன்றின்றியும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ளாரெனச் சந்தேகிக்கப்பட்ட எவரேனு மாளை, அத்தகைய ஆள் -

(அ) அவரது சமுகத்தில் இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறைப் புரிந்தால்;

(ஆ) இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுடன் சம்பந்தப் பட்டிருந்தால் அல்லது அவர் அவ்வாறு சம்பந்தப் பட்டிருந்தாரென அவருக்கெதிராக நியாயமான முறைப் பாடொன்று செய்யப்பட்டிருந்தால் அல்லது நம்பத்தகு தகவல் பெறப்பட்டிருந்தால் அல்லது நியாயமான சந்தேகம் இருந்தால்;

(இ) ஆணைக்குழுவினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட அலுவலரொருவர் அவரது கடமையை நிறைவேற்றுகையில் அவருக்கு முட்டுக்கட்டையிட்டால் அல்லது சட்டமுறையான கட்டுக்காப்பிலிருந்து தப்பிச்சென்றிருந்தால் அல்லது தப்பிச்செல்ல எத்தனித்தால்;

(ஈ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரியும் நோக்குடன் அவர் முற்காப்புகளை எடுக்கின்றாரென நம்புவதற்குக் காரணமளிக்கின்ற சூழ்நிலைகளின்கீழ் அவர் சமுகமாயிருப்பதனை மறைப்பதற்கான அத்தகைய முற்காப்புகளை எடுக்கின்றாரெனக் காணப்பட்டால்; அல்லது

(உ) ஏதேனும் செயல் இலங்கையில் புரியப்பட்டிருப்பின் இச்சட்டத்தின்கீழான தவறொன்றாகத் தண்டிக்கப்படற்பாலதாக இருந்திருப்பதும் மீளவொப்படைத்தல் அல்லது தப்பியோடிய ஆட்கள் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் அல்லது வேறுவகையாக அதற்காக அவர் இலங்கையில் பற்றப்படுவதற்கு அல்லது தடுத்துவைக்கப்படுவதற்கு ஆளாகவிருப்பதும் இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனுமிடத்தில் புரியப்பட்டதுமான அச்செயலில் அவர் சம்பந்தப்பட்டிருந்தால் அல்லது அவர் சம்பந்தப்பட்டிருந்தாரென அவருக்கெதிராக நியாயமானவொரு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தால் அல்லது நம்பத்தகு தகவல் பெறப்பட்டிருந்தால் அல்லது நியாயமான சந்தேகமொன்று இருந்தால்,

கைதுசெய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான கைதுசெய்தலை நடாத்துகையில், அதனை நடாத்துகின்ற அலுவலர், சொல்மூலம் அல்லது செயல்மூலம் கட்டுக்காப்புக்கானவொரு கீழ்ப்படிவு இருந்தாலொழிய, கைதுசெய்யப்படவுள்ள ஆளின் சரீரத்தை உண்மையாகத் தொடுதல் அல்லது அவரைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதல் வேண்டுமென்பதுடன் கைதுசெய்யப்படவுள்ள ஆள் எந்தக் குற்றச்சாட்டின்மேல் அல்லது சார்த்துதலின்மேல் கைதுசெய்யப்படுகின்றாரோ அந்தக் குற்றச்சாட்டின் அல்லது சார்த்துதலின் தன்மையை அவருக்குத் தெரிவித்தலும் வேண்டும்; அத்துடன்

ஆளொருவரை விதிமுறையாகக் கைதுசெய்யாமல் அல்லது அத்தகைய ஆள் எல்லாக் கருத்துக்களுக்கும் நோக்கங் களுக்குமாகக் கட்டுக்காப்பில் இருக்கும்போது கைதுசெய்தலொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லையென்ற வண்ணப்பகட்டான பாசாங்கின் கீழ் அவரை மறித்துவைத்தல் அல்லது தடைப்படுத்தல், அத்தகைய ஆளின் கைதுசெய்தலொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய ஆள், அவரைக் கைதுசெய்வதற்கான முயற்சியை வலோத்காரமானமுறையில் எதிர்த்தால் அல்லது கைதுசெய்தலைத் தட்டிக்கழிப்பதற்கு எத்தனித்தால், கைதுசெய்தலை நடாத்துகின்ற அலுவலர், கைதுசெய்தலைப் பயனுறுத்துவதற்கு நியாயமானமுறையில் அவசியமானவாறான அத்தகைய வழிவகைகளைப் பயன்படுத்தலாம்.

(4) கைதுசெய்தலை நடாத்துகின்ற அலுவலர், கைதுசெய்யப்படவுள்ள எவரேனுமாள் ஏதேனும் இடத்தினுட் பிரவேசித்துள்ளார் அல்லது அதனுள் உள்ளார் என நம்புவதற்கு அவருக்குக் காரணங்கள் இருப்பின், அத்தகைய இடத்தில் வதிகின்ற அல்லது அதற்குப் பொறுப்பாகவுள்ள ஆள் அத்தகைய அலுவலரின் கோரிக்கையின்மீது அதனுள் கட்டற்ற உள்நுழைவை அவருக்கு அனுமதித்தல் வேண்டுமென்பதுடன் அதன்கண் தேடுதலொன்றுக்கான நியாயமான எல்லா வசதிகளையும் அளித்தலும் வேண்டும்.

(5) முற்போந்த உட்பிரிவின்கீழ் அத்தகைய இடத்துக்கான உள்நுழைவைப் பெற்றுக்கொள்ளமுடியாதிருப்பின், ஏதேனும் விடயத்தில் ஒரு பிடியாணையின்கீழ் அல்லது பிடியாணையொன்று வழங்கப்படக்கூடிய ஆனால் தப்பிச்செல்வதற்கான வாய்ப்பொன்றைக் கைதுசெய்யப்படவுள்ள ஆளுக்கு அளிக்காமல் பெற்றுக்கொள்ளமுடியாத ஏதேனும் விடயத்தில், செயலாற்றுகின்ற அலுவலர் அத்தகைய இடத்தினுட் பிரவேசித்து அதன்கண் தேடுதல் அவ்வலுவலருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(6) கைதுசெய்தலொன்றை நடாத்தும் நோக்கத்துக்காகச் சட்டமுறையாக உட்பிரவேசித்து அதன்கண் தடுத்துவைக்கப்பட்ட அலுவலர், தன்னை அல்லது வேறெவரேனுமாளை விடுதலைசெய்வதற்கென ஏதேனுமிடத்தின் ஏதேனும் வெளிப்புற அல்லது உட்புறக் கதவை அல்லது யன்னலை உடைத்துத் திறக்கலாம்.

(7) கைதுசெய்யப்பட்ட ஆள், அவர் தப்பிச்செல்வதற்கு அவசியமான தடைப்படுத்தலைப்பார்க்கிலும் அதிகமான தடைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுதலாகாது.

(8) இப்பிரிவிலுள்ளதெதுவும், பிடியாணையின்றிக் கைதுசெய்வதற்கு அலுவலரொருவருக்குத் தத்துவமளிக்கின்ற ஏதேனும் சட்டவாக்கத்தின் நடைமுறையுடன் தலையிடுவதாக அல்லது அதனைத் திரிபுபடுத்துவதாகக் கொள்ளப்படுதலாகாது.

கைது செய்தலின் பின்னரான நடவடிக்கை முறை

**48.** (1) பிடியாணையின்றிக் கைதுசெய்தலொன்றை நடாத்துகின்ற அலுவலரொருவர், அவசியமற்ற தாமதமின்றியும், பிணை பற்றி இதன்கண் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கமையவும், கைது செய்யப்பட்ட ஆளை மிக அண்மையிலுள்ள நீதிவான்முன்னர் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

(2) எவரேனும் அலுவலர், பிடியாணையின்றிக் கைதுசெய்யப்பட்ட ஆளொருவரை, விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளின்கீழும் நியாயமானதாகவுள்ள கூடுதலான நீண்டவொரு காலப்பகுதிக்குக் கட்டுக்காப்பில் தடுத்துவைத்தலோ அல்லது வேறுவகையில் மறித்துவைத்தலோ ஆகாது என்பதுடன் அத்தகைய காலப்பகுதி, கைதுசெய்யப்பட்ட இடத்திலிருந்து நீதிவானிடம் செல்லும் பயணத்துக்கு அவசியமான நேரம் புறநீங்கலாக இருபத்திநான்கு மணித்தியாலங்களை விஞ்சுதலுமாகாது.

(3) கைதுசெய்யப்பட்ட ஆள் ஒருவர் வழக்கில் நியாயாதிக்கங் கொண்டுள்ள நீதிவானல்லாத ஒரு நீதிவானின்முன்னர் நிறுத்தப்பட்டவிடத்து, அவ்வாள் எந்நீதிவான்முன்னர் நிறுத்தப்பட்டாரோ அந்நீதிவான், 149 ஆம் பிரிவுக்கமையவும் புலனாய்வின் சூழ்நிலைகளைக் கவனத்துட்கொண்டும், உடனடியாக வழக்கில் நியாயாதிக்கங் கொண்டுள்ள நீதிவான்முன்னர் கைதுசெய்யப்பட்ட ஆளை நிறுத்தும்படி கட்டளையிடுதல் வேண்டும்.

(4) சட்டமுறையான கட்டுக்காப்பிலுள்ள ஆளொருவர் தப்பிச்சென்றால் அல்லது மீட்கப்பட்டால், அவர் எந்த அலுவலரின் கட்டுக்காப்பிலிருந்து தப்பிச்சென்றாரோ அல்லது மீட்கப்பட்டாரோ

அந்த அலுவலர் அவரை உடனடியாகப் பின்தொடர்ந்து ஒன்றில் அவர் அவ்வாறு கட்டுக்காப்பிலிருந்த நியாயாதிக்கத்தினுள் அல்லது நியாயாதிக்கத்துக்கு வெளியே அவரைக் கைதுசெய்யலாம் என்பதுடன் 47 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய கைது செய்தலுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(5) கைதுசெய்யப்பட்ட ஆளினால் சட்டவிரோதமான அவாநிறை வொன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டது, பரிந்துகேட்கப்பட்டது அல்லது முனையப்பட்டது எனச் சார்த்தப்பட்ட எவையேனும் நாணயத்தாள் கள், அத்தகைய தாள்கள் அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட் டுள்ளனவாக, பரிந்துகேட்கப்பட்டுள்ளனவாக அல்லது முனையப் பட்டுள்ளனவாகச் சார்த்தப்பட்டனவெனக் குறிப்பிட்டு, பணிப்பாளர் தலைமையதிபதியின் கைப்பட்ட அறிக்கை யொன்றுடன்சேர்த்து வழக்கில் நியாயாதிக்கங்கொண்டுள்ள நீதிவான்முன்னர் காண்பிக்கப்படுமிடத்து, நீதிவானானவர், சான்றிதழில் தரப்பட்டுள்ள மதிப்புவகைப்பாடுகளையும் இலக்கங்களையும் கொண்ட தாள்கள் தன்முன்னர் காண்பிக்கப் பட்டனவென்ற பொருள்பட தனது கைப்பட்ட சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சான்றிதழ், அத்தகைய வழக்குநடவடிக்கைகளில் அத்தகைய தாள்களைக் காண்பிப்பதற்குப் பதிலாக, அத்தகைய தாள்களை ஏற்றுக்கொண் டுள்ளவரென, பரிந்துகேட்டவரென அல்லது முனைந்தவரெனச் சார்த்தப்பட்ட ஆளுக்கெதிராகத் தொடுக்கப்பட்ட எவையேனும் வழக்குநடவடிக்கைகளில் ஏல்தகவுடையதாதலும் வேண்டும்.

புலனாய்வொன்றை நடாத்தும்போது ஆட்களை விசாரணை செய்தல்

**49.** (1) ஆணைக்குழுவானது, 42 ஆம் பிரிவின்கீழான புலனாய் வொன்றை நடாத்துவதில் -

(அ) எழுத்திலான அல்லது வாய்மொழிமூலமான அத்தகைய எல்லாச் சான்றுகளையும் பெற்றுக்கொள்ள லாம் மற்றும் பெறலாம் என்பதுடன் பெற்றுக்கொள்வ தற்கு, பெறுவதற்கு அல்லது விசாரணைசெய்வதற்கு அவசியமானவர்களென அல்லது விரும்பத்தக்க வர்களென ஆணைக்குழு கருதக்கூடியவாறான அத்த கைய எல்லா ஆட்களையும் விசாரணை செய்யலாம்:

ஆயின், ஆணைக்குழு இப்பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் எவரேனும் ஆளின் விசாரணையைக் காணொளிப் பதிவு செய்யலாம்;

(ஆ) ஆணைக்குழுவினால் விசாரணைசெய்யப்படும் நோக்கங்களுக்காக ஆணைக்குழுவின் முன்னர் வருகைதரும்படியும் ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில், புலனாய்வின்கீழுள்ள கருமங்களுக்கு இயைபானதும் ஆணைக்குழுவினால் அவரிடம் கேட்கப்படுவதுமான ஏதேனும் கேள்விக்குச் சத்தியத்தின்மீது அல்லது உறுதியுரையின்மீது வாய்மொழிமூலமாக மறுமொழியிறுக்கும்படியும் எவரேனுமாளைத் தேவைப்படுத்தலாம் அல்லது ஒரு சத்தியக்கடுதாசி என்ற வடிவத்தில் புலனாய்வின்கீழுள்ள கருமங்களுக்கு இயைபாகவுள்ள எவையேனும் நிகழ்வுகளைக் குறிப்பிடும்படியும் அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தலாம்;

(இ) எவரேனுமாளின் உடைமையிலுள்ள அல்லது கட்டுப்பாட்டிலுள்ள ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு வஸ்துவைக் காண்பிக்கும்படி அவரைக் கட்டளை விட்டழைக்கலாம்;

(ஈ) அறிவித்தலிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள், 42 ஆம் பிரிவின்கீழ் எவ்வாள் தொடர்பில் ஏதேனும் விசாரணை அல்லது புலனாய்வு நடாத்தப்பட்டுவருகின்றதோ அவ்வாளின் அல்லது அத்தகைய ஆளுடன் இணைந்துள்ள எவரேனுமாளின் அல்லது அத்தகைய ஆள் பணிப்பாளராகவுள்ள ஒரு கம்பெனியின், அல்லது அத்தகைய ஆள் எந்த நம்பிக்கைப்பொறுப்பில் பயனுகர் அக்கறை ஒன்றைக் கொண்டுள்ளாரோ அந்த நம்பிக்கைப்பொறுப்பின், அல்லது அத்தகைய ஆள் பங்காளரொருவராகவுள்ள ஒரு குழுமத்தின் கணக்குத் தொடர்பாக எத்தகையதுமான படிவத்திலுமான எவையேனும் தகவல்களைக் காண்பிக்கும்படி, அல்லது அச்சிடத்தக்க படிவத்திலான அதன் கண்ணுள்ள அத்தகைய தகவல்களின் சான்றுப்

படுத்தப்பட்ட பிரதிகளை அவ்வாறு குறித்துரைக்கப் பட்டவாறு கொடுத்துதவும்படி ஏதேனும் வங்கியை, வங்கித்தொழிற்சாரா நிதிநிறுவனத்தை அல்லது பெயர்குறிக்கப்பட்ட நிதிசாராத் தொழிலை அவ் வறிவித்தல்மூலம் பணிக்கலாம்;

(உ) பந்தி (ஈ) இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தினதும் 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கை யிடுதற் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, பின்வரு வன தொடர்பான பின்வரும் தகவல்களையும் விடயங்களையும் ஆணைக்குழுவுக்கு வழங்கும்படி ஏதேனும் வங்கியை, வங்கித்தொழிற்சாரா நிதிநிறு வனத்தை அல்லது பெயர்குறிக்கப்பட்ட நிதிசாராத் தொழிலைத் தேவைப்படுத்தலாம்:-

(i) அத்தகைய வங்கியினால், நிறுவனத்தினால் அல்லது தொழிலினால் எவரேனுமாளுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் நிதிசார் சேவை;

(ii) எவரேனுமாளினால் நிறைவேற்றப்பட்ட ஏதே னும் நிதிசார் கொடுக்கல்வாங்கலின் விபரங் கள்;

(iii) அத்தகைய ஏதேனும் வங்கியினால், நிறுவனத் தினால் அல்லது தொழிலினால் வழங்கப்பட்ட எவையேனும் வங்கிக்கணக்குகளின், வைப்புக் களின், அனுப்புதொகைகளின் மற்றும் மீளப் பெறுகைகளின் அத்துடன் நிதிசார் சேவைக ளின் விபரங்கள்;

(iv) எவரேனுமாளினால் நிதிசார் சேவைகள் பெறப் படுதல் தொடர்பிலான விபரங்கள்; அத்துடன்

(v) ஏதேனும் கணக்கின் அல்லது ஏதேனும் கணக்கு அல்லது கொடுக்கல்வாங்கல்பற்றிய வேறு விபரங்களின் சான்றுப்படுத்தப்பட்டவொரு கூற்று.

(ஊ) பந்தி (ஈ) இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஒரு புலனாய்வை நடாத்துகின்ற நோக்கத்துக்காக அல்லது இச்சட்டத்தில் குறிப்பீடு செய்யப்படும் இணைந்த தவறு தொடர்பில் பின்வரும் அலுவலர்களின் உடைமையிலுள்ள அல்லது அவர்களது கட்டுப்பாட்டின் கீழுள்ள எவையேனும் தகவல்களை அல்லது ஆவணத்தை அல்லது அதன் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை அல்லது அதன்கண் ஏதேனும் பதிவைத் தேவைப்படுத்தலாம்:-

(i) அரசியலமைப்பின் 52 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட ஏதேனும் அமைச்சுக்கான செயலாளர்;

(ii) அரசியலமைப்பின் 65 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட இலங்கைப் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம்;

(iii) 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி;

(iv) (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மத்திய வங்கியின் ஆளுநர்;

(v) அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை யதிபதி;

(vi) (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவர்;

(vii) *2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுதற் சட்டத்தின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறின் பணிப்பாளர்;*

(viii) *2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக் குழுச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் நியமிக் கப்பட்ட இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி;*

(ix) *(235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி;*

(x) *(351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குடிவருவோர், குடியகல்வோர் கட்டுப்பாட்டாளர்;*

(xi) *1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆட்களைப் பதிவுசெய்தல் ஆணையாளர் தலைமையதிபதி;*

(xii) *1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதி கள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட இறக்குமதி கள், ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டாளர்;*

(xiii) *2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 47 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதி;*

(xiv) (*464 ஆம் அத்தியாயமான*) *காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட காணி ஆணையாளர்;*

(xv) *2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட இலங்கைப் புலமைச்சொத்துப் பணிப்பாளர் தலைமையதிபதி;*

(xvi) (*203 ஆம் அத்தியாயமான*) *மோட்டார் வாகனச் சட்டத்தின் 204 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதி பதி;*

(xvii) *1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 22ஆ என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தொலைத் தொடர்புகள் பணிப்பாளர் தலைமையதிபதி;*

(xviii) *ஏதேனும் அரசாங்கத் திணைக்களம், பகிரங்கக் கூட்டுத்தாபனம், நியதிச்சட்டக் குழு, அல்லது வேறு அரசாங்க நிறுவனத்தின் தலைவரொரு வர்;*

(xix) (*117 ஆம் அத்தியாயமான*) *ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட காணிப் பதிவாளர் தலைமையதிபதி;*

(xx) *ஒரு மாகாணசபையின் தவிசாளர் அல்லது ஓர் உள்ளூரதிகாரசபையின் தவிசாளரொருவர் அல்லது விசேட ஆணையாளரொருவர்; அல்லது*

(xxi) *இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் அட்டவணைப்படுத் தப்பட்ட நிறுவனத்தின் தலைவரொருவர்.*

(எ) பிரிவு **42** இன்கீழ் எந்த ஆள் தொடர்பில் தொடர்பாடலொன்று பெறப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் ஆளை எழுத்திலான சத்தியப்பிரமாணம் செய்யப்பட்ட கூற்றொன்றைக் கொடுத்துதவும்படி பின்வருமாறு பணிக்கலாம்:-

(i) அத்தகைய ஆளினாலும் அத்தகைய ஆளுடன் இணைந்த வேறெவரேனுமாளினாலும் ஏதேனும் நேரத்தில் அல்லது ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடிவாறான அத்தகைய நேரத்தில் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்திருக்கப்பட்ட எல்லா அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களையும் எடுத்துக்கூறியும், அவ்வாறு எடுத்துக்கூறப்பட்ட ஆதனங்களுள் ஒவ்வொன்றும் எத்தேதியன்று கொள்ளப்பட்டதோ அத்தேதியைக் குறித்துரைத்தும், கொள்வனவு, கொடை, மரணசாதனக்கொடை, மரபுரிமை என்றவகையாகவோ அல்லது வேறுவகையாகவோ என்றும்; அத்துடன்

(ii) ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் புலனாய்வுக்கு இயைபான அத்தகைய வேறு கருமங்கள் பற்றிய விபரங்களைக் கொண்டுள்ளதும்;

(ஏ) மேலே (ஊ) மற்றும் (எ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்ட ஆட்கள்தவிர்ந்த வேறு எவரேனுமாளை எழுத்திலான சத்தியப்பிரமாணம் செய்யப்பட்ட கூற்றொன்றைக் கொடுத்துதவும்படி பணிக்கலாம்:-

(i) அத்தகைய தகவல் **42** ஆம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்டவொரு புலனாய்வுக்கு உதவமுடியுமானதாகுமென நம்புவதற்கு ஆணைக்குழுவுக்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, அத்தகைய ஆளினால்

ஏதேனும் நேரத்தில் அல்லது ஆணைக் குழுவினால் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய நேரத்தில் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்திருக்கப்பட்ட எல்லா அசைவுள்ள அல் லது அசைவற்ற ஆதனங்களையும் எடுத்துக் கூறியும்; அத்துடன்

(ii) ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் அத்த கைய புலனாய்வுக்கு இயைபான அத்தகைய வேறு கருமங்கள்பற்றிய விபரங்களைக் கொண் டுள்ளதும்:

ஆயின், இவ்வுட்பிரிவின்கீழ் ஆணைக்குழு எந்த ஆளுக்கு ஏதேனும் பணிப்பை வழங்குகின்றதோ அந்த எவரேனும் ஆள், வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய பணிப்புக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

*(2)* இச்சட்டத்தின்கீழான தவறொன்றின் விடயப் பொருளாக வுள்ள அல்லது அத்தகைய தவறு புரியப்பட்டமை தொடர்பான சான்றாகவுள்ள, ஏதேனும் பணவகையான சாதனம் அல்லது அதற்கான ஏதேனும் சேர்மானம் உட்பட, ஏதேனும் அசைவுள்ள ஆதனம் ஒரு வங்கியின் உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ளதென ஆணைக்குழுவின் அலுவலரொரு வரினால் கொடுக்கப்பட்ட ஏதேனும் தகவலின்மீது ஆணைக்குழு திருப்திப்படுமிடத்து, ஆணைக்குழுவானது, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அத்தகைய ஆதனத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தைக் கைதுறக்கா திருக்கும்படி, கையாளாதிருக்கும்படி அல்லது வேறுவகையில் கையுதிர்க்காதிருக்கும்படி கட்டளைமூலம் வங்கியைப் பணிக்கலாம்.

*(3)* இரண்டாம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று, ஆணைக் குழுவினால் அதற்கென ஆக்கப்பட்ட விதிகளினால் விதிக்கப்படக் கூடிய ஏதேனும் நிபந்தனைக்கமைய, 53 ஆம் பிரிவின் *(1)* ஆம்

உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ், அதன்கண் அடங்கியுள்ள இலஞ்சத்தின் வரும்படிகளினது அளவுக்கு இலஞ்சத்தின் வரும்படிகளைக் கொண்டுள்ளனவெனச் சந்தேகிக்கப்பட்ட வங்கிக் கணக்குகளை முடக்குதலை அல்லது வேறு நிதிசார் வைப்புக் களையும் கணக்குகளையும் முடக்குதலை உள்ளடக்கலாம்.

(4) வங்கியொன்று அல்லது ஒரு வங்கியொன்றின் எவரேனும் முகவர் அல்லது ஊழியர், (2) ஆம் உட்பிரிவில் எதிர்நோக்கப்பட்ட அத்தகைய இணங்கியொழுகுகையின் காரணமாக வேறேதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் குற்றவழக்குக்கு அல்லது வேறேதேனும் சட்டத்தின்கீழ் அல்லது ஏதேனும் ஒப்பந்தம், உடன்படிக்கை அல்லது ஒழுங்கேற்பாட்டின்கீழ் அல்லது வேறுவகையாக ஏதேனும் வழக்குநடவடிக்கைக்கு அல்லது வேறெவரேனுமாளினாலான உரிமைக்கோரிக்கைக்கு உட்பட்டதாதலாகாது அல்லது ஆளாத லாகாது.

(5) இச்சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட ஏதேனும் புலனாய்வு முடிவுறுவதன்மீது, ஆணைக்குழுவானது, புலனாய்வின்கீழுள்ள கருமத்தில் எவ்வழியிலும் தொடர்புபடுத்தப்படுபவராக அல்லது சம்பந்தப்பட்டவராக இருந்துள்ள எவரேனுமாளுக்கு அல்லது ஆணைக்குழுவினால் அத்தகைய புலனாய்வு சம்பந்தமாக வழங்கப் பட்ட அறிவித்தலொன்றுக்கு எந்த வங்கியின் முகாமையாளர் இணங்கியொழுகியுள்ளாரோ அந்த ஏதேனும் வங்கிக்கு, புலனாய்வு சம்பந்தமாக அத்தகைய ஆளினால் அல்லது வங்கியினால் நியாயமானமுறையில் உறப்பட்டிருக்கக்கூடிய செலவுதொகை களையும் செலவுகளையும் எதிர்கொள்வதற்குப் போதியதென ஆணைக்குழு கருதக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை அளிக்கலாம்.

(6) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட எல்லாப் பணங்களும் ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(7) இப்பிரிவின்கீழ் ஆணைக்குழுவின்முன்னர் தோன்றுகின்ற எவரேனுமாள், அவரைக் குற்றவியல் குற்றச்சாட்டொன்றுக்கு அல்லது தண்டம் அல்லது இழப்பீடொன்றுக்கு உட்பட்டவராக்கும்

சாத்தியங்கொண்டிருக்கக்கூடிய கேள்விகள்தவிர ஆணைக்குழு வின் அலுவலர்களினால் அவரிடம் கேட்கப்படும் அத்தகைய விடயம் தொடர்பான எல்லாக் கேள்விகளுக்கும் உண்மையாக மறுமொழி யிறுப்பதற்குப் பிணிக்கப்படுகின்றார்.

*நிபுணர்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளுதல்*

**50.** (1) புலனாய்வொன்றை நடாத்துவதற்காக எவரேனுமாள் அரசாங்கப் பகுப்பாய்வாளரினால், ஓர் அரசாங்க மருத்துவத் தொழிலரினால் அல்லது வேறெவரேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிபுணரினால் பரிசோதனைசெய்யப்படுதல் அவசிய மாகவுள்ளதென ஆணைக்குழு கருதுமிடத்து, ஆணைக்குழுவானது-

(அ) விசாரணை செய்யப்பட வேண்டிய ஆளை, அத்தகைய ஆளின் சம்மதத்துடன், அரசாங்கப் பகுப்பாய்வாள ரினால், புலனாய்வு எந்தத் துறைதொடர்பில் நடாத்தப் படுகின்றதோ அந்தத் துறையில் நிபுணத்துவம் கொண்டுள்ள வேறெவரேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிபுணரினால் அல்லது ஓர் அரசாங்க மருத்துவத் தொழிலரினால் நடாத்தப்பட்ட பரி சோதனையொன்றுக்கு அமைந்தவராகவிருப்பதற்கு கட்டளைவிட்டழைக்கலாம்; அத்துடன்

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனும் நிபுணரை, ஆணைக்குழுவினால் அவருக்கு ஆற்றுப் படுத்தப்பட்ட ஒரு கருமத்தின்மீதான அறிக்கை யொன்றை வழங்கும்படி எழுத்தில் தேவைப்படுத்த லாம்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆள் அவ்வாறு பரிசோதனைசெய்யப்படுவதற்குச் சம்மதம் அளிக்காதவிடத்து, ஆணைக்குழுவானது, அத்தகைய ஆளைப் பரிசோதனைசெய்து அதன்மீது அறிக்கையிடுவதற்குக் கட்டளையொன்றிற் பெயர்குறிக் கப்பட்ட நிபுணருக்கு அதிகாரமளிக்கின்ற அக்கட்டளைக்காக, புலனாய்வு எந்த நீதிவானின் நியாயாதிக்கத்தினுள் நிறை வேற்றப்படுகின்றதோ அந்த நீதிவானுக்கு விண்ணப்பிக்கலாம்.

அத்தகையவொரு கட்டளை ஆக்கப்படுமிடத்து, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆள் அத்தகைய நிபுணரினாலான பரிசோதனையொன்றுக்குத் தன்னை உட்படுத்திக்கொள்ள வேண்டும்; அவர் அத்தகைய பரிசோதனையின் பெறுபேறை எடுத்துக்கூறி நீதிவானுக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

*கைவிரலடையாளங்கள், நிழற்படங்கள், உள்ளார்ந்தவையல்லாத மாதிரிகள், இரத்த மாதிரிகள் மற்றும் குரல் மாதிரிகள் முதலியவற்றை எடுத்தல்*

**51.** (1) ஆளொருவர் **47** ஆம் பிரிவின்கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளவிடத்து அல்லது **49** ஆம் பிரிவின்கீழ் அவருக்கு அழைப்பாணை சேர்ப்பிக்கப்பட்டுள்ளவிடத்து, ஆணைக்குழுவின் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், அவ்வாளின் இரத்த மாதிரிகள், குரல் மாதிரிகள், நிழற்படங்கள், கைவிரல், உள்ளங்கை அல்லது பாத அடையாளங்களை அல்லது உடலின் ஏதேனும் பாகத்தின் அடையாளத்தை மற்றும் எடை மற்றும் உயரம் பற்றிய அளவீடுகளை எடுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எடுக்கப்பட்ட ஆளொருவரின் அடையாளங்காண் விபரங்கள், பின்வரும் சந்தர்ப்பங்களிற்றவிர, ஆணைக்குழுவினால் வைத்திருக்கப்படுதல் வேண்டும்:-

(அ) ஏதேனும் தவறுக்காக அவ்வாளைக் குற்றஞ்சாட்டாதிருப்பதற்கான முடிபொன்று எடுக்கப்பட்டால்; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்காக அவ்வாள் குற்றஞ்சாட்டப்பட்டால் ஆனால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமுன்னர் ஒரு நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டால் அல்லது அவரது விளக்கத்தின்போது அல்லது மேன்முறையீட்டின்மீது விடுதலை செய்யப்பட்டால், அடையாளங்காண் விபரங்கள் அவற்றின் எவையேனும் எதிர்ப்படிகளுடன் அல்லது பிரதிகளுடன் சேர்த்து, நியாயமானவகையில் செயல்முறைக்குகந்ததாக இருக்குமளவுவரை விரைவாக அழிக்கப்படுதல் வேண்டும் அல்லது அவ்வாள் விரும்பின், அவ்வாளிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்கு முன்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ள ஆளொருவரின் அடையாளங்காண் விபரங்களை வைத்திருக்கலாம்.

(4) இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்ட அல்லது புரியப்பட்டுள்ளதாக நம்பப்பட்டவொரு தவறு தொடர்பிலான ஏதேனும் புலனாய்வில், உள்ளார்ந்ததல்லாத மாதிரியொன்று, பின்வரும் சந்தர்ப்பங்களில் மட்டுமே ஓராளிடமிருந்து எடுக்கப்படலாம்:-

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்றி அவ்வாளுக்கெதிராக நடவடிக்கையெடுக்கப்பட்டு அவ்வாள் தடுத்துவைக்கப்படின்; அத்துடன்

(ஆ) (இதனகத்துப்பின்னர் ''அதிகாரமளிக்கின்ற அலுவலர்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதியொருவர் என்ற பதவிவரிசைக்குக் குறையாத அல்லது அதற்கு மேற்பட்ட பதவிவரிசையிலுள்ள அலுவலரொருவர் அத்தகைய மாதிரி எடுத்தலுக்கு அதிகாரமளித்திருப்பின்.

(5) அதிகாரமளிக்கின்ற அலுவலரொருவர் பின்வருவனவற்றுக்காக நியாயமான ஏதுக்களைக் கொண்டிருப்பின் மட்டுமே (4) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு அவரது அதிகாரவளிப்பை வழங்கலாம்:-

(அ) உள்ளார்ந்ததல்லாத மாதிரி எந்த ஆளிடமிருந்து எடுக்கப்படவுள்ளதோ அந்த ஆள் இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிந்துள்ளாரெனச் சந்தேகிப்பதற்காகவும்; அத்துடன்

(ஆ) அம்மாதிரியானது அத்தகைய தவறு புரியப்பட்டதென்பதை உறுதிப்படுத்தும் அல்லது எண்பிக்காதிருக்கும் சாத்தியத்தைக் கொண்டதாகவிருக்குமென நம்புவதற்கும்.

(6) அதிகாரமளிக்கின்ற அலுவலரொருவர் தனது அதிகார வளிப்பை எழுத்தில் வழங்குதல் வேண்டுமென்பதுடன் செயல் முறையிலான சிரமம் ஏற்படின் அத்தகைய அதிகாரவளிப்பை வாய்மொழிமூலம் வழங்கி இயன்றளவு விரைவாக அதனை எழுத்தில் உறுதிப்படுத்தலாம்.

(7) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் அதிகாரவளிப்பொன்று வழங்கப் பட்டுள்ளவிடத்து, அத்தகைய அதிகாரவளிப்புக்குத் தத்துவ மளிக்கப்பட்டுள்ள அலுவலர், அத்தகைய உள்ளார்ந்ததல்லாத மாதிரியை எடுக்குமுன்னர், எந்த ஆளிடமிருந்து மாதிரி எடுக்கப் படவுள்ளதோ அந்த ஆளுக்குப் பின்வருவனபற்றித் தெரிவித்தல் வேண்டும்:–

(அ) அந்த ஆள் புரிந்துள்ளதாகச் சந்தேகிக்கப்பட்ட தவறின் தன்மை;

(ஆ) மாதிரியானது அவ்வாளினால் தவறு புரியப்பட்ட தனை உறுதிப்படுத்தும் அல்லது அங்கீகாரம் மறுக்கும் சாத்தியங்கொண்டதாகவிருக்குமென நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளனவென்று;

(இ) அதிகாரவளிப்புப் பற்றி;

(ஈ) மாதிரி எடுக்கப்படுவதற்கு அவர் சம்மதிக்கலாம் அல்லது சம்மதமளிக்காதிருக்கலாமென்று; அத்துடன்

(உ) மாதிரியானது பகுப்பாய்வுசெய்யப்படுமென்றும் அத்தகைய பகுப்பாய்விலிருந்து பெறப்பட்ட தகவல்கள் அத்தகைய தவறுக்கான அல்லது எந்தத் தவறுக்காக ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட லாமோ அந்த வேறேதேனும் தவறுக்காகக் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் பயன்படுத்தக்கூடிய சான்றை வழங்கலாமென்றும்.

(8) ஆளொருவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் இரத்தமாதிரிகள், கைவிரல், உள்ளங்கை அல்லது பாத அடையாளங்கள் அல்லது உடலின் ஏதேனும் பாகத்தின் அடையாளத்தை அல்லது (4) ஆம் உட்பிரிவின்கீழ் உள்ளார்ந்ததல்லாத மாதிரியொன்றை எடுப்பதற்கான சம்மதமளிக்காதவிடத்து, ஆணைக்குழு அவரிடமிருந்து அவற்றை எடுப்பதற்கான கட்டளையொன்றுக்காக நீதிவானுக்கு விண்ணப்பிக்கலாம்.

(9) நான்காம் உட்பிரிவின்கீழ் உள்ளார்ந்ததல்லாத மாதிரியொன்று எந்த ஆளிடமிருந்து எடுக்கப்பட்டதோ அந்த ஆள் மாதிரியின் பகுப்பாய்விலிருந்து பெறப்பட்ட பெறுபேறுகள் அறிவிக்கப்படுவதற்கு உரித்துடையவராகவுள்ளார்.

(10) இப்பிரிவின்கீழ் உள்ளார்ந்ததல்லாத மாதிரியொன்றை எடுப்பதற்காக அளிக்கப்பட்ட ஏதேனும் சம்மதம் எழுத்தில் அளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் சம்மதத்தையளிக்கின்ற ஆளினால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்.

(11) எட்டாம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று ஆக்கப்படுமிடத்து, பெறுபேறுகள், ஆணைக்குழுவினால் நீதிவானுக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

(12) ஓர் ஆளிடமிருந்து உள்ளார்ந்ததல்லாத மாதிரியொன்று, பதிவுசெய்யப்பட்ட மருத்துவத்தொழிலர் ஒருவரினால் மட்டுமே எடுக்கப்படலாம்.

(13) அமைச்சர் உள்ளார்ந்தவையல்லாத மாதிரிகளின் பாவனை மற்றும் சட்ட மருத்துவப் பகுப்பாய்வின் பெறுபேறுகளின்மீதான அந்தரங்கத்தன்மை மற்றும் வரையறைகள்மீதும் மற்றும் இயைபான மாதிரிகளையும் பதிவேடுகளையும் கையுதிர்த்தல் என்பனமீதும் ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையுடன் ஒழுங்கு விதிகளை ஆக்குதல் வேண்டும்.

*நீதிவான்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளுதல்*

**52.** (1) ஐம்பதாம் பிரிவு, 51 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவு அல்லது 59 ஆம் பிரிவு என்பவற்றின்கீழ் எந்த நீதிவானுக்கு விண்ணப்பமொன்று செய்யப்படுகின்றதோ அந்த நீதிவான் ஒவ்வொருவரும், நீதிமன்றத்தின் தோதான கட்டளைகளையும் மன்றாணைகளையும் ஆக்குவதன்மூலமும் வழங்குவதன்மூலமும் புலனாய்வொன்றை நடாத்துவதில் உதவுதல் வேண்டுமென்பதுடன்

குறிப்பாக, தவறாளரின் ஆளடையாளத்தை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக அடையாள அணிவகுப்பொன்றையும் நடாத்தலாம் அல்லது நடாத்துவதற்கு அதிகாரமளிக்கலாம்; அத்துடன் அத்தகைய நோக்கத்துக்காக மறைவானவோர் இடத்திலிருந்து சாட்சியானவர் ஒரு சந்தேகநபரின் ஆளடையாளத்தைக் கண்டறிவதனை இயலச்செய்வதற்கு அல்லது அனுமதிப்பதற்கு அத்தகைய அணிவகுப்பில் பங்குபற்றும்படி அச்சந்தேகநபரை அல்லது வேறு ஆளை நீதிவான் தேவைப்படுத்தலாம்; அத்துடன் அத்தகைய அணிவகுப்பின் நடவடிக்கைகள் பற்றிய பதிவேடொன்றைத் தயாரிக்கலாம் அல்லது தயாரிக்கச்செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நீதிவானுக்குச் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் தொடர்பிலான அந்தரங்கத்தன்மை பேணப்படுதல் வேண்டுமென்பதுடன் நீதியின் நோக்கங்களுக்காக அவசியமாகக் கூடியவாறானவையும் எந்தப் புலனாய்வு தொடர்பில் நீதிவானின் உதவி நாடப்படுகின்றதோ அந்தப் புலனாய்வின் நேர்மையைப் பாதிக்காதவகையினவையுமான அத்தகைய கரிசனைகளுக்கமைய ஆணைக்குழுவினால் கோரப்படின், அது பற்றிய வழக்குநட வடிக்கைகள் இரகசியமாக நடாத்தப்படுதலும் வேண்டும்.

*தடைசெய்தற் கட்டளைகள்*

**53.** (1) ஆணைக்குழு -

(அ) (இதனகத்துப்பின்னர் "முடக்கற் கட்டளை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) எழுத்திலான கட்டளைமூலம், 42 ஆம் பிரிவின்கீழ் எந்த ஆள் தொடர்பில் விசாரணையொன்று அல்லது புலனாய்வொன்று நடாத்தப்படுகின்றதோ அந்த எவரேனுமாளை, அவரது வாழ்க்கைத் துணையை, அத்தகைய ஆளின் வேறு குடும்ப உறுப்பினரை அல்லது முதலாவதாகக் குறிப் பிடப்பட்ட அத்தகைய ஆளுக்காக நம்பிக்கைப் பொறுப்பில் ஏதேனும் ஆதனத்தை வைத்திருக் கின்ற வேறு எவரேனுமாளை அல்லது அவரது ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தை உடைமை யில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில்

வைத்திருக்கின்ற ஏதேனும் வங்கியை அல்லது ஏதேனும் வங்கித்தொழில்சாராத நிதி நிறுவனத்தை அல்லது பெயர்குறிக்கப்பட்ட நிதிசாராத் தொழிலை அல்லது, அவர் ஒரு பணிப்பாளராகவிருக்கின்ற கம்பெனியொன்றை அல்லது அவர் பங்காளராகவிருக்கின்ற குழுமமொன்றை, ஆணைக்குழுவினால் அத்தகைய கட்டளை இல்லாதொழிக்கப்படும் அத்தகைய காலம்வரை, அத்தகைய ஆதனத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தைக் கைதுறப்பதிலிருந்து, கையாள்வதிலிருந்து அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதிலிருந்து, அல்லது அத்தகைய கட்டளையில் குறித்துரைக் கப்பட்ட ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் சொத்துவத்தை அல்லது அதிலான ஏதேனும் அக்கறையைக் கைமாற்றுவதிலிருந்து தடுக்கலாமென்பதுடன், பின்வருவோர் உட்பட, ஆணைக்குழு தகுதி யானவர்களெனக் கருதுகின்றவாறான அத்த கைய எவரேனும் அதிகாரிக்கு முடக்கற் கட்டளை யின் பிரதியொன்றைச் சேர்ப்பிக்கவும் செய்ய லாம் -

(i) அசைவற்ற ஆதனமொன்றின் விடயத் தில், அவ்வசைவற்ற ஆதனம் அமைந் துள்ள இடத்தின் காணிகள் பதிவாள ருக்கு;

(ii) மோட்டார் வாகனமொன்றின் விடயத் தில், (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 204 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மோட்டார் வாகன ஆணையாளருக்கு; அத்துடன்

(iii) ஏதேனும் கம்பெனியின் பங்குகள், பங்குத்தொகுதிகள் அல்லது தொகுதிக்

கடன்களின் விடயத்தில், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 471 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதிக்கும் அத்தகைய கம்பெனியின் செயலாளருக்கும்;

(ஆ) எழுத்திலான கட்டளைமூலம், (அ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட முடக்கற் கட்டளையின் பிரதியொன்று எந்த அதிகாரிக்குச் சேர்ப்பிக் கப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் அதிகாரியை, அவரினால் பேணப்படும் ஏதேனும் இடாப்பில் அல்லது பதிவேட்டில் அத்தகைய பிரதியைப் பதிவுசெய்யுமாறு அல்லது கோப்பிடுமாறு தேவைப்படுத்தலாம்;

(இ) எழுத்திலான கட்டளைமூலம், அத்தகைய எழுத்திலான கட்டளையில் குறித்துரைக்கப் படக்கூடியவாறாக மூன்று மாதங்களை விஞ்சாத அத்தகைய காலப்பகுதிக்கு 42 ஆம் பிரிவின்கீழ் எவ்வாள் தொடர்பில் தகவலொன்று அல்லது முறைப்பாடொன்று அல்லது தொடர்பாட லொன்று பெறப்பட்டுள்ளதோ அந்த எவரேனு மாளின் கடவுச்சீட்டையும் வேறு பிரயாண ஆவணங்களையும் தடுத்துவைக்குமாறு அல்லது இலங்கையிலிருந்து புறப்பட்டுச் செல்வதைத் தடுப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் எடுக்குமாறு (351 ஆம் அத்தியாயமான) குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளரைத் தேவைப் படுத்தலாம்;

(ஈ) எழுத்திலான கட்டளைமூலம், அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறாக மூன்று மாதங்களை விஞ்சாத அத்தகைய காலப்பகுதிக்கு 42 ஆம் பிரிவின்கீழ் எவ்வாள் தொடர்பில் ஏதேனும் தகவல் அல்லது முறைப்பாடு பெறப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் ஆள் இலங்கையிலிருந்து புறப்பட்டுச் செல்வதைத் தடுப்பதற்கு அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய எல்லா நடவடிக்கை களையும் எடுக்குமாறு, அந்தக் கட்டளையில், பெயரினால் அல்லது பதவியினால், குறித் துரைக்கப்படவேண்டிய எவரேனும் பொலிசு அலுவலரைத் தேவைப்படுத்தலாம்;

(2) ஆணைக்குழு, அத்தகைய முடக்கற் கட்டளை வலுவில் இருக்கவேண்டிய ஏழு நாட்களுக்குள் அத்தகைய முடக்கற் கட்டளையின் உறுதிப்படுத்தலை நாடி மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன், சூழ்நிலை கள் அவ்வாறு அவசியப்படுத்தினால், ஏழு நாட்களைக் கொண்ட மூலக் காலப்பகுதியின் நீடிப்புக்கான கோரிக்கையையும் செய்தல் வேண்டும்.

(3) அத்தகைய முடக்கற் கட்டளையை ஆக்குவதற்குப் போதிய காரணங்கள் உள்ளனவென்று மேல் நீதிமன்றம் திருப்தியுறு கின்றவிடத்து, அந்நீதிமன்றம் முடக்கற் கட்டளையை உறுதிப்படுத்த லாம் என்பதுடன், அதன் நீடிப்புக்கான விண்ணப்பமொன்று செய்யப்பட்டிருக்குமிடத்து, அது அவசியமெனக் கருதுகின்ற வாறான அத்தகைய காலப்பகுதிக்கான நீடிப்பையும் வழங்கலாம்; எவ்வாறிருப்பினும் அது பின்வருவனவற்றுக்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்-

(அ) மேல் நீதிமன்றத்தினால் ஆக்கப்படக்கூடியவாறான வேறு எவையேனும் கட்டளைகள்; அத்துடன்

(ஆ) அவ்வாறு வழங்கப்பட்ட ஏதேனும் நீடிப்பின் அதிக பட்ச காலப்பகுதியானது ஆணைக்குழுவினாலான

முடக்கற்கட்டளை பெறப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டை விஞ்சாததாக இருத்தல் வேண்டுமெனும் தேவைப்பாடு:

ஆயின், இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்காக குற்றப்பகர்வு கோப்பிடப்பட்டிருக்குமிடத்து, பதியப்படவேண்டிய காரணங்களுக்காக மேல்நீதிமன்றத்தினால் முடக்கற் கட்டளை வறிதாக்கப்பட்டாலொழிய, அத்தகைய தவறு தொடர்பிலான விளக்கம் முடிவடையும்வரை அல்லது அத்தகைய தவறுக்கான குற்றத்தீர்ப்பொன்றுக்கெதிராக மேன்முறையீடொன்று செய்யப்படுகின்றவிடத்து அம்மேன்முறையீடு தீர்மானிக்கப்படும்வரை வலுவில் இருத்தல் வேண்டும்.

(4) மேல் நீதிமன்றம் (3) ஆம் உட்பிரிவின்கீழ் முடக்கற் கட்டளையொன்றை உறுதிப்படுத்துகின்றவிடத்து, முடக்கற் கட்டளைக்கு அமைந்ததாகவுள்ள கணக்குக்கான, ஆதனத்துக்கான அல்லது முதலீட்டுக்கான தமது உரிமைக்கோரிக்கைகளுக்கு ஆதாரமாக மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்வதற்கு நல்லெண்ணத்துடனான மூன்றாம் திறத்தவர்களை வசதிப்படுத்துவதற்காக, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் புழக்கத்திலுள்ள செய்தித்தாள்களுள் ஆகக்குறைந்தது ஒவ்வொரு மொழியிலுமான ஒரு செய்தித்தாளில் அத்தகைய கட்டளை பற்றிய அறிவித்தல் வெளியிடப்படுவதனை அது செய்வித்தல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் அசைவுள்ள ஆதனம் கைப்பற்றப்படுகின்றவிடத்து, அது எவ்வாளிடமிருந்து கைப்பற்றப்பட்டதோ அவ்வாளின் உடைமையிலிருந்து, கட்டுக்காப்பிலிருந்து அல்லது கட்டுப்பாட்டிலிருந்து அசைவுள்ள ஆதனத்தை அகற்றுவதன்மூலமும் மற்றும் ஆணைக்குழுவின் அலுவலரொருவரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆளின் அல்லது அதிகாரியின் மற்றும் அத்தகைய இடத்தின் கட்டுக்காப்பின்கீழ் அதனை வைப்பதன்மூலமும் கைப்பற்றலானது பயனுறுத்தப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவின்கீழ் ஏதேனும் ஆதனத்தை அகற்றுவதனைப் பயனுறுத்துவது செயல்முறைக்கு உகந்ததல்ல அல்லது விரும்பத்தக்கதல்ல என்று ஆணைக்குழுவின் திருப்திக்குத் தோன்றுகின்றவிடத்து, அது எந்த வளவுகளில் கைப்பற்றப்படுகின்றதோ அந்த வளவுகளில் ஆணைக்குழுவின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரின் கட்டுக்காப்பின்கீழ் ஆணைக்குழுவினால் விட்டுவிடப்படலாம்.

(6) ஐந்தாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவை எவ்வாறிருப்பினும், (10) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் அசைவுள்ள ஆதனமுட்பட, அசைவுள்ள ஆதனமெதுவும் இச்சட்டத்தின்கீழ் பறிமுதல் செய்யப்படுகின்றபோது அப்பறிமுதலைப் பயனுறுத்திய அலுவலர் தவிர்ந்த ஆணைக்குழுவின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர் -

(அ) விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமையவும் மற்றும் ஏதேனும் விடயத்தில், விடுவிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் கோரிக்கை செய்யப்படுவதன்மேல் அசைவுள்ள ஆதனத்தை மீள ஒப்படைப்பதையும், மற்றும் அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் எவையேனுமிருப்பின், அவற்றுக்கு இணங்கியொழுகப்பட வேண்டும் என்பதையும் உறுதிப்படுத்துவதற்குப் போதிய பிணைப்பொறுப்பு கொடுத்துதவப்படுவதற்கமையவும், அதன் சொந்தக்காரருக்கு அல்லது எவ்வாளின் உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டிலிருந்து அது கைப்பற்றப்பட்டதோ அவ்வாளுக்கு அல்லது அதற்கு உரித்தாகவிருக்கக் கூடியவாறான அத்தகைய ஆளுக்கு அசைவுள்ள ஆதனத்தைத் தற்காலிகமாகத் திருப்பிக்கொடுக்கலாம்; அல்லது

(ஆ) அசைவுள்ள ஆதனம் எவ்வாளுக்கு திருப்பிக் கொடுக்கப்படுகின்றதோ அவ்வாளுக்கு அவ்வாதனத்தைக் கையுதிர்ப்பதற்கான சுதந்திரத்துடன், அசைவுள்ள அவ்வாதனத்தை அதன் சொந்தக்கார

ருக்கு அல்லது எவ்வாளின் உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டிலிருந்து அது கைப்பற்றப்பட்டதோ அவ்வாளுக்கு அல்லது அதற்கு உரித்தாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய ஆளுக்கு தற்காலிகமாகத் திருப்பிக்கொடுக்கலாம்; அத்தகைய திருப்பிக்கொடுத்தலானது, அத்தகைய ஆதனம் அவ்வாறு திருப்பிக்கொடுக்கப்பட்ட தேதியில் அவ்வாதனத்தின் திறந்த சந்தைப் பெறுமதியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தொகையைவிடக் குறையாத தொகையொன்றில் கொடுத்துதவப்படு கின்ற பிணைப்பொறுப்புக்கு அமைந்ததாக இருத்தல் வேண்டும்.

(7) அசைவுள்ள ஆதனம் எந்த ஆளுக்குத் தற்காலிகமாகத் திருப்பிக்கொடுக்கப்பட்டதோ அந்த எவரேனுமாள், கோரிக்கை யின்மேல் அத்தகைய ஆதனத்தை மீள ஒப்படைப்பதற்கு அல்லது அப்பந்தியின்கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் நியதிக்கு அல்லது நிபந்தனைக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து –

(அ) அத்தகைய ஆதனம் தொடர்பில் கொடுத்துதவப்பட்ட பிணைப்பொறுப்பு இழப்பிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அவ்வாள், ஏழு ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதிக் கான மறியற்றண்டனையினால் அல்லது ஒரு மில்லி யன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்தினால் தண்டிக் கப்படற்பாலதான தவறொன்றைப் புரிகின்றவராதல் வேண்டும்.

(8) ஏழாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான தற்காலிகமாக திருப்பிக்கொடுக்கப்பட்ட ஆதனம் தொடர்பில் நீதிமன்றத்தினால் பிணைப்பொறுப்பின் இழப்பித்தற் கட்டளையொன்று ஆக்கப்படு கின்றவிடத்து, அத்தகைய இழப்பித்தலானது எவ் வாளுக்கு ஆதனம் திருப்பிக்கொடுக்கப்பட்டதோ அவ்வாளினால் கொடுத்துதவப்பட்ட பிணைப்பொறுப்பை இழப்பிப்பதன்மூலம் பயனுறுதல் வேண் டும்.

(9) இச்சட்டத்தின்கீழ் கைப்பற்றப்பட்ட ஏதேனும் அசைவுள்ள ஆதனம், எவ்வாளுக்கு எதிராக குற்றவழக்குத் தொடுக்கப்படுவதற்கு உட்கருதப்படுகின்றதோ அவ்வாள் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளின் உடைமையின் அல்லது கட்டுக்காப்பின் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள பணம், பங்குகள், பிணையங்கள், பங்குத்தொகுதிகள், தொகுதிக்கடன்பத்திரங்கள் அல்லது ஏதேனும் வழக்குக்குரிய உரிமைப்பொருட்களைக் கொண்டுள்ளபோது, அத்தகைய வேறு ஆள்மீது -

(அ) அத்தகைய ஆதனத்தைப் பயன்படுத்துதல், கைமாற்றுதல் அல்லது கையாள்வதிலிருந்து அவரைத் தடை செய்கின்ற; அல்லது

(ஆ) கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட முறையிலும் மற்றும் காலத்திற்குள்ளும் ஆணைக்குழுவுக்கு ஆதனத்தை மீள ஒப்படைப்பதைத் தேவைப்படுத்துகின்ற,

கட்டளையொன்றைச் சேர்ப்பித்து, கைப்பற்றுதலானது ஆணைக்குழுவின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் பயனுறுத்தப்படுதல் வேண்டும்.

(10) கைப்பற்றப்பட்ட அல்லது முடக்கப்பட்ட ஏதேனும் அசைவுள்ள ஆதனம் விரைவாக அழியக்கூடியதாக அல்லது சீர்குலையக்கூடியதாக அல்லது சிரமமின்றி பேணப்பட முடியாததாக அல்லது பேணுவதானது செயன்முறைக்கு உகந்ததல்லாததாக மற்றும் (6) ஆம் உட்பிரிவின்கீழ் கையாளப்பட முடியாததாக இருக்கின்றவிடத்து, அது தொடர்பில் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் விண்ணப்பமொன்றைச் செய்ததன்மேல், மேல் நீதிமன்றம் அவ்வாதனத்தை விற்பனை செய்வதற்கான அல்லது விற்பனையைச் செய்விப்பதற்கான கட்டளையை ஆக்கலாமென்பதுடன், அத்தகைய நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான முறையில் விற்பனையின் வரும்படிகளையும் வைத்திருக்கலாம்:

ஆயின், மேல் நீதிமன்றமானது இச்சட்டத்தின்கீழான எவையேனும் வழக்குநடவடிக்கைகளின் வரும்படிகளிலிருந்து ஆதனத்தின் பேணுகைக்கும் விற்பனைக்குமான ஏதேனும் ஆகுசெலவை அல்லது செலவைக் கழிப்பதற்குக் கட்டளை ஆக்கலாம்.

(11) முடக்கற் கட்டளையொன்று வலுவிலுள்ளவிடத்து, ஏதேனும் கணக்கு, ஆதனம் அல்லது முதலீடு தொடர்பிலான கொடுக்கல் வாங்கலொன்று பயனுறுத்தப்படுதலாகாது என்பதுடன், அவ்வாறு பயனுறுத்தப்பட்ட கொடுக்கல்வாங்கல் எதுவும் வெற்றானதும் வறிதானதுமாதலும் வேண்டும்.

(12) இப்பிரிவின்கீழான முடக்கற் கட்டளையொன்றை ஆக்க முன்னர், மேல் நீதிமன்றம், அத்தகைய முடக்கற் கட்டளை அத்தகைய கட்டளையொன்றினால் பாதிக்கப்பட்ட எவரேனும் ஆளின் சட்டமுறையான தொழிலை அல்லது வேறேதேனும் அக்கறையை சேதப்படுத்தலாமென்று அபிப்பிராயப்பட்டால், அதுசார்பில் செய்யப்பட்ட விணப்பமொன்றின்மேல், அத்தகைய நீதிமன்றத்தினால் பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மேற்பார்வைக் கமையவும் மற்றும் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரின் பணிப்பின்கீழும் அத்தகைய கணக்கு, ஆதனம் அல்லது முதலீடு தொடர்பில் நிறைவேற்றப்பட வேண்டிய ஏதேனும் அத்தியாவசிய கொடுக்கல்வாங்கலை அனுமதித்து கட்டளையை ஆக்கலாம்.

இலங்கைக்கு வெளியேயுள்ள ஆதனத்தைக் கையாள்வதைத் தடைசெய்தல்

**54**. ஏதேனும் ஆதனம் இச்சட்டத்தின்கீழான தவறொன்றின் விடயப்பொருளாக இருக்கின்றதென அல்லது அத்தகைய ஏதேனும் தவறைப் புரிவதில் பயன்படுத்தப்பட்டதென ஆணைக்குழு திருப்தியுறுகின்றவிடத்தும் மற்றும் அத்தகைய ஆதனம் இலங்கைக்கு வெளியே வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அல்லது வைப்பிலிடப்பட்டிருக்கின்றவிடத்தும், ஆணைக்குழுவானது, எந்த ஆளினால் அவ்வாதனம் வைத்திருக்கப்படுகின்றதோ அந்த ஆள் அல்லது, எந்த ஆளிடம் அவ்வாதனம் வைப்பிலிடப்படுகின்றதோ அந்த ஆள் அவ்வாதனத்தைக் கையாள்வதைத் தடைசெய்செய்கின்ற கட்டளையொன்றுக்காக மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

விசேட புலனாய்வு நுட்பங்கள்

**55.** (1) ஆணைக்குழுவானது இச்சட்டத்தின் 42 ஆம் பிரிவின் கீழான புலனாய்வொன்றில் பின்வருவனவுட்பட, ஏதேனும் புலனாய்வு நுட்பத்தைப் பயன்படுத்தலாம்:-

(அ) இலஞ்சமொன்றுக்கான ஒரு கோரிக்கை பற்றி ஆணைக்குழுவுக்கு அறிக்கையிட்டுள்ள ஆளொருவரை, கோரப்பட்டவாறாக அதனை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் கொடுப்பதற்கு அல்லது பெறுவதற்கு அதிகாரமளித்தல்;

(ஆ) கண்காணிப்பு மற்றும் அவதானிப்பு;

(இ) மறைமுகமான தொழிற்பாடுகள்;

(ஈ) காணொளியாகப் பதிவுசெய்தல்; அல்லது

(உ) செவியேற்பு மற்றும் நுண்ணொலிப்பதிவு சாதனங்களைப் பயன்படுத்தல் ; அல்லது

(ஊ) கட்டுப்படுத்தப்பட்ட ஒப்படைப்புகள்:

ஆயின், ஆணைக்குழு இப்பிரிவின்கீழ் புலனாய்வு தொழிநுட்பங்களின் பயன்பாட்டின் மீது பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறைகளை விதிகள் என்ற வகையாகக் குறித்துரைத்தல் வேண்டும்.

(2) ஆணைக்குழு, (1) ஆம் உட்பிரிவின் (ஈ) மற்றும் (உ) என்னும் பந்திகளின் நோக்கங்களுக்காக, மேல் நீதிமன்றத்திடமிருந்து கட்டளையொன்றை மறுதிறத்தவரின்றிப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். மேல் நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் தொடர்பில் அந்தரங்கத்தன்மை பேணப்படுதல் வேண்டுமென்பதுடன் அது தொடர்பிலான வழக்குநடவடிக்கைகள் இரகசியமான முறையில் நடைபெறுதலும் வேண்டும்.

தகவல்களைப் பாதுகாத்தலும் பேணிக்காத்தலும்

**56.** ஆணைக்குழுவானது, ஒரு தரவுச் செய்தி, இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு அல்லது இலத்திரனியல் வடிவத்திலான வேறு தொடர்பாடல் என்றவகையில் அதனால் பெறப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட தகவல்களைப் பாதுகாப்பதற்கும் பேணிக்காப்பதற்குமான கட்டளைக்கற்களை விதிகள் என்ற வகையில் குறித்துரைத்தல் வேண்டும்.

*சேவை வழங்குநர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல்*

**57.** ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின்கீழான தவறொன்றாக அமையக்கூடிய ஏதேனும் செயல்மீது நடாத்தப்பட்ட புலனாய்வுகளில் அத்தகைய தகவல்கள் பயன்படுத்தப்படலாமென அபிப்பிராயப்படுகின்றவிடத்து, பின்வருவனவற்றை வழங்குமாறு, ஏதேனும் தொலைத்தொடர்பு, செய்மதி, எண்ணிம சேவை அல்லது தரவுச்சேவை வழங்குநரைத் தேவைப்படுத்தலாம் –

(அ) எவரேனும் ஆளுக்கு அத்தகைய சேவை வழங்குநரினால் வழஙகப்பட்ட அல்லது வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்பான தகவல்;

(ஆ) அத்தகைய சேவைகள் எந்த ஆளுக்கு கிடைக்கக் கூடியனவாக ஆக்கப்பட்டுள்ளனவோ அந்த எவரேனும் ஆளினால் அனுபவிக்கப்பட்ட சேவைகள் தொடர்பான தகவல்;

(இ) அத்தகைய சேவை வழங்குநரினால் களஞ்சியப் படுத்தப்பட்டு, ஆவணக்காப்பகப்படுத்தப்பட்டு அல்லது வேறுவகையில் வைக்கப்பட்டிருக்கக்கூடிய ஏதேனும் தகவல், தரவு அல்லது ஆவணம் அல்லது பதிவேடு; அத்துடன்

(ஈ) அத்தகைய சேவை வழங்குநரினால் வழங்கப்பட்ட சேவைக்கூடாக ஏதேனும் உபகரணத்துக்கு தரவை அல்லது தகவலைத் தரவேற்றம்செய்தல் தொடர்பான அல்லது அச்சாதனத்திலிருந்து தரவை அல்லது தகவலைத் தரவிறக்கம் செய்தல் தொடர்பான தகவல்.

*தொடர்பாடல்களை இடைமறித்தல்*

**58.** (1) ஆணைக்குழுவின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர், ஆளொருவர் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ளாரென, புரிந்துகொண்டிருக்கின்றாரென அல்லது புரியவுள்ளாரெனச் சந்தேகிப்பதற்கு அல்லது நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டிருப்பின், ஏதேனும் நடத்தையை ஒளிந்திருந்து கண்காணிப்பதற்கு மற்றும் ஏதேனும் தொடர்பாடலைப் பதிவதற்கு அதிகாரமளிக்கின்ற ஆணைப்பத்திரமொன்றுக்காக அத்தகைய அலுவலர் மேல் நீதிமன்றத்துக்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கலாம்.

(2) மேல் நீதிமன்ற நீதிபதியொருவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் எழுத்திலான விண்ணப்பமொன்றைப் பெறுவதன்மேல், எவையேனும் வழிவகைகள் மூலம், ஆளொருவரின் நடத்தையை ஒளிந்திருந்து கண்காணிப்பதற்கு அத்துடன் தொலைத்தொடர்பாடல்கள் உள்ளடங்கலான அவ்வாளின் தொடர்பாடல்களைப் பதிவதற்கு அதிகாரமளிப்பதற்காக, அத்தகைய சந்தேகத்துக்கான அல்லது நம்பிக்கைக்கான நியாயமான ஏதுக்கள் உள்ளனவென்று திருப்தியுற்றபின்னர், ஆணைப்பத்திரமொன்றை வழங்கலாம். மேல் நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் தொடர்பில் அந்தரங்கத்தன்மை பேணப்படுதல் வேண்டுமென்பதுடன் அது தொடர்பான வழக்குநடவடிக்கைகள் மறுதிறத்தவரின்றியும் மற்றும் இரகசியமானமுறையிலும் நடைபெறுதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரமொன்று, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் அதுசார்பில் செய்யப்பட்ட மேலதிக விண்ணப்பத்தின்மூலம் புதுப்பிக்கப்படலாம்.

(4) இப்ரிவிரின்கீழ் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரமொன்று, எவரேனும் அலுவலருக்கு -

(அ) ஆணைப்பத்திரத்தை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, அவசியமெனில் வலோற்காரமாக, ஆணைப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் இடத்தினுள் வெளிப்படையாக அல்லது ஒளிவுமறைவாகப் பிரவேசிப்பதற்கு அல்லது, புதுப்பிக்கப்பட்ட ஆணைப் பத்திரமொன்றின் விடயத்தில், மீளப் பிரவேசிப்பதற்கு அதிகாரமளிக்கலாம்; அத்துடன்

(ஆ) புதுப்பிக்கப்பட்ட ஆணைப்பத்திரமொன்றின் விடயத்தில், மூல ஆணைப்பத்திரத்தைப் பின்பற்றி கண்காணித்தல் மற்றும் பதிதல் என்பவற்றைத் தொடர்வதற்கு அதிகாரமளிக்கலாம்.

(5) ஒராம் உட்பிரிவின்கீழ் எழுத்திலான விண்ணப்பமொன்று நியாயமானளவு செயல்முறைக்குகந்ததல்லாததாக இருக்கின்றதெனும் அத்தகையதான சூழ்நிலைகள் காணப்படின், வாய்மொழியிலான விண்ணப்பமொன்று செய்யப்படலாம்.

(6) விண்ணப்பத்தின் வடிவமானது, விதிகள் என்றவகையில் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

(7) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் பதிதலானது தனியே இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டுமென்பதை ஆணைக்குழு உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*தரவுகளையும் தகவல்களையும் தடையகற்றித் திறத்தல்*

**59.** பணிப்பாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின்கீழான -

(அ) தவறொன்றைப் புரிந்துள்ள ஆளொருவரின் ஆளடையாளத்தைத் தீர்மானிக்கும்;

(ஆ) தவறொன்றைப் புரிந்துள்ள ஆளொருவரின் இருப்பிடத்தைத் தீர்மானிக்கும்;

(இ) தவறொன்று பற்றிய புலனாய்வொன்றின் நடாத்துகைக்கு வசதியளிக்கும்;

(ஈ) தவறொன்றைப் புரிந்துள்ள ஆளொருவருக்கு எதிரான சான்றுகளை ஒன்றுதிரட்டும்;

(உ) தவறொன்றைப் புரிவதற்கு ஓராள் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்கள் சதிசெய்கின்றாரா அல்லது சதிசெய்கின்றனரா, திட்டமிடுகின்றாரா அல்லது திட்டமிடுகின்றனரா, ஆயத்தஞ்செய்கின்றாரா அல்லது ஆயத்தஞ்செய்கின்றனரா அல்லது எத்தனிக்கின்றாரா அல்லது எத்தனிக்கின்றனரா என்பதைத் தீர்மானிக்கும்; அல்லது

(ஊ) தவறொன்று புரியப்படுவதைத் தடுப்பதற்கான வழிமுறைகளை எடுக்கும்,

நோக்கத்துக்காக, பின்வருவனவற்றுக்கு ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிப்பதற்கென நீதிவானொருவருக்கு விண்ணப்ப மொன்றைச் செய்யலாம் –

(i) ஏதேனும் தரவு அல்லது தகவல் அல்லது வேறு விடயம் பற்றிய ஏதேனும் தொடர்பாடல் அல்லது களஞ்சியப் படுத்தற் சேவைகள் அல்லது உபகரணம் தொடர்பில் தடையிட்டுமூடும் அல்லது குறியாக்கம் செய்யும் சேவைகளை வழங்குகின்ற எவரேனுமாளை, அச் சேவையை அல்லது அவ்வுபகரணத்தைத் தடை யகற்றித் திறந்து அல்லது குறியாக்கம்நீக்கி அதன்கண் உள்ளடங்கியுள்ள தகவல்களை வழங்குமாறு பணித் தல்;

(ii) வேறேதேனும் ஊடகத்தினூடாக ஏதேனும் அஞ்சல் செய்தியை அல்லது இலத்திரனியல் மின்னஞ்சலை அல்லது ஏதேனும் தொலைபேசிவழி, குரல்வழி, இணையவழி அல்லது காணொளிவழி உரையாடலை அல்லது காணொளி வழி மாநாட்டை அல்லது ஏதேனும் தொடர்பாடலை இடைமறித்தல், வாசித்தல், செவியேற்றல் அல்லது பதிதல்; அல்லது

(iii) ஏதேனும் பரிமாற்ற அல்லது நிலைமாற்ற முறைமை பற்றிய எவையேனும் ஒப்புமை அல்லது எண்ணிம தரவுகளை அல்லது தகவல்களை அணுகுதல்.

**60.** *(1)* வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்வாறிருப் பினும், எந்த அவாநிறைவு அல்லது அதன் பெறுமதி பத்தாயிரம் ரூபாவை விஞ்சாதுள்ளதோ அந்த அவாநிறைவொன்றை எவரேனுமாள் பரிந்துகேட்பதை, ஏற்றுக்கொள்வதை அல்லது முனைவதை உள்ளடக்குகின்றதான தவறொன்று பொலிஸ் அலுவலர் தவிர்ந்த ஆளொருவரினால் இச்சட்டத்தின்கீழ் புரியப் பட்டுள்ளதென சந்தேகிப்பதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளன வென்று ஆணைக்குழு திருப்தியுற்றால், அத்தகைய கட்டளையில் பெயர்குறிக்கப்பட்டவரும் உதவி பொலிசுக் கண்காணிப்பாளர்

*புலனாய்வு களுக்கு உதவுதல்*

பதவிவரிசையிலான அல்லது அதற்கு மேற்பட்ட பதவிவரிசை யிலுள்ள எவரேனும் பொலிசு அலுவலரை அல்லது அதிகார மளிக்கப்பட்ட ஓர் அலுவலரை அக்கட்டளையில் குறித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அல்லது விதத்தில் அக்கருமம் பற்றி புலனாய்வொன்றை நடாத்தும்படி ஆணைக்குழு தேவைப்படுத்தலாம். கட்டளையானது, ஏதேனும் வங்கிக் கணக்கு, பங்குக் கணக்கு, கொள்வனவுக் கணக்கு, செலவுக் கணக்கு அல்லது வேறேதேனும் கணக்கு அல்லது ஏதேனும் வங்கியிலுள்ள காப்பு வைப்புப்பெட்டி பற்றிய புலனாய்வுக்கு அதிகாரமளிக்கலாம் என்பதுடன் அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான எல்லாத் தகவல்களும் அல்லது ஏதேனும் தகவல் அல்லது கணக்குகள் அல்லது ஆவணங்கள் அல்லது பொருட்கள் எவரேனும் ஆளினால் வெளிப் படுத்தப்படுவதற்கு அல்லது முன்வைக்கப்படுவதற்குப் போதுமான அதிகாரத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, ஆணைக்குழுவின் பணிப்பின்மேல், ஏதேனும் தவறு தொடர்பில் இப்பிரிவின்கீழ் தொடங்கப்பட்டுள்ள ஏதேனும் புலனாய்வுக்கு மதியுரையளிக்கலாம், பணிப்புக்களை வழங்கலாம் அல்லது ஏதேனும் கட்டத்தில் அதனைக் கையேற்கலாம் என்பதுடன் அத்தகைய புலனாய்வை நடாத்தலாம் மற்றும் நெறிப்படுத்தலாம்.

(3) இப்பிரிவின்கீழான புலனாய்வு முடிவுற்றதன்மேல், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான புலனாய்வொன்றுக்காக எந்த பொலிசு அலுவலரிடம் ஆணைக்குழு கோரிக்கைவிடுத் துள்ளதோ, அந்த பொலிசு அலுவலர் அத்தகைய புலனாய்வு பற்றி எழுத்திலான அறிக்கையொன்றை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித் தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய அறிக்கை பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருத்தலும் வேண்டும் –

(அ) விடயத்துடன் தொடர்புடைய சூழ்நிலைகள் பற்றிய ஒரு முழுமையான கூற்று;

(ஆ) எல்லா சாட்சிகளினதும் கூற்றுக்களின் பிரதிகள்; அத்துடன்

(இ) இயைபானவையாக இருக்கக்கூடியவாறான அல்லது ஆணைக்குழுவினால் கோரப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தகவல்கள், ஆவணங்கள் அல்லது காண்பிபொருட்கள்.

(4) இப்பிரிவின்கீழ் முடிவுற்ற புலனாய்வொன்றின் பெறுபேறு, ஆணைக்குழு 65 ஆம் பிரிவின்கீழ் நடவடிக்கைகளை எடுப்பதற்கென உடனடியாக ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டுப் புலனாய்வுகள்*

**61.** (1) விடயத்தின் சூழ்நிலைகள் அவ்வாறு நியாயப்படுத்தினால், 41 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டதாகவுள்ள சார்த்தப்பட்ட தவறொன்றைப் பற்றிய புலனாய்வை நடாத்தும் நோக்கத்துக்காக, ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக, ஆணைக்குழுவுக்கும் இலங்கையிலுள்ள வேறு எவரேனும் புலனாய்வு அதிகாரிக்கும் இடையேயான உடன்படிக்கையொன்றின் மூலம் குறிப்பான காலப்பகுதியொன்றுக்கான கூட்டுப் புலனாய்வு அணியொன்று அமைக்கப்படலாம்.

(2) ஆணைக்குழுவானது, ஒரு வெளிநாட்டு அரசினால் கோரிக்கையொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, பின்வருவன தொடர்பிலும் கூட்டுப் புலனாய்வு அணிகளை நிறுவலாம்:-

(அ) இலங்கை மற்றும் வேறு வெளிநாட்டு அரசு எந்த இருபுடை அல்லது பல்புடை உடன்படிக்கைகளுக்கு அல்லது ஒழுங்கேற்பாடுகளுக்கு திறத்தவர்களாக உள்ளனவோ அந்த இருபுடை அல்லது பல்புடை உடன்படிக்கைகளின் அல்லது ஒழுங்கேற்பாடுகளின்கீழ் வருகின்ற கருமங்கள்; அல்லது

(ஆ) அத்தகைய உடன்படிக்கைகள் அல்லது ஒழுங்கேற்பாடுகள் இல்லாத பட்சத்தில் விடயத்துக்கு விடயம் என்ற அடிப்படையில்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழான கூட்டுப் புலனாய்வு அணியொன்று பின்வரும் சந்தர்ப்பங்களின்போது நிறுவப்படலாம்–

(அ) எவரேனும் ஆளுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு புலனாய்வு, சட்ட வலுவுறுத்துகை, ஒழுங்குபடுத்துகைப் பணிகள், குற்றவழக்குத்தொடுப்புக்கள் பற்றிய கடமைகள் குறித்தளிக்கப்படும்போதும், புலனாய்வில் ஈடுபட்டுள்ள முகவராண்மைகளினால் அல்லது அரசுகளினால் ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் ஒத்திசைவாக்கப்பட்ட நடவடிக்கைகளைத் தேவைப் படுத்துகின்ற அதே விடயப்பொருள் பற்றிய நீதிமுறை நடவடிக்கைகளில் அத்தகைய ஆள் அல்லது ஆட்கள் குழு ஈடுபடுகின்றபோதும்; அத்துடன்

(ஆ) இரண்டாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, இலங்கை யிலும் ஏககாலத்தில் வேறு வெளிநாட்டு அரசிலும் புலனாய்வு நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டி யுள்ளபோதும்.

(4) கூட்டுப் புலனாய்வுகளின்போது பெறப்பட்ட தகவல்கள், புலனாய்வு செய்யப்பட்ட ஆட்கள் தகுதிவாய்ந்த நீதிமன்றங்களில் விளங்கப்படுகின்றவிடத்து, அத்தகைய நீதிமன்றங்களினால் பயன்படுத்தப்படலாம்.

தகவல்களை வெளிப்படுத்து தலும் பகிர்ந்து கொள்ளுதலும்

**62.** (1) ஆணைக்குழு, பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது ஆணைக்குழுவின் எவரேனும் வேறு அலுவலர் அல்லது ஊழியர் அல்லது 27 ஆம் பிரிவின்கீழ் எந்த ஆளின் சேவைகள் தக்கவைக்கப்படுகின்றனவோ அந்த எவரேனுமாள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பெறப்பட்ட ஏதேனும் தகவலின் மூலத்தை வெளிப்படுத்தும்படி கட்டாயப்படுத்தப்படுதலாகாது.

(2) ஆணைக்குழுவானது வெளிநாட்டு அரசின் சட்டத்தின்கீழான புலனாய்வு, குற்றவழக்குத்தொடுப்பு மற்றும் நீதிமுறை நடவடிக்கைகளின் நோக்கங்களுக்காக, ஏதேனும் புலனாய்வுக்கு இயைபான தகவலை எவரேனும் உள்நாட்டு சட்ட வலுவுறுத்தல் அதிகாரியுடன் அல்லது வேறு எவரேனும் அரசாங்க அதிகாரியுடன் அல்லது சர்வதேச இருபுடை அல்லது பல்புடை உடன்படிக்கைகளின்கீழ் அல்லது ஒழுங்கேற்பாடுகளின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறான வேறு எவரேனும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரியுடன் அல்லது அத்தகைய உடன்படிக்கைகள் அல்லது ஒழுங்கேற்பாடுகள் இல்லாதபட்சத்தில், விடயத்துக்கு விடயம் என்ற அடிப்படையிலும் பகிர்ந்துகொள்ளலாம்.

சர்வதேச ஒத்துழைப்பு

**63.** (1) ஆணைக்குழு -

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கும்போது அதே கருமமொன்றின்மீது அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட கருமமொன்றின்மீது வெளிநாட்டு அரசுகளிலுள்ள குற்றப்புலனாய்வு அதிகாரிகளுடன் அல்லது சட்டவலுவுறுத்தல் அதிகாரிகளுடன் தொடர்பாடலாம்; அத்துடன்

(ஆ) இரண்டாம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஓர் உடன்படிக்கையின் அல்லது ஒழுங்கேற்பாட்டின்கீழ் ஏதேனும் தகவலின் பரிமாற்றம் தொடர்பாக வெளிநாட்டு அரசொன்றின் அல்லது சர்வதேச ஒழுங்கமைப்பொன்றின் அல்லது ஆட்கள் குழுவொன்றின் ஏதேனும் நிறுவனத்துடன் அல்லது முகவராண்மையுடன் அல்லது ஆணைக்குழுவின் தத்துவங்களையும் கடமைகளையும் ஒத்த தத்துங்களையும் கடமைகளையும் கொண்டுள்ள வெளிநாட்டு அரசொன்றின் அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட வேறு நிறுவனத்துடன் அல்லது முகவராண்மையுடன்,

ஆணைக்குழுவுக்கும் மற்றும் அத்தகைய நிறுவனங்கள், முகவராண்மைகள் அல்லது ஆட்கள் குழுக்களுக்கும் இடையேயுள்ள ஏதேனும் உடன்படிக்கையில் அல்லது ஒழுங்கேற்பாட்டில் தரப்பட்டுள்ளவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது, ஏதேனும் அறிக்கையை அல்லது அத்தகைய தகவலைப் பகிர்ந்துகொள்ளலாம்.

(2) ஆணைக்குழு –

(அ) ஒரு வெளிநாட்டு அரசின் நிறுவனமொன்றுடன் அல்லது முகவராண்மையுடன் அல்லது அவ்வாணைக் குழுவின் தத்துவங்களையும் கடமைகளையும் ஒத்த தத்துவங்களையும் கடமைகளையும் கொண்டுள்ள ஒரு வெளிநாட்டு அரசின் அரசாங்கத்தினால் தாபிக்கப் பட்ட சர்வதேச ஒழுங்கமைப்பொன்றுடன் அல்லது ஆட்கள் குழுவுடன்; அல்லது

(ஆ) ஒரு வெளிநாட்டு சட்ட வலுவுறுத்தல் முகவராண்மை யுடன்,

அவ்வாணைக்குழுவுக்கும் மற்றும் அத்தகைய நிறுவனத்துக்கும், முகவராண்மைக்கும் அல்லது அதிகாரசபைக்கும் இடையேயான தகவல் பரிமாற்றம் தொடர்பில் ஏதேனும் உடன்படிக்கையை அல்லது ஒழுங்கேற்பாட்டை எழுத்தில் செய்யலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் தொடர்பாடப்பட்ட அல்லது பகிரப்பட்ட அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட உடன்படிக்கையொன்றின் அல்லது ஒழுங்கேற்பாடொன்றின்கீழ் பரிமாறப்பட்ட தகவலானது, ஐக்கிய நாடுகள் சபையின் ஊழலுக்கு எதிரான சமவாயத்தினால் மேவப்பட்ட ஊழல் பற்றிய தவறொன்று அல்லது அத்தகைய தவறொன்றுக்கு கணிசமானளவு ஒத்ததாகவுள்ள தவறொன்று பற்றிய புலனாய்வுக்கு, குற்றவழக்குத் தொடுப்புக்கு

அல்லது நீதிமுறை நடவடிக்கைகளுக்கு இயைபானதாக இருக்கக்கூடுமென சந்தேகிப்பதற்கு ஆணைக்குழு, நிறுவனம், முகவராண்மை அல்லது அதிகாரசபை நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ள ஏதேனும் தகவலாக இருத்தல் வேண்டும்.

(4) ஆணைக்குழுவினால் (2) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட உடன்படிக்கைகள் அல்லது ஒழுங்கேற்பாடுகள் -

(அ) ஐக்கிய நாடுகள் சபையின் ஊழலுக்கு எதிரான சமவாயத்தினால் மேவப்பட்ட தவறொன்றை அல்லது ஊழலை அல்லது அத்தகைய தவறொன்றுக்கு கணிசமானளவு ஒத்ததாகவுள்ள தவறொன்றை அமைத்துருவாக்குகின்ற ஏதேனும் செயல்பற்றி புலனாய்வு செய்வதற்குரிய, குற்றவழக்குத் தொடுப்பதற்குரிய இயைபான நோக்கங்களுக்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவலைப் பயன்படுத்துதல்மீதான அல்லது நீதிமுறை நடவடிக்கைகள்மீதான மட்டுப்பாடுகளை உள்ளடக்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பரிமாறப்பட்ட தகவலானது ஓர் அந்தரங்கமான முறையில் பரிகரிக்கப்பட வேண்டுமென்பதற்கும் மற்றும் ஆணைக்குழுவின் வெளிப்படையான சம்மதமில்லாமல் அது மேலும் வெளிக்காட்டப்படுதலாகாது என்பதற்கும் பயன்கொடுப்பதற்கான ஏற்பாடொன்றை உள்ளடக்குதல் வேண்டும்.

அழைப்பாணைகள்

**64.** (1) ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அழைப்பாணை ஒவ்வொன்றும் எழுத்திலும், இணைப்பிரதியிலும் மற்றும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் கையொப்பமிடப்பட்டும் இருத்தல் வேண்டும் என்பதுடன் விதிகளினால் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தலும் வேண்டும்.

(2) அழைப்பாணைகள்-

(அ) பதிவஞ்சல் மூலம்;

(ஆ) விரைவஞ்சல் மூலம்;

(இ) ஆணைக்குழுவினால் பணிக்கப்படக்கூடியவாறான கிராம அலுவலர் ஒருவர் மூலம்;

(ஈ) கம்பெனியொன்றின் அல்லது கூட்டுத்தாபனத்தின் அல்லது ஆட்களின் கூட்டிணைக்கப்பட்ட கழகத்தின் விடயத்தில், அத்தகைய கம்பெனியின், கூட்டுத்தாபனத்தின் அல்லது கழகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருக்கு, செயலாளருக்கு அல்லது அவர்களையொத்த வேறு அலுவலருக்கு அல்லது அதன் பிரதான தொழிலிடத்துக்குப் பொறுப்பாகவுள்ள ஆளுக்கு;

(உ) பகிரங்க அலுவலரொருவராகவுள்ள ஆளொருவரின் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றின் ஊழியரொருவரின் விடயத்தில், அத்தகைய ஆள் பகிரங்க அலுவலராக அல்லது ஊழியராகவுள்ள நிறுவனத்தின் தலைவருக்கு;

(ஊ) வேறு எவரேனும் ஆளின்கீழ் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ள எவரேனுமாளின் விடயத்தில், அத்தகைய ஆளின் தொழில்தருனருக்கு; அல்லது

(எ) கிடைக்கக்கூடியதாக இருப்பின், மின்னஞ்சல் அல்லது தொலைநகல் மூலம்,

சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) அழைப்பாணை விடுக்கப்படவேண்டிய ஆளை உரிய விழிப்புக் கவனத்தைப் பிரயோகிப்பதன்மூலம் கண்டறிய முடியாதுள்ளபோது, அழைப்பாணைகளின் இணைப்பிரதிகளுள் ஒன்றை அத்தகைய ஆளினது குடும்பத்தின் வயதுவந்த உறுப்பினரொருவரிடம் அல்லது அத்தகைய ஆளுடன் வசிக்கின்ற அத்தகைய வேறெவரேனும் ஆளிடம் ஒப்படைப்பதன்மூலம் அழைப்பாணைகள் சேர்ப்பிக்கப்படலாம்.

(4) இரண்டாம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளில் குறித்துரைக்கப் பட்ட சேர்ப்பிப்பு, உரிய விழிப்புக்கவனத்தைப் பிரயோகிப்பதன் மூலம் பயன்படுத்தப்பட முடியாததாகவிருப்பின், ஆணைக்குழு வானது, அழைப்பாணை விடுக்கப்பட்ட ஆள் எந்த வீட்டில், இடத்தில் அல்லது வளவுகளில் வழமையாக வதிகின்றாரோ அந்த வீட்டின், இடத்தின் அல்லது வளவுகளின் ஏதேனும் துலாம்பரமான பகுதியில் அழைப்பாணைகளின் இணைப்பிரதிகளுள் ஒன்றை ஒட்டிவிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விடயத்தில், அழைப்பாணைகள் உரியமுறையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளனவாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(5) எவையேனும் அழைப்பாணைகள் பதிவஞ்சல்மூலம் அல்லது விரைவஞ்சல்மூலம் அனுப்பப்படுகின்றவிடத்து, அத்தகைய அழைப்பாணைகளுக்காக இயைபான அஞ்சல் அலுவலகத்தினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டைக் காண்பித்தலானது, அத்தகைய அழைப்பாணைகள் விநியோகிக்கப்படவில்லையென திருப்பப் பட்டாலொழிய, அவை முகவரியிட்டு அனுப்பப்பட்டவரினால் பெறப்பட்டது எனும் நிகழ்வுக்கான முதற்றோற்றளவிலான எண் பிப்பாதல் வேண்டும்.

(6) அழைப்பாணையொன்று சேர்ப்பிக்கப்படுகின்ற ஒவ் வோராளும், அதன்கண் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் ஆணைக்குழுவின் முன்னர் சமுகமளித்தல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவினால் அவரிடம் கேட்கப்படும் ஏதேனும் கேள்விக்கு பதிலளித்தலும் மற்றும் அழைப்பாணைமூலம் அவர் தேவைப் படுத்தப்பட்டவாறான அத்தகைய ஆவணத்தை அல்லது வேறு வஸ்துவைக் காண்பித்தலும் வேண்டும்.

குற்ற வழக்குகள்

**65.** (1) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட புலனாய்வொன்றின்போது அதனால் பெறப்பட்ட விடயப்பொருளானது எவரேனுமாளினால் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான தவறொன்று புரியப்பட்டதனை வெளிப்படுத்துகின்றவிடத்து, ஆணைக்குழு, தோதான நீதிமன்றத்தில் அத்தகைய ஆளுக்கெதிராக குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடுக்குமாறு பணிப்பாளர் தலைமையதிபதியைப் பணித்தல் வேண்டும்.

(2) ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கிணங்க பணிப்பாளர் தலைமையதிபதி அவரினால் கையொப்பமிடப்பட்ட ஒரு குற்றப்பத்திரத்தினூடாக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குநடவடிக்கைகளைத் தொடுப்பதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டுமென்பதுடன், இப்பிரிவின் நோக்கங்களுக்காக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 136 ஆம் பிரிவு ஏற்புடையதாதலும் ஆகாது.

(3) பணிப்பாளர் தலைமையதிபதியினால் கையொப்பமிடப்பட்ட ஏதேனும் குற்றப்பத்திரம் தொடர்பில் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 162 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் குற்றப்பத்திரமொன்றுக்கூடாக வழக்குநடவடிக்கைகள் தொடுக்கப்படுவதன்மேல், நீதிவான்–

(அ) அவரின் முன்னிலையில், குற்றஞ்சாட்டப்பட்டவர் தோன்றுவதனை அல்லது கொண்டுவரப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்;

(ஆ) குற்றப்பத்திரத்தின் பின்னிணைப்புக்களுடன் சேர்த்து அதன் பிரதியொன்று, அக்குற்றப்பத்திரத்தின்மேல் விளங்கப்படவேண்டியுள்ள குற்றஞ்சாட்டப்பட்ட ஒவ்வொருவருக்கும் சேர்ப்பிக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்;

(இ) குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு விளக்கத் தேதியை அறிவித்தல் வேண்டும்;

(ஈ) குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படுகின்றவிடத்து அல்லது தோன்றுகின்றவிடத்து, அவருக்கு குற்றச்சாட்டை வாசித்து விளக்குதல் வேண்டுமென்பதுடன், குற்றஞ்சாட்டப்பட்ட தவறுக்கு அவர் குற்றவாளியா அல்லது குற்றவாளி அல்லரா எனக் கேட்டலும் வேண்டும்;

(உ) குற்றஞ்சாட்டப்பட்டவர் தான் குற்றவாளியென வழக்குரைத்தால் மற்றும் அவர் தனது வாதவுரையின் விளைவை சரியாக விளங்கிக்கொள்கின்றாரென நீதிவானின் திருப்திக்குத் தோன்றினால், குற்றவாளி என்ற துணிபுரையைப் பதிதல் வேண்டுமென்பதுடன் இயைபான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அவருக்குத் தண்டனைத் தீர்ப்பளித்து அத்தகைய தண்டனைத்தீர்ப்பைப் பதிதலும் வேண்டும்; அத்துடன்

(ஊ) குற்றஞ்சாட்டப்பட்டவர் வாதவுரை எதனையும் செய்யவில்லையென்றால் அல்லது தான் குற்றவாளியல்ல என்று அவர் வழக்குரைத்தால் அவர் விளங்கப்படுதல் வேண்டுமென்பதுடன், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள் நீதிவான் நீதிமன்றத்திலான வழக்குநடவடிக்கைகளுக்கு, ஏற்ற மாற்றங்களுடன், ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட பணிப்பொன்றைப் பின்பற்றி, பணிப்பாளர் தலைமையதிபதியினால் கையொப்பமிடப்பட்ட குற்றப்பகர்வொன்றின்மூலம், மேல் நீதிமன்றமொன்றில் வழக்குநடவடிக்கைகள் தொடுக்கப்பட்டுள்ள

விடத்து, அத்தகைய மேல் நீதிமன்றமானது, அத்தகைய குற்றப் பகர்வைப் பெற்றதன்மீது, அத்தகைய குற்றப்பகர்வு அத்தகைய நீதிமன்றத்துக்கு சட்டத்துறைத் தலைமையதிபதியினால் முன் வைக்கப்பட்டதொரு குற்றப்பகர்வு என்றாற்போன்று எல்லா அம்சங் களிலும் அத்தகைய குற்றப்பகர்வில் விபரிக்கப்பட்ட தவறை விளங்கு வதற்கான நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) அத்தகைய ஒவ்வொரு குற்றப்பகர்வுடனும் இணைக்கப்பட வேண்டுமென 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினால் தேவைப்படுத் தப்படுகின்ற ஆவணங்களுக்கு மேலதிகமாக, அத்தகைய ஒவ்வொரு குற்றப்பகர்வுடனும், குற்றஞ்சாட்டப்பட்டவரினாலும் மற்றும் குற்றவழக்குத்தொடுநரினால் சாட்சியொருவராக அழைக்கப்படு வதற்கு உட்கருதப்பட்ட ஒவ்வொரு ஆளினாலும் ஆணைக்குழுவின் முன்னர் அளிக்கப்பட்ட கூற்றுக்கள் எவையேனுமிருப்பின் அவற்றின் பிரதியொன்றும் இணைக்கப்படுதல் வேண்டும்.

(7) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அலுவலரொருவர், ஆணைக்குழுவின் கோரிக்கையின்மேல் சட்டத்துறைத் தலைமையதிபதி அல்லது ஆணைக்குழுவினால் விசேடமானமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் சட்டத்தரணி பின்வருவனவற்றுக்கு உரித்துடைய வராதல் வேண்டும்:-

(அ) (i) குற்றப்பத்திரமொன்றின்மீது நீதிவான் நீதிமன் றத்தில்;

(ii) பணிப்பாளர் தலைமையதிபதியினால் கையொப்ப மிடப்பட்ட குற்றப்பகர்வொன்றின்மீது மேல் நீதி மன்றத்தில்,

நடாத்தப்பட்ட தவறொன்று பற்றிய விளக்கத்தில் குற்றவழக்கை நடாத்துதல்; அல்லது

(ஆ) ஆணைக்குழுவுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கக்கூடிய வேறேதேனும் வழக்காடலில் ஆணைக்குழுவின் சார்பில் தோன்றுதல்:

ஆயின், ஆணைக்குழுவானது குற்றவழக்கை நடாத்துமாறு அல்லது வேறு ஏதேனும் வழக்காடலில் ஆணைக்குழு சார்பில் தோன்றுமாறு சட்டத்துறைத் தலைமையதிபதியைக் கோரியுள்ள விடத்து, சட்டத்துறைத் தலைமையதிபதி வருகைதராதிருப்பின், ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அலுவலரொருவர் அத்தகைய குற்றவழக்கை நடாத்துவதற்கு அல் லது ஆணைக்குழு சார்பில் தோன்றுவதற்கு உரித்துடையவ ராகின்றார்:

ஆயின், மேலும், ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அலுவலரொருவர் குற்றவழக்கொன்றை நடாத்துகின்றவிடத்து அல்லது ஆணைக்குழு சார்பில் தோன்றுகின்ற விடத்து, சட்டத்துறைத் தலைமையதிபதி அத்தகைய அலுவலருக்கு உதவலாம்.

*சாட்சிகள் பற்றிய நிரலில் குறித்துரைக்கப் படாத எவரேனும் சாட்சியை அழைத்தல் அல்லது ஆவணங்கள் பற்றிய நிரலில் குறித்துரைக் கப்படாத ஏதேனும் ஆவணத்தை பயன் படுத்துதல் அல்லது காண்பித்தல்*

**66.** நாற்பத்தோராம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தவ றொன்றுக்கான ஆளொருவரின் விளக்கத்தில், ஆணைக்குழுவின் கோரிக்கையின்மேல், இயைபான நீதிமன்றமானது, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், சாட்சிகள் பற்றிய நிரலில் குறித்துரைக்கப்படாத எவரேனும் சாட்சியை அழைப்பது அல்லது ஆவணங்கள் பற்றிய நிரலில் குறித் துரைக்கப்படாத ஏதேனும் ஆவணத்தைக் காண்பிப்பது நீதியின் நலனுக்காகத் தேவைப்படுத்தப்படுகின்றதென திருப்திப் படுமிடத்து, அந்நீதிமன்றம், முறையே அத்தகைய சாட்சியை அழைக்கலாம் அல்லது அத்தகைய ஆவணத்தைக் காண்பிப்பதற்கு ஆணைக்குழுவை அனுமதிக்கலாம்.

*குற்றப்பகர்வை மீளப்பெறுதல்*

**67.** (1) இச்சட்டத்தின்கீழான தவறுகளுள் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றை புரிந்துள்ளமைக்காகக் குற்றம்பகரப் பட்டுள்ள ஆளொருவருக்கெதிராக மேல் நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னர் எந்நேரத்திலும், பணிப்பாளர்

தலைமையதிபதி, ஆணைக்குழுவின் வலுவளிப்புடன், (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நிகழ்வுகளின்மீது முறையான கவனத்தைச் செலுத்தியும் அத்துடன் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நிபந்தனைகளுள் ஒன்றுக்கு அல்லது அதற்கு மேற்பட்டவற்றுக்கு அமையவும், மேல் நீதிமன்றத்தின் அனுமதியுடன், அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான குற்றப்பகர்வை மீளப்பெறலாம்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் குற்றப்பகர்வை மீளப்பெறும்போது, அவர் பின்வருவனவற்றுக்கு முறையான கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்–

(i) தேசிய நலனும் பொதுமக்கள் நலனும்;

(ii) தவறுக்குப் பலியாக்கப்பட்டோரின் கருத்துக்கள்; அத்துடன்

(iii) குற்றஞ்சாட்டப்பட்ட ஆளினால் அல்லது அவர்சார்பில் அவரது சட்டத்தரணியினால் செய்யப்படக்கூடிய முறையீடுகள்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் குற்றப்பகர்வொன்றை மீளப்பெறும்போது, விதிக்கப்பட்டவொரு காலப்பகுதியினுள் பூர்த்திசெய்யப்படவேண்டிய பின்வரும் நிபந்தனைகளுள் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றை குற்றஞ்சாட்டப்பட்டவர்மீது சுமத்தலாம்:–

(i) ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட உரையொன்றைப் பயன்படுத்தி, மேல் நீதிமன்றத்தின் முன்னர் கழிவிரக்கத்தையும் மன்னிப்பையும் பகிரங்கமாக வெளிப்படுத்துதல்;

(ii) ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்டவாறாக, தவறுக்குப் பலியாக்கப்பட்டோருக்கு இழப்புக்கான எதிரீட்டை வழங்குதல்;

(iii) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதிலிருந்து தவிர்ந்திருப்பதென அவர் பகிரங்கமாகப் பொறுப்பேற்றல்; அல்லது

(iv) தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட பகிரங்கப் பதவியை வகிப்பதிலிருந்து நிரந்தரமாகத் தவிர்ந்திருத்தல்.

*(4)* அத்தகைய ஆள், அத்தகைய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வாரெனின், பணிப்பாளர் தலைமையதிபதி, அதன்பின்னர், மூல குற்றப்பகர்வில் குறித்துரைக்கப்பட்ட அதே குற்றச்சாட்டுக் களுக்காக குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிராக புதிய குற்றப் பகர்வொன்றை முன்வைத்தலாகாது.

(5) குற்றஞ்சாட்டப்பட்டவர் நியாயமான காரணமின்றி சொல்லப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகத்தவறினால், பணிப்பாளர் தலைமையதிபதி மூல குற்றப்பகர்வில் குறித்துரைக் கப்பட்ட அதே குற்றச்சாட்டுக்களின்மீது குற்றஞ்சாட்டப்பட்டவருக் கெதிராகப் புதிய குற்றப்பகர்வொன்றைக் கோப்பிடுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்கென குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்ட காலப்பகுதி கழிந்த பின்னர் குற்றஞ்சாட்டப்பவருக்கான குற்றவழக்குத்தொடுப்பை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**68.** *(1)* பணிப்பாளர் தலைமையதிபதியினால் கையொப்பமிடப் பட்ட குற்றப்பகர்வொன்றின்மூலம் மேல் நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டுள்ளவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அத்தகைய நீதிமன்றத்துக்கு அத்தகைய தவறுக்கான குற்றப்பகர்வொன்று மேன்முறையீடுகள்

முன்வைக்கப்பட்டிருந்திருப்பின் அத்தகைய தீர்ப்பு, கட்டளை அல்லது தண்டனைத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கான உரிமையை சட்டத்துறைத் தலைமையதிபதி எல்லா விடயங்களிலும் கொண்டிருந்திருக்கக்கூடிய ஒரு தீர்ப்பு, கட்டளை அல்லது தண்டனைத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பணிப்பாளர் தலைமையதிபதியினால் கையொப்பமிடப்பட்ட குற்றப்பத்திரமொன்றின்மூலம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குநடவடிக்கைகள் தொடுக்கப்பட்டுள்ள விடத்து, பணிப்பாளர் தலைமையதிபதி, அத்தகைய நீதிவான் நீதிமன்றத்தின் தீர்ப்பொன்றுக்கு, கட்டளைக்கு அல்லது தண்டனைத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்கான உரிமையைக் கொண்டவராதல் வேண்டும்.

(3) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அலுவலரொருவர், ஆணைக்குழுவினாலான கோரிக்கையொன்றின்மேல் சட்டத்துறைத் தலைமையதிபதி அல்லது ஆணைக்குழுவினால் விசேடமான முறையில் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் சட்டத்தரணி பின்வருவனவற்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்–

(அ) இச்சட்டத்தின்கீழான தவறுகள் தொடர்பில் மேன்முறையீடுகளை நடாத்துதல்; அத்துடன்

(ஆ) ஆணைக்குழுவுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கக்கூடிய வேறேதேனும் வழக்காடலின் மேன்முறையீடுகளில் ஆணைக்குழுசார்பில் தோன்றுதல்:

ஆயின், ஆணைக்குழுவானது ஏதேனும் மேன்முறையீட்டை நடாத்துமாறு அல்லது வேறேதேனும் வழக்காடலின் மேன்முறையீடுகளில் ஆணைக்குழுசார்பில் தோன்றுமாறு சட்டத்துறைத் தலைமையதிபதியைக் கோரியுள்ளவிடத்து, சட்டத்துறைத் தலைமையதிபதி வருகைதராதிருப்பின், ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அலுவலரொருவர் அத்தகைய மேன்முறையீட்டை நடாத்துவதற்கு அல்லது ஆணைக்குழுசார்பில் தோன்றுவதற்கு உரித்துடையவராகின்றார்:

ஆயின், மேலும், ஆணைக்குழுவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அலுவலரொருவர் மேன்முறையீடொன்றை நடாத்துகின்றவிடத்து அல்லது ஆணைக்குழுசார்பில் தோன்றுகின்ற விடத்து, சட்டத்துறைத் தலைமையதிபதி அத்தகைய அலுவலருக்கு உதவலாம்.

*சட்டத்துறைத் தலைமையதிபதியின் உதவியைக் கோருதல்*

**69.** (1) ஆணைக்குழுவானது, புலனாய்வொன்றுக்கு முன்னர் அல்லது அதன்போது, அல்லது புலனாய்வொன்று முடிவுற்ற பின்னர், குற்றவழக்குத்தொடுப்பின்போது, மேன்முறையீடொன்றில் அல்லது அத்தகைய புலனாய்வின் விடயப்பொருளுக்கு இயைபான ஏதேனும் பிரச்சினையில், சட்டத்துறைத் தலைமையதிபதியின் அவதானிப்புக்களை, கருத்துக்களை, அபிப்பிராயங்களை, மதியுரையை அல்லது பின்னூட்டக்கருத்துக்களை பரிந்துகேட்கலாம், பெறலாம் மற்றும் கவனத்துட்கொள்ளலாம்.

(2) ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின் கீழான அதன் தத்துவங்களையும் பணிகளையும் நிறைவேற்றுதல் தொடர்பிலான ஏதேனும் கருமத்தில் சட்டத்துறைத் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தைக் கோரலாம்.

(3) ஆணைக்குழுவினால் கோரப்பட்டவாறான அத்தகைய உதவியை வழங்குவது சட்டத்துறைத் தலைமையதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

குற்றத் துணையாளிகளுக்கு எதிராக குற்றஞ்சாட்டாது இருத்தல் அல்லது குற்றவழக்கு தொடுக்காது இருத்தல்

**70.** (1) இச்சட்டத்தின் பாகம் III இன் ஏற்பாடுகளின்கீழ், இலஞ்சத்துக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவரின் புலனாய்வின் ஏதேனும் கட்டத்தின்போதும் அல்லது அவரது விளக்கம் முடிவுறமுன்னர் ஏதேனும் நேரத்தில் ஆணைக்குழுவானது, அத்தவறில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் சம்பந்தப்பட்டிருந்தவரென அல்லது தொடர்புபட்டிருந்தவரெனக் கொள்ளப்பட்ட எவரேனும் ஆளின் சான்றை விளக்கத்தில் பெற்றுக்கொள்ளும் நோக்குடன், அதன் கைப்பட்ட எழுத்தின்மூலம் அதன்கண் பெயர்குறிப்பிடப்பட்ட எவரேனும் நீதிவானுக்கு, அத்தகைய ஆளையும், முதல்வராகவாயினுஞ்சரி அத்தவறின் புரிகையில் உடந்தையாளராகவாயினுஞ்சரி சம்பந்தப்பட்ட வேறு ஒவ்வோராளையும் அத்தவறு தொடர்பாக அவரது அறிவுக்குட்பட்ட பூரணமான சூழ்நிலைகள் பற்றிய முழுமையானதும் உண்மையானதுமான வெளிக்காட்டுகையை அவர் செய்கின்ற நிபந்தனையின்மீது குற்றஞ்சாட்டாதிருப்பதற்கு அல்லது அவர்களுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்காதிருப்பதற்கு அதிகாரமளிக்கலாம்.

(2) நீதிவான், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட முறையில் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வோராளினதும் சான்றை சத்தியத்தின்மீது பதிவுசெய்தல் வேண்டுமென்பதுடன், பதிவேட்டை ஆணைக்குழுவுக்கு அனுப்புதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒவ்வோராளும் வழக்கில் சாட்சியொருவராக விசாரிக்கப்படுதல் வேண்டும்.

(4) அத்தகைய ஆள், பிணையில் விடுவிக்கப்படாதிருப்பின், விளக்கம் முடிவுறுத்தப்படும்வரை கட்டுக்காப்பில் தடுத்துவைக்கப்படுதல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவர், அத்தியாவசியமான எதனையும் வேண்டுமென்றே மறைத்துள்ளவிடத்து அல்லது பொய்யான சான்றை அளித்துள்ளவிடத்து, எத்தவறு தொடர்பில் அவர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளாரோ

அத்தவறுக்காக அல்லது அதே கருமத்துடன் சம்பந்தப்பட்ட எந்தத் தவறுக்கு குற்றவாளியாக இருந்துள்ளாரென அவர் தோன்று கின்றாரோ அந்த வேறேதேனும் தவறுக்காக அவர் விளங்கப் படலாம்.

(6) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவரினால் அளிக்கப்பட்ட கூற்றானது, (5) ஆம் உட்பிரிவில் கூறப்பட்டவாறு அவர் விளங்கப்படும்போது அவருக்கெதிரான சான்றில் கொடுக்கப்படலாம்.

குற்றவழக்குத் தொடுப்பு உடன்படிக் கைகளை பிற்போடுதல்

**71.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், புரியப்பட்ட தவறானது இச்சட்டத்தின் 106 ஆம் மற்றும் 108 ஆம் பிரிவுகளின்கீழ் வருகின்றவிடத்து, ஆணைக்குழு வானது (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நிகழ்வுகள் தொடர்பில் முறையான கவனத்தைச் செலுத்தியும் மற்றும் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நிபந்தனைகளுள் ஒன்றுக்கு அல்லது அதற்கு மேற்பட்டவற்றுக்கு அமையவும், அத்தகைய பிரிவுகளின்கீழ் தவறொன்றைப் புரிந்துள்ளதாகச் சார்த்தப்பட்ட எவரேனும் ஆளுக்கெதிரான குற்றவியல் வழக்குநடவடிக்கைகளை ஐந்தாண்டுகளைவிடக் குறையாத மற்றும் பத்தாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இடைநிறுத்துவதற்கும் பிற்போடுவதற்கு மென, இப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஆளுடன் உடன்படிக்கையொன்றைச் செய்யலாம்.

(2) ஆணைக்குழுவானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் குற்றவியல் வழக்குநடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கு அல்லது பிற்போடு வதற்கு உடன்படுகின்றவிடத்து அது பின்வருவனவற்றுக்கு முறை யான கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்-

(அ) இலஞ்சம் மற்றும் ஊழல்தடுப்பு பற்றிய அரச கொள்கை;

(ஆ) வழக்கு நடவடிக்கைகளைத் தொடங்குதல் வேண்டும்;

(இ) தவறுக்குப் பலியாக்கப்பட்டோரின் கருத்துக்கள், எவையேனுமிருப்பின்; அத்துடன்

(ஈ) குற்றஞ்சாட்டப்பட்ட ஆளினால் அல்லது அவர் சார்பில் அவரது சட்டத்தரணியினால் செய்யப்படக் கூடிய முறையீடுகள்.

(3) ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின்கீழான தவறொன்று புரியப்பட்டுள்ளதாக சார்த்தப்பட்ட எவரேனும் ஆளுக்கு எதிரான குற்றவியல் வழக்குநடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கு அல்லது பிற்போடுவதற்கு (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி உடன்படுகின்றவிடத்து, அவ்வாணைக்குழு, அத்தகைய ஆளுக்கெதிரான குற்றவியல் வழக்குநடவடிக்கைகளின் இடைநிறுத்துகைக்கும் பிற்போடுகைக்குமான பிரதிபயனாக, விதிக்கப்பட்டவொரு காலப்பகுதியினுள் பூர்த்திசெய்யப்படவேண்டிய பின்வரும் நிபந்தனைகளுள் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றை அத்தகைய ஆள்மீது சுமத்துவதற்காக மேல் நீதிமன்றத்தின் வலுவளிப்பைப் பெற்றுக்கொள்வதற்கென அத்தகைய நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றை முன்வைத்தல் வேண்டும்–

(அ) ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட உரையொன்றைப் பயன்படுத்தி, மேல் நீதிமன்றத்தின் முன்னர் கழிவிரக்கத்தையும் மன்னிப்பையும் பகிரங்கமாக வெளிப்படுத்துதல்;

(ஆ) ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்டவாறாக, தவறுக்குப் பலியாக்கப்பட்டோருக்கு இழப்புக்கான எதிரீட்டை வழங்குதல்;

(இ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதிலிருந்து தவிர்ந்திருப்பதென அத்தகைய ஆள் பகிரங்கமாகப் பொறுப்பேற்றல்; அல்லது

(ஈ) தவறு தொடர்பான முழுத்தொகையை அரசுக்கு நட்டஈடாகச் செலுத்துதல்; அதன் இருபத்தைந்து சதவீதம் ஆணைக்குழுவின் நிதியத்துக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(4) (அ) மேல் நீதிமன்றமானது (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தை கவனத்துட்கொள்வதன் மேலும் மற்றும் உடன் படிக்கையானது நீதியின் நலனுக்கானதென்றும் உடன் படிக்கையின் நியதிகள் நீதியானவையும் நியாய மானவையும் மற்றும் விகிதாசாரமானவையென்றும் திருப்தியுறுவதன் மேலும் அத்தகைய உடன்படிக் கையை அங்கீகரிக்கலாம் என்பதுடன், அவ்வுடன் படிக்கை பற்றி அத்தகைய ஆளுக்கு அறிவிக்கலாம்.

(ஆ) உடன்படிக்கையானது, மேல் நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட உடன்படிக்கைத் தேதியன்று பயனுக்கு வருதல் வேண்டும்.

(5) அத்தகைய ஆள், அத்தகைய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்காக உடன்படிக்கையில் விதிக்கப்பட்ட காலப் பகுதியின்போது (3) ஆம் உட்பிரிவின்கீழ் சுமத்தப்பட்ட நிபந்தனை களைப் பூர்த்திசெய்வாரெனின், ஆணைக்குழு, புரியப்பட்டுள்ளதாக சார்த்தப்பட்ட தவறு தொடர்பில் அத்தகைய ஆளுக்கெதிராக மேற் கொண்டு நடவடிக்கையெடுத்தல் ஆகாது.

(6) அவ்வாள், செல்லுபடியான சாக்கின்றி, அத்தகைய நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகத் தவறினால், ஆணைக்குழு மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்வதன்மீது குற்றப்பகர்வின்மேல் அத்தகைய ஆளுக்கெதிராகக் குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடங்குதல் வேண்டும்.

(7) உடன்படிக்கையில் விதிக்கப்பட்ட காலப்பகுதி முடிவடை கையில், பணிப்பாளர் தலைமையதிபதி, மேல் நீதிமன்றத்துக்கு அறிவித்து மேல் நீதிமன்றத்திடமிருந்து அனுமதியைப் பெற்றுக் கொண்டுள்ள அத்தகைய ஆளுக்கெதிரான வழக்குநடவடிக்கை களைத் தொடராதிருத்தல் வேண்டும்.

(8) இப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆள், கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருக்குமிடத்து, இப்பிரிவின்கீழான உடன் படிக்கையொன்று பணிப்பாளர் தலைமையதிபதிக்கும் அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குமிடையில் செய்யப்படுதல் வேண் டும்.

பொதுவான தத்துவம்

**72.** ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கென இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக வுள்ள வேறேதேனும் தோதான நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பதுடன், இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் எழுத்தி லான சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட தத்து வங்களையும் பணிகளையும் நிறைவேற்றலாம்.

அத்தியாயம் V

**தகவலளிப்போரினதும், இடித்துரைப்போரினதும், சாட்சிகளினதும் மற்றும் ஆணைக்குழுவுக்கு உதவுகின்ற வேறு ஆட்களினதும் பாதுகாப்பு**

ஆணைக்குழுவுக்கு தகவலளிப்போரின் பாதுகாப்பு

**73.** (1) ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின்கீழான தவறொன்று புரியப்பட்டுள்ளதென்று அல்லது புரியப்பட்டுள்ளதெனச் சந்தேகிக்கப்பட்டதென்று அல்லது புரியப்படுவதற்கான சாத்திய முள்ளதென்று பொருள்படும் தகவலை அந்தரங்கமான முறையில் பெறுகின்றவிடத்து, அத்தகைய தகவலும் தகவலளித்தவரின் ஆளடையாளமும் வெளிப்படுத்தப்படுதலாகாது என்பதுடன், தகவலளித்தவரும் மற்றும் அத்தகைய தகவலுடன் தொடர்புடைய கருமங்களும் ஏதேனும் நீதிமன்றத்தின், நியாயசபையின் அல்லது வேறு அதிகாரசபையின் முன்னரான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் வெளிக்காட்டப்படுதலுமாகாது.

(2) ஏதேனும் குடியியல், குற்றவியல் அல்லது வேறு வழக்கு நடவடிக்கைகளில் சான்றாக அளிக்கப்படுகின்ற அல்லது சோதிக்கப் படுகின்ற ஏதேனும் எழுத்திலான அல்லது இலத்திரனியல் ரீதியான

பதிவேடானது தகவலளிப்பவர் தொடர்பான அல்லது தகவலளிப்பவரினால் அளிக்கப்பட்ட தகவல் தொடர்பான பதிவீடொன்றைக் கொண்டுள்ளவிடத்து, இயைபான நீதிமன்றம், நியாய சபை அல்லது வேறு அதிகாரசபை அத்தகைய தகவலளிப்பவரின் ஆளடையாளத்தைப் பாதுகாக்கும்வகையில், தகவலளிப்பவர் அல்லது அளிக்கப்பட்ட தகவல் தொர்பில் அத்தகைய பதிவேட்டிலுள்ள பாகங்கள் புலப்படுவதிலிருந்து மறைத்துவைப்பதனைச் செய்வித்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறுக்கான விளக்கமொன்றில், நீதிமன்றமானது, வழக்குப்பற்றிய முழுமையான விசாரணையின் பின்னர், தகவலளிப்பவர் பொய்யானதென அவர் அறிந்திருந்த அல்லது உண்மையானதல்லவென அவர் நம்பியிருந்த முக்கியமான கூற்றொன்றை அவரது முறைப்பாட்டில் வேண்டுமென்று செய்திருந்தாரென அபிப்பிராயப்பட்டால், அல்லது வேறு எவையேனும் வழக்குநடவடிக்கைகளில் தகவலளிப்பவரைக் கண்டுபிடிக்காமல் அவற்றுக்கான திறத்தவர்களுக்கிடையே நீதியை முழுமையாக நிருவகிக்க முடியாதென நீதிமன்றம் முழுமையாக அபிப்பிராயப்பட்டால், எழுத்திலிருப்பின், தொடக்க முறைப்பாட்டைக் காண்பிக்கும்படி நீதிமன்றம் தேவைப்படுத்தலாம் என்பதுடன் தகவலளிப்பவர் சம்பந்தப்பட்ட விசாரணையை அனுமதிக்கலாம் அத்துடன் அவர்பற்றிய முழுமையான வெளிக்காட்டுகையைத் தேவைப்படுத்தலாம்.

(4) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள், தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், மேல் நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிப்படுவதன்மேல், ஒரு இலட்சம் ரூபா குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) ஆளொருவர் –

(அ) ஓராள், பகிரங்க உத்தியோகத்தர், கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவொன்று, பகிரங்க அல்லது தனியார்துறை உருவகமொன்று

இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவார் அல்லது புரியும், அல்லது புரிகின்றார் அல்லது புரிகின்றது, அல்லது புரிந்துள்ளார் அல்லது புரிந்துள்ளது அல்லது புரிவதற்கான சாத்தியத்தைக் கொண்டுள்ளார் அல்லது கொண்டுள்ளது என்ற தகவலை ஆணைக்குழுவுக்கு அல்லது ஆணைக்குழு வின் எவரேனும் அலுவலருக்கு அல்லது வேறு எவரேனும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரிக்கு வழங்குகின்றவிடத்து; அத்துடன்

(ஆ) அத்தகைய தகவல் வழங்கப்படுகின்ற நேரத்தில், அத்தகைய தகவல் உண்மையானதென்றும் இச்சட் டத்தின்கீழான புலனாய்வொன்றை அனுமதிப் பதற்கான அத்தகைய தன்மையினதானதென்றும் நியாயமான ஏதுக்களின்மீது நம்புகின்றவிடத்தும்,

அத்தகைய ஆள், அத்தகைய தகவலை வழங்குவதன் விளைவொன்றாக குடியியல் அல்லது குற்றவியல் பொறுப்புக்கு அமைந்தவராதலாகாது.

(6) தகவலளிப்பவரொருவர், அத்தகைய தகவலை அளிப்ப தற்காக பாதகமான தொழில் நிலைமைகளுக்கு, பழிவாங்குதலுக்கு, பலவந்தப்படுத்துதலுக்கு, மிரட்டுதலுக்கு, எதிர்தாக்குதலுக்கு, தொல்லைக்கு, ஏதேனும் உடல்சார் ஊறுபாட்டுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு அல்லது மேற்போந்த எதற்கும் அமைந்தவராத லாகாது. இடித்துரைப்பவர் ஒருவரினால் 74 ஆம் பிரிவின்கீழ் தகவலொன்று வழங்கப்படுகின்றவிடத்து, அத்தகைய தகவலை வழங்குவதற்காக அவருக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கை யெதுவும் எடுக்கப்படுதலாகாது.

(7) வேறு ஏதேனும் சட்டம், ஒப்பந்தம், சத்தியம் அல்லது செயல் முறையின்கீழான தகவலின் வெளிக்காட்டுகைமீதான ஏதேனும் தடையை அல்லது மட்டுப்பாட்டைப் பொருட்படுத்தாது, இடித்துரைப்பவரொருவர், 74 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது இப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் தகவலை வழங்கியதன் காரணமாக தீங்குவிளைவிக்கும் நடவடிக்கைக்கு அமைந்தவராதலாகாது.

(8) தொழில்தருநரொருவருக்கும் ஊழியரொருவருக்கும் இடையேயான சேவை ஒப்பந்தமொன்றிலான அல்லது வேறு உடன்படிக்கையிலான ஏதேனும் ஏற்பாடு பின்வருமாறு இருக்கு மளவுக்கு வறிதானதாகவுள்ளது –

(அ) இச்சட்டத்தின்கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளை அல்லது ஒப்பந்த முறிவுக்கான எவையேனும் வழக்குநடவடிக்கைகளைத் தொடுப் பதை அல்லது தொடர்ந்துநடாத்துவதைத் தவிர்ப்ப தற்கான ஓர் உடன்படிக்கையுட்பட, இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டைப் புறத்தொதுக்குவதற்குக் கருதுதல்; அல்லது

(ஆ) தகவலை வழங்குவதிலிருந்து ஊழியரைத் தடை செய்வதற்குக் கருதுதல் அல்லது தகவலை வழங்குவ திலிருந்து ஊழியரை ஊக்கமிழக்கச்செய்யும் பயனைக்கொண்டிருத்தல்.

(9) ஆறாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, பாதகமான தொழில் நிலைமைகள், பழிவாங்குதல், பலவந்தப்படுத்துதல், மிரட்டுதல், எதிர்த்தாக்குதல், தொல்லை, ஏதேனும் உடல்சார் ஊறுபாடு அல்லது அச்சுறுத்தல் அல்லது மேற்போந்த எதுவும் இடம் பெற்றுள்ளதென முரணாக எண்பிக்கப்படும்வரை, அது ஊகிக்கப் படுதல் வேண்டும்.

(10) இடித்துரைப்பவரொருவர், அவரினால் வழங்கப்பட்ட தகவல் தொடர்பில் ஆணைக்குழு நடாத்தக்கூடிய ஏதேனும் புலனாய்வில் ஆணைக்குழுவுக்கு உதவுதல் வேண்டும்.

**74.** (1) பகிரங்க உத்தியோகத்தரொருவர் அல்லது தனியார்துறை உருவகமொன்றின் ஊழியரொருவர் - இடித்துரைப் போரின் பாதுகாப்பு

(அ) அவர் தொழிலில் அமர்த்தப்பட்டிருக்கின்ற, விடயத் துக்கேற்ப, பகிரங்க நிறுவனத்தில் அல்லது தனியார்துறை உருவகமொன்றில் அல்லது எவரேனும் ஆள் சம்பந்தமாக அல்லது அது சம்பந்தமாக இச்சட்டத் தின்கீழான தவறொன்று புரியப்பட்டுள்ளதென்று

அல்லது புரியப்பட்டு வருகின்றதென்று அல்லது புரியப்படுவதற்கான சாத்தியத்தைக் கொண்டுள்ள தென்று அவரது மேல்நிலை அலுவலருக்குத் தகவல் வழங்குகின்ற விடத்து; அத்துடன்

(ஆ) அத்தகைய ஆள் தகவல் வழங்குகின்ற நேரத்தில், அவர் வழங்குகின்ற தகவல் உண்மையானதென்றும் இச்சட்டத்தின்கீழான புலனாய்வொன்றை அனுமதிப் பதற்கான அத்தகைய தன்மையினதானதென்றும் நியாயமான ஏதுக்களின்மீது அவர் நம்புகின்ற விடத்தும்,

அத்தகைய பகிரங்க உத்தியோகத்தர் அல்லது தனியார்துறை உருவகமொன்றின் ஊழியர் அத்தகைய தகவலை வழங்குவதன் விளைவொன்றாக ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் பொறுப்புக்கு அமைந்தவராதலாகாது.

(2) இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், மேல் நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிப்படுவதன்மேல், ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாத காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

ஆணைக்குழுவுக்கு உதவுகின்ற ஆட்களுக்கான காப்பு

**75.** (1) ஆணைக்குழுவுக்கு உதவும் ஆளொருவரின் காப்பு பாதகமான முறையில் பாதிக்கப்படுகின்றதென்று அல்லது அத்தகைய ஆள் அல்லது வேறு எவரேனும் ஆள் மிரட்டுதலுக்கு, தொல்லைக்கு, ஊறுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு அமைந்தவ ராகலாமென்று ஆணைக்குழுவுக்குத் தோன்றினால், ஆணைக்குழு வானது –

(அ) அத்தகைய ஆளுக்கு உடல்ரீதியான காப்பை வழங்குவதற்கு; அல்லது

(ஆ) மிரட்டுதல், தொல்லை, ஊறு அல்லது அச்சுறுத்தல் என்பவற்றிலிருந்து அத்தகைய ஆளை அல்லது வேறு எவரேனுமாளைப் பாதுகாப்பதற்கு,

அவசியமானவாறான அத்தகைய ஒழுங்கேற்பாடுகளைச் செய்ய லாம்.

(2) இப்பிரிவில், "ஆணைக்குழுவுக்கு உதவுகின்ற ஆளொருவர்" என்பது –

(அ) இச்சட்டத்தின் 73 ஆம் பிரிவின் நியதிகளின்படியான தகவலளிப்பவரொருவர்;

(ஆ) சாட்சியொருவர்;

(இ) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட அல்லது நடாத்தப்படவுள்ள விசாரணையொன்றில் அல்லது புலனாய்வில் அல்லது, எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படவுள்ள வேறேதேனும் வழி முறையில், சான்றளிப்பதற்கென அல்லது ஆவண மொன்றை அல்லது வேறேதேனும் வஸ்த்துவை காண்பிப்பதற்கென ஆணைக்குழுவின் முன்னர் தோன்றியுள்ள, தோன்றுகின்ற அல்லது தோன்றவுள்ள ஆளொருவர்;

(ஈ) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட அல்லது நடாத்தப்படவுள்ள ஏதேனும் விசாரணையில் அல்லது புலனாய்வில் அல்லது, எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படவுள்ள வேறேதேனும் வழி முறையில், ஆவணமொன்றை அல்லது வேறேதேனும் வஸ்த்துவை காண்பிப்பித்துள்ள அல்லது காண்பிப் பதற்கு முன்மொழிகின்ற ஆளொருவர்; அல்லது

(உ) இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட அல்லது நடாத்தப்படவுள்ள விசாரணையொன்றில் அல்லது புலனாய்வில் அல்லது, எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படவுள்ள வேறேதேனும் வழி முறையில், வேறேதேனும் முறையில் ஆணைக்குழு வுக்கு உதவியுள்ள, உதவுகின்ற அல்லது உதவவுள்ள ஆளொருவர்,

எனப் பொருள்படும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் அத்தகைய ஒழுங்கேற்பாடு, பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றை உட் படுத்தலாம் :-

(அ) பின்வருவனவற்றைச் செய்வதற்கு பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அல்லது எவரேனும் பகிரங்க அதிகாரிக்கு அல்லது எவரேனும் பகிரங்க உத்தியோகத்தருக்கு பணிப்புக்களை வழங்குதல் –

(i) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பாதுகாப்பை வழங்குதல்;

(ii) அத்தகைய பாதுகாப்பை வழங்குவதில் உதவுவதற்கென ஆளணிசார் உதவியை அல்லது வசதிகளை அல்லது அவை இரண்டையும் வழங்குதல்; அல்லது

(iii) அத்தகைய பாதுகாப்பை வழங்குவதில் வேறுவகையில் உதவுதல்.

(ஆ) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவரின் உடல்ரீதியான காப்பை பாதுகாக்கும், அல்லது மிரட்டுதலிலிருந்து அல்லது தொல்லை யிலிருந்து அத்தகைய ஆளைப் பாதுகாக்கும் நோக்கத்துக்காக, குறித்துரைக்கப்பட்ட ஆளொரு வருக்கு ஏற்புடையதாகின்ற கட்டளைகளை ஆக்குதல். அத்தகைய கட்டளையொன்று (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒருவகையினதான பணிப்புக் களுக்கு வரையறுக்கப்பட்டதல்ல.

(4) ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அத்தகைய ஏதேனும் பணிப்புக்கு நியாயமான முறையில் இயன்றளவுக்கு இணங்கி யொழுகுதல், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் அல்லது அத்தகைய பகிரங்க அதிகாரியின் அல்லது பகிரங்க உத்தியோ கத்தரின் கடமையாதல் வேண்டும்.

(5) நியாயமானவொரு சாக்கின்றி, இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் குறித்துரைக்கப்பட்ட ஆளொருவருக்கு ஏற்புடையற்பாலதாக வேண்டுமென ஆக்கப்பட்ட கட்டளையொன்றை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப் பளிக்கப்படுவதன்மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாத காலத்துக்கான மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம் அல்லது மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

சாட்சிகளுக்கான விடுபாட்டுரிமை

**76.** (1) ஆளொருவர், ஆணைக்குழுவுக்கு அல்லது அதன்முன்னர் அளித்த ஏதேனும் கூற்று, வழங்கிய தகவல் அல்லது பதில் அல்லது காண்பித்த ஏதேனும் ஆவணம் அல்லது வேறேதேனும் வஸ்து தொடர்பில், ஏதேனும் நீதிமன்றத்திலான ஏதேனும் வழக்குக்கு, குற்றவழக்குக்கு அல்லது வேறு குடியியல் அல்லது குற்றவியல் வழக்குநடவடிக்கைக்கு ஆளாதாலாகாது.

(2) எவரேனும் ஆளினால் ஆணைக்குழுவுக்கு அல்லது அதன்முன்னர் அளிக்கப்பட்ட கூற்றொன்று பற்றிய அல்லது வழங்கப்பட்ட பதில் அல்லது தகவல் பற்றிய சான்றெதுவும், ஏதேனும் நீதிமன்றத்திலான ஏதேனும் வழக்கில், குற்றவழக்கில் அல்லது வேறு குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கையில் அத்தகைய ஆளுக்கெதிராக ஏல்தகவுடைய தாதலாகாது:

ஆயின், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ள எதுவும் -

(i) இச்சட்டத்தின் 119 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப் படும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் XI ஆம் அத்தியாயத்தின்கீழான ஏதேனும் தவறுக்காக அல்லது இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்காக ஏதேனும் வழக்குக்கு, குற்றவழக்குக்கு அல்லது தண்டத்துக்கு எவரேனும் ஆளின் பொறுப்பைக் குறைத்தலோ அல்லது பாதித்தலோ, அல்லது குறைப்பதாக அல்லது பாதிப்பதாக கருதப்படுதலோ அல்லது பொருளமைத் துக்கொள்ளப்படுதலோ ஆகாது;

(ii) அத்தகைய ஏதேனும் வழக்கின் அல்லது குற்ற வழக்கின் நோக்கங்களுக்காக எவரேனும் ஆளின் பெயரை அல்லது எவரேனும் ஆளின் கூற்றை அல்லது கூற்றின் ஏதேனும் பாகத்தை வெளியிடுவதனை அல்லது வெளிக்காட்டுவதனைத் தடைசெய்தலாகாது அல்லது தடைசெய்வதாகக் கருதப்படுதலோ அல்லது பொருளமைத்துக்கொள்ளப்படுதலோ ஆகாது; அல்லது

(iii) 147 ஆம் பிரிவின்கீழ் ஏல்தகவுடைய ஏதேனும் கூற்றின் ஏல்தகவுடைமையைப் பாதித்தலாகாது.

*சாட்சிகளுக்கும் மற்றும் ஆணைக்குழுவுக்கும் உதவுகின்ற ஆட்களுக்குமான பாதுகாப்பும் மற்றும் அவசியமான விடத்து சட்ட பிரதிநிதித்துவம் வழங்குதலும்*

**77.** ஆணைக்குழுவானது, நீதிவான் நீதிமன்றத்திலான விசாரணைகளுட்பட, புலனாய்வொன்றின்போது அத்தகைய புலனாய்வுகளுக்குப் பங்கமின்றியும் மற்றும் இச்சட்டத்தின் 73 ஆம், 74 ஆம், மற்றும் 75 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி இடித்துரைப்பவருக்கு அல்லது சாட்சிக்கு எதிராக புரியப்பட்டதாகச் சார்த்தப்பட்ட தவறொன்று பற்றிய மேல் நீதிமன்றத்திலான விளக்கமொன்றிலும், எவரேனும் தகவலளிப்பவருக்கு, அத்தகைய இடித்துரைப்பவருக்கு அல்லது சாட்சிக்கு சட்டப் பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*பலிக்கு உட்படுத்தப்பட்டோரின் உரிமைகளைப் பாதுகாத்தல்*

**78.** இச்சட்டத்தில் உள்ளடங்கியுள்ள எதுவும், 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உறுதிப்படுத்தப்பட்ட பலிக்குட்படுத்தப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகளுக்குப் பங்கம் விளைவித்தலாகாது.

## பாகம் II

## சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துதல்

*இப்பாகத்தின் குறிக்கோள்கள்*

**79.** இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவுக்கமைய, இப்பாகத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவற்றுக்கானவையாதல் வேண்டும் :-

(அ) இலங்கைக்குள்ளேயும் அதற்கு வெளியேயும் எல்லா பகிரங்க உத்தியோகத்தர்களுக்குமுள்ள அவர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் காலாகால வெளிப்படுத்துகைகளைச் செய்யும்படி அவர்களைக் கட்டாயப்படுத்துதல்;

(ஆ) அத்தகைய வெளிப்படுத்துகைகளைச் சமர்ப்பிப்ப தற்காக, மத்திமமயப்படுத்தப்பட்ட இலத்திரனியல் முறைமையொன்றை ஏற்பாடு செய்தல்;

(இ) இப்பாகம் எந்த ஆளுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்தவோர் ஆளுக்கெதிரான ஏதேனும் தகவல் பெறப்பட்டதன்மேல், தோதான அதிகாரிகளினால் அத்தகைய வெளிப்படுத்துகைகளுக்குச் செய்யப்பட வேண்டிய குறிப்பீட்டுக்காகவும் மற்றும் புலனாய்வுகள் நடாத்தப்படுவதற்காகவும் ஏற்பாடு செய்தல்;

(ஈ) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பிந்திய சமர்ப்பிப்புக்கள் தொடர்பாகவும் வெளிப்படுத்தாமை தொடர்பாகவும் எடுக்கப்படவேண்டிய தோதான வழிமுறைகளுக்கு ஏற்பாடு செய்தல்;

(உ) பகிரங்கப் பணிகளை அல்லது அலுவலகமுறையான செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் எழுகின்ற கள்ளமானமுறையிலான செல்வமீட்டலை அல்லது அக்கறை முரண்பாடுகளை பகிரங்க நுண்ணாய்வுக் கூடாகத் தடுத்தல்; அத்துடன்

(ஊ) அதனுடன் சம்பந்தப்பட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்தல்.

இப்பாகத்தின் ஏற்புடைமை

**80.** (1) இப்பாகத்தின் ஏற்பாடுகள், பின்வரும் வகுப்புக்களுள் அல்லது விவரிப்புக்களுள் ஏதேனுமொன்றைச் சேர்ந்த எவரேனும் ஆளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) சனாதிபதி;

(ஆ) பிரதம அமைச்சர்;

(இ) பாராளுமன்ற உறுப்பினர்கள்;

(ஈ) மாகாணங்களின் ஆளுநர்கள்;

(உ) மாகாண சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் மாகாண பகிரங்க சேவையின் பணியாட்டொகுதி அலுவலர்கள்;

(ஊ) உள்ளூர் அதிகாரசபைகளின் தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்கள் மற்றும் பணியாட்டொகுதி அலுவலர்கள்;

(எ) சனாதிபதியால் நியமிக்கப்பட்ட நீதிபதிகளும் பகிரங்க அலுவலர்களும்;

(ஏ) அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பகிரங்க அலு வலர்கள்;

(ஐ) நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நீதி அலுவலர்களும் அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்களும்;

(ஒ) அமைச்சுக்கள் மற்றும் அரசாங்கத் திணைக்களங் களிலுள்ள பணியாட்டொகுதி அலுவலர்கள்;

(ஓ) அரசியலமைப்பின் 41அ (1) (உ) என்னும் உறுப்புரையின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட, பாராளுமன்ற உறுப்பினர்களாகவிராத அரசிய லமைப்புப் பேரவையின் உறுப்பினர்கள்;

(ஔ) அரசியலமைப்பின் 41ஆ என்னும் உறுப்புரைக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் ஆணைக்குழுக்களின், விடயத்துக்கேற்ப, தவிசாளர் களாக அல்லது உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட ஆட்கள்;

(க) இலங்கை மத்திய வங்கி மற்றும் அரச வங்கிகளின் பணியாட்டொகுதி அலுவலர்கள்;

(ங) அரசியலமைப்பின் 41அ (1) (இ) என்னும் உறுப்புரையின்கீழ் அல்லது ஏதேனும் நியதிச்சட்டத் தின்கீழ் தாபிக்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களின் பணியாட்டொகுதி அலுவலர்கள்;

(ச) ஏதேனும் நியதிச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட சுயாதீன ஒழுங்குபடுத்துகை மற்றும் மேற்பார்வை ஆணைக்குழுக்களின் அல்லது குழுக்களின் தவிசாளர்கள், ஆணையாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் பணியாட்டொகுதி அலுவலர்கள்;

(ஞ) ஏதேனும் நியதிச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட சபைகளின் தவிசாளர்கள், பணிப்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று அலுவலர்கள்;

(ட) பாராளுமன்ற உறுப்பினர்களினதும், மாகாண சபைகளின் உறுப்பினர்களினதும் மற்றும் உள்ளூர் அதிகாரசபைகளின் உறுப்பினர்களினதும் தனிப்பட்ட பணியாட்டொகுதி உறுப்பினர்கள்;

(ண) (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆட்சேர்க்கப்பட்டு பேணப்படும் இலங்கை தரைப்படையின் அலுவலர்கள்;

(த) (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆட்சேர்க்கப்பட்டு பேணப்படும் இலங்கை கடற்படையின் அலுவலர்கள்;

(ந) (359 ஆம் அத்தியாயமான) இலங்கை வான்படைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆட்சேர்க்கப்பட்டு பேணப்படும் இலங்கை வான்படையின் ஆணைபெற்ற அலுவலர்கள்;

(ப) 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டம், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாணசபைகள் தேர்தல்கள் சட்டம், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டம்

அல்லது (138 ஆம் அத்தியாயமான) தொழிற் சங்கங்கள் கட்டளைச்சட்டம் என்பவற்றின்கீழான தேர்தல்களின் நோக்கங்களுக்காக ஏற்றங்கீகரிக் கப்பட்ட அரசியற்கட்சிகளின் பதவிதாங்குநர்கள்;

(ம) (138 ஆம் அத்தியாயமான) தொழில் சங்கங்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் பதிவுபெற்ற தொழிற்சங் கங்களின் நிறைவேற்றுனர்கள்;

(ய) 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டம், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம் அல்லது (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் என்பவற்றின்கீழ் நடைபெறவேண்டியுள்ள தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்கள்;

(ர) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுபெற்றுள்ள எக்கம்பெனிகளில் இருபத்தைந்து சதவீதத்துக்குக் குறையாத பங்குகள் அரசினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றினால் வைத்திருக்கப்படு கின்றனவோ, அக்கம்பெனிகளின் தவிசாளர்கள், பணிப்பாளர்கள் மற்றும் பணியாட்டொகுதி அலுவலர் கள்;

(ல) இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள்ளான அட்ட வணைப்படுத்தப்பட்ட நிறுவனங்களில் உள்ளடக்கப் பட்டனவாகவுள்ள நிதி நிறுவனங்களின் முகாமைத் துவ அல்லது மேற்பார்வைசார் வகிபாகங்களிலுள்ள பணியாட்டொகுதியினர்;

(வ) இலங்கை இராசதந்திரத் தூதரகங்களின் தலைவர் கள்;

(அஅ) இலங்கை இராசதந்திரத் தூதரகங்களுக்கு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட அலுவலர்கள்;

(ஆஆ) (180 ஆம் அத்தியாயமான) செய்தித்தாள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் எந்த செய்தித்தாள்கள் தொடர்பில் வெளிப்படுத்துகைகள் செய்யப்பட்டுள்ளனவோ அந்த செய்தித்தாள்களின் தனியுரிமையாளர்கள், பதிப்பாசிரியர்கள் மற்றும் பதிப்பாசிரியபீட பணியாட்டொகுதியின் உறுப்பினர்கள்;

(இஇ) 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை தொலைத்தொடர்பாடல்கள் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஊடகக் கம்பெனிகளின் தனியுரிமையாளர்கள், பதிப்பாசிரியர்கள் மற்றும் பதிப்பாசிரியபீட பணியாட்டொகுதி உறுப்பினர்கள்;

(ஈஈ) 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட தேசிய விளையாட்டுக் கழகத்தின் பதவிதாங்குநர்கள்; அத்துடன்

(உஉ) வேறு அலுவலர்களின் அந்தந்த அலுவலகங்களில் அவர்கள் புரிகின்ற பணியின் தன்மையைக் கவனத்துட்கொண்டு, அத்தகைய அலுவலர்கள் இலஞ்சத்துக்கு அல்லது ஊழலுக்கு பலியாகக்கூடிய தன்மையைக் கருத்திலெடுப்பதன்மூலம் உயர் ஆபத்து வகுதிகளை ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களின் வகுதியினர்.

(2) ஓராம் உட்பிரிவின் நடைமுறைப்படுத்துகையின் பயனைக்கொண்டு இப்பாகத்தின் ஏற்பாடுகள் எவ்வாளுக்கு ஏற்புடையனவாகின்றனவோ அவ்வாளொருவர் இதனகத்துப் பின்னர் இப்பாகத்தில், ''இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆள்'' ஒருவரெனக் குறிப்பீடு செய்யப்படுகின்றார்.

இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆட்களுக்கு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய வெளிப்படுத்து கைகளைச் செய்வதற்குள்ள கடமை

**81.** இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஒவ்வோராளும், (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "சொத்துக்களும் பொறுப்புக் களும் பற்றிய வெளிப்படுத்துகை" ஒன்றெனக் குறிப்பீடு செய்யப் படும்) பின்வரும் எல்லாமும் பற்றிய வெளிப்படுத்துகையொன்றை, 82 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கச் செய்தல் வேண்டும்:-

(அ) அவரது சொத்துக்களும் பொறுப்புக்களும்;

(ஆ) அவரது வாழ்க்கைத்துணையின் சொத்துக்களும் பொறுப்புக்களும்;

(இ) அவரில் தங்கிவாழும் பிள்ளைகளின் வயதுகளைப் பொருட்படுத்தாது, அப்பிள்ளைகள் ஒவ்வொருவரின் சொத்துக்களும் பொறுப்புக்களும்;

(ஈ) அவரில் தங்கிவாழும் வேறு எவரேனும் ஆட்களின் வயதுகளைப் பொருட்படுத்தாது, அவ்வாட்களின் சொத்துக்களும் பொறுப்புக்களும்; அத்துடன்

(உ) இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆளுடன் வேறு எவரேனுமாள் பரஸ்பர உரிமைகளையும் கடப்பாடு களையும் பகிர்ந்துகொள்ளுமிடத்துத் தவிர, வெளிப்படுத்துகைத் தேதிக்கு ஆகக்குறைந்தது ஆறு மாதங்களுக்கு முன்னர், இப்பாகம் ஏற்புடையதாகின்ற ஆளுடன் கூடிவாழ்ந்து பொதுவான வீட்டைப் பகிர்ந்து கொள்கின்ற அத்தகைய வேறு எவரேனும் ஆளின் சொத்துக்களும் பொறுப்புக்களும்.

சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப் படுத்துகைகளை எப்பொழுது செய்ய வேண்டும் என்பது

**82.** (1) எந்த ஆளுக்கு இப்பாகம் ஏற்புடையதாகின்றதோ அந்த ஒவ்வொரு ஆளும், ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப் படக்கூடியவாறான படிவத்தில் -

(அ) (இதனகத்துப்பின்னர் "முதலாவது நியமன வெளிப்படுத்துகை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) நியமனத் தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள்;

(ஆ) (இதனகத்துப்பின்னர் "ஆண்டு வெளிப்படுத்துகை" எனக்குறிப்பீடுசெய்யப்படும்) (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி ஆண்டுதோறும்;

(இ) (இதனகத்துப்பின்னர் "பதவிக்கால முடிவு அல்லது ஓய்வுபெறும் வெளிப்படுத்துகை" எனக்குறிப்பீடு செய்யப்படும்) விடயத்துக்கேற்ப அவரது தொழிற் காலத்தின் முடிவை அல்லது அவரது ஓய்வுபெறும் தேதியை அல்லது பதவியிலிருந்து நீக்கப்படும் தேதியை உடனடுத்துப்பின்னர் பதினான்கு நாட் காலப்பகுதியினுள்;

(ஈ) (இதனகத்துப்பின்னர் "ஓய்வுபெற்ற பின்னரான வெளிப்படுத்துகை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (இ) என்னும் பந்தியின்கீழ் வெளிப்படுத்துகை செய்யப் பட்ட ஆண்டை உடனடுத்துப் பின்வரும் தொடர்ச்சி யான இரண்டு ஆண்டுகளில்;

(உ) (இதனகத்துப் பின்னர் "நிமித்த வெளிப்படுத்துகை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பத்து மில்லியன் ரூபா தொகையினதான அல்லது பத்து மில்லியன் ரூபா வுக்கு மேற்பட்டதாக சொத்துக்களினதும் பொறுப்புக் களினதும் பெறுமதியில் குறிப்பிடத்தக்க மாற்ற மொன்று நிகழ்கின்றவிடத்து, அத்தகைய நிகழ்வுத் தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள்; அத்துடன்

(ஊ) விடயத்துக்கேற்ப, 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டம், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம் அல்லது (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நியமனப் பத்திரங்கள் தேர்தல் களுக்காக சமர்ப்பிக்கப்படும் போது,

சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகைகளைச் செய்தல் வேண்டும்.

(2) ஆளொருவர், நியமிக்கப்பட்ட தேதியன்று எவ்வாளுக்கு இப்பாகம் ஏற்புடையதாகின்றதோ அந்த ஆளொருவராக விராதவிடத்து, அவர், எத்தேதியன்று எவ்வாளுக்கு இப்பாகம் ஏற்புடையதாகின்றதோ அவ்வாள் ஒருவராக அவர் வருகின்ற அத்தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள், அத்தகைய ஆள் எத்தேதியன்று எவ்வாளுக்கு இப்பாகம் ஏற்புடையதாகின்றதோ அவ்வாள் ஒருவராக வருகின்ற அத்தேதியன்றுள்ளவாறு சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகையொன்றைச் செய்தல் வேண்டும்:

ஆயின், 80 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ய) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு எந்த ஆளுக்கு இப்பாகம் ஏற்புடையதாகின்றதோ அந்த ஆள் ஒருவர் தேர்தல் தேதியை வெளிப்படுத்தி இயைபான சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகைத் தேதி வரையான காலப்பகுதிவரை அவரது வெளிப்படுத்துகையை சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) ஓராம் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் முதலாவது வெளிப்படுத்துகையைச் செய்யுமாறு தேவைப்படுத்தப்படுகின்ற ஒவ்வோர் ஆளும், அத்தகைய ஆள் இப்பாகம் ஏற்புடையதாகும் ஆளாக இல்லா தொழிந்தாலன்றி, ஒவ்வோர் ஆண்டிலும் மார்ச்சு முப்பத்தோராம் நாளன்றுள்ளவாறான அவரது சொத்துக்களினதும் பொறுப்புக் களினதும் வெளிப்படுத்துகையொன்றை ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான படிவத்தில் ஒவ்வொரு ஆண்டின் யூன் முப்பதாம் நாளளவில் செய்தல் வேண்டும் என்பதுடன் இப்பாகத்தின் கீழ் எத்தேதியன்று அவரது சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகையொன்றைச் செய்வதற்கு அவர் முதலில் தேவைப்படுத்தப்பட்டாரோ அத்தேதியில் அவர் வைத்திருந்த சொத்துக்களையும் பொறுப்புக் களையும் அத்தகைய வெளிப்படுத்துகையில் உள்ளடக்குதலும் வேண்டும்:

ஆயின், (2) ஆம் உட்பிரிவின்கீழ், சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வெளிப்படுத்துகையொன்றைச் செய்யுமாறு தேவைப்படுத்தப்பட்ட ஆள் ஒருவர், ஏதேனும் ஆண்டின் மார்ச்சு முப்பத்தோராம் நாளுக்கு முற்போந்த ஆறு மாதங்களினுள் ஏதேனும் தேதியிலுள்ளவாறாக முதலாவது வெளிப்படுத்துகையைச்

செய்துள்ளவிடத்து, அவர், (1) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றமொன்று அவரது சொத்துக்களிலும் பொறுப்புக்களிலும் நிகழ்கின்றவிடத்து, நிமித்த வெளிப்படுத்துகை தவிர்ந்த வேறொரு வெளிப்படுத்து கையை அத்தகைய ஆண்டிற்கு செய்யுமாறு தேவைப்படுத் தப்படுதலாகாது.

சொத்துக்களும் பொறுப்புக் களும் பற்றிய வெளிப்படுத்து கைகளின் சமர்ப்பிப்பு நடைமுறை

**83.** (1) சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப் படுத்துகைகளின் சமர்ப்பிப்பு மற்றும் சரிபார்த்தல், (இதனகத்துப் பின்னர் இப்பாகத்தில் "மத்திய அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆணைக்குழுவினால் நிருவகிக்கப்படும் மத்திய மயமாக்கப்பட்ட இலத்திரனியல் முறைமையினூடாக செய்யப்படுதல் வேண்டும்.

(2) (இதனகத்துப் பின்னர், "இலத்திரனியல் வெளிப்படுத்துகை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய இலத்திரனியல் வெளிப்படுத்துகைகள் ஒன்றில் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளினால் வெளிப்படையாக தவிர்க்கப்படாத அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாகவிராத 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் ஏற்பாடுகள் இப்பாகத்துக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய இலத்திரனியல் வெளிப்படுத்துகையொன்றைச் செய்துள்ள ஆளொருவர் –

(அ) முதலாவது அல்லது அடுத்துப்பின்னரான வெளிப்படுத்துகைகளுக்கு பதினைந்து நாட்களினுள்; அத்துடன்

(ஆ) நிமித்த வெளிப்படுத்துகைகளுக்கு ஏழுநாட்களினுள்,

அத்தகைய வெளிப்படுத்துகையில் மாற்றங்களைச் செய்யலாம் என்பதுடன் முறைமையானது அக்காலப்பகுதியின் பின்னர் தன்னியக்கமாக முடிவடையும்:

ஆயின் எவ்வாறாயினும், எந்த ஆளுக்கு இப்பாகம் ஏற்புடைய தாகின்றதோ அந்த ஆள், மத்திய அதிகாரசபை நியாயப்படுத்தத் தக்க காரணமொன்று உள்ளதென கருதுமிடத்து, மத்திய அதிகாரசபையின் விசேட வலுவளிப்புடன் விடயத்துக்கேற்ப பதினைந்து நாட்களின் பின்னர் அல்லது ஏழு நாட்களின் பின்னர் அவரது இலத்திரனியல் வெளிப்படுத்துகையில் மாற்றங்களைச் செய்வதற்கு மத்தியமயமாக்கப்பட்ட இலத்திரனியல் சமர்ப்பிப்பு முறைமைக்கான அணுக்கத்திற்கு அனுமதியளிக்கப்படலாம்.

(5) இப்பாகம் எந்த ஆளுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஆளொருவர் (4) ஆம் உட்பிரிவின்கீழ் அவரது வெளிப்படுத்து கையில் மாற்றமொன்றைச் செய்கின்றவிடத்து, அத்தகைய ஆளுக்கு, தேவைப்படுத்தப்பட்ட மாற்றங்களைச் செய்வதற்கு அவரது மூல வெளிப்படுத்துகையின் பிரதிகள் வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆளின் வெளிப்படுத்துகையின் கடைசிப் பிரதி உண்மையானதும் இறுதியானதுமான வெளிப்படுத்துகை யாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(6) இப்பாகம் எந்த ஆளுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஆள் ஒருவர் (2) ஆம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்படவேண்டிய வெளிப்படுத்துகையைச் சமர்ப்பிப்பதில் மத்திய அதிகாரசபையிட மிருந்தான அல்லது மத்திய அதிகாரசபையினால் குறித்தளிக்கப் பட்ட எவரேனும் அலுவலரிடமிருந்தான உதவியை நாடலாம்.

(7) சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகை களின் கையினாலான சமர்ப்பிப்பு, மத்தியமயமாக்கப்பட்ட இலத்திரனியல் சமர்ப்பிப்பு முறைமை பயனுக்கு வரும்வரை நிலைபெயர்கால காலப்பகுதியின்போது அல்லது எந்த சந்தர்ப் பங்களில் இலத்திரனியல் முறைமை தொழில்நுட்ப கோளாறு காரணமாக செயலிழந்துள்ளதோ அந்தச் சந்தர்ப்பங்களில் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

சரிபார்த்தல் நடைமுறை.

**84.** (1) மத்திய அதிகாரசபை, (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட சூழ்நிலைகளில் கள்ளத்தனமான முறையில் செல்வந்த ராதல் மற்றும் அக்கறை முரண்பாடுகளின் முதற் தோற்றளவிலான

எண்பிப்பை கண்டறிவதற்கு சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகைகளின் சரிபார்த்த லொன்றை நடாத்துதல் வேண்டும்.

(2) மத்திய அதிகாரசபையானது பின்வரும் சூழ்நிலைகளில் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகைகளின் சரிபார்த்தலொன்றை நடாத்துதல் வேண்டும்:-

(அ) அத்தகைய வெளிப்படுத்துகைகள், ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கு இணங்க அத்தகைய சரிபார்த்தலுக்காக தெரிவு செய்யப்படும்போது;

(ஆ) இலத்திரனியல் முறைமையில் தன்னியக்கமாக கண்டறியப்படும் ஒவ்வாமைகள் மற்றும் செந்நிறக் கொடிகளின் மேல்;

(இ) இப்பாகம் எந்த ஆளுக்கு ஏற்புடையதாகின்தோ அந்த ஆள் ஒருவர் தொடர்பாக கள்ளத்தனமானமுறையில் செல்வந்தராதல் அல்லது அக்கறை முரண்பாடு பற்றி எவரேனும் ஆளிடமிருந்து முறைப்பாடொன்றைப் பெறுவதன் மேல்; அல்லது

(ஈ) மத்திய அதிகாரசபை பொதுமூலங்கள் அல்லது அதன் சொந்த புலனாய்வுகளினூடாக நிகழக்கூடிய மீறுகையின் முதற்தோற்றளவிலான எண்பிப்புக்களை தானாக கண்டறியும்போது.

(3) இரண்டாம் உட்பிரிவின் கீழ் நடாத்தப்பட்ட ஏதேனும் சரிபார்த்தலின் மேல் கள்ளத்தனமான முறையில் செல்வந்தராதல் பற்றிய கண்டறிதல் 42 ஆம் பிரிவின் கீழான புலனாய்வொன்றுக்கு இட்டுச் செல்லுதல் வேண்டும்.

வேறு பதிவேடுகளுக்கான அணுக்கம்

**85.** (1) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், மத்திய அதிகார சபையானது, சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகைகளை சரிபார்க்கும்

நோக்கத்துக்காக அணுகப்பட்ட தகவல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவினம் மற்றும் அக்கறை முரண்பாடுகளை தோற்றுவிக்கின்ற அல்லது தோற்றுவிக்கக்கூடிய அக்கறைகள் தொடர்பானதாக இருக்கும் அளவுக்கு இலங்கையினுள் ஏதேனும் வேறு பகிரங்க அதிகாரசபையின் பதிவேடுகளுக்கும் தரவுத்தளங்களுக்குமான அணுக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இப்பாகதத்தின் நோக்கத்துக்காக, பகிரங்க அதிகாரசபை என்பது, 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச்சட்டத்தில் உள்ளவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் உண்ணாட்டரசிறைத் திணைக்களம், மோட்டார் வாகன திணைக்களம், சுங்கத் திணைக்களம், காணிப்பதிவாளர் தலைமையதிபதி மற்றும் உரித்துப்பதிவாளர் தலைமையதிபதியை உள்ளடக்குதலும் வேண்டும்.

சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகையைப் பார்வையிடுவதற்கான தத்தவம்

**86.** சட்டத்துறைத் தலைமையதிபதி, ஆணைக்குழு, உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி, செலாவணிக்கட்டுப்பாட்டுத் திணைக்களத் தலைவர், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, விசேட பொலிசு அலகுகளின் பெயர்குறிக்கப்பட்ட அலுவலர்கள், சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி மற்றும் நிதிசார் உளவறிதற்கூறின் பெயர் குறிக்கப்பட்ட அலுவலர்கள், மத்திய அதிகாரசபையின் வலுவளிப்புடன் இப்பாகத்தின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய ஏதேனும் வெளிப்படுத்துகையைக் கோருவதற்கும் பார்வையிடுவதற்குமான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மத்தியமயமாக்கப்பட்ட இலத்திரனியல் முறைமை

**87.** (1) (இதனகத்துப் பின்னர் ''மத்திய மயமாக்கப்பட்ட இலத்திரனியல் முறைமை'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இப்பாகம் எந்த ஆளுக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஒவ்வொரு ஆளினதும் சொத்துக்களும் பொறுப்புக்களும் தொடர்பாக இலத்திரனியல் வடிவத்தில் தகவல் களைப் பாதுகாக்கும் நோக்கத்துக்காக மத்திய அதிகார சபையினால் பேணப்படும் தரவுத்தளமொன்று இருத்தல் வேண்டும்.

(2) மத்திய மயமாக்கப்பட்ட இலத்திரனியல் முறைமையைப் பேணும் முறையை விதித்துரைப்பதற்கு ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

(3) 1995 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சான்று (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகும் ஏதேனும் தரவு, செய்தி, இலத்திரனியல் ஆவணம், இலத்திரனியல் பதிவேடு அல்லது வேறு ஆவணத்துக்கு மற்றும் அவை தொடர்பாக ஏற்புடையதாதலாகாது.

(4) ஆணைக்குழுவானது மத்தியமயமாக்கப்பட்ட இலத்திரனியல் முறைமையின் பயன்பாட்டுக்கு அதிகாரமளிப்பதனை அல்லது அதற்கு வசதியளிப்பதனை விதிகள் என்ற வகையாக குறித்துரைத்தல் வேண்டும்.

பொதுமக்கள் அணுகுகை

**88.** (1) மத்தியமயமாக்கப்பட்ட இலத்திரனியல் முறைமையானது, ஆணைக்குழுவின் அலுவலகமுறையான வலைத்தளத்தினூடாக அது சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள் பொதுமக்களுக்கு அணுகத்தக்கதாகவுள்ள சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய ஒவ்வொரு வெளிப்படுத்துகையின் வெளியிடத் தயாரான வடிவத்தை தன்னியக்கமாக தோற்றுவித்தல் வேண்டும். அத்தகைய வெளியிடத் தயாரான வடிவம் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் ஆகாது —

(அ) வெளிப்படுத்துநரின் அல்லது எந்த ஆளின் சொத்துக்கள் வெளிப்படுத்துநரினால் வெளிப்படுத்தப்படுகின்றதோ அந்த எவரேனும் வேறு ஆளின் வதிவிட முகவரி;

(ஆ) எந்த வட்டாரம் மற்றும் மாவட்டத்தில் நிலைச்சொத்து அமைந்துள்ளதோ அந்த வட்டாரம் மற்றும் மாவட்டம் தொடர்பான தகவல்கள் தவிர வெளிப்படுத்தப்பட்ட நிலைச்சொத்தின் முழுமையான முகவரி/முகவரிகள்;

(இ) வெளிப்படுத்துகையில் குறிப்பிடப்பட்ட தனியாட்களை ஆளடையாளம் காணும் நோக்கத்துக்காக, பிறந்த தேதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கடவுச்சீட்டு இலக்கம் அல்லது இயைபான அதிகாரசபைகளினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் இலக்கம்;

(ஈ) வங்கிக் கணக்கு இலக்கங்கள்; அல்லது

(உ) வேறு எவையேனும் வைப்பு விபரங்கள்:

ஆயின், சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப் படுத்துகையொன்றின் மேலே சொல்லப்பட்ட வெளியிடத் தயாரான வடிவத்தை தோற்றுவிக்கும் போது, ஆணைக்குழு வெளியிடத் தயாரான வடிவத்தைப் பெற்றுக்கொள்ளும் ஆளின் அடையாளத்தை உறுதிசெய்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆளின் அடையாளம் பதிவுசெய்யப்படுதலும் வேண்டும்.

(2) மத்திய அதிகாரசபையானது, அதன் பணிகளைத் தொடங்கியதிலிருந்து மூன்று மாதகாலப்பகுதியொன்றினுள், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் நியதிகளின்படி மத்திய அதிகாரசபையின் தகவல் அலுவலராக அலுவலர் ஒருவரை நியமித்தல் வேண்டும் என்பதுடன் மத்திய அதிகாரசபையின் தலைவர் சொல்லப்பட்ட சட்டத்தின் நோக்கங்களுக்காக பெயர்குறிக்கப்பட்ட அலுவலராக விருத்தலும் வேண்டும்.

தேர்தல்களுக்கான வேட்பாளர்களின் வெளிப்படுத்து கைகளுக்கான அனுக்கம்

**89.** எண்பதாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ய) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தேர்தல்களுக்கான வேட்பாளர் ஒவ்வொருவரும், சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகையின் படிவத்தின் பிரதியொன்றையும் சுருக்கமொன்றையும் அத்தகைய வேட்பாளரின் நியமனப்பத்திரங்களுடன் சேர்த்து தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகை தொடர்பான தவறுகள்

**90.** (1) இப்பாகத்தின் கீழ் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகைகள் எந்த ஆளுக்கு ஆக்கப்படவிருக்கின்றதோ அந்த ஆள் ஒருவர் ஒவ்வொரு ஆண்டின் யூன் மாதம் முப்பதாந் தேதியிலிருந்து இரண்டு வாரங்களினுள் அப்பாகத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறியிருப்பின், அத்தகைய ஆள் மத்திய அதிகாரசபையினால் கடிதம் அனுப்பப் படுவதன் மூலம் எச்சரிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 82 ஆம் பிரிவின்கீழ் தனது ஆண்டு வெளிப்படுத்துகையை அல்லது ஓய்வுக்குப் பின்னரான வெளிப்படுத்துகையை உரிய தேதியன்று சமர்ப்பிக்க தவறுகின்ற எவரேனும் ஆள், உரிய வெளிப்படுத்துகைத் தேதியிலிருந்து தொடங்கி யூலை மாதம் முப்பத்தோராம் நாள் வரையான காலப்பகுதிக்காக வெளிப்படுத்துநரின் கடைசியாகப் பெறப்பட்ட மொத்த மாதாந்த சம்பளத்தின் முப்பதிலொரு பங்கிற்கு சமமான மத்திய அதிகாரசபையினால் விதிக்கப்படும் நாளாந்த நிருவாகக்

குற்றப்பணமொன்றிற்கு ஆளாதல் வேண்டும். கடைசி ஆறு மாதங்களுக்கான கடைசியாக பெறப்பட்ட மொத்த சம்பளத்தின் முப்பதிலொரு பங்கிற்கு சமமான அதிகரிக்கப்பட்ட நாளாந்த நிருவாக குற்றப்பணமொன்று ஓகத்து முதலாந் தேதியிலிருந்து ஓகத்து முப்பத்தோராம் தேதிவரை பிந்திய சமர்ப்பிப்புகளுக்காக விதிக்கப்படும். இக்குற்றப்பணம் விடயத்திற்கேற்ப ஊதியத்தின் அல்லது ஓய்வு நன்மை மீதான மிகைக் கட்டணமொன்றாக இருத்தல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் 82 ஆம் பிரிவின்கீழ் முதலாவது நியமன வெளிப்படுத்துகையை, நிமித்த வெளிப்படுத்துகையை அல்லது பதவிக்கால முடிவு அல்லது ஓய்வுபெறும் வெளிப்படுத்துகையை உரிய தேதியன்று சமர்ப்பிக்கத் தவறுகின்ற எவரேனும் ஆள், வெளிப்படுத்துநரின் கடைசியாகப் பெறப்பட்ட மொத்த மாதாந்த சம்பளத்தின் முப்பதிலொரு பங்குக்குச் சமமான மத்திய அதிகாரசபையினால் விதிக்கப்படும் நாளாந்த நிருவாக குற்றப்பணமொன்றிற்கு ஆளாதல் வேண்டும். அக்குற்றப்பணம் சமர்ப்பிப்புகளுக்கான உரிய தேதியின் பின்னர் பதினான்கு நாட்கள் வரை பிந்திய சமர்ப்பிப்புகளுக்காக விதிக்கப்படும். கடைசி ஆறு மாதங்களுக்கான கடைசியாக பெறப்பட்ட மொத்த மாதாந்த சம்பளங்களின் முப்பதிலொரு பங்கிற்கு சமமான அதிகரிக்கப்பட்ட நாளாந்த நிருவாக குற்றப்பணமொன்று அத்தகைய வெளிப்படுத்து கையை சமர்ப்பிப்பதற்காக உரிய தேதியின் பின்னர் பதினான்கு நாட்களுக்கும் இருபத்தெட்டு நாட்களுக்கும் இடையேயான பிந்திய சமர்ப்பிப்புகளுக்காக விதிக்கப்படுதல் வேண்டும்.

(4) தேர்தலொன்றிற்கான பெயர்நியமனத்திற்கான தனது விண்ணப்பப்படிவத்துடன் சேர்த்து தனது சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகையை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற எவரேனும் ஆள், இயைபான எழுத்திலான சட்டங் களின் ஏற்பாடுகளுக்கு இணங்க வலுவளிப்புகளுக்கு ஆளாதல் வேண்டும்.

(5) இயைபான ஆண்டின் செத்தெம்பர் முதலாந் தேதிவரை விடயத்திற்கேற்ப, ஆண்டு வெளிப்படுத்துகையை அல்லது ஓய்வுபெற்ற பின்னரான வெளிப்படுத்துகையைச் சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரின் முன்னரான சுருக்க விளக்கத்தின்

பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது அவ்வாளின் பன்னிரெண்டு மாதங்களுக்கான கடைசியாக பெறப்பட்ட மொத்த சம்பளங்களுக்குச் சமமான குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஓராண்டை விஞ்சாத இருவகையிலொருவகை மறியற்றண்டனைக் காலமொன்றிற்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்:

ஆயின், ஆணைக்குழுவானது சரிபார்த்தல் நோக்கங்களுக்காக அத்தகைய சமர்ப்பிக்காமை பற்றி புலனாய்வு செய்தல் வேண்டும்.

(6) முதலாவது நியமன வெளிப்படுத்துகையை, நிமித்த வெளிப்படுத்துகையை அல்லது பதவிக்கால முடிவு அல்லது ஓய்வுபெறும் வெளிப்படுத்துகையை உரிய தேதியின் பின்னர் இருபத்தெட்டு நாட்கள்வரை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரின் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மீது –

(அ) எவரேனும் ஆள் அவரது முதலாவது வெளிப்படுத்துகையை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்றவிடத்து, ஒரு இலட்சம் ரூபாவிற்குச் சமமான;

(ஆ) எவரேனும் ஆள் அவரது நிமித்த வெளிப்படுத்துகையை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்றவிடத்து, ஒரு இலட்சம் ரூபாவிற்குச் சமமான; அல்லது

(இ) எவரேனும் ஆள் பதவிக்கால முடிவு அல்லது ஓய்வுபெறும் வெளிப்படுத்துகையை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்றவிடத்து, அவ்வாளின் கடைசியாக பெறப்பட்ட மொத்த சம்பளத்திற்குச் சமமான;

குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஓராண்டை விஞ்சாத மறியற்றண்டனைக் காலமொன்றிற்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்:

ஆயின் மேலும். ஆணைக்குழுவானது சரிபார்த்தல் நோக்கங்களுக்காக சமர்ப்பிக்காமை பற்றி புலனாய்வு செய்தல் வேண்டும்.

(7) (அ) ஏதேனும் வெளிப்படுத்துகையில் ஏதேனும் பொய்யான கூற்றைச் செய்கின்ற எவரேனும் ஆள்; அல்லது

(ஆ) ஏதேனும் சொத்தை அல்லது பொறுப்பை ஏதேனும் வெளிப்படுத்துகையிலிருந்து வேண்டுமென்றே தவிர்க்கின்ற எவரேனும் ஆள்,

தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரின் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன் மீது இரண்டு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றிற்கு அல்லது ஓராண்டை விஞ்சாத மறியற்றண்டனைக் காலமொன்றிற்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற் றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(8) ஆணைக்குழுவினால் தேவைப்படுத்தக்கூடியவாறான ஏதேனும் மேலதிக தகவலை வழங்குவதற்கு நியாயமான காரணம் இன்றி தவறுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரின் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மீது, ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஓராண்டை விஞ்சாத இருவகையிலொருவகை மறியற்றண்டனைக் காலமொன்றிற்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(9) ஆறாம் அல்லது (7) ஆம் உட்பிரிவின் கீழ் தவறொன்றிற்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்ற ஆளொருவர், குற்றத்தீர்ப்புத் தேதியின் பின்னரான பதினான்கு நாட்கள் காலப்பகுதியொன்றினுள் அல்லது அத்தகைய குற்றத்தீர்ப்பை உறுதிசெய்கின்ற தேதியின் பின்னரான பதினான்கு நாட்கள் காலப்பகுதியொன்றினுள்

அத்தகைய குற்றத்தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடொன்றைச் செய்யும்பட்சத்தில், 81 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகையைச் செய்தல் வேண்டும். 79 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் மற்றும் இப்பாகத்தின் வேறு முற்போந்த பிரிவுகளின் ஏற்பாடுகள் 81 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய ஏதேனும் வெளிப்படுத்துகைக்கு அவை ஏற்புடையனவாறான அதேமுறையிலும் அதே அளவிற்கும் இவ்வுப்பிரிவின்கீழ் அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய ஏதேனும் வெளிப்படுத்துகைக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையன வாதல் வேண்டும்.

(10) எவரேனும் ஆள் (7) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் தவறொன்றிற்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றவிடத்து, அத்தவறானது எந்த சொத்து தொடர்பில் புரியப்பட்டதோ அந்தச் சொத்து அத்தகைய குற்றத்தீர்ப்பின் பயனைக்கொண்டு எல்லா வில்லங்கங்களிலிருந்தும் விடுபட்டதாக அரசுக்கு உரித்தாக்கப் படுதல் வேண்டும்.

(11) முற்போந்த (10) ஆம் உட்பிரிவின்கீழ் அரசிற்கு எவையேனும் சொத்துக்களை உரித்தாக்குதல் -

(அ) இழப்பித்தற் கட்டளைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அல்லது உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, இழப்பித்தற் கட்டளையை உறுதிப்படுத்தி அல்லது நிலைநாட்டி மேன்முறையீடு தீர்மானிக்கப்படு வதன்மேல் பயனுறுதல் வேண்டும்;

(ஆ) இழப்பித்தற் கட்டளைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு எதுவும் செய்யப்பட்டிராதவிடத்து, எந்தக் காலப்பகுதியினுள் இழப்பித்தற்

கட்டளைக்கு எதிராக உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று செய்யப்படலாமோ அந்தக் காலப்பகுதி முடிவுறுவதன் பின்னர் பயனுறுதல் வேண்டும்.

(12) மத்திய அதிகாரசபையினால் எவரேனும் ஆளின்மீது விதிக்கப்பட்ட இவ்வத்தியாயத்தின்கீழான எல்லா நிருவாக குற்றப்பணங்களும் விடயத்திற்கேற்றவாறு, அத்தகைய ஆளின் ஊதியம் அல்லது ஓய்வு நன்மை மீது மிகைக்கட்டணம் விதிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் ஆணைக்குழுவின் நிதியத்திற்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.

மேலதிக தகவலைக் கோருவதற்கான ஆணைக்குழு வின் தத்துவம்

**91.** மத்திய அதிகாரசபை இச்சட்டத்தின் பாகம் I இன்கீழ் அதன் பணிகளைப் புரிவதற்காக எந்நேரத்திலும், ஆணைக்குழு தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய மேலதிக தகவலை –

(அ) இப்பாகத்தின்கீழ் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகையொன்றைச் செய்துள்ள எவரேனும் ஆளிடமிருந்து கோரலாம் என்பதுடன் அத்தகைய தகவலை அல்லது இப்பாகத்தின் கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையைப் பயன் படுத்தலாம்; அல்லது

(ஆ) வேறு எவரேனும் ஆளிடமிருந்து தகவல், பதிவேடு அல்லது ஆவணத்தைக் கோரலாம்.

சொத்துக்களும் பொறுப்புக்களும்

**92.** இப்பாகத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாக தேவைப்படுத்தி னாலொழிய ''சொத்துக்களும் பொறுப்புக்களும்'' என்பது, சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவினம் மற்றும் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே நேரடியாக அல்லது பயன்பெறுமுகமாக சொந்தமாகக் கொள்ளப்பட்ட அக்கறைகள் எனப்பொருள்படும்; அவைபற்றிய விபரங்கள் ஒழுங்குவிதி களினால் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

பாகம் III

அத்தியாயம் I

**இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பான தவறுகள்**

*உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல்நீதிமன்றங்களின் நீதிபதிகள், நீதிமுறை அலுவலர்கள், நியாயசபைகளின் அல்லது நிறுவனங்களின் உறுப்பினர்கள் மற்றும் நீதிமருவிய தத்துவங்களைப் பிரயோகிக்கின்ற ஆட்கள் மற்றும் பாராளுமன்றம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூரதிகாரசபைகளின் உறுப்பினர்கள் தொடர்பிலான இலஞ்சம்*

**93.** (அ) உயர் நீதிமன்றத்தின், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அல்லது மேல்நீதிமன்றத்தின் நீதிபதியொருவர் அல்லது நீதிமுறை அலுவலர் அல்லது நியாயசபையின் அல்லது நிறுவனமொன்றின் உறுப்பினரொருவர் அல்லது நீதிமருவிய தத்துவத்தைப் பிரயோகிக்கின்ற ஆளொருவர் அல்லது பாராளுமன்றத்தின் உறுப்பினரொருவர் அல்லது மாகாணசபையின் அல்லது உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவர் அவரது நீதிமுறைத் தன்மையில் அல்லது அத்தகைய உறுப்பினராக அவரது தன்மையில் ஏதேனும் செயலைச் செய்வதற்காக அல்லது செய்யாது தவிர்ப்பதற்காக ஊக்குவிப்பொன்றாக அல்லது வெகுமதியொன்றாக அத்தகைய நீதிபதிக்கு அல்லது அலுவலருக்கு அல்லது உறுப்பினருக்கு ஏதேனும் அவாநிறைவை முனைகின்ற; அல்லது

(ஆ) உயர்நீதிமன்றத்தின், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின், மேல்நீதிமன்றத்தின் நீதிபதியொருவராக அல்லது நீதிமுறை அலுவலரொருவராக அல்லது நியாயசபையின் அல்லது நிறுவனமொன்றின் உறுப்பினரொருவராக அல்லது நீதிமருவிய தத்துவத்தைப் பிரயோகிக்கின்ற ஆளொருவராக அல்லது பாராளுமன்ற உறுப்பினராக அல்லது மாகாணசபையொன்றின் அல்லது உள்ளூரதிகார சபையொன்றின் உறுப்பினரொருவராகவிருந்து கொண்டு, அவரது நீதிமுறைத் தன்மையில் அல்லது அத்தகைய உறுப்பினராக அவரது தன்மையில் ஏதேனும் செயலை அவர் செய்வதற்காக அல்லது செய்யாது தவிர்ப்பதற்காக ஊக்குவிப்பொன்றாக அல்லது வெகுமதியொன்றாக ஏதேனும் அவா நிறைவை பரிந்து கேட்கின்ற அல்லது ஏற்றுக் கொள்கின்ற,

ஆள் ஒருவர், இச்சட்டத்தின்கீழ் இலஞ்சத் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஏழு ஆண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற்றண்டனைக் காலமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*பகிரங்க உத்தியோகத்தர்களை நேர்காண்பதற்காக பாராளுமன்றத்தின் மாகாண சபையின் அல்லது உள்ளூரதிகார சபையின் உறுப்பினர்கள் அவாநிறைவை ஏற்றுக்கொள்ளல்*

**94.** (அ) எவரேனும் ஆள் சார்பாக பகிரங்க உத்தியோகத்தர் ஒருவரை நேர்காண்பதற்காக; அல்லது

(ஆ) நீதிமுறை அல்லது நீதிமருவிய பணிகளைப் பிரயோகிக்கின்ற பகிரங்க உத்தியோகத்தர் ஒருவரின் முன்னர் எவரேனும் ஆள் சார்பாக தோன்றுவதற்காக,

ஊக்குவிப்பொன்றாக அல்லது வெகுமதியொன்றாக ஏதேனும் அவாநிறைவை பரிந்து கேட்கின்ற அல்லது ஏற்றுக்கொள்கின்ற பாராளுமன்ற உறுப்பினரொருவர், மாகாணசபையின் அல்லது உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவர், இச்சட்டத்தின்கீழ் இலஞ்சத் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஏழு ஆண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற்றண்டனைக் காலமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், சட்ட நீதிமன்றமொன்றின் அல்லது பகிரங்க உத்தியோகத்தர் ஒருவர் எந்த நியதிச்சட்ட நியாயசபையின் உறுப்பினரொருவராகவில்லாமல் இருக்கிறாரோ அந்த நியதிச்சட்ட நியாயசபையொன்றின் முன்னர் பாராளுமன்ற உறுப்பினரொருவர் சட்டத்தரணியொருவராக தோன்றுவது இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் தவறொன்றாதலாகாது.

*இலத்திரனியல் சொத்துக்கள் வெளிப்படுத்துகை முறைமைக்கான சட்டவிரோதமான அணுக்கம் முதலியன தவறொன்றாதல் வேண்டும்*

**95.** மத்திய மயமாக்கப்பட்ட இலத்திரனியல் முறைமையை சட்டவிரோதமாக அல்லது உரிய அதிகாரம் இன்றி அணுகுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத் துக்கும் ஏழு ஆண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற்றண்டனைக் காலமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

பொலிசு உத்தியோகத் தர்கள், சமாதான அலுவலர்கள் மற்றும் வேறு பகிரங்க உத்தியோகத்தர் கள் தொடர்பிலான இலஞ்சம்

**96.** (அ) எவரேனும் பொலிசு அலுவலருக்கு, சமாதான அலுவலருக்கு அல்லது தவறாளர்களுக்கு குற்றவழக்கு தொடுத்தல், அவர்களை கண்டுபிடித்தல் அல்லது அவர்களுக்கு தண்டனையளித்தலுக்காக ஏதேனும் தன்மையில் தொழிலுக்கமர்த்தப்பட்ட வேறு பகிரங்க உத்தியோகத்தருக்கு அல்லது நீதிமன்றமொன்றின் அலுவலரொருவருக்கு அத்தகைய அலுவலர் அல்லது உத்தியோகத்தர் முறையான நீதி நிருவாகத்தில் தலையிடுவதற்காக அல்லது ஏதேனும் தவறொன்று புரியப்படுவதைச் செய்விப்பதற்காக அல்லது அதற்கு வசதியளிப்பதற்காக அல்லது ஏதேனும் தவறைப் புரிந்தவரைக் கண்டுபிடிப்பதிலிருந்து அல்லது தண்டனையளிப் பதிலிருந்து பாதுகாப்பதற்காக அல் லது எவரேனும் ஆளுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் அல்லது தீங்குவிளைவிக்கும் வகையில் அவரது அலுவலகமுறையான தத்துவங்களைத் துர்ப்பிரயோகம் செய்வதற்காக ஊக்குவிப்பொன்றாக அல்லது வெகுமதியொன்றாக ஏதேனும் அவா நிறைவை முனைகின்ற; அல்லது

(ஆ) அத்தகைய எவரேனும் அலுவலராக அல்லது உத்தியோகத்தராகவிருந்துகொண்டு, இப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு அத்தகைய தலையிடுதல், செய்வித்தல், வசதி யளித்தல், பாதுகாத்தல் அல்லது துர்ப்பிரயோகம் செய்தலுக்காக ஊக்குவிப்பொன்றாக அல்லது வெகுமதியொன்றாக ஏதேனும் அவாநிறைவை பரிந்து கேட்கின்ற அல்லது ஏற்றுக்கொள்கின்ற,

ஆளொருவர், இச்சட்டத்தின்கீழ் இலஞ்சத் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஏழு ஆண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற்றண்டனைக் காலமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

ஒப்பந்தங்கள் தொடர்பாக உதவி வழங்குதல் அல்லது செல்வாக்கைப் பயன்படுத்துவதற்கான இலஞ்சம்

**97.** (அ) பகிரங்க உத்தியோகத்தர் ஒருவர், ஏதேனும் வேலையை புரிவதற்காக, ஏதேனும் சேவையை வழங்குவதற்காக, எதனையும் செய்வதற்காக அல்லது ஏதேனும் பொருள், விடயம் அல்லது பதார்த்தத்தை வழங்கு வதற்காக அரசாங்கத்துடன் ஏதேனும் ஒப்பந்தத்தை பெற்றுக்கொள்வதனை ஊக்குவிப்பதில் அல்லது அத்தகைய ஏதேனும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் அல்லது அதன்கண் விதிக்கப்பட்ட விலை அல்லது பிரதிபயனை அல்லது அது தொடர்பில் செலுத்தப் படற்பாலதான ஏதேனும் மானியத்தைக் கொடுப்பனவு செய்வதில் உதவி வழங்குவதற்கான அல்லது செல்வாக்கைப் பயன்படுத்துவதற்கான ஊக்குவிப்பு அல்லது வெகுமதியொன்றாக அத்தகைய பகிரங்க உத்தியோகத்தருக்கு ஏதேனும் அவாநிறைவை முனைகின்ற; அல்லது

(ஆ) பகிரங்க உத்தியோகத்தராகவிருந்துகொண்டு, அவர், இப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு அத்தகைய ஏதேனும் ஒப்பந்தத்தை பெற்றுக்கொள்வதனை ஊக்குவிப்பதில் அல்லது அத்தகைய ஏதேனும் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் அல்லது அதன்கண் விதிக்கப்பட்ட விலை அல்லது பிரதிபயனை அல்லது அது தொடர்பில் செலுத்தப் படற்பாலதான ஏதேனும் மானியத்தைக் கொடுப்பனவு செய்வதில் உதவி வழங்குவதற்கான அல்லது செல்வாக்கைப் பயன்படுத்துவதற்கான ஊக்குவிப்பு ஒன்றாக அல்லது வெகுமதியொன்றாக ஏதேனும் அவாநிறைவை பரிந்து கேட்கின்ற அல்லது ஏற்றுக் கொள்கின்ற,

ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஏழு ஆண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற்றண்டனைக் காலமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*கேள்விப்பத்திரங் களை மீளப் பெறுவதனைச் செய்விப்பதற் கான இலஞ்சம்*

**98.** (அ) ஏதேனும் வேலையை புரிவதற்கான, ஏதேனும் சேவையை வழங்குவதற்கான, எதனையும் செய்வ தற்கான அல்லது ஏதேனும் பொருள், விடயம் அல்லது பதார்த்தத்தை வழங்குவதற்கான ஒப்பந்தமொன்றை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளும் உளக் கருத்துடன், அத்தகைய ஒப்பந்தத்துக்காக கேள்விப் பத்திரமொன்றைச் செய்துள்ள எவரேனும் ஆளுக்கு அத்தகைய கேள்விப்பத்திரத்தை அவ்வாள் மீளப் பெறுவதற்கான ஊக்குவிப்பொன்றாக அல்லது வெகுமதியொன்றாக ஏதேனும் அவாநிறைவை முனைகின்ற;

(ஆ) பந்தி (அ) வில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய ஒப்பந்தத்துக்காக அவரினால் செய்யப்பட்ட கேள்விப்பத்திரமொன்றை அவர் மீளப்பெறுவதற்காக ஊக்குவிப்பொன்றாக அல்லது வெகுமதியொன்றாக ஏதேனும் அவாநிறைவை பரிந்து கேட்கின்ற அல்லது ஏற்றுக்கொள்கின்ற,

ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் இலஞ்சத் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஏழு ஆண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற்றண்டனைக் காலமொன் றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*அரசாங்க அலுவல் தொடர்பிலான இலஞ்சம்*

**99.** (அ) பகிரங்க உத்தியோகத்தர் ஒருவர் ஏதேனும் அலுவலக முறையான செயலைப் புரிவதற்காக அல்லது புரிவதிலிருந்து தவிர்ந்திருப்பதற்காக அல்லது அப்பகிரங்க உத்தியோகத்தரினாலாயினுஞ்சரி அல்லது வேறு எவரேனும் பகிரங்க உத்தியோகத்தரி னாலாயினுஞ்சரி ஏதேனும் அலுவலக முறையான செயலைப் புரிவதனை துரிதப்படுத்துவதற்காக, தாமதப்படுத்துவதற்காக, தடங்கல் செய்வதற்காக அல்லது தடுப்பதற்காக அல்லது அரசாங்கத்துடனான ஏதேனும் அலுவலைக் கொண்டுநடாத்துவதில்

எவரேனும் ஆளுக்கு உதவுவதற்காக, சாதகமளிப்ப தற்காக, தடங்கல் செய்வதற்காக அல்லது தாமதப் படுத்துவதற்காக ஊக்குவிப்பொன்றாக அல்லது வெகுமதியொன்றாக அப்பகிரங்க உத்தியோகத்த ருக்கு ஏதேனும் அவாநிறைவை முனைகின்ற; அல்லது

(ஆ) பகிரங்க உத்தியோகத்தரொருவராகவிருந்து கொண்டு, இப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு எவரேனும் அத்தகைய பகிரங்க உத்தியோகத்தர் ஏதேனும் அலுவலக முறையான செயலைப் புரிவதற்காக அல்லது புரிவதிலிருந்து தவிர்ந்திருப்பதற்காக அல்லது அத்தகைய துரிதப்படுத்தல், தாமதப்படுத்தல், தடங்கல்செய்தல், தடுத்தல், உதவுதல் அல்லது சாதகமளித்தலுக்காக ஊக்குவிப்பொன்றாக அல்லது வெகுமதியொன்றாக ஏதேனும் அவாநிறைவை பரிந்து கேட்கின்ற அல்லது ஏற்றுக்கொள்கின்ற; அல்லது

(இ) பகிரங்க உத்தியோகத்தரொருவராகவிருந்துகொண்டு ஏதேனும் அவாநிறைவை பரிந்துகேட்கின்ற அல்லது ஏற்றுக்கொள்கின்ற,

ஆளொருவர் இச்சட்டத்தின்கீழ் இலஞ்சத் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஏழு ஆண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற்றண்டனைக் கால மொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்:

ஆயின் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 35 ஆம் பிரிவு, பகிரங்க உத்தியோகத்தர் ஒருவராகவுள்ள மருத்துவத்தொழிலர் ஒருவர் ஏதேனும் அவா நிறைவை பரிந்து கேட்பதை அல்லது ஏற்றுக்கொள்வதை உரித்துடையதாக்குதலா காது.

*உரிமைக் கோரிக்கைகளின் கொடுப்பனவு, நியமனங்கள், தொழில்கள், மானியக் கொடைகள், குத்தகைகள் மற்றும் வேறு நன்மைகள் தொடர்பிலான இலஞ்சம்*

*100. (அ)* (i) எவரேனும் ஆள் ஏதேனும் உரிமைக் கோரிக்கையின் முழுமையான அல்லது ஒரு பாகத்தின் கொடுப்பனவை அரசாங்கத்திட மிருந்து பெற்றுக்கொடுப்பதற்காக;

(ii) அவர், ஏதேனும் பதவிக்கு முதற்குறிப்பிடப்பட்ட ஆளொருவரின் அல்லது வேறு எவரேனும் ஆளின் நியமனத்தைப் பெற்றுக்கொடுப்பதற் காக அல்லது முன்னெடுத்துச் செல்வதற்காக;

(iii) அவர் ஏதேனும் பதவிக்கு வேறு எவரேனும் ஆளின் நியமனத்தைத் தடுப்பதற்காக;

(iv) அவர், அரசாங்கத்தின் ஏதேனும் திணைக் களத்தில், அலுவலகத்தில் அல்லது தாப னத்தில் முதற்குறிப்பிடப்பட்ட ஆளொருவருக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு ஏதேனும் தொழிலை பெற்றுக்கொடுப்பதற்காக அல்லது பெறுவ தனை முன்னெடுத்துச் செல்வதற்காக;

(v) அவர் அரசாங்கத்தின் ஏதேனும் திணைக் களத்தில், அலுவலகத்தில் அல்லது தாப னத்தில் வேறு எவரேனும் ஆள் ஏதேனும் தொழிலைப் பெறுவதனைத் தடுப்பதற்காக;

(vi) அவர், முதற்குறிப்பிடப்பட்ட ஆளொருவருக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு அரசாங் கத்திடமிருந்து ஏதேனும் மானியக்கொடை, குத்தகை, சேவை, சாதகம், அனுகூலம் அல்லது வேறு நன்மையை பெற்றுக்கொடுப்பதற்காக அல்லது பெறுவதனை முன்னெடுத்துச் செல்வ தற்காக; அல்லது

(vii) அவர் வேறு எவரேனும் ஆள் அத்தகைய ஏதேனும் மானியக்கொடை, குத்தகை, சேவை, சாதகம், அனுகூலம் அல்லது வேறு நன்மை யைப் பெறுவதனைத் தடுப்பதற்காக,

ஊக்குவிப்பொன்றாக அல்லது வெகுமதியொன்றாக அவ்வெவரேனும் ஆளுக்கு ஏதேனும் அவாநிறைவை முனைகின்ற; அல்லது

(ஆ) இப்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i), (ii), (iii), (iv), (v), (vi) மற்றும் (vii) ஆம் உட்பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட செயல்களுள் எவற்றையும் அவர் செய்வதற்கு ஊக்குவிப்பொன்றாக அல்லது வெகுமதியொன்றாக ஏதேனும் அவாநிறைவை பரிந்து கேட்கின்ற அல்லது ஏற்றுக்கொள்கின்ற,

அவ்வாள் ஒருவர், இச்சட்டத்தின் கீழ் இலஞ்சத் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஏழு ஆண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற்றண்டனைக் காலமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*அரசாங்கத்துடன் கையாளுகைகளைக் கொண்டுள்ள ஆட்களினால் பகிரங்க உத்தியோகத்தர்களுக்கான இலஞ்சம்*

**101.** (அ) அரசாங்கத்தின் ஏதேனும் திணைக்களம், அலுவலகம் அல்லது தாபனத்தினூடாக அரசாங்கத்துடன் எவ்வகையினவனவுமான கையாளுகைகளைக் கொண்டிருக்கையில், அத்திணைக்களம், அலுவலகம் அல்லது தாபனத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்ட எவரேனும் பகிரங்க உத்தியோகத்தருக்கு ஏதேனும் அவாநிறைவை முனைகின்ற ஆளொருவர்;

(ஆ) ஆளொருவர், அரசாங்கத்தின் ஏதேனும் திணைக்களம், அலுவலகம் அல்லது தாபனத்தினூடாக அரசாங்கத்துடன் எவ்வகையினவனவுமான கையாளுகைகளைக் கொண்டிருக்க முன்னர் அல்லது பின்னர் ஓராண்டினுள் அத்திணைக்களம், அலுவலகம் அல்லது தாபனத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்ட எவரேனும் பகிரங்க உத்தியோகத்தருக்கு ஏதேனும் அவாநிறைவை முனைகின்ற அவ்வாள்; அல்லது

(இ) பகிரங்க உத்தியோகத்தரொருவராகவிருந்து கொண்டு, எந்த அவாநிறைவை முனைவது இப்பிரிவின் கீழ் தவறொன்றாகவுள்ளதோ அந்த ஏதேனும் அவா நிறைவை பரிந்து கேட்கின்ற அல்லது ஏற்றுக் கொள்கின்ற ஆளொருவர்,

இச்சட்டத்தின் கீழ் இலஞ்சத் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஏழு ஆண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற்றண்டனைக் காலமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்:

*மாகாணசபையொன்றின் அல்லது உள்ளூரதிகார சபையின் அல்லது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனத்தின் அல்லது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனத்தின் ஆளும் குழுவின் உறுப்பினர் ஒருவர் தொடர்பிலான இலஞ்சமும் மாகாணசபையொன்றின் அல்லது உள்ளூரதிகார சபையொன்றின் அல்லது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனத்தின் அல்லது அத்தகைய அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனத்தின் ஆளும்குழுவின் உத்தியோகத்தர் தொடர்பிலான இலஞ்சமும்*

**102.** (அ) மாகாண சபையொன்றின் அல்லது உள்ளூரதிகார சபையொன்றின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றின் அல்லது அட்டவணைப்படுத் தப்பட்ட நிறுவனமொன்றின் ஆளும் குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு –

(i) அத்தகைய உறுப்பினர், அத்தகைய மாகாண சபை, உள்ளூரதிகாரசபை, அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனம், ஆளும் குழு அல்லது குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் வழிமுறை, தீர்மானம் அல்லது கேள்விக்கு சார்பாக அல்லது எதிராக அத்தகைய மாகாணசபையின், உள்ளூரதிகார சபையின், அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனத்தின் அல்லது ஆளும் குழுவின் அல்லது அதன் குழுவொன்றின் ஏதேனும் கூட்டத்தில் வாக்களிப்பதற்காக அல்லது வாக்களிக்காமலிருப்பதற்காக;

(ii) அத்தகைய உறுப்பினர் ஏதேனும் அலுவலக முறையான செயலைப் புரிவதற்காக அல்லது புரியாமலிருப்பதற்காக அல்லது அச்செயலின் புரிகையைச் செய்விப்பதில், துரிதப்படுத்துவதில், தாமதப்படுத்துவதில், தடங்கல் செய்வதில் அல்லது தடுப்பதில் அவரது உதவிக்காக; அல்லது

(iii) எவரேனும் ஆளுக்கு சார்பாக ஏதேனும் வாக்கை நிறைவேற்றுவதை அல்லது ஏதேனும் ஒப்பந்தம் அல்லது அனுகூலத்தை அளித்தலை செய்விப்பதில் அல்லது தடுப்பதில் அத்தகைய உறுப்பினரின் உதவிக்காக,

ஊக்குவிப்பொன்றாக அல்லது வெகுமதியொன்றாக ஏதேனும் அவாநிறைவை முனைகின்ற ஆளொருவர்;

(ஆ) ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் அல்லது மாகாண சபையொன்றின் அல்லது ஏதேனும் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனத்தின் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு –

(i) அத்தகைய அலுவலர் அல்லது ஊழியர் ஏதேனும் அலுவலக முறையான செயலைப் புரிவதற்காக அல்லது புரியாமலிருப்பதற்காக அல்லது அச்செயலின் புரிகையைச் செய்விப்பதில், துரிதப்படுத்துவதில், தாமதப்படுத்துவதில், தடங்கல் செய்வதில் அல்லது தடுப்பதில் அவரது உதவிக்காக; அல்லது

(ii) அத்தகைய அலுவலர் அல்லது ஊழியர் எவரேனும் ஆளுக்கு சார்பாக ஏதேனும் வாக்கை நிறைவேற்றுவதை அல்லது ஏதேனும் ஒப்பந்தம் அல்லது அனுகூலத்தை அளித்தலை செய்விப்பதற்காக அல்லது தடுப்பதற்காக,

ஊக்குவிப்பொன்றாக அல்லது வெகுமதியொன்றாக ஏதேனும் அவாநிறைவை முனைகின்ற ஆளொருவர்;

(இ) இப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய உறுப்பினராகவிருந்து கொண்டு, அப்பந்தியின் (i), (ii) மற்றும் (iii) ஆம் உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக அத்தகைய ஏதேனும் செயலுக்காக அல்லது அத்தகைய ஏதேனும் தவிர்ந்திருத்தலுக்காக ஊக்குவிப்பொன்றாக அல்லது வெகுமதியொன்றாக ஏதேனும் அவாநிறைவை பரிந்து கேட்கின்ற அல்லது ஏற்றுக் கொள்கின்ற ஆளொருவர்; அல்லது

(ஈ) இப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப் பட்டவாறாக அத்தகைய அலுவலர் அல்லது ஊழியராகவிருந்துகொண்டு, அப்பந்தியின் (i) மற்றும் (ii) ஆம் உட்பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு அத்தகைய ஏதேனும்செயலுக்காக அல்லது அத்தகைய ஏதேனும் தவிர்ந்திருத்தலுக்காக ஊக்குவிப்பொன் றாக அல்லது வெகுமதியொன்றாக ஏதேனும் அவா நிறைவை பரிந்துகேட்கின்ற அல்லது ஏற்றுக்கொள் கின்ற ஆளொருவர்,

இச்சட்டத்தின் கீழ் இலஞ்சத் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஏழு ஆண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற்றண்டனைக் காலமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

மாகாணசபை யொன்றின் உள்ளூரதிகார சபையொன்றின் அல்லது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன் றின் அல்லது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன் றின் ஆளும் குழுவொன்றின் உறுப்பினரின் வாக்கின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு அச்சுறுத்தல்கள் அல்லது மோசடியைப் பயன்படுத்தல்

**103.** (அ) மாகாணசபையொன்றின், உள்ளூரதிகாரசபை யொன்றின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றின் அல்லது அட்டவணைப்படுத் தப்பட்ட நிறுவனமொன்றின் ஆளும் குழுவின் அல்லது அதன் குழுவொன்றின் எவரேனும் உறுப்பினர் மீது, ஏதேனும் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் வழிமுறை, பிரேரணை, தீர்மானம் அல்லது கேள்விக்கு சார்பாக அல்லது எதிராக அவரது வாக்கை வழங்குவதில் அல்லது பிடித்து வைத்தி ருப்பதில் அத்தகைய மாகாணசபையின், உள்ளூரதி காரசபையின், அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத் தின் அல்லது ஆளும் குழுவின் அல்லது அதன் ஏதேனும் குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கு வருகை தராதிருப்பதில் செல்வாக்குச் செலுத்துவதற்கு ஏதேனும் அச்சுறுத்தல், ஏமாற்றம், உண்மையை மறைத்தல் அல்லது வேறு சட்டமுறையற்ற வழிவகைகள் மூலம் எத்தனிக்கின்ற ஆளொருவர்; அல்லது

(ஆ) (அ) என்னும் பந்தியில் உள்ளவாறு அத்தகைய எவையேனும் வழிவகைகள்மூலம் மாகாணசபை யொன்றின், உள்ளூரதிகாரசபையொன்றின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனம் ஒன்றின் ஆளும் குழுவின் எவரேனும் உறுப்பினர் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு, எவரேனும் ஆளுக்கு சார்பாக ஏதேனும் வாக்கை நிறைவேற்று வதை அல்லது ஏதேனும் ஒப்பந்தம் அல்லது அனுகூலத்தை அளித்தலை செய்விப்பதில் அல்லது தடுப்பதில் உதவுதற்கு அல்லது ஏதேனும் அலுவலக முறையான செயலைப்புரிவதற்கு அல்லது புரியாம லிருப்பதற்கு அல்லது அச்செயலின் புரிகையைச் செய்விப்பதில், துரிதப்படுத்துவதில், தாமதப்படுத்து வதில், தடங்கல் செய்வதில் அல்லது தடுப்பதில் உதவுவதற்கு எத்தனிக்கின்ற ஆளொருவர்,

இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஏழு ஆண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற்றண்டனைக் காலமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

செல்வாக்குச் செலுத்துதல்

**104.** (1) தனக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்காக அரசாங்கத்திடமிருந்து ஏதேனும் நன்மையை அல்லது சேவையை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் பகிரங்க உத்தியோகத்தர் ஒருவர் அல்லது வேறு எவரேனும் ஆள் மீது செல்வாக்குச் செலுத்து வதற்கென அத்தகைய பகிரங்க அலுவலருக்கு அல்லது வேறு ஆளுக்கு ஏதேனும் அவாநிறைவை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் முனைகின்ற ஆளொருவர், இலஞ்சத் தவறைப்புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது

ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஏழு ஆண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற்றண்டனைக் காலமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான ஏதேனும் அவாநிறைவை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் பரிந்துகேட்கின்ற அல்லது ஏற்றுக்கொள்கின்ற பகிரங்க உத்தியோகத்தர் ஒருவர் அல்லது வேறு எவரேனும் ஆள் இலஞ்சத் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஏழு ஆண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற்றண்டனைக் காலமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

வெளிநாட்டு பகிரங்க உத்தியோகத்தர் ஒருவர் தொடர்பிலான இலஞ்சம்

**105.** (1) (அ) தனக்காக, சர்வதேச தொழிலை நடாத்துகையில் ஒப்பந்தமொன்றை, தொழிலை அல்லது அனுகூலமொன்றை பெற்றுக்கொள்வதற்கு அல்லது தக்கவைத்துக்கொள்வதற்கு; அத்துடன்

(ஆ) தனக்காக, அலுவலகமுறையான கடமையொன்றை மீறுகின்ற முறையொன்றில் வெளிநாட்டு பகிரங்க உத்தியோகத்தர் ஒருவரின் அலுவலக முறையான கடமைகளை பிரயோகிப்பதில் அவ்வெளிநாட்டு பகிரங்க உத்தியோகத்தர் செயலாற்றுவதற்கு அல்லது செயலாற்றாதிருப்பதற்கு அல்லது சம்பந்தப்பட்ட வெளிநாட்டு அரசின் அல்லது பகிரங்க சர்வதேச ஒழுங்கமைப்பின் ஏதேனும் செயல் அல்லது முடிபின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு அத்தகைய வெளிநாட்டு பகிரங்க உத்தியோகத்தரின் அல்லது வேறொரு ஆளின் பதவியைப் பயன்படுத்துவதற்கு,

அத்தகைய வெளிநாட்டு பகிரங்க உத்தியோகத்தருக்கு அவாநிறைவொன்றை முனைகின்ற ஆளொருவர், இச்சட்டத்தின்கீழ் இலஞ்சத் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற்றண்டனைக் காலமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, சர்வதேச தொழிலானது, சர்வதேச உதவி வழங்குவதனை உள்ளடக்கும்.

(3) (அ) அவாநிறைவானது, செயலாற்றவுள்ள அல்லது செயலாற்றாதிருக்கவுள்ள அல்லது வேறொரு ஆளுக்காக செயலாற்றவுள்ள அல்லது செயலாற்றாதிருக்கவுள்ள வெளிநாட்டு பகிரங்க உத்தியோகத்தரின் நன்மைக்காக முனையப்படுகின்றதா என்பதைப் பொருட்படுத்தாமல்;

(ஆ) முனையப்பட்ட அவாநிறைவானது, வெளிநாட்டு பகிரங்க உத்தியோகத்தரின் செயல்களில் அல்லது செய்யாமைகளில் உண்மையில் செல்வாக்குச் செலுத்தியுள்ளதா என்பதைப் பொருட்படுத்தாமல்; அல்லது

(இ) வெளிநாட்டுப் பகிரங்க உத்தியோகத்தருக்கு முனையப்பட்ட அவாநிறைவானது, வெளிநாட்டுப் பகிரங்க உத்தியோகத்தர் ஒருவராக அவரது தன்மையில் செல்வாக்குச் செலுத்தப்படுவதற்கு அவருக்கு ஏற்புடையற்பாலதான எழுத்திலான சட்டத்தினால் அனுமதிக்கப்படவில்லையா அல்லது தேவைப்படுத்தப்படவில்லையா என்பதைப் பொருட்படுத்தாமல்,

இப்பிரிவின்கீழ் அவாநிறைவை முனைகின்ற ஆளொருவர் இப்பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார்.

(4) மூன்றாம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக, வெளிநாட்டு பகிரங்க உத்தியோகத்தருக்கு ஏற்புடையற்பாலதான எழுத்திலான சட்டம் என்பது –

(அ) வெளிநாட்டுப் பகிரங்க உத்தியோகத்தரின் எந்தப் பணிகளின் புரிகையின் மீது அவ்வாள் செல்வாக்குச் செலுத்துவதற்கு உட்கருதுகின்றாரோ அந்தப் பணிகளின் புரிகை இலங்கையின் சட்டங்களுக்கு அமைந்ததாகவிருக்கும் எனப்பொருள்படும்; அத்துடன்

(ஆ) பந்தி (அ) ஏற்புடையதாகாதவிடத்தும் வெளிநாட்டு பகிரங்க உத்தியோகத்தர் பகிரங்க சர்வதேச ஒழுங்கமைப்பொன்றின் உத்தியோகத்தர் அல்லது முகவர் ஒருவராகவிருக்கின்றவிடத்தும் அவ்வொழுங்கமைப்பின் ஏற்புடையற்பாலதான எழுத்திலான விதிகள் எனப்பொருள்படும்:

ஆயின் எவ்வாறாயினும், (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகள் ஏற்புடையனவாகாதவிடத்து, எந்த நாடு அல்லது ஆள்புலம் தொடர்பில் அவ்வெளிநாட்டு பகிரங்க உத்தியோகத்தர் வெளிநாட்டு பகிரங்க உத்தியோகத்தர் ஒருவராகவிருக்கின்றாரோ அந்த நாட்டின் அல்லது ஆள்புலத்தின் சட்டமானது, அச்சட்டம் பின்வருவனவற்றில் அடங்கியுள்ள அளவு வரையாகும் :-

(i) சம்பந்தப்பட்ட நாடு அல்லது ஆள்புலத்துக்கு ஏற்புடையற்பாலதான ஏதேனும் எழுத்திலான அரசியலமைப்பு அல்லது சட்டவாக்கத்தினால் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் ஏற்பாடு; அல்லது

(ii) அவ்வாறு ஏற்புடையற்பாலதானதும் வெளியிடப்பட்ட எழுத்திலான மூலங்களில் காட்டப்படுகின்றதுமான ஏதேனும் நீதிமுறை முடிபு.

*தனியார் துறையிலான இலஞ்சம்*

**106.** (1) ஏதேனும் பொருளாதார, நிதிசார் அல்லது வர்த்தகச் செயற்பாட்டின்போது, தனது கடமைகளை மீறி ஏதேனும் செயலைப் புரிவதற்கென அல்லது ஏதேனும் செயலைப் புரியாதிருப்பதற்கென தனியார்துறை உருவகமொன்றில் ஏதேனும் தன்மையில் உள்ள எவரேனும் ஊழியருக்கு அல்லது பணிப்பாளர் ஒருவருக்கு தனக்கு சார்பாக அல்லது வேறொரு ஆள் சார்பாக அவாநிறைவொன்றை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் முனைகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் இலஞ்சத் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற்றண்டனைக் காலமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) பொருளாதார, நிதிசார் அல்லது வர்த்தக செயற்பாடுகளின் போது தனியார்துறை உருவகமொன்றில் ஏதேனும் தன்மையில் உள்ள ஊழியர் ஒருவரின் அல்லது பணிப்பாளர் ஒருவரின் கடமைகளை மீறி ஏதேனும் செயலைச் செய்வதற்கென அல்லது ஏதேனும் செயலைச் செய்யாதிருப்பதற்கென, தனக்காக அல்லது வேறொரு ஆளுக்காக அனுகூலமொன்றை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் பரிந்துகேட்கின்ற அல்லது ஏற்றுக்கொள்கின்ற அத்தகைய ஊழியர் அல்லது பணிப்பாளர் இச்சட்டத்தின்கீழ் இலஞ்சத் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற்றண்டனைக் காலமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

அக்கறை முரண்பாடுகளை வெளிப்படுத்துவதற்கு தவறுதல்

**107.** (1) எந்தப் பகிரங்க அதிகாரசபையில் பகிரங்க உத்தியோகத்தர் ஒருவர் உறுப்பினர் ஒருவராக, பணிப்பாளர் ஒருவராக அல்லது ஊழியர் ஒருவராகவுள்ளாரோ அந்தப் பகிரங்க அதிகாரசபையொன்று, எந்த ஆள், கம்பெனி, பங்காண்மை அல்லது வேறு பொறுப்புமுயற்சியில் அப்பகிரங்க உத்தியோகத்தர் அல்லது அத்தகைய பகிரங்க உத்தியோகத்தரின் உறவினர் ஒருவர் அல்லது இணையாளர் ஒருவர், அவரது அறிவுடன் நேரடி அல்லது நேரடியல்லாத அக்கறையொன்றைக் கொண்டுள்ளாரோ அந்த ஆளொருவருடன், கம்பெனியுடன், பங்காண்மையுடன் அல்லது வேறு பொறுப்பு முயற்சியுடன் கையாளுவதற்கு உத்தேசிக்கின்றவிடத்து, அப்பகிரங்க உத்தியோகத்தர் ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான முறையில் அத்தகைய அக்கறையின் தன்மையை அவ்வதிகாரசபைக்கு உடனடியாக வெளிவிடுதல் வேண்டும்.

(2) பகிரங்க அதிகாரசபையொன்று எந்த முடிபொன்றை ஒரு ஆள், கம்பெனி, பங்காண்மை அல்லது வேறு பொறுப்புமுயற்சி சம்பந்தமாக எடுக்கவுள்ளதோ அந்த முடிபொன்றில் பகிரங்க உத்தியோகத்தர் ஒருவர் அல்லது அத்தகைய பகிரங்க உத்தியோகத்தரின் உறவினர் அல்லது இணையாளர் ஒருவர், தனிப்பட்ட அக்கறையொன்றைக் கொண்டுள்ளவிடத்து, அப்பகிரங்க உத்தியோகத்தர் அத்தகைய முடிபு தொடர்பான அப்பகிரங்க அதிகாரசபையின் எவையேனும் நடவடிக்கைகளில் வாக்களித்தலோ அல்லது பங்குபற்றுதலோ ஆகாது.

(3) ஓராம் அல்லது (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் பகிரங்க உத்தியோகத்தர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற்றண்டனைக் காலமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) ஆணைக்குழுவானது, பகிரங்க உத்தியோகத்தர்களின் அக்கறை முரண்பாட்டின் கையாளுகை மற்றும் முகாமையை விதிகள் என்றவகையாக குறித்துரைத்தல் வேண்டும்.

*விளையாட்டு நிகழ்ச்சிகள் தொடர்பான தவறுகள்*

**108.** (1) (அ) பின்வருவனவற்றுக்கான பிரதிபயனாக -

(i) விளையாட்டு நிகழ்ச்சியொன்றின் விளையாட்டு நடைமுறை அல்லது விளைவின் மீது எவ்வழியிலும் செல் வாக்குச் செலுத்துதல் உட்பட ஏதேனும் விளையாட்டு நிகழ்ச்சியின் நேர்மைக்கு அச்சுறுத்தலொன்றாக அமைகின்ற அல்லது அதற்கு தீங்கு விளைவிக்கின்ற ஏதேனும் செயலில் ஈடுபடுதல்; அல் லது

(ii) இப்பிரிவில் உத்தேசிக்கப்பட்ட செயலை சம்பந்தப்பட்ட விளையாட்டுக் குழுவின் அல்லது ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் முகாமைத்துவப் பணிப்பாள ருக்கு, பிரதான நிறைவேற்று அலுவல ருக்கு அல்லது ஒத்த பதவியொன்றை வகிக்கின்ற வேறு எவரேனும் ஆளுக்கு அல்லது கிட்டிய பொலிசு நிலையத் துக்கு அறிக்கையிடாமை; அல்லது

(ஆ) உட்பந்தி (i) இல் உத்தேசிக்கப்பட்டவாறு செயலாற்றுவதற்கான வெகுமதியொன்றாக,

தனது நன்மைக்காகவிருப்பினுஞ்சரி அல்லது வேறு எவரேனும் ஆளின் அல்லது இன்னொரு ஆளின் நன்மைக்காகவிருப்பினுஞ்சரி அந்த வேறு ஆளிடமிருந்து ஏதேனும் அவாநிறைவை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏற்றுக்கொள்கின்ற அல்லது ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்ற அல்லது முனைகின்ற எவரே னும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் மேல்நீதி மன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டு களை விஞ்சாத கடூழிய மறியற்றண்டனைக் காலமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) (அ) பின்வருவனவற்றுக்கான பிரதிபயனாக -

(i) விளையாட்டு நிகழ்ச்சியொன்றின் விளையாட்டு நடைமுறை அல்லது விளைவின் மீது எவ்வழியிலும் செல்வாக்குச் செலுத்துதல் உட்பட ஏதேனும் விளையாட்டு நிகழ்ச்சியின் நேர்மைக்கு அச்சுறுத்தலொன்றாக அமைகின்ற அல்லது அதற்கு தீங்கு விளைவிக்கின்ற ஏதேனும் செயலில் ஈடுபடுதல்; அல்லது

(ii) இப்பிரிவில் உத்தேசிக்கப்பட்ட செயலை சம்பந்தப்பட்ட விளையாட்டுக் குழுவின் அல்லது ஒழுங்குபடுத்தும் அதிகாரசையின் முகாமைத்துவப் பணிப்பாளருக்கு, பிரதான நிறை வேற்று அலுவலருக்கு அல்லது ஒத்த பதவியொன்றை வகிக்கின்ற வேறு எவரேனும் ஆளுக்கு அல்லது அத்த கைய ஆளின் கிட்டிய பொலிசு நிலையத்துக்கு அறிக்கையிடாமை; அல்லது

(ஆ) பந்தி (அ) இல் உத்தேசிக்கப்பட்டவாறு செயலாற்றுவதற்கான வெகுமதியொன்றாக,

வேறு எவரேனும் ஆளின் நன்மைக்காகவிருப்பினுஞ்சரி அல்லது இன்னொரு ஆளின் நன்மைக்காகவிருப்பினுஞ்சரி அந்த வேறு ஆளுக்கு ஏதேனும் அவாநிறைவை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் கொடுக்கின்ற அல்லது கொடுப்பதற்கு உடன்படுகின்ற அல்லது முனைகின்ற எவரேனும் ஆள், தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற்றண்டனைக் காலமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) விளையாட்டு நிகழ்ச்சியொன்றின் விளையாட்டு நடைமுறை அல்லது விளைவின் மீது எவ்வழியிலும் செல்வாக்குச் செலுத்துதல் உட்பட ஏதேனும் விளையாட்டு நிகழ்ச்சியின் நேர்மைக்கு அச்சுறுத்தலொன்றாக அமைகின்ற அல்லது அதற்கு தீங்குவிளைவிக்கின்ற ஏதேனும் திட்டத்தை நேரடியாக அல்லது நேரடியாக வல்லாமல் பயனுறுத்துகின்ற எவரேனும் ஆள், தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற்றண்டனைக் காலமொன்றுக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) இப்பிரிவிலுள்ள எவற்றுக்கும் முரணாக எது எவ்வாறிருப்பினும், 2019 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம் தொடர்பில் தவறுகளைத் தடுத்தல் பற்றி பாகம் II இன் அத்தியாயம் I இன் தவறுகள் அந்தந்தப் பிரிவுகளிலுள்ள அதே பொருளைக்கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அந்தந்தப் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்டதான அதே தண்டனையைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

செல்வத்தைத் திரட்டுதல் இச் சட்டத்தின்கீழ் தவறொன்றாதல்

**109.** (1) ஆளொருவர் ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளுதல் செய்துள்ளவிடத்தும் அல்லது கொள்ளப்பட்டிருந்தவிடத்தும் அத்தகைய ஆதனம் -

(அ) பணமாகவிருந்து -

(i) அத்தகைய ஆளின் அறியப்பட்ட வருமானத்தின் அல்லது பெறுகைகளின் பாகமாக; அல்லது

(ii) அவரது அறியப்பட்ட பெறுகைகளின் ஏதேனும் பாகம் எந்தப் பணத்துக்கு மாற்றப்பட்டுள்ளதோ அல்லது மாற்றப்பட்டிருந்துள்ளதோ அந்தப் பணமாக,

இருக்கமுடியாதிருப்பினும் அல்லது இருந்திருக்கமுடியாதிருப்பினும்; அல்லது

(ஆ) பணம் தவிர்ந்த ஆதனமாகவிருந்து-

(i) அத்தகைய ஆளின் அறியப்பட்ட வருமானத்தின் ஏதேனும் பாகத்தினைப் பயன்படுத்தி கொள்ளு தல்செய்யப்பட்ட ஆதனமாக;

(ii) அத்தகைய ஆளின் அறியப்பட்ட பெறுகைகளின் பாகமாகவுள்ள அல்லது பாகமாகவிருந்த ஆதன மாக; அல்லது

(iii) அத்தகைய ஆளின் அறியப்பட்ட பெறுகைகளின் ஏதேனும் பாகம் எந்த ஆதனத்துக்கு மாற்றப்பட் டுள்ளதோ அல்லது மாற்றப்பட்டிருந்துள்ளதோ அந்த ஆதனமாக,

இருக்கமுடியாதிருப்பினும் அல்லது இருந்திருக்கமுடியா திருப்பினும், அப்போது இப்பிரிவின் கீழான ஏதேனும் குற்றவழக்கு நோக்கங்களுக்காக, அத்தகைய ஆதனம், இச்சட்டத்தின் இவ்வத்தி யாயத்தின் கீழான தவறுகளுள் எவற்றையும் புரிவதனாலும் அத்தகைய ஆள் கொள்ளுதல் செய்துள்ள அல்லது கொள்ளுதல் செய்திருந்த ஆதனமாகவுள்ளதாக அல்லது ஆதனமாக இருந்ததாக அல்லது அத்தகைய ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிவதன் மூலம் கொள்ளுதல் செய்த ஏதேனும் ஆதனத்தை எந்த ஆதனத்துக்கு மாற்றியுள்ளாரோ அல்லது மாற்றியிருந்துள்ளாரோ அந்த ஆதனமாகவுள்ளதாக அல்லது ஆதனமாக இருந்ததாக, அத்தகைய ஆளினால் முரணாக எண்பிக்கப்படும் வரை கருதப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் "வருமானம்" என்பது இச்சட்டத்தின்கீழ் தவறொன்றான வரும்படிகளிலிருந்தான வருமானங்களை உள்ளடக்காது என்பதுடன் "பெறுகை" என்பது இச்சட்டத்தின்கீழ் தவறொன்றான வரும்படிகளிலிருந்தான பெறுகைகளையும் உள்ளடக்காது.

(3) ஆளொருவர் இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிவதன் மூலம் கொள்ளுதல் செய்துள்ள அல்லது கொள்ளுதல் செய்திருந்த ஆதனமாக அல்லது அத்தகைய ஆள் இச்சட்டத்தின் கீழான ஏதேனும்

தவறைப் புரிவதன் மூலம் அத்தகைய ஆளினால் கொள்ளுதல் செய்யப்பட்ட ஏதேனும் ஆதனத்தை எந்த ஆதனத்துக்கு மாற்றியுள்ளாரோ அல்லது மாற்றியிருந்துள்ளாரோ அந்த ஆதனமாக (1) ஆம் உட்பிரிவின்கீழ் கருதப்படும் ஏதேனும் ஆதனத்தின் சொந்தக்காரராகவுள்ள அல்லது சொந்தக்காரராகவிருந்திருந்த அத்தகைய ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஏழு ஆண்டுகளை விஞ்சாத கடூழிய மறியற்றண்டனைக் காலமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்:

ஆயின், அத்தகைய ஆதனம் ஏதேனும் வங்கியில் அத்தகைய ஆளின் கணக்கின் வரவுக்கு வைப்பிலிடப்பட்ட பணமாகவிருக்கின்ற விடத்தும் அல்லது பணமாகவிருந்துள்ளவிடத்தும் அத்தகைய வைப்பு அத்தகைய ஆளின் சம்மதம் அல்லது அறிவின்றி வேறு எவரேனும் ஆளினால் செய்யப்பட்டுள்ளது அல்லது செய்யப்பட்டிருந்தது என அத்தகைய ஆள் நீதிமன்றத்தைத் திருப்திப்படுத்துகின்றவிடத்தும், அத்தகைய ஆள் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் தவறொன்றைப் புரிகின்றவராக அல்லது புரிந்தவராக கருதப்படுதலாகாது.

(4) இப்பிரிவின் கீழான தவறொன்றுக்கான குற்றவழக்கெதுவும், அத்தகைய தவறுக்கு எவரேனும் ஆள் ஏன் குற்றவழக்கு தொடுக்கப்படுதலாகாது என காரணம் காட்டுவதற்கு வாய்ப்பொன்றை அத்தகைய ஆளுக்கு ஆணைக்குழு வழங்கியிருந்தாலொழிய அத்தகைய ஆளுக்கெதிராக தொடுக்கப்படுதலாகாது என்பதுடன் அத்தகைய ஆள் அத்தகையதாக காரணம் காட்டுவதற்கு தவறியுள்ளவிடத்து அல்லது அத்தகைய ஆளினால் காட்டப்பட்ட காரணம் அத்தகைய ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் திருப்தியற்றதாகவுள்ளவிடத்து, அப்போது குற்றவழக்கொன்று இப்பிரிவின்கீழ் அத்தகைய ஆளுக்கெதிராக தொடுக்கப் படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ஆளொருவரின் வாழ்க்கைத்துணை ஒருவர் அல்லது பதினெட்டு வயதுக்குக் கீழான திருமணமாகாத பிள்ளை ஒருவர், இச்சட்டம் தொடங்கும் தேதியன்று

அல்லது அதன்பின்னர் ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனத்தைக் கொள்ளுதல் செய்துள்ளவிடத்து அல்லது கொள்ளுதல் செய்திருந்தவிடத்து, அத்தகைய ஆதனம் மேற்சொல்லப்பட்ட அத்தகைய ஆளினால் கொள்ளுதல் செய்யப்பட்டது எனவும் விடயத்துக்கேற்ப அத்தகைய வாழ்க்கைத்துணையால் அல்லது திருமணமாகாத பிள்ளையினால் அல்ல எனவும், முரணாக எண்பிக்கப்படும் வரை ஊகிக்கப்படுதல் வேண்டும்.

(6) (அ) இப்பிரிவின் கீழான தவறொன்றுக்கான ஏதேனும் குற்றவழக்கில், ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் பெறுமதி அல்லது அத்தகைய ஆதனத்தின் மீதான ஏதேனும் கட்டிடத்தின் நிர்மாணச் செலவு தொடர்பான பிரதான விலை மதிப்பீட்டாளரிடமிருந்தான சான்றிதழொன்று, முரணாக எண்பிக்கப்பட்டாலொழியவும் எண்பிக்கப்படும் வரையும் அத்தகைய பெறுமதியினதும் நிர்மாணச் செலவினதும் போதிய எண்பிப்பாதல் வேண்டும்.

(ஆ) இவ்வுட்பிரிவில், "பிரதான விலை மதிப்பீட்டாளர்" என்பது, அரசாங்கத்தின் பிரதான விலை மதிப்பீட்டாளர் எனப் பொருள்படும் என்பதுடன் அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் எவரேனும் சிரேட்ட உதவி விலைமதிப்பீட்டாளர் அல்லது உதவி விலை மதிப்பீட்டாளரையும் உள்ளடக்கும்.

(7) இப்பிரிவின் நோக்கத்துக்காக, "ஆளொருவர்" என்பது, அத்தகைய ஆள் இவ்வத்தியாயத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் செயலுடன் சம்பந்தப்பட்டுள்ளவராக காட்டப்பட முடியுமாயினுஞ்சரி அல்லது காட்டப்படமுடியாதாயினுஞ்சரி அல்லது இச்சட்டத்தின் கருத்தினுள் அவர் பகிரங்க உத்தியோகத்தராகவிருப்பினுஞ் சரி அல்லது அல்லவராயினுஞ்சரி எத்தகைய வருமான எவரேனும் ஆள் எனப்பொருள்படும்.

(8) இப்பாகத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஒரு நீதிமன்றம் இப்பாகத்தின் கீழான தவறொன்றுக்கு ஆளொருவருக்கு குற்றத்தீர்ப்பளிக்குமிடத்து, நீதிமன்றமானது, தண்டமொன்றை அல்லது குற்றப்பணமொன்றை விதிப்பதற்குப் பதிலாக, இலஞ்சத்தின்மூலம் அல்லது இலஞ்சத்தின்

வரும்படிகள்மூலம் கொள்ளுதல் செய்யப்பட்டதாகக் காணப்படும் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எல்லா வில்லங்கங்களிலிருந்தும் விடுபட்டதாக அரசுக்கு இழப்பிக்கப்பட வேண்டும் என கட்டளையை ஆக்கலாம்:

ஆயின் எவ்வாறாயினும், இழப்பித்தற் கட்டளையொன்று ஆக்கப்படவேண்டுமா என்பதைத் தீர்மானிக்கையில், அத்தகைய கட்டளையொன்று அத்தகைய ஆதனத்தின் பெறுமதிக்கு நல்லெண்ணத்துடனான கொள்வனவாளரொருவரின் அல்லது அத்தகைய ஆதனத்தில் பெறுமதிக்கு நல்லெண்ணத்துடனான அக்கறையொன்றை கொள்ளுதல் செய்துள்ளவரான வேறு எவரேனும் ஆளின் உரிமைகளைப் பங்கப்படுத்தும் சாத்தியமிருக்கின்றதா என்பதைக் கருத்திற்கொள்ள நீதிமன்றம் உரித்துடையதாதல் வேண்டும்.

(9) எட்டாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று –

(அ) இழப்பித்தற் கட்டளைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அல்லது உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, இழப்பித்தற் கட்டளையை உறுதிப்படுத்தி அல்லது நிலைநிறுத்தி அத்தகைய மேன்முறையீடு தீர்மானிக்கப்படுவதன் மீது பயனுறுதல் வேண்டும்; அல்லது

(ஆ) இழப்பித்தற் கட்டளைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அல்லது உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு எதுவும் செய்யப்படாதவிடத்து, எந்தக் காலப்பகுதியினுள் அத்தகைய கட்டளைக் கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அல்லது உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று செய்யப்படலாமோ அந்தக் காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர் பயனுறுதல் வேண்டும்.

(10) ஆதனமானது இச்சட்டத்தின் கீழான தவறொன்றின் வரும்படிகளின் விளைவானதாக உள்ளதென அறிந்து கொண்டு, இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்ட தவறொன்றின் வரும்படிகளின் அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தை மறைத்து வைக்கின்ற அல்லது வைத்திருக்கின்ற ஆளொருவர், தவறொன்றைப்

புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஏழு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான கடூழிய மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்:

ஆயின், ஆளொருவர் அத்தகைய வரும்படிகளை நேரடியாக அல்லது இடையீட்டாளர்களினூடாக நேரடியாகவல்லாமல் அல்லது அவரது சொந்த நன்மைக்காக அல்லது வேறொராளின் அல்லது உருவகத்தின் நன்மைக்காக மறைத்துவைத்திருந்தாலும் சரி அல்லது இல்லையாயினுஞ்சரி, வரும்படிகளை அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தை மறைத்து வைத்திருக்கின்றார் அல்லது வைத்திருக் கின்றார்.

அவாநிறைவு

**110.** (1) ஆளொருவர் அல்லது அவரது அறிவுடன் அல்லது சம்மதத்துடன் செயலாற்றுகின்ற வேறு எவரேனும் ஆள், வேறு எவரேனும் ஆளுக்கு அல்லது அவரின் நன்மைக்காக அல்லது அவருக்காக நம்பிக்கைப்பொறுப்பில் ஏதேனும் அவாநிறைவை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் கொடுத்தால், அளித்தால் அல்லது முன்வைத்தால் அல்லது கொடுப்பதற்கு, அளிப்பதற்கு அல்லது முன்வைப்பதற்கு உடன்பட்டால், பொறுப் பேற்றால் அல்லது வாக்குறுதியளித்தால் அவ்வாள் அவாநிறை வொன்றை கொடைமுனைகின்றார்.

(2) ஆளொருவர் அல்லது அவரது அறிவுடன் அல்லது சம்மதத்துடன் செயலாற்றும் வேறு எவரேனும் ஆள், முதலாவது குறிப்பிடப்பட்ட ஆளுக்காகவிருப்பினுஞ்சரி அல்லது வேறு எவரேனும் ஆளுக்காகவிருப்பினுஞ்சரி நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அவாநிறைவைக் கோரினால், அழைத்தால், கேட்டால் அல்லது அதனைப் பெறுவதற்கான விருப்பத்தைச் சுட்டிக்காட்டினால், அவ்வாள் அவாநிறை வொன்றை பரிந்து கேட்கின்றார்.

(3) ஆளொருவர் அல்லது அவரது அறிவுடன் அல்லது சம்மதத்துடன் செயலாற்றுகின்ற வேறு எவரேனும் ஆள், முதலாவது குறிப்பீடப்பட்ட ஆளுக்காகவிருப்பினுஞ்சரி அல்லது வேறு எவரேனும் ஆளுக்காகவிருப்பினுஞ்சரி நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அவாநிறைவை எடுத்தால்,

பெற்றால் அல்லது பெற்றுக்கொண்டால் அல்லது எடுப்பதற்கு, பெறுவதற்கு அல்லது பெற்றுக்கொள்வதற்கு உடன்பட்டால் அவ்வாள் அவாநிறைவொன்றை ஏற்றுக்கொள்கின்றார்.

(4) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றாகவுள்ள அவாநிறை வொன்றை முனைகின்ற, பரிந்துகேட்கின்ற அல்லது ஏற்றுக் கொள்கின்ற எவரேனும் ஆள், அத்தகைய கொடைமுனைவு, பரிந்துகேட்டல் அல்லது ஏற்பு இலங்கைக்கு வெளியே செய்யப்பட்டதாயின், அத்தகைய தவறை இலங்கையினுள் புரிந்தவராகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க கொழும்பில் நடைபெறும் மேல்நீதிமன்றம் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் அத்தகைய தவறை விளங்குவதற்கான நியாயதிக்கத்தை கொண்டிருத்தலும் வேண்டும்.

**111.** அரசாங்கத்திற்கு முறைகேடான அல்லது சட்டவிரோதமான இழப்பை ஏற்படுத்துகின்ற அல்லது தனக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு முறைகேடான அல்லது சட்டவிரோதமான நன்மையொன்றை, சாதகமொன்றை அல்லது அனுகூலமொன்றை அளிக்கின்ற உளக்கருத்துடன் அல்லது அறிவுடன் அல்லது ஏதேனும் முறைகேடான அல்லது சட்டவிரோதமான இழப்பு எவரேனும் ஆளுக்கு அல்லது அரசாங்கத்துக்கு ஏற்படும் அல்லது ஏதேனும் முறைகேடான அல்லது சட்டவிரோதமான நன்மை, சாதகம் அல்லது அனுகூலம் எவரேனும் ஆளுக்கு அளிக்கப்படும் என்ற உளக்கருத்துடன் அல்லது அறிவுடன் – ஊழல்

(அ) பகிரங்க உத்தியோகத்தர் ஒருவராக தனது பதவியின் பயனைக்கொண்டு அல்லது அத்தகைய அலுவலருக்கு உரித்தாக்கப்பட்ட அதற்கான ஏதேனும் தத்துவத்துடன் அல்லது தத்துவமின்றி அத்தகைய பதவியைப் பயன்படுத்தி ஏதேனும் செயலைச் செய்கின்ற அல்லது செய்யாது தவிர்க்கின்ற;

(ஆ) பகிரங்க உத்தியோகத்தர் ஒருவராக அவரது பதவியின் பயனைக்கொண்டு ஏதேனும் செயலைப் புரியுமாறு அல்லது புரியாமலிருக்குமாறு வேறு எவரேனும் பகிரங்க உத்தியோகத்தரைத் தூண்டுகின்ற;

(இ) பகிரங்க உத்தியோகத்தர் ஒருவராக அவரது பதவியின் பயனைக்கொண்டு அவரது அறிவுக்கு எட்டுகின்ற ஏதேனும் தகவலைப் பயன்படுத்துகின்ற;

(ஈ) பகிரங்க உத்தியோகத்தர் ஒருவராக அவரது பதவியின் பயனைக்கொண்டு ஏதேனும் முடிபை எடுப்பதில் பங்குபற்றுகின்ற; அல்லது

(உ) அத்தகைய பகிரங்க உத்தியோகத்தராக தனது பதவியை நேரடியாகவோ அல்லது நேரடியாக வல்லாமலோ ஏதேனும் செயலைப் புரிவதற்கு அல்லது புரியாமலிருப்பதற்கு பயன்படுத்துவதன்மூலம் வேறு எவரேனும் ஆளைத் தூண்டுகின்ற,

எவரேனும் பகிரங்க உத்தியோகத்தர் ஊழல் என்ற தவறைப் புரிகின்றார் என்பதுடன் மேல்நீதிமன்றமொன்றினாலான விளக்கத்தின் மேலும் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேலும் அல்லது நீதிவானொருவரினாலான சுருக்க விளக்கத்தின் மேலும் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேலும் பத்து ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான கடூழிய மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழான தவறாளர் ஒருவர் பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின் கீழான தவறொன்றுக்கு குற்றஞ் சாட்டப்படலாம்

**112.** (1) எவரேனும் ஆள் 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின் கருத்தினுள் சட்டமுறையற்ற செயற்பாடொன்றாக அமைகின்ற இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிகின்றவிடத்து, அத்தகைய ஆள் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்கு மேலதிகமாக, அச்சட்டத்தின்கீழ் தவறுக்கு குற்றம் சாட்டப்படலாம்.

(2) இரண்டாயிரத்தாறாம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின் ஏற்பாடுகள், அச்சட்டத்தின் கீழான அத்தகைய தவறு தொடர்பில், விசாரணைகள், புலனாய்வுகள் மற்றும் வழக்கு நடவடிக்கைகளுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும் என்பதுடன் சொல்லப்பட்ட சட்டத்தில் உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளருக்கான அல்லது

வேறு எவரேனும் பொலிசு அலுவலருக்கான ஏதேனும் குறிப்பீடு இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவலர் ஒருவருக்கான குறிப்பீடொன்றாக வாசித்து பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

தத்துவமின்றி அவாநிறைவை ஏற்றுக் கொள்ளல்

**113.** (1) இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறுக்காக எவரேனும் ஆளுக்கெதிரான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில், ஏதேனும் அவாநிறைவு அப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் செயலை அத்தகைய ஆள் செய்வதற்கு அல்லது செய்யாமலிருப்பதற்குப் பிரதிபயனாக முனையப்பட்டது என நம்புவதற்கான அல்லது சந்தேகிப்பதற்கான ஏதுக்களைக் கொண்டு, அத்தகைய ஆள் அவ்வவாநிறைவைப் பரிந்துகேட்டார் அல்லது ஏற்றுக் கொண்டார் என எண்பிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆள் அவ்வாறு செய்வதற்கான அல்லது செய்யாமலிருப்பதற்கான தத்துவம், உரிமை அல்லது வாய்ப்பை உண்மையாகக் கொண்டிருக்கவில்லை அல்லது அத்தகைய ஆள் அவ்வாறு செய்வதற்கு அல்லது செய்யாமலிருப்பதற்கு உட்கருதாமல் அவாநிறைவை ஏற்றுக்கொண்டார் அல்லது அத்தகைய ஆள் உண்மையில் அவ்வாறு செய்யவில்லை அல்லது செய்யாமலிருக்கவில்லை எவ்வாறிருப்பினும், அப்பிரிவின்கீழான தவறொன்றை அத்தகைய ஆள் புரிகின்றார்.

(2) இச்சட்டத்தின் 111 ஆம் பிரிவின் கீழான தவறொன்றுக்காக எவரேனும் ஆளுக்கெதிரான எவையேனும் வழக்குநடவடிக்கைகளில், அத்தகைய ஆள் அரசாங்கத்திற்கு முறைகேடான அல்லது சட்டவிரோதமான இழப்பை ஏற்படுத்துவதற்கு அல்லது அத்தகைய ஆளுக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு முறைகேடான அல்லது சட்டவிரோதமான நன்மையை, சாதகத்தை அல்லது அனுகூலத்தை அளிப்பதற்கு உட்கருதினார் அல்லது அப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செயலை அத்தகைய ஆள் செய்வதன்மூலம் அல்லது செய்யாமலிருப்பதன்மூலம் ஏதேனும் முறைகேடான அல்லது சட்டவிரோதமான இழப்பு எவரேனும் ஆளுக்கு அல்லது அரசாங்கத்துக்கு ஏற்படும் அல்லது ஏதேனும் முறைகேடான அல்லது சட்டவிரோதமான நன்மை, சாதகம் அல்லது அனுகூலம் எவரேனும் ஆளுக்கு அளிக்கப்படும் என்ற அறிவைக் கொண்டிருந்தார் என எண்பிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆள் அவ்வாறு செய்வதற்கான அல்லது செய்யாமலிருப்பதற்கான

தத்துவம், உரிமை அல்லது வாய்ப்பை உண்மையில் கொண்டிருக்கவில்லை அல்லது அத்தகைய ஆள் உண்மையில் அவ்வாறு செய்யவில்லை அல்லது செய்யாமலிருக்கவில்லை எவ்வாறிருப்பினும் அப்பிரிவின் கீழான தவறொன்றை அத்தகைய ஆள் புரிகின்றார்.

மேலதிகத் தண்டங்கள்

**114.** (1) ஒரு நீதிமன்றம் இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை மீறி ஏதேனும் அவாநிறைவின் கொடைமுனைவு அல்லது ஏற்பு மூலம் புரியப்பட்ட தவறொன்றுக்காக எவரேனும் ஆளுக்கு குற்றத்தீர்ப்பளிக்கின்றவிடத்து, அப்போது, அவ்வவாநிறைவு பணத்தொகையொன்றாகவிருப்பின் அல்லது அவ்வவாநிறைவின் பெறுமதி மதிப்பிடப்படமுடியுமானதாகவிருப்பின் அந்நீதிமன்றம், அவ்வாளுக்கு வேறு ஏதேனும் தண்டனையை விதிப்பதற்கு மேலதிகமாக, அவ்வவாநிறைவின் தொகைக்கு சமமாகவுள்ள அல்லது நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தில் அவ்வவாநிறைவின் பெறுமதியாகவுள்ள தொகையொன்றை கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரத்தினுள் தண்டமொன்றாகச் செலுத்துவதற்கு அவ்வாளுக்கு கட்டளையிடுதல் வேண்டும்.

(2) மேல்நீதிமன்றம், 109 ஆம் பிரிவின்கீழான தவறொன்றைப் புரிவதற்காக எவரேனும் ஆளுக்கு குற்றத்தீர்ப்பளிக்கின்றவிடத்து, அது, இச்சட்டத்தின்கீழ் விதிப்பதற்கு தேவைப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் தண்டத்துக்கு மேலதிகமாக, இலஞ்சத்தின் மூலம் அல்லது இலஞ்சத்தின் வரும்படிகள் மூலம் கொள்ளுதல் செய்யப்பட்டுள்ளதாக அல்லது இலஞ்சத்தின் மூலம் ஆதனமாக மாற்றப்பட்டுள்ளதாக அத்தகைய நீதிமன்றம் கண்டுபிடித்துள்ள தொகைக்குக் குறையாத குற்றப்பணமொன்றை விதித்தல் வேண்டும் என்பதுடன் அத்தொகை அத்தகைய தொகையின் மூன்று மடங்கை விஞ்சுதலாகாது.

(3) இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறைப் புரிவதற்காக நீதிமன்றமொன்றினால் எவரேனும் ஆளுக்கு விதிக்கப்பட்ட ஒரு குற்றப்பணம் அல்லது ஒரு தண்டம், அக்குற்றப்பணம் அல்லது தண்டம் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சுகின்றவிடத்தும் அத்தகைய குற்றப்பணம் அல்லது தண்டம் விதிக்கப்பட்ட ஆள் அத்தகைய

குற்றப்பணத்தை அல்லது தண்டத்தைச் செலுத்துவதற்கு தவறு கின்றவிடத்தும் குற்றப்பணம் அல்லது தண்டத்தை விதிக்கும் கட்டளையானது அரசுக்கு சார்பாகவும் அவ்வாளுக்கு எதிராகவும் மாவட்ட நீதிமன்றத்தினால் பதியப்பட்ட தீர்வையொன்றாகவிருந்தது என்றாற்போன்று அறவிடப்படலாம்.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட குற்றப்பணம் அல்லது தண்டத்தைச் செலுத்துவதற்கு பொறுப்பாக வுள்ள ஆள், குற்றப்பணம் அல்லது தண்டம் எந்தத் தவறுக்காக விதிக்கப்பட்டதோ அந்தத் தவறு புரியப்படும் தேதியன்று பகிரங்க உத்தியோகத்தர் ஒருவராகவிருந்துள்ளவிடத்து, அப்போது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறி ருப்பினும், அத்தகைய ஆளின் வாழ்க்கைத்துணையால் அல்லது அத்தகைய ஆளினால் பராமரிக்கப்படும் மகன் ஒருவரினால் அல்லது மகள் ஒருவரினால் சொல்லப்பட்ட தேதியின் பின்னர் கொள்ளுதல் செய்யப்பட்ட ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம், அத்தகைய ஆளின் அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனத்துக்கு மேலதிகமாக, அவ்வாறு கொள்ளுதல் செய்யப்பட்ட ஆதனம் -

(அ) அத்தகைய வாழ்க்கைத்துணையினால், மகனினால் அல்லது மகளினால் கொள்வனவு செய்யப்பட்டதாக விருப்பின்;

(ஆ) அத்தகைய குற்றப்பணம் அல்லது தண்டத்தைச் செலுத்துவதற்கு பொறுப்பாகவுள்ள ஆளினால், அத்தகைய வாழ்க்கைத்துணை, மகன் அல்லது மகளின் பெயரில் கொள்வனவு செய்யப்பட்ட தாகவிருப்பின்;

(இ) அத்தகைய குற்றப்பணம் அல்லது தண்டத்தைச் செலுத்தவதற்குப் பொறுப்பான ஆள் எந்த அவாநிறைவின் ஏற்புக்காக அவ்வாறு பொறுப்பாக வந்தாரோ அந்த அவாநிறைவை முனைந்த ஆளிடமிருந்து கொள்வனவு மூலம், நன்கொடைமூலம் அல்லது வேறுவகையாக அத்தகைய வாழ்க்கைத் துணையால், மகனினால் அல்லது மகளினால் கொள்ளுதல் செய்யப்பட்டதாகவிருப்பின்; அல்லது

(ஈ) அத்தகைய குற்றப்பணம் அல்லது தண்டத்தைச் செலுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள ஆளிடமிருந்து மரணசாதனத்துடனான அல்லது மரணசாதனமில்லா வழியுரிமைமூலம் கொள்ளுதல் செய்யப்பட்டதாக விருப்பின்,

கைப்பற்றப்பட்டு அத்தகைய குற்றப்பணம் அல்லது தண்டத் தொகையை அறவிடுவதற்காக விற்கப்படுதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டில் முரணாக எது எவ்வாறிருப்பினும், நீதிமன்றமானது இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறுக்கு, அத்தகைய தவறு புரியப்படுவதன் மூலம் அல்லது அத்தகைய தவறின் வரும்படிகள் மூலம் கொள்ளுதல் செய்யப்பட்டதாகக் காணப்படும் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எல்லா வில்லங்கங்களிலிருந்தும் விடுபட்டதாக அரசுக்கு இழப்பிக்கப்பட வேண்டும் என கட்டளையை ஆக்கலாம்:

ஆயின் எவ்வாறாயினும், இழப்பித்தற் கட்டளையொன்று ஆக்கப்படவேண்டுமா என்பதைத் தீர்மானிக்கையில், அத்தகைய கட்டளையொன்று அத்தகைய ஆதனத்தின் பெறுமதிக்கு நல்லெண்ணத்துடனான கொள்வனவாளரொருவரின் அல்லது அத்தகைய ஆதனத்தில் பெறுமதிக்கு நல்லெண்ணத்துடனான அக்கறையொன்றை கொள்ளுதல் செய்துள்ளவரான வேறு எவரேனும் ஆளின் உரிமைகளைப் பங்கப்படுத்தும் சாத்திய மிருக்கின்றதா என்பதைக் கருத்திற்கொள்ள நீதிமன்றம் உரித்து டையதாதல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று -

(அ) இழப்பித்தற் கட்டளைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அல்லது உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, இழப்பித்தற் கட்டளையை உறுதிப்படுத்தி அல்லது நிலைநிறுத்தி அத்தகைய மேன்முறையீடு தீர்மானிக் கப்படுவதன் மீது பயனுறுதல் வேண்டும்; அல்லது

(ஆ) இழப்பித்தற் கட்டளைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அல்லது உயர்நீதிமன்றத்துக்கு

மேன்முறையீடு எதுவும் செய்யப்படாதவிடத்து, எந்தக்காலப் பகுதியினுள் அத்தகைய கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அல்லது உயர்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று செய்யப்படலாமோ அந்தக்காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர் பயனுறுதல் வேண்டும்.

(7) ஆளொருவர், இப்பாகத்தின் இவ்வத்தியாயத்தின் கீழான தவறொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றவிடத்து, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 303 ஆம் பிரிவின் (7) ஆம் மற்றும் (8) ஆம் உட்பிரிவுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய குற்றத்தீர்ப்பு அல்லது கண்டுபிடிப்பு காரணமாக -

(அ) அத்தகைய ஆள் -

(i) 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் மற்றும் 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் அத்தகைய குற்றத்தீர்ப்பு அல்லது கண்டுபிடிப்புத் தேதியிலிருந்து ஏழு ஆண்டுகாலப்பகுதியொன்றிற்கு அல்லது 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம் அல்லது (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஐந்து ஆண்டு காலப்பகுதியொன்றிற்கு ஏதேனும் தேர்தலில் தேருநர் ஒருவராகப் பதிவுசெய்யப்படுவதற்கு அல்லது வாக்களிப்பதற்கு இயலாதவராக வருதல் வேண்டும்; அல்லது

(ii) அத்தகைய குற்றத்தீர்ப்பின் அல்லது கண்டறிதலின் தேதியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக அல்லது உள்ளூர் அதிகாரசபையொன்றின் அல்லது மாகாண சபையொன்றின் உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது நியமிக்கப்படுவதற்கு

இயலாதவராக வருதல் வேண்டும் என்பதுடன் அத்தேதியில் அத்தகைய ஆள் பாராளுமன்ற உறுப்பினரொருவராக அல்லது உள்ளூரதிகாரசபையொன்றின் அல்லது மாகாண சபையொன்றின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பின் அல்லது நியமிக்கப்பட்டிருப்பின் அத்தகைய உறுப்பினராக அத்தகைய ஆளின் தேர்வு அல்லது நியமனம் அத்தேதியிலிருந்து வறிதாக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய ஆள், பகிரங்க உத்தியோகத்தரொருவராக தொழிலுக்கமர்த்தப்படுவதிலிருந்தும் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமொன்றுக்கு அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றின் ஆளும் குழுவுக்கு தேர்ந்தெடுக்கப்படுவதிலிருந்தும் அல்லது நியமிக்கப்படுவதிலிருந்தும் ஆயுட்காலத்துக்கு தகைமையற்றவராகவிருத்தல் வேண்டும்;

(இ) அத்தகைய ஆள், அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றின் ஆளும் குழுவின் உறுப்பினரொருவராக அவர் இருப்பின், அத்தகைய குற்றத்தீர்ப்பு அல்லது கண்டுபிடிப்புத் தேதியிலிருந்து அத்தகைய நிறுவனங்கள் இரண்டினதும் உறுப்பினரொருவராக விருப்பதிலிருந்து இல்லாதொழிதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) அத்தகைய ஆள், பகிரங்க உத்தியோகத்தர் ஒருவராக அவர் இருப்பின், அத்தகைய குற்றத்தீர்ப்பு அல்லது கண்டுபிடிப்புத் தேதியிலிருந்து பகிரங்க உத்தியோகத்தரொருவராகவிருப்பதிலிருந்து இல்லாதொழிதல் வேண்டும் என்பதுடன் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு சட்டத்தினால் தத்துவமளிக்கப்பட்ட அதிகாரியினால் அத்தேதியன்று பதவியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

குற்றத்தீர்ப்படிப் படையிலற்ற ஆதன இழப்பிப்பு

**115.** (1) மேல் நீதிமன்றம், நியாயமான காலப்பகுதி யொன்றினுள் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அல்லது ஆணைக்குழு வினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் மீது, ஏதேனும் ஆதனம் இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்ட தவறுகள் எவற்றினூடாகவும் பெறப்பட்ட ஆதனமாக அல்லது இச்சட்டத்தின் கீழான தவறுகள் எவற்றையும் புரிவதில் பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்பட்ட ஆதனமாக உள்ளது என அல்லது அத்தகைய ஆதனம் அவ்வாறு பெறப்பட்ட அல்லது பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்பட்ட ஆதனத்தைக் குறிக்கின்றது என நிகழ்தகவுச் சமநிலையின் மீது முதற்தோற்றளவில் நீதிமன்றம் திருப்திப்படுகின்றவிடத்து, அத்தகைய நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் உள்ள ஏதேனும் ஆதனம் தொடர்பில் குற்றத்தீர்ப்படிப்படையிலற்ற ஆதன இழப்பிப்புக் கட்டளையொன்றை அளித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, ஆதனமொன்று (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைந்ததாகவிருக்கின்றது என திருப்திப்படுவதற்கு -

(அ) அவ்வாதனம் இச்சட்டத்தின் கீழான குறிப்பிட்ட தவறொன்றைப் புரிவதிலிருந்து முழுமையாக அல்லது பகுதியளவில், நேரடியாக அல்லது நேரடியாக வல்லாமல் பெறப்பட்டது எனக் காட்டுவதற்கு; அல்லது

(ஆ) எவரேனும் ஆள் அத்தகைய தவறொன்று தொடர்பில் குற்றவழக்கு தொடுக்கப்பட்டுள்ளார் அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார் எனக் காட்டுவதற்கு,

அவசியமாகாது ஆனால், அது இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறிலிருந்தான வரும்படிகளாகவுள்ளன அல்லது இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிவதற்கு பயன்படுத்தப்பட்டது அல்லது பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்பட்டது என மட்டும் காட்டுவது அவசியமாகும்.

(3) இச்சட்டத்தின் கீழான தவறொன்றின் மூல வரும்படிகள் எந்த ஆதனமாக ஒன்றில் விற்பனை மூலம் அல்லது வேறு வகையாக மாற்றப்பட்டுள்ளதோ அந்த ஆதனம் தொடர்பில் இழப்பித்தலுக் கான விண்ணப்பமொன்று செய்யப்படலாம்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி (1) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்று தொடர்பாக எழுத்திலான அறிவித்தலொன்றை அத்தகைய விண்ணப்பத்தைச் செய்ததி லிருந்து முப்பது நாட்களுக்குக் குறையாமல் அத்தகைய விண்ணப்பத்தின் விடயப்பொருளாகவுள்ள அத்தகைய ஆதனத்தில் அக்கறையொன்றை உரிமைகோருகின்ற எவரேனும் ஆளுக்கு அல்லது அத்தகைய ஆதனத்தில் அக்கறையொன்றைக் கொண்டுள்ளதாக அறியப்படுகின்ற எவரேனும் ஆளுக்கு அல்லது அத்தகைய ஆதனத்தில் ஆளொருவர் அக்கறையொன்றைக் கொண்டிருக்கக்கூடும் என பணிப்பாளர் தலைமையதிபதி நியாயமான முறையில் நம்புகின்றவிடத்து அத்தகைய ஆளுக்கு வழங்குதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், பணிப்பாளர் தலைமையதிபதி, அவ்வாள் வழக்கு நடவடிக்கைகளிலிருந்து தலைமறைவாக விருந்திருந்தால் அவ்வறிவித்தலை செய்யாது விடலாம்.

(5) ஓராம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் விடயப்பொருளாகவுள்ள ஆதனமொன்றில் அக்கறையொன்றை உரிமைகோருகின்ற எவரேனும் ஆள் அத்தகைய விண்ணப்பத்தின் கேட்பில் தோன்றி சான்றை முன்வைக்கலாம்.

(6) நீதிமன்றமானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது முடிபொன்று செய்யப்படுவதற்கு முன்னர் எந்நேரத்திலும், நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தில் அத்தகைய விண்ணப்பத்தில் ஏதேனும் அக்கறையைக் கொண்டிருப்பதாகத் தோன்றுகின்ற எவரேனும் ஆளின் நன்மைக்காக, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் இலங்கைத் தீவில் புழக்கத்திலுள்ள நாளாந்த செய்தித்தாளொன்றில் அத்தகைய விண்ணப்பம் பற்றிய அறிவித்தலொன்றை வெளியிடுமாறு பணிப்பாளர் தலைமை யதிபதிக்கு கட்டளையிடலாம்.

(7) ஓராம் உட்பிரிவின் கீழ்செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப் பத்தின் விடயப்பொருளாகவுள்ள ஏதேனும் ஆதனத்தில் அக்கறையொன்றை உரிமைகோருகின்ற ஆளொருவர்-

(அ) இச்சட்டத்தின்கீழ் அத்தகைய ஆதனம் தொடர்பான ஏதேனும் தவறு புரியப்பட்டிருப்பதற்கு முன்னர் அத்தகைய ஆதனத்திலான அக்கறையை கொள்ளுதல் செய்துள்ளார் என; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அத்தகைய ஆதனம் தொடர்பான ஏதேனும் தவறு புரியப்பட்டதன் பின்னர் நியாயமான பெறுமதியொன்றுக்கு அவ்வக்கறையைக் கொள்ளுதல் செய்துள்ளார், ஆனால், அத்தகைய அக்கறையைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் அவ்வாதனம் இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்ட ஏதேனும் தவறின் வரும்படிகள் என அறிந்திருக்கவில்லை அல்லது நியாயமான முறையில் அறிந்திருக்க முடியவில்லை என,

அத்தகைய ஆள் நீதிமன்றத்தைத் திருப்திப்படுத்துகின்றவிடத்து, நீதிமன்றமானது அவ்விழப்பித்தற் கட்டளை அத்தகைய அளவுக்கு அல்லது அத்தகைய முறையில் அத்தகைய அக்கறையை பாதித்த லாகாது என வெளிப்படுத்தி அத்தகைய அக்கறை சம்பந்தமாக அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

(8) நீதிமன்றம் இப்பிரிவின் கீழ் இழப்பித்தற் கட்டளையொன்றை ஆக்கும் போது அல்லது அதன் பின்னர் எந்நேரத்திலும், அத்தகைய ஆதனத்தைக் கைமாற்றுவதற்கு வசதியளிப்பதற்காகவும் வசதி யளித்தல் தொடர்பிலுமான கட்டளைகள் உட்பட நீதிமன்றம் தோதானதெனக் கருதுகின்றவாறான வேறு ஏதேனும் கட்டளையை அது ஆக்கலாம்.

(9) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, இவ்விண் ணப்பத்தின் விடயப்பொருளாகவுள்ள ஆதனம் தொடர்பில் ஏதேனும் குற்றவியல் வழக்குநடவடிக்கையின் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படுதல் வேண்டுமா அல்லது வேண்டாமா எனத் தீர்மானிப்பதற்கு நடாத்தப்பட்ட புலனாய்வொன் றின் ஏதேனும் முடிபினால் பாதிக்கப்படுதலாகாது.

(10) இழப்பித்தற் கட்டளை தொடர்பான 114 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், இப்பிரிவின் கீழ் இழப்பித்தற் கட்டளைகளுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

ஆட்கள் குழுவினாலான தவறுகள்

**116**. ஆட்கள் குழுவொன்று இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றவிடத்து அப்போது –

(அ) அத்தகைய ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாகவிருப்பின் அல்லது கூட்டுத்தாபனமொன்றாகவிருப்பின், அதன் பணிப்பாளர் அல்லது அலுவலர் அல்லது முகவர் ஒவ்வொருவரும்; அத்துடன்

(ஆ) அத்தகைய ஆட்கள் குழு குழுமமொன்றாகவிருப்பின், ஒவ்வொரு பங்காளரும்;

அந்தந்த தவறுகளுக்கு குறித்துரைக்கப்பட்டவாறான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும் :

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட, கூட்டிணைக்கப்படாத குழுவின் அல்லது அத்தகைய கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளரொருவர் அல்லது அலுவலர் ஒருவர் அல்லது முகவர் அல்லது அத்தகைய குழுமத்தின் பங்காளர், அத்தகைய தவறு அவரை அறியாமல் புரியப்பட்டது அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கான எல்லா விழிப்புக் கவனத்தையும் அவர் பயன்படுத்தினார் என அவர் எண்பிப்பின் அத்தகைய தவறுக்கு குற்றவாளியானவராகக் கருதப்படுத லாகாது.

ஊழியர் என்பது முன்னாள் ஊழியர்கள் முதலியோரை உள்ளடக்குதல் வேண்டும்

**117**. இப்பாகத்தின் நோக்கங்களுக்காக, பகிரங்க உத்தியோகத்தர் ஒருவர் அல்லது தனியார் துறை உருவகமொன்றின் ஊழியர் ஒருவர் பின்வருவோரை உள்ளடக்குதல் வேண்டும் :-

(அ) முன்னாள் ஊழியர் ஒருவர்;

(ஆ) பகிரங்க அதிகாரசபைக்கு அல்லது தனியார் துறை உருவகத்துக்கு மாற்றுச்சேவைக்குவிடப்பட்ட ஆளொருவர்;

(இ) பகிரங்க அதிகாரசபைக்காக அல்லது தனியார்துறை உருவகத்துக்காக வேலை செய்வதற்கு சேவைகளுக்கான ஒப்பந்தமொன்றின்கீழ் ஈடுபடுத்தப்படுகின்ற அல்லது ஒப்பந்தம் செய்துகொள்ளப்படுகின்ற தனியாள் ஒருவர்;

(ஈ) (பகிரங்க அதிகாரசபையின் அல்லது தனியார்துறை உருவகத்தின் சபையின் அல்லது ஆளும் குழுவின் உறுப்பினரொருவராகவுள்ள ஆளொருவர் உட்பட) பகிரங்க அதிகாரசபையின் அல்லது தனியார்துறை உருவகத்தின் முகாமையில் சம்பந்தப்பட்ட ஆளொருவர்;

(உ) அவ்வேலைக்கான வெகுமதி அல்லது வெகுமதி எதிர்பார்ப்பின்றி தொண்டர் ஒருவராக பகிரங்க அதிகாரசபைக்காக அல்லது தனியார் துறை உருவகத்துக்காக வேலை செய்கின்ற ஆளொருவர்; அல்லது

(ஊ) பகிரங்க அதிகாரசபையின் அல்லது தனியார் துறை உருவகத்தின் பயிற்சிபெறுநர் ஒருவர் அல்லது தொழில்பயிலுநர் ஒருவர்.

அத்தியாயம் II

**நடவடிக்கைமுறைசார் தவறுகள்**

அவமதிப்பு

**118.** (1) ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கு எதிராக அல்லது அவமரியாதையாகப் புரியப்பட்ட அவமதிப்புத் தவறு ஒவ்வொன்றும், உயர் நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கு எதிராக அல்லது அவமரியாதையாகப் புரியப்பட்ட அவமதிப்புத் தவறொன்று என்றாற்போன்று உயர்நீதிமன்றத்தால் தண்டிக்கப்படற்பாலதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஒவ்வொரு

தவறையும் விளங்குவதற்கான நியாயாதிக்கம் இத்தால் உயர்நீதிமன்றத்துக்கு உரித்தாக்கவும்படுகின்றது.

(2) ஆணைக்குழுவின் முன்னிலையிலாயினுஞ்சரி அல்லது வேறு வகையிலாயினுஞ்சரி ஆணைக்குழு தொடர்பாகப் புரியப்பட்ட அல்லது புரியாதுவிடப்பட்ட ஒரு செயல், அத்தகைய செயல் உயர் நீதிமன்றம் தொடர்பாகப் புரியப்பட்டால் அல்லது புரியாது விட்டுவிடப்பட்டால், அத்தகைய நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கு எதிரான அல்லது அவமரியாதையான அவமதிப்புத் தவறாக அமைந்திருக்குமெனில், ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கெதிரான அல்லது அவமரியாதையான அவமதிப்புத் தவறாக அமைதல் வேண்டும்.

(3) எவரேனுமாள் -

(அ) இச்சட்டத்தின்கீழ் சேர்ப்பிக்கப்பட்ட அழைப்புக் கட்டளையொன்றில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும், ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் போதுமானளவு நியாயமான காரணமொன்றின்றி ஆணைக்குழுவின் முன்னர் தோன்றுவதற்கு தவறினால்;

(ஆ) சத்தியஞ்செய்வதற்கு அல்லது உறுதியுரை மொழிவதற்கு மறுத்தால் அல்லது உரிய முறையில் சத்தியஞ் செய்து அல்லது உறுதியுரை மொழிந்து, ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் போதுமானளவு நியாயமான காரணமொன்றின்றி ஆணைக்குழுவினால் புலனாய்வு செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் கருமங்கள் குறித்து அத்தகைய ஆளிடம் கேட்கப்பட்ட ஏதேனும் கேள்விக்கு மறுமொழியிறுப்பதற்கு மறுத்தால் அல்லது தவறினால்;

(இ) ஆணைக்குழுவினால் அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஓர் அறிவித்தலின் அல்லது எழுத்திலான கட்டளையின் தேவைப்பாடுகளுடன்

இணங்கியொழுகுவதற்கு ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் போதுமானளவு நியாயமான காரணமொன்றின்றி மறுத்தால் அல்லது தவறினால்; அல்லது

(ஈ) இச்சட்டத்தின்கீழ் அவருக்கு அழைப்புக்கட்டளையொன்று சேர்ப்பிக்கப்பட்டு ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் போதுமானளவு நியாயமான காரணமொன்றின்றி அத்தகைய ஆளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ளதும் ஆணைக்குழுவின் அபிப்பிராயத்தில் புலனாய்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் கருமங்களின் உண்மையைக் கண்டுபிடிப்பதற்கு அவசியமாகவுள்ளதுமான ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளை ஆணைக்குழுவுக்குக் காண்பிப்பதற்கும் காட்டுவதற்கும் மறுத்தால் அல்லது தவறினால்,

அத்தகைய ஆள் ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கெதிரான அல்லது அவமரியாதையான அவமதிப்புத் தவறைப் புரிகின்றார்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ஆணைக்குழுவினால் புலனாய்வு செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் கருமமானது, ஏதேனும் நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்கு நடவடிக்கையிலான விசாரணையொன்றின் விடயப்பொருளாகவுள்ள அதே கருமம் அல்லது பொருளளவில் அதே கருமம் அல்லது அவ்விசாரணையின் விடயப்பொருளாகவிருக்கும் சாத்தியம் கொண்டது என்ற ஏதுவின் மீது அல்லது ஏதேனும் கேள்விக்கான மறுமொழி அல்லது ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருளைக் காண்பித்தல் அல்லது காட்டுதல், வேறெவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் ஓர் ஆளை நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ பாதிக்கலாம் அல்லது அவருக்குப் பங்கம் விளைவிக்கலாம் என்ற ஏதுவின் மீது அத்தகைய கேள்விக்கு மறுமொழியிறுப்பதற்கு அல்லது அத்தகைய ஆவணத்தை அல்லது வேறு பொருளைக் காண்பிப்பதற்கு மற்றும் காட்டுவதற்கு அத்தகைய ஆள் மறுத்தல் அல்லது தவறுதல் ஒரு நியாயமான காரணமாகக் கருதப்படுதலாகாது.

(5) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழ் ஆணைக்குழுவொன்றின் அதிகாரத்துக்கெதிராக அல்லது அவமரியாதையாக அவமதிப்புத் தவறொன்றை ஆள் ஒருவர் புரிந்துள்ளாரென அது தீர்மானிக்குமிடத்து, ஆணைக்குழு அத்தகைய தீர்மானத்தை எடுத்துக்காட்டும் சான்றிதழொன்றை உயர்நீதிமன்றத்துக்குப் பணிப்பாளர் தலைமையதிபதி அனுப்பச் செய்தல் வேண்டும்; அச்சான்றிதழ் ஆணைக்குழுவின் தவிசாளரினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு உயர்நீதிமன்றம் அதன் கவனத்துக்குட்படுத்தத்தக்கதென எண்ணும் அவமதிப்புத் தவறுக்கான தண்டனைக்கான ஏதேனும் வழக்கு நடவடிக்கையில், (5) ஆம் உட்பிரிவின்கீழ் கையொப்பமிடப்பட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்ட சான்றிதழ் ஒன்றெனக் கொள்ளப்படுகின்ற ஏதேனும் ஆவணம் -

(அ) சான்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, முரணாக எண்பிக்கப்பட்டாலன்றி, மேலதிக எண்பிப்பில்லாது அத்தகைய சான்றிதழொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அந்தச் சான்றிதழில் எடுத்துக்காட்டப்பட்ட தீர்மானம் ஆணைக்குழுவினால் செய்யப்பட்டது என்பதற்கும் அந்தத் தீர்மானத்தில் கூறப்பட்ட நிகழ்வுகளுக்கும் சான்றாதல் வேண்டும்.

(7) ஆணைக்குழுவின் அதிகாரத்துக்கு எதிராக அல்லது அவமரியாதையாக சார்த்தப்பட்ட ஏதேனும் அவமதிப்புத்தவறைத் தண்டிப்பதற்கென இந்தப் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக எடுக்கப்பட்ட எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில், இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆணைக்குழுவின் உறுப்பினர் எவரும், அத்தகைய ஆளின் சொந்தச் சம்மதத்துடன் தவிர ஒரு சாட்சியாக கட்டளைவிட்டழைக்கப்படுதலோ அல்லது விசாரணை செய்யப்படுதலோ ஆகாது.

*பொய்யான சார்த்துதல்கள்*

**119.** சார்த்துதல் ஒன்று பொய்யானதென அறிந்து கொண்டு அல்லது அத்தகைய சார்த்துதல் இச்சட்டத்தின் கீழான தவறொன்றாக அமையவில்லை என நம்புவதற்கான காரணத்தைக்கொண்டு 43 ஆம் பிரிவின்கீழ் ஆணைக்குழுவுக்கு தன்னால் செய்யப்படும் ஏதேனும் தகவல் அல்லது முறைப்பாட்டில் உள்ள அத்தகைய சார்த்துகையைச் செய்கின்ற ஒவ்வொரு ஆளும், நீதிவான் ஒருவரின் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றுக்கு அல்லது மூன்று ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும் என்பதுடன் மேலதிகமாக எந்த ஆள் தொடர்பில் சார்த்துகை செய்யப்படுகின்றதோ அந்த ஆளுக்கு நீதிமன்றம் தகுதியானதெனக் கருதக்கூடியவாறாக நட்டஈடாக பணத்தொகையொன்றின் கொடுப்பனவுக்கு ஆளாதலும் வேண்டும்.

*இரகசியத்தை மீறுதல்*

**120.** இரகசியத்தைப் பேணுவதற்கு 28 ஆம் பிரிவின் (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின்கீழ் தம்மீது விதிக்கப்பட்ட கடமையை மீறிச் செயலாற்றுகின்ற ஆளொவ்வருவரும் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரின் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*பணிப்பாளர் தலைமையதிபதியை அல்லது வேறு அலுவலரை எதிர்த்தல் அல்லது அவர்களின் கடமைகளுக்கு முட்டுக்கட்டையிடல்*

**121.** (அ) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் ஏதேனும் இடத்துக்கு நுழைவதற்கு, தேடுகையிடுவதற்கு அல்லது அணுகுவதற்கு மறுக்கின்ற;

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது ஆணைக் குழுவுக்கு உதவுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் இச்சட்டத்தின்கீழ் பயனுறுத்துவதற்கு

உரித்துடைய எத்தகைய அலுவலரின் பணிப்பின் தலைமையதிபதி ஏதேனும் உட்பிரவேசத்தைப் பயனுறுத்துவதில் அல்லது இச்சட்டத்தினால் அத்தகைய அலுவலருக்கு விதிக்கப்பட்ட ஏதேனும் கடமை அல்லது அவர் மீது அளிக்கப்பட்ட தத்துவத்தை நிறைவேற்றுவதில் அவர்களைத் தாக்குகின்ற, அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற, அவரை தடைசெய்கின்ற அல்லது அவரைத் தாமதப்படுத்துகின்ற;

(இ) இச்சட்டத்தின்கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியின் அல்லது ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனும் அலுவலரின் கடமையை நிறைவேற்றுவதில் அத்தகைய ஆளின் ஏதேனும் சட்டமுறையான கோரிக்கையுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற;

(ஈ) அத்தகைய ஆளிடமிருந்து நியாயமான முறையில் தேவைப்படக்கூடியவாறானதும் அத்தகைய ஆள் கொடுப்பதற்கு அத்தகைய ஆளின் தத்துவத்தில் உள்ளதுமான ஏதேனும் தகவலை கொடுப்பதற்கு மறுக்கின்ற அல்லது அசட்டைசெய்கின்ற; அல்லது

(உ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அலுவலர் ஒருவரின் கடமையை நிறைவேற்றுவதில் அத்தகைய அலுவலரை எதிர்க்கின்ற அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற,

எவரேனும் ஆள், தவறொன்றைப்புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரின் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

பொய்யான கூற்றுக்கள், தகவல்கள் முதலியன

**122**. (அ) இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறின் புரிகை தொடர்பாக ஏதேனும் பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் தகவலை அல்லது எந்த தகவல் தொடர்பாக புலனாய்வொன்று எவரேனும் ஆளினால் ஏதேனும் தவறு புரியப்படுவதை வெளிவிடுகின்றதோ அந்த தகவலை அறிந்து கொண்டு கொடுக்கின்ற அல்லது கொடுப்பதனைச் செய்விக்கின்ற; அல்லது

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கு நியமிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலருக்கு பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் தகவல்களை அறிந்துகொண்டு கொடுக்கின்ற அல்லது கொடுப்பதனைச் செய்விக்கின்ற,

எவரேனும் ஆள், தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரின் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

பொய்யான சான்று வழங்குதல்

**123**. (1) (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் அத்தியாயம் XI இன் ஏற்பாடுகள், இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் பொய்யான சான்றை கொடுக்கின்ற எவரேனும் ஆள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 135 ஆம் பிரிவின்கீழ் பெறப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட சட்டத்துறைத் தலைமையதிபதியின் முன் வலுவளிப்பு, இச்சட்டத்தின்கீழான ஏதேனும் குற்றவழக்குக்கு ஏற்புடையதாதலாகாது.

*ஒருவர் அலுவலர் ஒருவராக இருக்கின்றார் என பொய்யான முறையில் பாசாங்கு செய்தல்*

**124.** தான் ஆணைக்குழுவின் அலுவலர் அல்லது ஊழியர் ஒருவர் அல்லது எந்த ஆளின் சேவைகள் 27 ஆம் பிரிவின்கீழ் தக்கவைக்கப்படுகின்றனவோ அந்த ஆள் ஒருவர் என அல்லது இச்சட்டத்தின் கீழ் அத்தகைய அலுவலரின், ஊழியரின் அல்லது ஆளின் தத்துவங்கள் எவற்றையும் கொண்டுள்ளார் என அல்லது இச்சட்டத்தின்கீழ் அத்தகைய அலுவலரின், ஊழியரின் அல்லது ஆளின் கடமையுடன் சம்பந்தப்பட்ட எதனையும் செய்வதற்கு அல்லது செய்யாது தவிர்ந்திருப்பதற்கு அத்தகைய அலுவர், ஊழியர் அல்லது ஆளின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு அவர் இயலுமானவராகவிருக்கின்றார் என பொய்யானமுறையில் பாசாங்குசெய்கின்ற எவரேனும் ஆள், தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரின் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*நீதிக்கு முட்டுக்கட்டையிடுதல்*

**125.** (1) ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர், ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி, அலுவலர் அல்லது ஊழியர் அல்லது எந்த ஆளின் சேவைகள் 27 அம் பிரிவின்கீழ் தக்கவைக்கப்படுகின்றனவோ அந்த ஆள் ஒருவர் தனது கடமையைப் புரிவதில், அத்தகைய உறுப்பினர் மீது, பணிப்பாளர் தலைமையதிபதியின்மீது அல்லது அலுவலர் மீது அல்லது ஊழியர் மீது அல்லது ஆள் மீது செல்வாக்குச் செலுத்துகின்ற ஆளொருவர் தவறொன்றைப்புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரின் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஒரு இலட்சம் ரூபா குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர், ஆணைக் குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் அல்லது எந்த ஆளின் சேவைகள் 27 ஆம் பிரிவின் கீழ் தக்கவைக்கப்படுகின்றனவோ அந்த ஆள் ஒருவர் இச் சட்டத்தின்கீழ் கடமையைப் புரிவதிலிருந்து அத்தகைய உறுப்பினரை, பணிப்பாளர் தலைமையதிபதியை, அலுவலரை

அல்லது ஊழியரை அல்லது ஆளை தடுப்பதற்கென அத்தகைய உறுப்பினரின், பணிப்பாளர் தலைமையதிபதியின் அல்லது வேறு எவரேனும் அலுவலரின் அல்லது ஊழியரின் அல்லது ஆளின் உடல், உள்ளம் அல்லது நன்மதிப்புக்கு ஏதேனும் ஊறு ஏற்படுத்துவதாக அத்தகைய உறுப்பினரை, பணிப்பாளர் தலைமையதிபதியை அல்லது வேறு எவரேனும் அலுவலரை, ஊழியரை அல்லது ஆளை எழுதப்படும் அல்லது பேசப்படும் சொற்கள் மூலம் அல்லது ஏதேனும் செயல் மூலம் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் அச்சுறுத்துகின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரின் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக் கப்படுவதன் மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் இவ்வுட்பிரிவின் கீழான தவறொன்றுக்கு இரண்டாவது அல்லது அடுத்துப்பின்னரான குற்றத்தீர்ப்பொன்றின் மேல், அத்தகைய குற்றப்பணத்துக்கு மேலதிகமாக, ஏழு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்ட னைக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர், ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி, வேறு எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் அல்லது எந்த ஆளின் சேவைகள 27 ஆம் பிரிவின்கீழ் தக்கவைக்கப்படுகின்றனவோ அந்த ஆள் ஒருவர் இச்சட் டத்தின்கீழ் தமது கடமையைப் புரிவதிலிருந்து ஆணைக்குழுவின் அத்தகைய உறுப்பினரை, பணிப்பாளர் தலைமையதிபதியை, வேறு எவரேனும் அலுவலரை அல்லது ஊழியரை அல்லது எந்த ஆளின் சேவைகள் 27 ஆம் பிரிவின்கீழ் தக்கவைக்கப் படுகின்றனவோ அந்த ஆள் ஒருவரை தடுப்பதற்கென அவர்களின் உடல், உள்ளம் அல்லது நன்மதிப்புக்கு ஊறு விளைவிக்கின்ற ஆளொருவர், நீதிவான் ஒருவரின் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

*ஆணைக்குழுவின் கட்டளையை நிறைவேற்று வதற்கு மறுத்தல், அசட்டையாக விருத்தல் அல்லது நிறைவேற்றாது விடுதல்*

**126.** (1) இச்சட்டத்தின் கீழான தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிப்பதில் ஆணைக்குழுவின், பணிப்பாளர் தலைமையதி பதியின் அல்லது அதன் அலுவலர்களின் ஏதேனும் சட்டமுறையான கோரிக்கை, அறிவித்தல், கட்டளை, பணிப்பு அல்லது வேண்டு கோளுடன் இணங்கியொழுகுவதற்கு நியாயமான சாக்கின்றி தவறுகின்ற அல்லது அசட்டைசெய்கின்ற ஆளொருவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரினாலான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான கடூழிய மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்கான குற்றவழக் கொன்று ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக அத்தகைய நீதிவான் நீதிமன்றத்தில் தொடுக்கப்படலாம்.

*நானாவிதமான தவறுகள்*

**127.** (1) (அ) ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்பட வுள்ள அல்லது விசாரணை செய்யப்பட்டுள்ள ஆளொருவருடன் தலையிடுகின்ற;

(ஆ) சட்டநீதிமன்றமொன்றில் அல்லது அதன் முன்னர் இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் கட்டளைவிட்டழைக்கப்பட்ட ஆளொருவருடன் தலையிடுகின்ற;

(இ) ஏதேனும் நீதிமன்றத்தில், சட்டத்தின்கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் சான்று அளிப்பதிலிருந்து தவிர்ந்திருக்குமாறு ஆளொருவரைத் தூண்டுகின்ற;

(ஈ) ஏதேனும் நீதிமன்றத்தில் சட்டத்தின் கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் ஆளொருவர் சான்று அளிப்பதைத் தடுப்பதற் கென அத்தகைய ஆளின் உடலுக்கு, உளத்துக்கு

அல்லது நன்மதிப்புக்கு ஊறுவிளைவிக்கப் போவதாக அத்தகைய ஆளை அச்சுறுத்துகின்ற;

(உ) ஏதேனும் நீதிமன்றத்தில் இச்சட்டத்தின்கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் ஆளொருவர் சான்று அளிப்பதிலிருந்து அத்தகைய ஆளை தடுப்பதற்கென அத்தகைய ஆளின் உடலை, உளத்தை அல்லது நன்மதிப்பை ஊறுபடுத்துகின்ற;

(ஊ) ஏதேனும் நீதிமன்றத்தில் சட்டத்தின்கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் சான்றளிக்காது இருக்குமாறு ஆளொருவரை கட்டாயப்படுத்துகின்ற;

(எ) இச்சட்டத்தின் கீழ் சேர்ப்பிக்கப்பட்ட கோரிக்கையொன்றில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் ஆணைக்குழுவின் முன்னர் தோன்றுவதற்கு நியாயமான காரணமின்றித் தவறுகின்ற;

(ஏ) நியாயமான காரணமின்றி சத்தியஞ்செய்வதற்கு அல்லது உறுதியுரை மொழிவதற்கு மறுக்கின்ற அல்லது உரியமுறையில் சத்தியஞ்செய்து அல்லது உறுதியுரை மொழிந்து ஆணைக்குழுவினால் புலனாய்வு செய்யப்பட்டுக்கொண்டிருக்கும் கருமங்கள் குறித்து அத்தகைய ஆளிடம் கேட்கப்படும் ஏதேனும் கேள்விக்கு மறுமொழியிறுப்பதற்கு மறுக்கின்ற அல்லது தவறுகின்ற;

(ஐ) ஆணைக்குழுவினால் அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஓர் அறிவித்தலின் அல்லது எழுத்திலான கட்டளையின் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவதற்கு நியாயமான காரணமின்றி மறுக்கின்ற அல்லது தவறுகின்ற;

(ஒ) இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணியைப் பிரயோகித்தல், புரிதல் அல்லது நிறைவேற்றுதலுக்கு இயைபான அல்லது இயைபாகக்கூடிய சாத்தியமுள்ள ஏதேனும் ஆவணம் அல்லது விடயம் அல்லது காரியத்தை பொய்யாக்குகின்ற, மறைக்கின்ற, அழிக்கின்ற அல்லது வேறுவகையாக கையுதிர்க்கின்ற அல்லது பொய்யாக்குகை, மறைத்தல், அழித்தல் அல்லது கையுதிர்த்தலைச் செய்விக்கின்ற அல்லது அனுமதிக்கின்ற;

(ஓ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆக்கப் பட்ட ஏதேனும் கட்டளையை நிறைவேற்றுவதற்கு இயைபான அல்லது இயைபாகக்கூடிய சாத்தியமுள்ள ஏதேனும் ஆவணம் அல்லது விடயம் அல்லது காரியத்தைப் பொய்யாக்கு கின்ற, மறைக்கின்ற, அழிக்கின்ற அல்லது வேறு வகையாக கையுதிர்க்கின்ற அல்லது பொய்யாக்குகை, மறைத்தல், அழித்தல் அல்லது கையுதிர்த்தலைச் செய்விக்கின்ற அல்லது அனுமதிக்கின்ற;

(ஔ) 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச்சட்டம் அல்லது 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் கீழான புலனாய்வொன்றுக்கு இயைபானது என அத்தகைய ஆள் அறிகின்ற அல்லது நம்புவதற்கான காரணத்தைக் கொண்டுள்ள ஏதேனும் ஆவணத்தை அல்லது விடயத்தை அழிக்கின்ற அல்லது வேறுவகை யாக கையுதிர்க்கின்ற;

(க) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் நியதி களின்படி ஆணைக்குழுவுக்கு அறிக்கை யொன்று செய்யப்பட்டுள்ளது அல்லது ஏதேனும்

தகவல் வழங்கப்பட்டுள்ளது என்ற அல்லது தவறொன்று தொடர்பான புலனாய்வொன்று செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றது அல்லது செய்யப்படவிருக்கின்றது என்ற நிகழ்வை வெளிவிடுகின்ற அல்லது அத்தகைய புலனாய்வு பங்கத்துக்குள்ளாக்கப்படக்கூடிய சாத்தியமுள்ளதாக வேறொரு ஆளுக்கு வேறு ஏதேனும் தகவலை வெளிவிடுகின்ற; அல்லது

(ங) இச்சட்டத்தின் கீழான தவறொன்றின் வரும்படிகளை அல்லது வரும்படிகளின் விளைவுகளின் ஏதேனும் பாகத்தினை, மறைத்து வைத்திருக்கின்ற அல்லது வைத்திருக்கின்ற அத்தகைய வரும்படிகளை நேரடியாக அல்லது இடையீட்டாளர்களினூடாக நேரடியாகவல்லாமல் மறைத்து வைத்திருந்தாலும்சரி அல்லது வைத்திருந்தாலும்சரி அல்லது தனது சொந்த நன்மைக்காக அல்லது வேறொராளின் அல்லது உருவகமொன்றின் நன்மைக்காக மறைத்து வைத்திருக்கின்ற அல்லது வைத்திருக்கின்ற,

எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரின் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் பின்வருவோருக்கு செய்யப்பட்ட வெளிப்படுத்தல்களிற்கு ஏற்புடையதாதல் ஆகாது.

(அ) ஆளின் கடமைகளைப் புரிவதுடன் தொடர்புபட்ட ஏதேனும் நோக்கத்திற்காக இச்சட்டத்தின்கீழ் அறிக்கை ஒன்றை தயாரிக்கின்ற அவ்வாளின் அலுவலர் அல்லது ஊழியர் அல்லது முகவர்;

(ஆ) ஏதேனும் கருமம் தொடர்பாக சட்டமதியுரையை அல்லது பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக சட்டத்தரணி அல்லது சட்ட மதியுரையாளர்; அல்லது

(இ) மேற்பார்வை அதிகாரியின் பணிகளின் நிறை வேற்றுகையுடன் தொடர்புபடுகின்றதான அந்த அளவிற்கு இயைபான நிறுவனத்தின் மேற்பார்வை அதிகாரி.

*(3)* தகவல்களின் ஏதேனும் வெளிப்படுத்தல் *(2)* ஆம் உப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட எந்த ஆளுக்கு செய்யப்பட்டுள்ளதோ அந்த ஆள் எவரும், பின்வருவனவற்றுக்கு அது அவசியமானதாக இருக்குமளவிற்கு அதன்கண் வேறு ஆளுக்கு அத்தகவல்களை வெளிப்படுத்துதல் ஆகாது-

(அ) முதலாவது குறிப்பிடப்பட்ட ஆளினது கடமைகளைப் புரிதல்; அல்லது

(ஆ) கருமம் தொடர்பிலான சட்டமதியுரை அல்லது பிரதிநிதித்துவத்தை பெற்றக்கொள்ளுதல்.

*(4)* எவையேனும் தகவல்களின் வெளிப்படுத்தல் *(2)* ஆம் உப்பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட எந்த ஆளுக்கு செய்யப்பட்டுள்ளதோ அந்த ஆள் எவரும், அவ்வுப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கத்திற்காக தவிர அல்லது சட்ட மதியுரையை பெற்றுக்கொள்ளும் அல்லது கருமம் ஒன்று தொடர்பில் 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களினை அறிக்கையிடல் சட்டத்தின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட நிதிசார் உளவறிதல் கூறிற்கு பிரதிநிதித்துவம் செய்கின்ற நோக்கத்திற்காக அத்தகவல்களை வெளிப்படுத்துதல் ஆகாது.

**128.** இச்சட்டத்தின் 145 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்க முறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஏழு வருடங்களை விஞ்சாத காலப்பகுதி ஒன்றிற்கான கடூழிய மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

*தகவலை வழங்குவதற்கான சட்டக் கடப்பாட்டின் மீறுகை*

**129.** நாற்பத்தோராம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட எந்தத் தவறுக்கு தண்டம் எதுவும் இச்சட்டத்தினால் அல்லது வேறு இயைபான சட்டத்தினால் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்படவில்லையோ அந்தத் தவறை புரிகின்ற எவரேனும் ஆள், நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான இருவகையிலொரு வகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

*பொதுவான தவறு*

பாகம் IV

## பொது

**130.** நீதிவான் நீதிமன்றம், ஆணைக்குழுவின் பணிப்பின்பேரில் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தொடுக்கப்பட்டவை தவிர இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்காக ஏதேனும் குற்றவழக்கை ஏற்றுக்கவனித்தலாகாது.

*பணிப்பாளர் தலைமையதிபதி ஆணைக்குழுவின் பணிப்பின் மீது நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகளை ஆரம்பித்தல்*

**131.** (1) இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாடுகளுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறொன்றிற்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆள், ஆணைக்குழுவின் நிதியத்திற்கு அல்லது அத்தகைய தவறினால் பாதிக்கப்பட்ட எவரேனும் ஆளிற்கு நட்டஈடாக அத்தகைய பணத் தொகையை செலுத்துவதற்கு நீதிமன்றத்தினால் கட்டளையிடப் படலாம்.

*நட்டஈடு*

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான நட்டஈடு நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றாக அறவிடப் படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் நட்டஈடாக செலுத்தப்படற்பாலதான அத்தகைய பணத்தொகையானதும் விதிக்கப்பட்ட காலப்பகுதி ஒன்றினுள் அல்லது நீதிமன்றத்தினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய தவணைக் கட்டணங்களில் செலுத் தப்பட வேண்டும் என அந்நீதிமன்றமானது கட்டளையிடலாம்.

*பிடியாணையின்றி கைது செய்தகு தவறுகள்*

**132.** இச்சட்டத்தின்கீழான எல்லாத் தவறுகளும் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடைமையின் நோக்கங்களுக்காக பிடியாணையின்றி கைதுசெய்தகு தவறுகளாக இருத்தல் வேண்டும்.

*தவறொன்றைப் புரிதலுக்கு உடந்தையளித்தல்*

**133.** (அ) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிவதற்கு உடந்தையளிக்கின்ற எவராகிலும்; அல்லது

(ஆ) இலங்கையில் புரியப்பட்டால், இச்சட்டத்தின் கீழ் தவறாயமையக்கூடிய செயலொன்று இலங்கையில் வதிகின்ற முதல்வர் ஒருவரின் அலுவல்கள் அல்லது தொழில்கள் தொடர்பாக அல்லது அவர் சார்பில் அத்தகைய செயலை இலங்கைக்கு வெளியே புரிதலுக்கு உடந்தை யளிக்கின்ற எவராகிலும்,

தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் அதேமுறையில் விளங்கப்படுதலும் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன்மேல் முதலாவது குறிப்பிடப்பட்ட தவறொன்றுக்கு இச்சட்டத்தினால் குறித்தரைக்கப்பட்டவாறு அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

இப்பிரிவில் ‘‘உடந்தையளித்தல்’’ என்னும் சொல்லமைப்பு (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 100 ஆம் மற்றும் 101 ஆம் பிரிவுகளில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

எத்தனிப்புகள்

**134.** இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிவதற்கு அல்லது புரிவதனைச் செய்விப்பதற்கு எத்தனிக்கின்றவரும், அத்தகைய எத்தனிப்பின்போது அத்தவறைப் புரியும் முகமாக வேறு ஏதேனும் செயலைச் செய்கின்றவருமான ஆள் ஒருவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் அதேமுறையில் விளங்கப்படுதலும் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் முதலாவது குறிப்பிடப்பட்ட தவறுக்கு இச்சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டவாறு அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

சதிசெய்தல்

**135.** இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிவதற்கு குற்றவியல் சதியொன்றிற்கான திறத்தவராக இருக்கின்ற எவராகிலும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிதல் வேண்டும் என்பதுடன் அதேமுறையில் விளங்கப்படுதலும் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் முதலாவது குறிப்பிடப்பட்ட தவறொன்றிற்காக இச்சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டவாறு அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்:

இப்பிரிவின் நோக்கத்திற்காக "சதிசெய்தல்" என்பது (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 113 அ என்னும் பிரிவின்கீழ் அதற்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் ஏற்புடைமை முதலியன

**136.** (1) இச்சட்டத்தினால் தவிர்க்கப்படாதிருக்கின்றதான அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக அல்லாதிருக்கின்றதான 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் அத்தகைய ஏற்பாடுகள் பொதுவாக இச்சட்டத்திற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளினால் வெளிப்படையாக தவிர்க்கப்படாதிருக்கின்றனவான அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக அல்லாதிருக்கின்றனவான 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் இச்சட்டத்திற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் நியதிகளின்படி தவறொன்றாக அமைகின்ற செயலொன்றுடன் சேர்த்து அத்தகைய தவறு அதே நடவடிக்கையில் புரியப்படுமிடத்து, இச்சட்டத்துக்கான அட்டவணை அ மற்றும் அட்டவணை ஆ என்பவற்றில் குறித்துரைக்கப்பட்டதான தவறுகள், அந்தந்த சட்டவாக்கங்களில் அத்தகைய தவறுகளுக்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அச்சட்டவாக்கங்களில் குறித்துரைக்கப்பட்டதான அதே தண்டனைகளைக் கொண்டிருத்தலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும் அந்தந்த அச்சட்டவாக்கங்களில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறுக்கான தண்டனையானது, ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றை விட குறைவாகவுள்ளவிடத்து அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாத மறியற்றண்டனைக் காலத்திற்கு குறைவாகவுள்ளவிடத்து அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் குறைவாக உள்ளவிடத்து, ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் அல்லது ஏழு ஆண்டுகளை விஞ்சாத மறியற்றண்டனைக் காலப்பகுதியொன்று அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டும் அத்தகைய தவறுகளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையிலுள்ள எவற்றுக்கும் முரணாக எது எவ்வாறிருப்பினும், "ஆதனம்" என்னும் சொல் பருப்பொருள் சார்ந்த அல்லது பருப்பொருள் சாராத, அசையும் அல்லது அசையாத, அருவமான அல்லது உருவமானதாயினுஞ்சரியான மற்றும் அத்தகைய சொத்துக்களின் உரித்து அல்லது அக்கறையை சான்றுப்படுத்துகின்ற சட்ட ஆவணங்கள் அல்லது சாதனங்களாயினுஞ்சரியான ஒவ்வொரு வகையினதான ஆதனங்கள் எனப் பொருள்படுதலும் அவற்றை உள்ளடக்குதலும் வேண்டும்.

(5) இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலறியும் உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகள் இச்சட்டத்துக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

**137.** இச்சட்டத்தினாலோ அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள வேறு ஏதேனும் சட்டத்தினாலோ சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படாதிருக்கும் நடவடிக்கைமுறை பற்றிய கருமங்கள் தொடர்பாக வழக்கின் நீதி தேவைப்படக்கூடியதும் மற்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக அல்லாதிருக்கின்றதுமான அத்தகைய நடவடிக்கைமுறை பின்பற்றப்படலாம். வழக்குகள் வேறு ஏதேனும் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்படுதலாகாது

**138.** 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 306 ஆம் பிரிவானது இச்சட்டத்தின்கீழான தவறுகள் தொடர்பாக நீதிவான் நீதிமன்றத்திலான வழக்கு நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாகாது. குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 306 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாகாமை

**139.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் – உதவி பொலிஸ் கண்காணிப்பாளருக்கான குறிப்பீடு முதலியன

(அ) உதவிப் பொலிசு கண்காணிப்பாளர் என்பது ஒவ்வொரு ஆணைக்குழுவினால் விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரமளிப்பட்ட ஒரு அலுவலர் எனும் குறிப்பீடொன்றாக பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) பொலிசு அலுவலர் என்பது ஆணைக்குழுவின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் எனும் குறிப்பீடொன்றாக பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

**140.** சான்றளிப்பதற்கு இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவின் ஏதேனும் விளக்கத்திற்கு அல்லது விசாரணைக்கு வருகைதருகின்ற ஆள் ஒருவருக்கு ஆணைக்குழுவில் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்றனவாறான அத்தகைய வீதங்களிலும் அத்தகைய நிபந்தனைகளுக்கு அமையவும் அவ்விளக்கத்திற்கு அல்லது விசாரணைக்கு வருகை தருவதற்கான செலவுகளை நிதியத்திலிருந்து செலுத்தப்படலாம். ஏதேனும் விளக்கத்திற்கு அல்லது விசாரணைக்கு வருகை தருகின்ற ஆட்களின் செலவுகள்

*இச்சட்டத்தின் கீழான தவறுகளுக்கான வழக்கு நடவடிக்கைகள் நீதிமன்றத்தின் வேறு ஏதேனும் தொழிலுக்கு முன்னர் எடுக்கப்படுதல் வேண்டும்*

**141.** பாராதூரமான தன்மையையும் அரசின் மீதான தாக்கத்தையும் கவனத்துட்கொண்டு, தேசிய பொருளாதாரத்தின் நலன்கருதி, ஆளுகையின் நேர்மைத்தன்மை, வெளிப்படையான தன்மை மற்றும் வகைகூற வேண்டியமையையும் வளர்ப்பதற்கும் தனியார்துறையின் அலுவல்களில் நேர்மையை ஊக்குவிப்பதற்கும் இச்சட்டத்தின் கீழான தவறுகளுக்கு நீதிமன்றத்திலுள்ள வழக்கு நடவடிக்கைகள் அத்தகைய வேறு தொழிலிலுள்ள அவசரத்தன்மை பற்றிய விசேட சூழ்நிலைகள் அதனை தடுத்தல் தொடர்பில் நீதிமன்றம் அபிப்பிராயப்பட்டாலொழிய, நீதிமன்றத்தின் வேறு ஏதேனும் தொழிலுக்கு முன்னர் எடுக்கப்படுதல் வேண்டும்.

*வழக்கு நடவடிக்கைகள் இரகசியமாக நடாத்தப்படுதல்*

**142.** ஆணைக்குழுவினால் அல்லது அதனால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அதற்கென செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல் இச்சட்டத்தின் கீழான தவறுகளுக்காக ஏதேனும் நீதிமன்றத்திலான வழக்குநடவடிக்கைகளின் முழு அளவிலான அல்லது ஏதேனும் பாகம் அரசியலமைப்பின் 106 ஆம் உறுப்புரைக்கமைய, இரகசியமாக நடாத்தப்படலாம்.

*அவாநிறைவு ஒன்றைக் கொடுப்பவர் தகுதிவாய்ந்த சாட்சி ஒன்றாக இருத்தல்*

**143.** நீதிமன்றம் ஒன்றின் முன்னர் இச்சட்டத்தின் கீழான தவறுகளுக்காக எவையேனும் வழக்குநடவடிக்கைகளில், அவாநிறைவு ஒன்றினை கொடுப்பவர் அவாநிறைவை எடுத்துக் கொண்ட குற்றஞ்சாட்டப்பட்ட ஆளுக்கு எதிராக தகுதிவாய்ந்த சாட்சி ஒன்றாதல் வேண்டும் என்பதுடன் உடந்தை ஒன்றாகக் கருதப் படுதலாகாது என்பதுடன் நீதிமன்றத்தின் அல்லது ஆணைக்குழு வின் முடிவு அல்லது கண்டறிதல், அத்தகைய கொடுப்பவரின் ஒப்புறுதிப்படுத்தப்படாத சான்றின் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதன் காரணமாக மட்டும் சட்டவிரோதமாக இருத்தல் ஆகாது.

*வாழ்க்கைத்துணை தகுதிவாய்ந்த சாட்சி ஒருவராதல்*

**144.** வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் கீழ் எவரேனும் ஆளுக்கு எதிராக எவையேனும் வழக்குநடவடிக்கைகளில் அவ்வாளின் வாழ்க்கைத்துணை தகுதிவாய்ந்த சாட்சி ஒருவராதல் வேண்டும்.

*தகவல் கொடுப்பதற்கான சட்டக் கடப்பாடு*

**145.** (1) இச்சட்டத்தின் கீழ் எந்த விடயத்தை பற்றி விசாரணை செய்வது ஆணைக்குழுவின் கடமையாகவுள்ளதோ அந்த ஏதேனும் விடயம் பற்றிய எவையேனும் தகவல்களை கொடுப்பதற்கு அத்துடன் எந்த தகவலை கொடுப்பதற்கு அவர் தத்துவம் கொண்டுள்ளாரோ அந்த ஏதேனும் தகவலை கொடுப்பதற்கு ஆணைக்குழுவினால்

தேவைப்படுத்தப்படும் ஆள் ஒவ்வொருவரும் அத்தகவலை கொடுப்பதற்கு சட்டரீதியாகப் பிணிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால், உடன்படிக்கையினால், ஒப்பந்தத்தினால் அல்லது வேறு வகையினால் விதிக்கப்படும் தகவலை வெளிப்படுத்துவதன்மீதான இரகசிய அல்லது வேறு மட்டுப்பாடு பற்றிய ஏதேனும் கடப்பாடு எது எவ்வாறிருப்பினும், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுடன் ஆளொருவர் இணங்கியொழுகுதல் வேண்டும்.

ஆணைக்குழுவின் கட்டளைகளுடன் இணங்குதற்கான கடமை

**146**. ஆளொருவர், ஏதேனும் விதிவிலக்கின்றி இச்சட்டத்தின் கீழான தத்துவங்களைப் பிரயோகிப்பதிலும் பணிகளை புரிவதிலும் ஆணைக்குழுவின், பணிப்பாளர் தலைமையதிபதியின் அல்லது அதன் அலுவலர்களின் ஏதேனும் சட்டமுறையான கோரிக்கையுடன், அறிவித்தலுடன், கட்டளையுடன், பணிப்புடன் அல்லது வேண்டுகோளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

பொய்களைப் பேசக்கூடது என்பது நியதிச் சட்டக்கடப்பாடு

**147**. (1) இச்சட்டத்தின்கீழ் எந்த விடயம் மீது விசாரிப்பது ஆணைக்குழுவின் கடமையாகின்றதோ அந்த ஏதேனும் விடயத்தின் மீது கூற்று ஒன்றை அல்லது வேறு சான்றை அளிப்பதற்கும் வழங்குவதற்கான தனது தத்துவத்தை கொண்டுள்ளதுமான ஆணைக்குழுவினால் தேவைப்படுத்தப்படும் ஆள் ஒவ்வொருவரும் பொய்பேசாமல் இருப்பதற்கென சட்ட முறையாகப் பிணிக்கப்படுதல் வேண்டும்:

ஆயினும் எவ்வாறாயினும், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிந்துள்ளவராக குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் ஒருவருக்கு சுயகுற்றச் சாட்டுதலை அல்லது ஒப்புதல் வாக்குமூலத்தை அல்லது சான்றை அளிப்பது ஒரு கடப்பாடாக இருத்தல் ஆகாதென்பதுடன் அவ்வாறு வழங்கப்பட்டிருந்தால், அத்தகைய வாக்கு மூலங்கள் அல்லது சான்று இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் புலனாய்வில் அல்லது வழக்கு நடவடிக்கையில் ஏல்தகவுடையதாதல் ஆகாது.

(2) முற்போந்த உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஆளொருவர் இச்சட்டத்தின் 119 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைந்தவராதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க கையாளப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்கான விளக்கமொன்றில் எவரேனும் சாட்சி, ஏதேனும் முக்கியமான விடயத்தின்மீது, இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட ஏதேனும் புலனாய்வின்போது அவரினால் முன்னர் அளிக்கப்பட்ட அல்லது (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு வொன்றினால் அல்லது 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் நியமிக் கப்பட்ட ஆணைக்குழுவொன்றினால் நடாத்தப்பட்ட ஏதேனும் புலனாய்வின்போது அவரினால் முன்னர் அளிக்கப்பட்ட கூற்றை ஒன்றில் வெளிப்படையாவோ அல்லது அவசியமான உட்கிடை மூலமாகவோ மறுதலிக்குமிடத்து, ஒரு நீதிமுறைவழக்கு நடவடிக்கையின் கட்டமொன்றில் வேண்டுமென்று பொய்யான சான்றையளித்தமைக்காக, சுயாதீனமான மூலமொன்றிலிருந்தான சான்றின்மூலம் முக்கியமான விபரங்களில் அத்தகைய கூற்று ஒப்புறுதிசெய்யப்படுமிடத்து அத்தகைய கூற்றின்மீது செயலாற்று வதும், அத்தகைய விளக்கம் முடிவுறுகையில் ஒரு குற்றச்சாட்டுப் பத்திரத்தின்மேல் அத்தகைய நீதிமன்றத்தின்முன்னர் அத்தகைய சாட்சியை விளக்கத்துக்குட்படுத்துவதும் அல்லது அத்தகைய நீதிமன்றம் மேல்நீதிமன்றமாகவிருப்பின், பணிப்பாளர் தலைமையதிபதியினால் கோப்பிடப்பட்ட குற்றப்பகர்வொன்றின்மீது விளக்கத்துக்குட்படுத்துவதும் எல்லாச் சூழ்நிலைகளிலும் காப்பான தாகவும் நீதியானதாகவும் உள்ளதெனக் கருதினால் தலைமை வகிக்கும் நீதிபதிக்கு அல்லது நீதிவானுக்குச் சட்டமுறை யானதாதல் வேண்டும்:

ஆயினும் எவ்வாறாயினும், இப்பிரிவின்கீழ் செயலாற்றுவதற்கு முன்னர் தலைமைதாங்கும் நீதிபதி சாட்சியை முழுவதுமாக இழிவுபடுத்தவேண்டிய அவசியம் இருத்தலாகாது.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழான ஏதேனும் விளக்கத்தில், குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றப்பகர்வில் அல்லது குற்றப் பத்திரிகையில் சார்த்தப்பட்டுள்ளவற்றுக்கு முரண்பாடாக கூற்றுக்களை அளித்தார் என்பதனை எண்பிப்பது போதுமானதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கூற்றுக்களுள் எது பொய்யானதென எண்பிப்பது அவசியமாதலாகாது.

(5) தலைமைதாங்கும் நீதிபதி அல்லது நீதிவான், உசிதமானதென அவர் கருதின், தகுதியென அவர் எண்ணுகின்றவாறான அத்த கைய காலப்பகுதிக்கு (3) ஆம் உட்பிரிவின்கீழ் எவரேனும் குற்றஞ்சாட்டப்பட்டவரின் விளக்கத்தை ஒத்திவைக்கலாம் என்ப துடன் அத்தகைய ஏதேனும் விடயத்தில், குற்றஞ்சாட்டப்பட்டவர் அத்தகைய விளக்கம் முற்றுப்பெறும்வரை விளக்கமறியலில் இடப் படுதலும் வேண்டும்:

ஆயின், மேன்முறையீட்டு நீதிமன்றம் விதிவிலக்கான சூழ்நிலைகளில் விளக்கம் முடிவுறாதுள்ள நிலையில் அத்தகைய ஆளை பிணையில் விடுவிக்கலாம்.

(6) ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு முரணாக எது எவ் வாறிருப்பினும் -

(அ) சத்தியகடதாசி அல்லது சத்தியத்தின் மீதான கூற் றொன்று

(ஆ) இச்சட்டத்தின்கீழ் நடாத்தப்படும் புலனாய்வின் போது ஆணைக்குழுவிற்கு காண்பிக்கப்பட்ட, ஒப்படைக்கப் பட்ட அல்லது கொடுத்துதவப்பட்ட ஏதேனும் புத்தகம், ஆவணம், காசோலை, பதிவேடு அல்லது இடாப்பு அல்லது அவற்றின் அல்லது அத்தகைய ஏதேனும் புத்தகத்தில், ஆவணத்தில், பதிவேட்டில் அல்லது இடாப்பில் உள்ள ஏதேனும் பதிவின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதி ஒன்று,

இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்காக எவரேனும் ஆளை விளங்கு வதில் இயைபானவையாகவும் ஏல்தகவுடையளவாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன், நிறைவேற்றுகை பற்றிய நிகழ்வினதும் அதன் உள்ளீடுகளினதும் முதற்றோற்ற அளவிலான எண் பிப்பாதலும் வேண்டும்.

*அலுவலர்கள் எப்பொழுதும் கடமையில் இருத்தல்*

**148.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஆணைக்குழுவின் அலுவலர் ஒவ்வொருவரும் தமது கடமைகள் அல்லது பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவைப்படுத்தும்போது எப்பொழுதும் கடமையில் இருப்பதாக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே ஏதேனும் இடத்தில் இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அவருக்கு அளிக்கப்பட்ட கடமைகளை அல்லது பணிகளை நிறைவேற்றலாம் என்பதுடன் தத்துவங்களைப் பிரயோகிக்கலாம்.

*பிணை*

**149.** (1) இச்சட்டத்தின்கீழான எல்லாத் தவறுகளும் பிணையளிக்கப்படக்கூடியதாகவும் பிணையளிக்க முடியாதவையாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிவதில் சம்பந்தப்படுகின்றவர் அல்லது புரிந்துள்ளாரென சந்தேகிக்கப்படும் அல்லது குற்றஞ்சாட்டப்படும் எவரேனும் ஆள், நீதிவான் முன்னர் தோன்றுமிடத்து, கொண்டுவரப்படுமிடத்து அல்லது நிறுத்தப்படுமிடத்து அல்லது சரணடையுமிடத்து, நீதிவான் 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, பிணைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி பிணையை வழங்குதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய கண்டுபிடித்தலை உறுதிப்படுத்துகின்ற பணிப்பாளர் தலைமையதிபதியின் சான்றிதழொன்றுடன் எவரேனும் நீதிவான் முன்னர் அவாநிறைவொன்றை பரிந்து கேட்டல், ஏற்றுக்கொள்ளுதல் அல்லது முனைகின்றமையை உள்ளடக்கி கொண்டுவரப்படுகின்ற அல்லது நிறுத்தப்படுகின்ற அல்லது சரணடைகின்றதான இச்சட்டத்தின் கீழான தவறொன்றை எவரேனும் ஆள் புரிந்துள்ளார் என கண்டறிந்தால், நீதிவான் விளக்கம் முடியும்வரை அத்தகைய ஆளை விளக்கமறியலில் வைத்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், நீதிவான் விதிவிலக்கான சூழ்நிலைகளிலும் மற்றும் பதிவு செய்யப்படுவதற்கான காரணங்களுக்காகவும் அத்தகைய ஆளை விளக்கம் முடியும் முன்னர் எந்த நேரத்திலும் பிணையில் விடுதலை செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், கட்டுக்காப்பிலுள்ள ஆளுக்கு எதிரான வழக்கு நடவடிக்கைகளை

தொடுப்பதற்கு உளக்கருதவில்லை என, ஆணைக்குழு நீதிவானுக்கு தெரிவிக்குமிடத்து, அத்தகைய உட்பிரிவின் கீழான ஏதேனும் வழக்கு நடவடிக்கைமுறையில், அத்தகைய ஆள் உடனடியாக விடுவிக்கப்படுதல் வேண்டும்.

**150.** (1) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றினைப் புரிந்துள்ளமைக்காக குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவர்மீது விதிக்கப்பட வேண்டிய மறியற்றண்டனை காலத்தினைத் தீர்மானிக்கும்போது, பின்வரும் காலணிகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அதிகரித்த மறியற் தண்டனைக் காலத்தை விதிப்பதற்கு அனுமதியளிக்கின்ற தீவிர காரணிகளாக கணக்கிலெடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும். தண்டனையளிக்கும் வழிகாட்டு நெறிகள்

(அ) தவறொன்றினைப் புரிந்தமையானது சமுதாயத்தின் மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது;

(ஆ) இலங்கை அரசாங்கத்திற்கு மற்றும் பொதுமக்களிற்கு ஏதேனும் நிதிசார் மற்றும் பொருள் இழப்பை விளைவித்துள்ளது என்பது;

(இ) விளைவிக்கப்பட்ட சேதங்களுக்கான எதிரீட்டுக்காக மற்றும் மீட்டளிப்புக்காக ஏதேனும் நிதிசார் மற்றும் வேறு வளங்களை தேவைப்படுத்துகின்றது என்பது; அத்துடன்

(ஈ) தவறொன்றைப் புரிந்தமையானது நாட்டை பாதகமாக பாதித்துள்ளது என்பது.

(2) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிந்துள்ளமைக்காக குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவர் மீது விதிக்கப்படவேண்டிய மறியற்றண்டனைக் காலப்பகுதியைத் தீர்மானிக்கும்போது, பின்வரும் காரணிகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய குறைக்கப்பட்ட மறியற்றண்டனைக் காலப்பகுதி ஒன்றை அனுமதிக்கின்ற தணிக்கும் காரணிகளாக கணக்கிலெடுக்கப்படுதல் வேண்டும்–

(அ) மனவுளைச்சலை வெளிப்படுத்தல்;

(ஆ) தடுத்துவைத்தலில் அல்லது விளக்கமறியலில் வைத்தலில் செலவழிக்கின்ற காலப்பகுதி;

(இ) எந்தப் பலவந்தப்படுத்தலின்கீழ் அல்லது வலுக் கட்டாயப்படுத்தலின்கீழ் தவறு புரியப்பட்டுள்ளதோ அந்த பலவந்தப்படுத்தல் அல்லது வலுக்கட்டாயப் படுத்தல்;

(ஈ) தவறொன்றினால் பலிக்குட்பட்டோருக்கு குற்றஞ் சாட்டப்பட்டவரினால் தன்னிசையாக வழங்குகின்ற இழப்பீட்டுக்கான எதிரீடு; அல்லது

(உ) எத்தவறுகள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றவாளி என குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டாரோ அந்த தவறுகள் தொடர்பிலான பகிரங்க கண்டிப்பு.

*குறித்தசில பிரிவுகளை மீறுவதற்கான குடியியல் பொறுப்பு*

**151.** (1) இச்சட்டத்திலுள்ள எதுவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியுள்ள மற்றைய ஆளின் நடத்தை காரணமாக அல்லது அவரின் நடத்தை மீதுள்ள நம்பிக்கை காரணமாக இழப்பு அல்லது சேதத்தை உறுகின்ற ஆளொருவரின், மீறுகை தொடர்பிலான தவறொன்றுக்கு மற்றைய ஆள் குற்றஞ்சாட்டப்பட்டாலுஞ்சரி அல்லது இல்லா விட்டாலுஞ்சரி அல்லது குற்றவழக்கொன்றில் மீறுகையானது எண்பிக்கப்பட்டிருந்தாலுஞ்சரி இல்லாவிட்டாலுஞ்சரி மற்றைய ஆளுக்கெதிராக குடியியல் வழக்கு நடவடிக்கைகளை தொடங்கு வதன்மூலம் உறப்பட்ட இழப்பு அல்லது சேதத்தொகையை அறவிடுவதற்கான உரிமையை பாதிப்பதாக பொருள் அமைத்துக் கொள்ளப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவில் உள்ள எதுவும் மீறுகையை அமைத்து ருவாக்கும் நடத்தைதொடர்பில் வேறு ஏதேனும் சட்டத்தின்கீழான பொறுப்பை பாதிப்பதாக பொருள் அமைத்துக் கொள்ளப்படு தலாகாது.

*விலக்களிப்புக்கள்*

**152.** (1) ஆணைக்குழுவானது தீர்வையின், அறவீட்டின், வீதவரி யின், விதிப்பனவின், கட்டணத்தின் அல்லது வரியின் கொடுப்பன விலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

*(2)* கையொப்பமிடப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட எந்த ஆவணத்தின்கீழ் ஆணைக்குழுவானது பயனுகரியாகவுள்ளதோ அந்த ஏதேனும் ஆவணம் தொடர்பில் பதிவுக்கட்டணம் எதுவும் செலுத்தப்படற்பாலதாதல் ஆகாது.

*(3)* நீதிமன்றமானது இலவசமாக ஆணைக்குழுவிற்கு வழக்கு நடவடிக்கைகள் மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட நாட்குறிப்பு பதிவுகளின் பிரதிகளை வழங்குதல் வேண்டும்.

**153.** *(1)* இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பின்வருவனவற்றிற்கு ஏற்புடையதாதல் வேண்டும் – *நியாயாதிக்கம்*

(அ) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்ற எவரேனும் இலங்கைப் பிரசை;

(ஆ) (i) இலங்கையில் முழுவதுமாக அல்லது பகுதியளவாக;

(ii) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்பில் அல்லது அதன்மீது;

(iii) இலங்கையின் வான்பரப்பில்;

(iv) இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அல்லது இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமான அல்லது அதனால் பயன்படுத்தப்பட்ட வானூர்தியில் அல்லது கலத்தில் அல்லது அவை தொடர்பில்;

(v) 1996 ஆம் ஆண்டில் 9 ஆம் இலக்க, இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு அமைய இலங்கையின் இராஜதந்திர தூதரகம் ஒன்றின் அலுவலக வளவுகளினுள் அல்லது இலங்கையின் காவற்றூது நிலையம் அல்லது அலுவலகத்தினுள் அல்லது அத்தகைய

இராஜதந்திர தூதரகத்தின் அல்லது காவற்றூது நிலையத்தின் தலைவரின் வதிவிடத்தில் அல்லது எவரேனும் இராஜதந்திர அல்லது காவற்றூது அலுவலரின் அல்லது அத்தகைய தூதரகத்தின் அல்லது நிலையத்தின் வேறு எவரேனும் ஊழியரின் வதிவிடத்தில் முழுமை யாக அல்லது பகுதியளவாக; அல்லது

(vi) இலங்கை அரசாங்கத்தின் நியதிச்சட்ட சபை ஒன்றின் இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள அலுவலக வளவுகளினுள் அல்லது அத்தகைய நியதிச் சட்டசபையின் ஊழியர் ஒருவரின் வதிவிடத்தினுள் முழுமையாக அல்லது பகுதியானளவாக; அல்லது

(இ) (i) இலங்கைப் பிரசை ஒருவர் தொடர்பில்; அல்லது

(ii) இலங்கை அரசாங்த்தினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட சொத்தொன்று தொடர்பில்,

இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே இச்சட்டத் தின்கீழ் தவறொன்றைப் புரிகின்ற எவரேனும் ஆள்;

(2) இலங்கைப் பிரசை ஒருவர் வெளிநாட்டு அரசில் தனது இராஜதந்திர அந்தஸ்து காரணமாக அத்தகைய அரசொன்றினால் வழங்கப்பட்டதும், அத்தகைய செயல் அல்லது செய்யாமை தொடர்பில் அத்தகைய பிரசை இராஜதந்திர விடுபாட்டுரிமையை அனுபவித்தாலுஞ்சரி அல்லது இல்லாவிட்டாலுஞ்சரி குற்றவாளியாக இருக்கவேண்டியவரும் இலங்கைக்கு வெளியே புரியப்பட்ட அதன் ஒவ்வொரு தவறுக்காகவும் இச்சட்டத்தின்கீழ் தண்டனைக்கு அல்லது வேறுவகையில் அல்லாமல் ஆளாதலும் வேண்டும்.

(3) இப்பிரிவிலுள்ளது எதுவும், அத்தகைய செயல் அல்லது செய்யாமை தொடர்பில் எந்த நாட்டின் சட்டங்களின்கீழ் அத்தகைய செயல் செய்யப்பட்டதோ அல்லது செய்யாதுவிடப்பட்டதோ அந்த நாட்டுச் சட்டங்களின்கீழ் எவரேனும் இலங்கைப் பிரசையின் பொறுப்பைப் பாதிப்பதாக பொருள் அமைத்துக்கொள்ளப்படுதலாகாது.

**154.** (1) தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டம் ஆனது அவ்வட்டவணையின் ஆ என்னும் பாகத்திற்கு உடன் முன்னர் காணப்படும் விடயங்களின் .......... என்னும் விடயத்தினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் விடயத்தினை சேர்ப்பதன்மூலம் அச்சட்டத்திற்கான அட்டவணையானது இத்தால் திருத்தப்படுகின்றது:- மீளவொப்படைத்தல்

"(....) 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தினால் மேவப்பட்ட தவறொன்று;"

(2) ஏதேனும் அரசுடன் இலங்கை அரசாங்கத்தினால் செய்யப்பட்ட மீள ஒப்படைத்தல் ஒழுங்கேற்பாடு இச்சட்டத்தில் நடைமுறைக்குவரும் தேதியன்று வலுவிலுள்ளவிடத்து, அத்தகைய ஒழுங்கேற்பாடு, தேசிய அரசுப் பேரவை 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீளவொப்படைத்தற் சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தின் கீழான தவறுகள் தொடர்பில் மீள ஒப்படைத்தலுக்கான ஏற்பாட்டை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் அரசுடன் இலங்கை அரசாங்கத்தினால் செய்யப்பட்ட மீள ஒப்படைத்தல் ஒழுங்கேற்பாடு இல்லாதவிடத்து, ஆணைக்குழுவானது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம், தேசிய அரசுப் பேரவை 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீளவொப்படைத்தற் சட்டத்தின் நோக்கங்களுக்காக இச்சட்டத்தில்

குறித்துரைக்கப்பட்ட தவறுகள் தொடர்பில் மீள ஒப்படைத்தலுக்காக ஏற்பாடுசெய்து அவ்வரசுடன் இலங்கை அரசாங்கத்தினால் செய்யப்பட்ட மீளவொப்படைத்தல் ஒழுங்கேற்பாடாக ஊழலுக் கெதிரான ஐக்கிய நாடுகள் சபை சமவாயத்தை (யுஎன்சிஎசி) கருதலாம்.

(4) இச்சட்டத்தின்கீழான தவறொன்றிற்கு குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆளினை மீள ஒப்படைத்தலுக்காக மற்றைய அரசின் அரசாங்கத்தினால் அல்லது அதன்சார்பில் இலங்கை அரசாங்கத்திற்கு கோரிக்கையொன்று செய்யப்படுகின்றவிடத்து, ஆணைக்குழுவானது இலங்கை அரசாங்கத்தின் சார்பில் அத்தவறுக்காக அவ்வாளினை குற்றவழக்கிற்காக அல்லது மீளவொப்படைத்தலுக்காக இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள அல்லது எடுப்பதற்கு உத்தேசித்துள்ள வழிமுறைபற்றிய அரச கோரிக்கையினை அரசாங்கம் உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

பரஸ்பர சட்ட உதவி

**155**. இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்கான புலனாய்வுக்காகவும் குற்றவழக்கிற்காகவும் அத்துடன் சொல்லப்பட்ட சட்டத்தின் கீழான குறிக்கோள்களில் எவற்றுக் காகவும் அது அவசியமானபோதெல்லாம் பெயர்குறிப்பிடப்பட்ட இலங்கை அரசாங்கத்திற்கும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் மற்றைய அரசுகளுக்கு இடையே உதவி வழங்குவது தொடர்பில் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்

**156**. (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் அல்லது எந்த கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்தக்கருமங்கள் தொடர்பில் ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையுடன் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வெளியீட்டு தேதியன்று அல்லது அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வாத்தமானியில் வெளியிடப்பட்டதன் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்திற்காக பாராளுமன்றம் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால், அதன்கீழ் முன்னரே ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லா தொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி நீக்கப்பட்டதாக கருதப்படும் தேதிபற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*விதிகளை ஆக்குவதற்கான ஆணைக்குழுவின் தத்துவம்*

**157.** (1) ஆணைக்குழுவானது எக்கருமங்களுக்காக இச்சட்டத் தினால் விதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படு கின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமங்கள் எல்லாம் அல்லது ஏதேனும் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுவதன்மேல் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

*நிதியாண்டு*

**158.** (1) ஆணைக்குழுவின் நிதியாண்டானது ஒவ்வொரு ஆண்டின் சனவரி முதலாம் நாளன்று தொடங்கும் பன்னிரெண்டு மாதகாலப்பகுதியாதல் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது அதன் வருமானம் மற்றும் செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் அதன் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களுக்குமான முறையான கணக்குப் புத்தகங் களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) உறுப்புரை 41ஆ விற்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆணைக்குழுக்களின் கணக்குகளை கணக்காய்வு செய்வது தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடு ஆணைக்குழுவின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

அறிக்கைகள்

**159.** (1) ஆணைக்குழுவானது, அவசியமானதென அது கருதக்கூடியவாறு அடிக்கடியாக அதன் செயற்பாடுகள் பற்றிய அறிக்கைகளைத் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும் ஆகக் குறைந்தது ஓர் அறிக்கையையாவது தயாரித்தலும் வேண்டும்.

(2) ஆணைக்குழுவானது அதனது செயல்நிறைவேற்று மதிப்பீட்டு அறிக்கைகளை ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும் காலாண்டுக்கு ஒருமுறை தயாரித்தல் வேண்டும்.

(3) ஆணைக்குழுவானது அவ்வாறு தயாரிக்கப்பட்ட அறிக்கை ஒவ்வொன்றையும் சனாதிபதிக்கு அனுப்பிவைக்கச் செய்தல் வேண்டும். சனாதிபதி அதனை பாராளுமன்றம் முன்னர் இடச்செய்தல் வேண்டும்.

(4) பாராளுமன்றத்தின் முன்னர் இடப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கைகள் அந்தரங்கத் தன்மை மற்றும் தனிப்பட்ட தரவு என்பவற்றை கவனத்துட்கொண்டு, ஆணைக்குழுவின் அலுவலக வலைத்தளம் ஊடாக பொதுமக்களிற்கு கிடைக்கக்கூடியதாக செய்யப்படுதல் வேண்டும்.

அரசியலமைப்பின் 140 ஆம் உறுப்புரையின் பிரயோகம்

**160.** (1) ஆணைக்குழுவிற்கெதிராக நிவாரணம் நாடப்படுகின்ற விண்ணப்பங்கள் தொடர்பில் அரசியலமைப்பின் 140 ஆம் உறுப்பரையினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு உரித்தாக்கப்பட்ட நியாயாதிக்கம் உயர்நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படல் வேண்டுமென்பதுடன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அல்ல.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டத்தின்கீழ் புலனாய்வொன்றை நடாத்துதலைத் தொடங்குவதிலிருந்து அல்லது தொடர்ந்து நடாத்துவதிலிலருந்து அல்லது இச்சட்டத்தில் அதற்களிக்கப்பட்ட தத்துவங்களுள் எவற்றையும் பிரயோகிப்பதிலிருந்து

அல்லது இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் பணிப்பை விடுவிப்பதிலிருந்து ஆணைக்குழுவை தடைசெய்கின்ற அல்லது நிறுத்துகின்ற அல்லது தடைசெய்கின்றதான அல்லது நிறுத்துகின்றதான பயனைக் கொண்டுள்ள தடைக்கட்டளை அல்லது தடைசெய் கட்டளை எதுவும் நீதிமன்றத்தினால் வழங்கப்படுதலாகாது.

இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வேறு சட்டத்தைவிட மேலோங்கி நிற்றல்

**161.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்துடன் முரணாக இருக்குமிடத்து அல்லது ஒவ்வாதனவாக இருக்குமிடத்து இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்

**162.** (1) இச்சட்டத்தின் நோக்கத்திற்காக –

(அ) வேறு எவரேனும் ஆளின் நம்பிக்கைப்பொறுப்பில் அல்லது அவரின் நன்மைக்காக ஆளொருவரினால் வைத்திருக்கப்படுகின்ற அல்லது ஆளொருவரின் பெயரில் உள்ள ஆதனம் அத்தகைய வேறு ஆளினால் நேரடியாகவல்லாமல் சொந்தமாக்கப்பட்டிருப்பதாக கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அரசாங்கத்திற்கான இச்சட்டத்திலுள்ள குறிப்பீடு ஒவ்வொன்றும் நீதித்துறையில் தலையீட்டைச் செய்யாத முறையில் பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் அரசியலமைப்பின் உறுப்புரை 111இ என்பதற்கு அமைந்ததாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலொழிய –

“தொழில்தருநரின் பாதகமான தொழில் நிலைமைகள்” ஆனது இணைந்து வேலை செய்பவர்களினாலான தொல்லைகளை உள்ளடக்குதல் வேண்டும். இது தொழில்தருநரினால் செய்யப்படுவதாகக் கருதப்படுகின்றது. அத்தகைய செயல்தொழில்தருநரின் அறிவுடன் அல்லது அங்கீகாரத்துடன் செய்யப்படுகின்றதா என்பது முக்கியமானதல்ல;

"இணைந்த தவறுகள்" என்பது இச்சட்டத்தில் குறித்துரைக் கப்பட்ட ஏதேனும் தவறு தவிர்ந்த இச்சட்டத்தின் 41 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தவறுகள் எனப் பொருள் படும்;

"இலஞ்சம்" என்பது இச்சட்டத்தின் III ஆம் பாகத்தின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு முரணாக ஏதேனும் அவாநிறைவைக் கொண்ட முனைதல், பரிந்து கேட்டல் அல்லது ஏற்றுக் கொள்ளல் எனப் பொருள்படும்;

"பிள்ளை" என்பது (61 ஆம் அத்தியாயமான) மகவேற்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் மகவேற்கப்பட்ட வளர்ப்பு பிள்ளை அல்லது பிள்ளை ஒன்று என்பதனை உள்ளடக்கு கின்றது;

"உள்ளூராட்சி ஆணையாளர்" என்பது எவரேனும் பிரதி உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் எவரேனும் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் என்பதனை உள்ளடக்கு கின்றது;

"முறைப்பாடு" என்பது இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றமை தொடர்பில் ஆணைக்குழுவிற்கு இலத்திரனியல் வழிமூலமாக அல்லது வேறு வகையில் பெறப்பட்ட கூற்றுடன் ஏதேனும் எழுத்திலான அல்லது வாய்மொழிமூலமான தொடர்பாடல் எனப்பொருள்படும். இதில் தொடர்பாளர் தனது அடையாளத்தை வெளிப்படுத்துகின்றார். இது 42 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ), (இ) அல்லது (ஈ) என்னும் பந்தியில் விதிக்கப்பட்ட வழிகள் ஊடாக ஆணைக்குழுவின் கவனத் திற்கு வருகின்ற ஏதேனும் விடயத்தை உள்ளடக்காது:

"ஆவணங்கள்" என்பது ஏதேனும் வடிவத்தில் பதியப்பட்ட தகவல்களையும் வாசிக்கக்கூடிய வடிவத்தில் இல்லாமல் வேறுவகையில் பதியப்பட்ட தகவல்கள் தொடர்பில் அதனது தயாரிப்புக்கான குறிப்பீடுகளையும் உள்ளடக்குதல் வேண்டும் என்பதுடன் வாசிக்கக்கூடிய வடிவத்திலான தகவல்களின் பிரதி ஒன்றைத் தயாரிப்பதற்கான குறிப்பீடுகளையும் உள்ளடக்கும்;

"இலத்திரனியல் தொடர்பாடல்" என்பது இலத்திரனியல், காந்தவியல், கட்புலவியல் அல்லது அதேபோன்ற வேறு வழிகள் மூலம் தோற்றுவிக்கப்பட்ட, அனுப்பப்பட்ட, பெறப்பட்ட அல்லது களஞ்சியப்படுத்தப்பட்ட தரவு செய்திவழிகள் மூலம் செய்யப்பட்ட ஏதேனும் தொடர்பாடல் எனப்பொருள்படும்;

"நிறைவேற்று அலுவலர்" என்பது, தொழிற்சங்கம் ஒன்றிற்கான குறிப்பீட்டுடன் பயன்படுத்தப்படும்போது (138 ஆம் அத்தியாயமான) தொழிற்சங்கங்கள் கட்டளைச்சட்டத்தில் உள்ளவாறு அதே பொருளைக் கொண்டுள்ளது;

"வெளிநாட்டு பகிரங்க உத்தியோகத்தர்" என்பது -

(அ) இலங்கைக்கு வெளியேயுள்ள நாடொன்றின் அல்லது ஆள்புலத்தின் (அல்லது அத்தகைய ஒரு நாட்டின் அல்லது ஆள்புலத்தின் ஏதேனும் உட்பிரிவு) நியமிக்கப்பட்டாலுஞ்சரி அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டாலுஞ்சரி ஏதேனும் வகையினதான சட்டவாக்க, நிருவாக அல்லது நீதிமுறை பதவிவகிக்கின்றவரான தனியாள் ஒருவர்;

(ஆ) (i) இலங்கைக்கு வெளியேயுள்ள நாடொன்றிற்காக அல்லது ஆள்புலம் ஒன்றிற்காக அல்லது அவற்றின் சார்பில் அல்லது அத்தகைய நாடொன்றின் அல்லது ஆள்புலத்தின் ஏதேனும் உபபிரிவுக்காக அல்லது அவற்றின் சார்பில் பகிரங்க பணியொன்றைப் பிரயோகிக்கின்றவரான தனியாள் ஒருவர்; அல்லது

(ii) அவ் நாட்டின் அல்லது ஆள்புலத்தின் அல்லது உபபிரிவின் எவரேனும் பகிரங்க முகவராண்மைக்காக அல்லது பகிரங்க தொழில் முயற்சிக்காக பகிரங்க பணியொன்றைப் பிரயோகிக்கின்றவாரான தனியாள் ஒருவர்; அல்லது

(இ) பகிரங்க சர்வதேச ஒழுங்கமைப்பொன்றின் உத்தியோகத்தர் அல்லது முகவர் ஒருவராக இருக்கின்றவரான தனியாள் ஒருவர்

எனப் பொருள்படும்.

"அரசாங்கம்" என்பது, சட்டவாக்க, நிறைவேற்று மற்றும் நீதித்துறையை உள்ளடக்குகின்றது;

"அவாநிறைவு" என்பது, பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது -

(அ) பணம் அல்லது ஏதேனும் கொடை, கடன், கட்டணம், வெகுமதி, தரகு, பெறுமதிவாய்ந்த பிணையம் அல்லது அசைகின்றதாயினுஞ்சரி அல்லது அசையாததாயினுஞ்சரி ஏதேனும் விபரணத்தினவான வேறு ஆதனம் அல்லது ஆதனத்திலான அக்கறை:

இப்பந்தியின் நோக்கங்களுக்காக, "பணம்" என்பது இலங்கையில் அத்தகைய நாணயம் ஏற்றங்கீகரிக்கப்பட்டாலுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரி சட்ட வழங்குகைக்காக ஏற்றங்கீகரிக்கப்பட்ட எண்ணிம அல்லது கணணி வழிப்படிவத்தில் அமைந்துள்ளதான நாணயத்தை உள்ளடக்குகின்றது.

(ஆ) ஏதேனும் பதவி, தொழில் அல்லது ஒப்பந்தம்;

(இ) முழுமையாகவாயினுஞ்சரி அல்லது பகுதியளவாயினுஞ்சரி எத்தகையதுமான ஏதேனும் கடனின், கடப்பாட்டின் அல்லது வேறு பொறுப்பின் ஏதேனும் கொடுப்பனவு, விடுவிப்பு பொறுப்புவிடுப்பு அல்லது ஒழித்துக்கட்டுகை;

(ஈ) பாலியல் நாட்டம்;

(உ) ஏதேனும் உரிமையை அல்லது ஏதேனும் பதவிமுறை அதிகாரத்தை அல்லது கடமையை பிரயோகிக்கின்ற அல்லது அவற்றைப் பிரயோகிக்காதிருக்கின்றது உட்பட, ஏற்கனவே தொடுக்கப்பட்டிருந்தாலுஞ்சரி இல்லா விட்டாலுஞ் சரி ஒழுக்காற்று தன்மையினை அல்லது தண்டஞ்சார் தன்மையினை ஏதேனும் வழக்கில் அல்லது வழக்குநடவடிக்கைக ளிலிருந்து உறப்பட்ட அல்லது அடையப்பட்ட ஏதேனும் தண்டம் அல்லது இயலாமையி லிருந்தான பாதுகாப்பு உட்பட எத்தகையது மான ஏதேனும் விபரணத்தினவான வேறு ஏதேனும் நாட்டம் அல்லது அனுகூலம்;

(ஊ) முற்போந்த பந்திகள் (அ), (ஆ), (இ), (ஈ) அல்லது (உ) என்பவற்றின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் கொடை முனைவு, பொறுப்பு முயற்சி அல்லது ஏதேனும் அவாநிறைவு பற்றிய வாக்குறுதி

"உயர் ஆபத்து வகைகள்" என்பது அத்தகையதான ஒழுங்கு விதிகளினால் விதித்துரைக்கப்பட்டதான வகைகள் எனப் பொருள்படும்;

பிரிவு *42* மற்றும் *43* இன் நோக்கங்களுக்காக "தகவல்" என்பது *42* ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகளின்கீழ் பெறப்பட்ட முறைப்பாடு மற்றும் விடயப்பொருள் தவிர எதனையும் எனப்பொருள்படும் என்பதுடன் வேறு எல்லாச் சூழ்சிலைகளிலும் "தகவல்" என்பது அதனது பொது வான கருத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்;

"தகவல் அளிப்பவர்" என்பது, இடித்துரைப்பவர் என்பதனை உள்ளடக்குகின்றது;

"நீதிமுறை அலுவலர்" என்பது அரசியலமைப்பில் அத்தகைய சொல்லமைப்பிற்கு குறித்தளிக்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"நிரற்படுத்தப்பட்ட கம்பெனி" என்பது, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் அத்தகைய சொல்லமைப்பிற்கு குறித்தளிக்கப்பட்ட அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"உள்ளூரதிகாசபை" என்பது, மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேசசபை என்று பொருளாகும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் சபையினால் அல்லது பிரதேச சபையினால் பிரயோகிக்கப்பட்ட, புரியப்பட்ட அத்துடன் நிறைவேற்றப்பட்ட தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் என்பவற்றுக்கு நேரொத்ததாகவுள்ள அல்லது ஒத்ததாகவுள்ள தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் என்பவற்றைப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும் மற்றும் நிறைவேற்றுவதற்கும் என ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும்;

"உள்ளூர் அல்லது வெளிநாட்டு நிபுணர்" என்பது (14 ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் நிபுணரை உள்ளடக்குகின்றது;

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழான நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சர் எனப் பொருள்படும்;

"உள்ளார்ந்ததல்லாத மாதிரி" என்பது,

(அ) தலைமயிரின் மாதிரி ஒன்று;

(ஆ) நகம் ஒன்றிலிருந்து அல்லது நகம் ஒன்றின் கீழிருந்து எடுக்கப்படும் மாதிரியொன்று;

(இ) ஆளொருவரின் உடலின் அந்தரங்க உறுப்பு தவிர்ந்த வேறு ஏதேனும் உறுப்பிலிருந்து அல்லது வாயிலிருந்து எடுக்கப்படும் நீர்மம் ஆனால் வேறு ஏதேனும் உடற்துளையல்லாதது;

(ஈ) உமிழ்நீர்; அல்லது

(உ) பின்வருவனதவிர, ஆளொருவரின் உடலின் ஏதேனும் உறுப்பை அழுத்துகை -

(i) அந்தரங்கப் பாகம் ஒன்றின் அழுத்துகை;

(ii) முகத்தின் அழுத்துகை;

(iii) இனங்காணல் விபரங்கள்;

ஆளொருவரின் உடல் தொடர்பிலான ''அந்தரங்கப் பாகம்'' என்பது பிறப்புறுப்பு அல்லது குதப்பகுதி எனப் பொருள்படும் என்பதுடன் பெண் ஒருவரின் விடயத்தில் மார்பகங்களை உள்ளடக்குகின்றது.

''இனங்காணும் விபரங்கள்'' என்பது ஆளொருவரின் புகைப்படங்கள், விரல் அடையாளங்கள், உள்ளங்கை அடையாளங்கள், உள்ளங்கால் அடையாளங்கள், கால் பெருவிரல் அடையாளங்கள் மற்றும் ஆளாருவரின் நிறை மற்றும் உயர அளவீடுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது;

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்று தொடர்பில் ''பதவி தாங்குநர்கள்'' என்பது, அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் தலைவர், துணைத்தலைவர், செயலாளர் அல்லது நிறைவேற்றுக்குழுவின் உறுப்பினர் ஒருவர் மற்றும் அத்தகைய அரசியல் கட்சி தொடர்பில் பணிப்புகளை வழங்குவதற்கு முறையாக தத்துவமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள் எனப்பொருள்படும் அத்துடன் போசகராயினுஞ்சரி, தலைவராகவாயினுஞ் சரி, மதியுரைஞராகவாயினுஞ்சரி அல்லது வேறுவகையில் எவ்வாறாகிலும், பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அத்தகைய அரசியல் கட்சியின் தலைவரையும் உள்ளடக்குகின்றது;

"ஆள்" என்பது, இயற்கை ஆள் மற்றும் சட்ட ஆட்கள் ஆகிய இரண்டையும் உள்ளடக்குகின்றது;

இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, "ஆணைக்குழுவிற்கு உதவுகின்ற ஆள்" என்பது ஏதேனும் முறையில் ஆணைக்குழுவிற்கு உதவுகின்ற எவரேனும் ஆள் எனப் பொருள்படும்;

"விதித்துரைக்கப்பட்டது" என்பது ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்;

"தனியார்துறை உருவகம்" என்பது 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு குறித்துரைக்கப்பட்ட தொழில் முயற்சி ஒன்று எனப் பொருள்படும்;

"மாகாணசபை" என்பது, அரசியலமைப்பின் XVII அ என்னும் அத்தியாயத்தில் தாபிக்கப்பட்ட மாகாணசபை ஒன்று எனப் பொருள்படும்;

"பகிரங்க அதிகாரசபை" ஆனது அரசாங்க அமைச்சு, அரசாங்கத் திணைக்களம், மாகாணசபை, உள்ளூரதிகாரசபை அல்லது பகிரங்க கூட்டுத்தாபனம் என்பவற்றை உள்ளடக்குகின்றது;

"பகிரங்க கூட்டுத்தாபனம்" என்பது மானியம், கடன் அல்லது வேறு வடிவத்தின் வழியாக அரசாங்கத்தினால் பகுதியளவினதாக அல்லது முழுமையாக ஏற்பாடுசெய்யப்பட்ட மூலதனத்துடன் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டிருந்த அல்லது தாபிக்கப்படுகின்ற ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு எனப் பொருள்படும் என்பதுடன் இச்சட்டத்தின்கீழ் அனைத்து அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனங்களையும் உள்ளடக்குகின்றது;

"பகிரங்க சர்வதேச நிறுவனம்" என்பது அதன் உறுப்பினர்கள் பின்வருவனவாக உள்ள ஒழுங்கமைப்பு எனப் பொருள் படும்;

(அ) இலங்கைக்கு வெளியேயுள்ள நாடுகள் அல்லது ஆள் புலங்கள்;

(ஆ) இலங்கைக்கு வெளியேயுள்ள நாடுகளின் அரசாங்கங்கள் அல்லது ஆள்புலங்கள்; அத்துடன்

(இ) மேலேயுள்ள எவற்றினதும் கூட்டு;

"பகிரங்க அலுவலர்" என்பது அரசியலமைப்பிலுள்ள அத்தகைய சொற்றொடருக்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"பகிரங்க உத்தியோகத்தர்" என்பது சனாதிபதியையும், பிரதம அமைச்சரையும், அமைச்சரவையின் அமைச்சர் ஒருவரையும், அரசியலமைப்பின் 45 ஆம் உறுப்புரையின்கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சர் ஒருவரையும் சபாநாயகரையும் பிரதிச் சபாநாயகரையும் குழுவின் தவிசாளரையும் குழுக்களின் பிரதித் தவிசாளரையும், பிரதி அமைச்சர் ஒருவரையும் மாகாணமொன்றின் ஆளுநரையும், மாகாணசபையொன்றின் அமைச்சர்கள் சபையின் அமைச்சர் ஒருவரையும், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரையும், உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரையும், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஒருவரையும் மேல்நீதிமன்ற நீதிபதி ஒருவரையும், தலைமைதாங்கும் அலுவலரையும் அல்லது முதனிலை நீதிமன்றத்தின் வேறு எவரேனும் உறுப்பினரையும் நீதி நிருவாகத்திற்காக அல்லது ஏதேனும் தொழில்பற்றி தீர்ப்பளிப்பதற்காக அல்லது வேறு பிணக்கிற்காக உருவாக்கப்பட்டு தாபிக்கப்பட்ட நியாயசபையையும் அல்லது நிறுவனத்தையும், அரசின் ஒவ்வொரு

உத்தியோகத்தரையும் அல்லது ஊழியரையும் அல்லது அரசியலமைப்பினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் சுயாதீன ஆணைக்குழுவின் எவரேனும் தவிசாளரையும், உறுப்பினரையும் அலுவலரையும், உத்தியோகத்தரையும் அல்லது ஊழியரையும் அல்லது அரசியலமைப்பினால் நியமிக்கப்பட்ட வேறு எவரேனும் இராஜதந்திர முகவரையும் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஏதேனும் ஆணைக்குழுவின் எவரேனும் தவிசாளரையும் உறுப்பினரையும், அலுவலரையும், உத்தியோகத்தரையும் அல்லது ஊழியரையும், அல்லது மாகாணசபையொன்றின், உள்ளூர் அதிகாரசபையின் அல்லது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின், அல்லது பங்குகளில் இருபத்தைந்து சதவீதத்துக்கு மேற்பட்டவை அரசாங்கத்தினால், வைத்திருக்கப்படு கின்றதான 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனி கள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி ஒன்றின் ஊதியம் பெற்றவராயினுஞ்சரி அல்லது பெறாதவராயினுஞ்சரி, எவரேனும் தவிசாளர், பணிப்பாளர், ஆளுநர், உறுப்பினர், அலுவலர், உத்தியோகத்தர் அல்லது ஊழியர், மாகாண பகிரங்க சேவை ஒன்றின் உறுப்பினர் ஒருவர், யூரர் ஒவ்வொரு வரும், ஒவ்வொரு உரிமம்பெற்ற நிலஅளவையியளாலரும் மற்றும் ஒவ்வொரு நடுத்தீர்ப்பாளரும் அல்லது ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது வேறு ஏதேனும் தகுதிவாய்ந்த பகிரங்க அதிகாரசபையால் முடிபுக்காக அல்லது அறிக்கைக்காக ஏதேனும் விடயம் அல்லது கருமம் காரியம் எந்த முடிபுக்காக அல்லது அறிக்கைகாக ஆளுக்கு ஆற்றப் பட்டுள்ளதோ அந்த வேறு ஆளையும் உள்ளடக்கும்:

ஆயினும், ஏதேனும் உள்ளூர் அதிகாரசபை, கலைக்கப் பட்டு அவ்வதிகாரசபையின் அலுவல்களின் நிருவாகம் எவரேனும் ஆளுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளவிடத்து, அந்த அதிகாரசபை கலைக்கப்படுவதற்கு நேர்முன்னர் இருந்தவரும் அத்தகைய கலைத்தலின் பின்னர் தொழிலில் தொடர்ந்திருப்பவருமான அதன் ஊழியர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின் நோக்கத்திற்குப் பகிரங்க உத்தியோகத்தர் ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

"காணிப்பதிவாளர் தலைமையதிபதி" என்பது, (117 ஆம் அத்தியாயமான) ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட காணிப்பதிவாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;

"உரித்துப்பதிவாளர் தலைமையதிபதி" என்பது 1998 அம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப்பதிவுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட உரித்துப்பதிவாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;

"அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனம்" என்பது, ஏதேனும் பகிரங்க அதிகாரசபை அல்லது பகிரங்க கூட்டுத்தாபனம் எனப் பொருள்படுவதுடன் பின்வருமாறுள்ள ஏதேனும் தனியார்துறை உருவகம் அல்லது ஏதேனும் குழுவையும் உள்ளடக்குகின்றது -

(அ) அத்தகைய ஏதேனும் பகிரங்க அதிகாரசபையில் அல்லது பகிரங்க கூட்டுத்தாபனம் பங்குகளின் இருபத்தைந்து சதவீதத்துக்கு குறையாதவற்றை கூட்டுமொத்தத்தில் அதில் வைத்திருக்கின்ற ஏதேனும் தனியார்துறை உருவகம் அல்லது தனியார்துறை குழு; அல்லது

(ஆ) ஒன்றுக்கு மேற்பட்ட அத்தகைய பகிரங்க அதிகார சபை அல்லது பகிரங்க கூட்டுத்தாபனப் பங்குகளின் இருபத்தைந்து சதவீத்திற்கு குறையாதவற்றை கூட்டுமொத்தத்தில் அதில் வைத்திருக்கின்ற ஏதேனும் தனியார்துறை உருவகம் அல்லது ஏதேனும் குழு;

"பாலியல் நாட்டம்" என்பது,

(அ) பாலியல் உடலுறவு; அல்லது

(ஆ) அந்தரங்க உடற்பகுதியை வெளிக்காட்டுதல் அல்லது தகவல் மற்றும் தொழிநுட்பவியல் தொடர்பாடலின் பயன்பாட்டின்மேல் அல்லது வேறு எவையேனும் வழிமுறைகளின் பயன்பாட்டின்மீது புரியப்படும் ஏதேனும் செயல்

*உட்பட்ட உடலுறவுக்கு இட்டுச் செல்லாத ஆனால், பாலியல் தன்மையினவான உடல்சார், சொல்சார் அல்லது சொல்சாராத நடத்தையாகவிருக்கும் அல்லது அமையும் ஏதேனும் செயல்;*

*"விளையாட்டு நிகழ்ச்சி" என்பது தனியாட்கள் அல்லது அணிகளுக்கிடையேயானதும் அல்லது விலங்கொன்று போட்டியிடுகின்றதும் அத்துடன் பொதுமக்களால் வழமையாக வருகைதருகின்றதும் அத்துடன் ஏதேனும் விளையாட்டு நிகழ்ச்சியை நடாத்துகின்ற ஏதேனும் விளையாட்டுக் குழுவின் அல்லது எந்த ஒழுங்குபடுத்தும் குழுவின் அமைப்புவிதி, விதிகள், அல்லது நடத்தைக்கோவைகளின்கீழ், விளையாட்டு நிகழ்ச்சி நடாத்தப்படுகின்றதோ அந்த அமைப்புவிதி, விதிகள் அல்லது நடத்தைக் கோவையினை உள்ளடக்குகின்ற விதிகளினால் ஆளப்படுகின்றதுமான ஏதேனும் விளையாட்டிலான ஏதேனும் நிகழ்ச்சி அல்லது போட்டி எனப் பொருள்படும்;*

*"பதவிநிலை உத்தியோகத்தர்" என்பது, 157 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அரசாங்கத்தின் அல்லது ஒரு மாகாணசபையின் அல்லது உள்ளூர் அதிகாரசபையின் எவரேனும் ஊழியர் அல்லது பகிரங்க கூட்டுத்தாபனத்தின் எவரேனும் ஊழியர் எனப் பொருள்படும்;*

*"பலிகுட்பட்டவர்" என்பது இச்சட்டத்தின்கீழ் தவறாக அமையும் செயல் அல்லது செய்யாமை காரணமாக உடல்ரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ, உணர்வுரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ அல்லது வேறு இழப்பு ரீதியாகவோ ஏதேனும் ஊறை, தீங்கை அடைந்துள்ள ஆள் எனப் பொருள்படும்;*

*"இடித்துரைப்பவர்" என்பது அத்தகைய இடித்துரைப்பவருக்கு உதவுகின்ற ஆட்கள், அத்தகைய இடித்துரைப்பவருக்கு ஆதரவான தகவலை வழங்கும் ஆட்கள், குடும்ப*

உறுப்பினர் அல்லது அத்தகைய இடித்துரைப்பவரில் தங்கியிருப்பவர் அல்லது அத்தகைய இடித்துரைப்ப வரின் குறிப்பிடத்தக்க முக்கியத்துவமுடைய வேறு எவரேனும் ஆள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டும்;

எழுபத்தைந்தாம் பிரிவின் நோக்கங்களுக்காக ’ சாட்சி’ என்பது–

(அ) எவரேனும் சட்ட வலுவுறுத்தல் அதிகாரிக்கு தகவலை வழங்கியுள்ளவரும் அல்லது அவரிடம் முறைப்பாட்டை செய்துள்ளவரும் அத்துடன் அத்தகைய தகவல் அல்லது முறைப்பாட்டின் அடிப்படையில், இச்சட்டத்தின்கீழான தவறொன் றின் சார்த்தப்பட்ட புரிகை சம்பந்தப்பட்ட புலனாய்வை அல்லது விசாரணையை தொடங்கக் கூடிய அல்லது தொடங்கியுள்ள அல்லது தொடங்கக்கூடிய சாத்தியமுள்ளவரமான எவரே னும் ஆள்;

(ஆ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றின் சார்த்தப் பட்ட புரிகை பற்றி ஆணைக்குழுவினால் அல்லது சட்டவலுவுறுத்தல் அதிகாரி ஒருவரினால் நடாத்தப்பட்ட புலனாய்வின் அல்லது விசாரணை யின்போது அத்தகைய ஆள் எக்கருமங்கள் தொடர்பில் வினவப்பட்டுள்ளாரோ அக்கருமங் களின் விபரம் ஒன்றைக் கொண்டுள்ள அல்லது கூற்றைச் செய்துள்ள எவரேனும் ஆள்;

(இ) ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட முறைப்பாடு ஒன்றிற்கு அல்லது தொடுக்கப்பட்ட ஏதேனும் சட்ட வழக்குக்கு ஆதரவளிக்கும் சத்தியக் கடதாசியை வழங்கியுள்ள அல்லது கூற்றைச் சமர்ப்பித்துள்ள எவரேனும் ஆள்;

(ஈ) ஆணைக்குழுவிற்கு தகவலை அல்லது ஏதேனும் தொடர்பாடலை வழங்கியுள்ள எவரேனும் ஆள்;

(உ) எவரேனும் ஆளினால் சட்டவலுவுறுத்தல் அதிகாரி ஒருவருக்கு அல்லது ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்ட தகவலின் அல்லது ஆக்கப்பட்ட கூற்றின் அடிப்படையில் அத்தகைய ஆளுக்கு எதிராக ஏதேனும் நீதிமுறை அல்லது நீதிமருவிய நீதிமுறை வழக்குநடவடிக்கைகளில் கூற்றை ஆக்குவதற்கு அல்லது சாட்சியம் அளிப்பதற்கென நீதிமன்றம் ஒன்றினால் அல்லது ஆணைக்குழு வினால் அத்தகைய ஆள் கட்டளைவிட்டு அழைக்கப்படுவார் என நம்புவதற்கான நியாய மான ஏதுக்களை கொண்டுள்ள எவரேனும் ஆள்;

(ஊ) நீதிமன்றம் அல்லது ஆணைக்குழு முன்னர் ஏதேனும் நீதிமுறையான அல்லது நீதிமருவிய நீதிமுறையான வழக்குநடவடிக்கையில் கூற்றொன்றை ஆக்குவதற்கு, சாட்சியம் அளிப்பதற்கு அல்லது ஏதேனும் ஆவணத்தை, அறிக்கையை அல்லது பொருளைக் காண்பிப்பதற்கு நீதிமன்றம் ஒன்றிடமிருந்து அல்லது ஆணைக்குழு ஒன்றிட மிருந்து அழைப்பாணைகளைப் பெற்றுக்கொண்ட எவரேனும் ஆள்; அல்லது

(எ) பகிரங்க அலுவலரொருவராக இருந்து, தவறொன்றின் சார்த்தப்பட்ட புரிகை பற்றி அல்லது அடிப்படை உரிமை ஒன்றின் சார்த்தப்பட்ட மீறுகைபற்றி அல்லது மனித உரிமை ஒன்றின் மீறுகை பற்றி புலனாய்வு செய்துள்ள எவரேனும் ஆள்;

எனப் பொருள்படும் என்பதுடன் குற்றச்செயல் ஒன்றிற்கு பலிக்குட்பட்டுள்ளவர், சிறுவராகவுள்ள சாட்சி, சிறுவராகவுள்ள சாட்சி ஒருவரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர், குடும்ப உறுப்பினர் ஒருவர் அல்லது அத்தகைய சாட்சியில் தங்கியிருப்பவர் அல்லது அத்தகைய

*ஆளிற்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தினை கொண்டுள்ள வேறு எவரேனும் ஆள், நிபுணத்துவசாட்சி, இச்சட்டத்தின்கீழ் தவறொன்றில் சார்த்தப்பட்ட புரிகை பற்றி சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவரின் சார்பில் நீதிமன்றம் அல்லது ஆணைக்குழு வின் முன்னர் சாட்சியமளிக்க கட்டளைவிட்டு அழைக்கப் பட்டுள்ள எவரேனும் ஆளையும் உள்ளடக்கும்; அத்துடன்*

“எழுத்திலான” என்பது, இலத்திரனியல் ரீதியில் தோற்று விக்கப்பட்ட ஆவணங்களையும் உள்ளடக்குதல் வேண் டும்.

பாகம் V

**நிலைபெயர்கால ஏற்பாடுகளும் பேணல்களும்**

*நீக்கங்களும் மற்றும் பேணல்களும், மற்றும் நிலைபெயர் கால ஏற்பாடுகளும்*

***163.*** *(1)* (இதனகத்துப்பின்னர் “நீக்கப்பட்ட சட்டங்கள்” எனக் குறிப்பீடு செய்யப்படும்)-

*(அ) 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டம்;*

(ஆ) *1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க,* சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துதல் சட்டம்; அத்துடன்

(இ) *(26 ஆம் அத்தியாயமான)* இலஞ்சச் சட்டம்.

என்பன இத்தால் நீக்கப்படுகின்றன.

*(2) 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க,* இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் நீக்கம் எவ்வாறிருப்பினும் -

(அ) 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதும் மற்றும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அத்தகையவாறாக பணியாற்றுகின்றது மான ஆணைக்குழுவானது புதிய ஆணைக்குழு ஒன்று இச்சட்டத்தின் பாகம் I இன் கீழ் தாபிக்கப்படும் வரை, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆணைக்குழு வொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடன்முன்னர் பதவிவகிக்கும் உறுப்பினர்கள் இச்சட்டத்தின்கீழ் அத்தகையவர்களாக நியமிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படும்வரை தொடர்ந்து பதவி வகித்தலும் வேண்டும்;

(ஆ) நீக்கப்பட்ட சட்டங்களின்கீழ் ஆக்கப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடன்முன்னர் நாளன்று வலுவில் இருக்கின்றவையும் மற்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக விராதவையுமான எல்லா ஒழுங்குவிதிகளும் மற்றும் விதிகளும் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளாகவும் விதிகளாகவும் இருப்பதாகக் கருதப் படுதல் வேண்டும் என்பதுடன் தொடர்ந்தும் செல்லு படியானதாக இருத்தலும் வேண்டும்;

(இ) நீக்கப்பட்ட சட்டங்களின்கீழ் ஆக்கப்பட்டவையும் மற்றும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடன்முன்னரான நாளன்று உள்ளவையுமான எல்லா ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும் மற்றும் வேறு சாதனங்களும் இச்சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் மற்றும் வேறு சாதனங்களாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஈ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடன்முன்னரான நாளன்று முடிவுறாதுள்ளதும் 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலஞ்சம்

அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக் குழுவிற்கு எதிராக தொடுக்கப்பட்ட எல்லா துடர்ச்சி களும், வழக்குகளும் மற்றும் வேறு சட்டவழக்கு நடவடிக்கைகளும் அல்லது தொடங்கப்பட்ட விசாரணைகள் அல்லது புலனாய்வுகள் இச்சட்டத் தின்கீழ் ஆணைக்குழுவினால் அல்லது ஆணைக்குழு விற்கு எதிராக தொடுக்கப்பட்ட எல்லா துடர்ச்சிகளும் வழக்குகளும் மற்றும் புலனாய்வுகளும் வேறு சட்ட வழக்கு நடவடிக்கைகளும் அல்லது தொடங்கப்பட்ட விசாரணைகளும் அல்லது புலனாய்வுகளும் ஆக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அவை இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட துடர்ச்சிகள், வழக்குகள் மற்றும் வேறு சட்ட வழக்கு நடவடிக்கைகள் அல்லது தொடங்கப்பட்ட விசாரணைகள் அல்லது புலனாய்வுகள் என்றாற்போன்று நியமிக்கப்பட்ட தேதியின் பின்னர் தொடரப்படலாம்;

(உ) 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டவையும் மற்றும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு உடன்முற்போந்த நாளன்று உள்ளவையுமான இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்ட எல்லா அசையும் மற்றும் அசையா ஆதனம், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயன்கொடுக்கும் வகையில் ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்படல் வேண்டும்;

(ஊ) நீக்கப்பட்ட சட்டங்களின் ஏற்பாடுகளின்கீழ் தொடுக்கப் பட்ட எல்லா மீறல்கள் அல்லது வழக்கு நடவடிக்கைகள், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் அல்லது விதிகள் நீக்கப்பட்ட சட்டங்களின்கீழ் புரியப்பட்ட தவறுகளாக அல்லது தொடங்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகளாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க விளங்கப்படுதலும் வேண்டும்;

(எ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவின் எல்லா அக்கறைகள், உரிமைகள், சொத்துக்கள், கடப்பாடுகள், தனிசுகள் மற்றும் பொறுப்புக்கள் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயன்கொடுக்கும் வகையில் ஆணைக் குழுவின் அக்கறைகள், உரிமைகள், சொத்துக்கள், கடப்பாடுகள், தனிசுகள் மற்றும் பொறுப்புக்கள் ஆகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஏ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் பதவி வகிக்கும் 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வ தற்கான ஆணைக்குழுவின் எல்லா அலுவலர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் அவர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தொழிலின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளைவிட அனுகூலம் குறைந்தனவாக விராத, நியதிகளின்மீது இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அலுவலர்களாக மற்றும் உத்தியோகத்தர்களாக இருப்பதற்கு இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனறும் வகையில் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் ஆணைக்குழு வின் சேவையில் சேருவதற்கு அவர்கள் விருப்பத் தெரிவு கொண்டுள்ளார்களா என்பதனை ஆணைக் குழுவின் தாபனத்தின் மூன்று மாதங்களில் அறிவித் தல் வேண்டும்.

ஆயின்,

(i) ஆணைக்குழுவின் சேவையில் சேருவதற்கு விருப்புத் தெரிவிக்கின்ற ஒவ்வொரு அலுவல

*ரும் உத்தியோகத்தரும் ஓய்வூதியம் அல்லது ஏனைய இளைப்பாற்று நன்மைகளை மட்டுமே கணக்கீடு செய்யும் நோக்கங்களுக்காக 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலஞ்சம் மற்றும் ஊழல்கள் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு வில், அவ்வாணைக் குழுவினால் தொழிலுக் கமர்த்தப்பட்ட தேதியிலிருந்து இச்சட்டத் தின் கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவில் அவருடைய சேவைக் காலப்பகுதி முடிவுறும் வரை, பகிரங்க அலுவலராக பதவியில் தொடர்ந்திருப்பதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் பகிரங்க அலுவல ரொருவராக அவரது முன்னைய சேவைக் காலப்பகுதிக்கு ஆணைக் குழுவிலான அவரது சேவைக்காலப்பகுதி சேர்க்கப் படும்போது இருபது ஆண்டுகளாக அல்லது அதற்கு மேற்பட்டதாக இருப்பின், ஆணைக்குழுவிலான அவரது சேவைக் காலப்பகுதி முடிவுறுவதன் மேல், ஓய்வூதியம் பற்றிய குறிப்புகள் உட்பட வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய அலுவலர்களுக்கும் உத்தியோ கத்தர்களுக்கும் ஏற்புடையனவாகக் கூடிய அவரின் ஓய்வூதியம் மற்றும் இளைப்பாற்று நன்மைகள் வழங்கப்படுவதற்கு தகவுடைய வராதலும் வேண்டும்;*

(ii) *ஆணைக்குழுவின் சேவையிலிருந்து தன் னிசையாகப் பதவிவிலகுவதற்கு விருப்புத் தெரிவிக்கின்ற ஒவ்வொரு அலுவலரும் உத்தியோகத்தரும் அமைச்சரினால் விதித் துரைக்கப்படவேண்டியவாறான தன்னிச்சை யான ஆட்குறைப்புத் திட்டத்தின் நியதி களின்படி செலுத்தப்படவேண்டியவாறான அத்தகைய நட்டஈட்டுக்கு உரித்துடையவ*

ராதல் வேண்டுமென்பதுடன் ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புகள் உட்பட ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய அலுவலர்களுக்கும் உத்தியோகத் தர்களுக்கும் ஏற்புடையனவாகக்கூடிய ஓய்வூதியம் மற்றும் இளைப்பாற்று நன்மை களுக்கும் உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.;

(3) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றுநான்காம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழு சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவினால் தொடங்கப்பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவை யுமான நீக்கப்பட்ட சட்டங்களின்கீழான எல்லாப் புலனாய்வுகளும், இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவினால் தொடங்கப்பட்ட புலனாய்வுகளாகக் கருதப்படுதல் வேண்டும், என்பதுடன் அத்தகைய எல்லாப் புலனாய்வுகளும் ஆணைக்குழுவின் பணிப்பின்மீது அவை தொடங்கப்பட்டு தொடரப்பட்ட புலனாய்வுகளின்போது ஆணைக்குழுவிற்கு கொடுத்துதவப்பட்ட எல்லாக் கூற்றுக்களும் ஆவணங்களும் அல்லது அதன் சான்றுப் படுத்தப்பட்ட பிரதிகளும் இச்சட்டத்தின் கீழ் அத்தகைய புலனாய்வுகள் நடாத்தப்படும் வழக்கு நடவடிக்கை தொடரப்பட்டு இருந்தன என்றாற்போன்று 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல்பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகளில் ஏல்தகவுடையவாதல் வேண்டும்.

(4) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றுநான்காம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழு சட்டத்தினதும் (26 ஆம் அத்தியாயமான) இலஞ்ச சட்டத்தினதும் மற்றும் 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துகைச் சட்டத்தினதும் நீக்கம் எவ்வாறிருப்பினும் -

(அ) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவிற்கான ஒவ்வொரு குறிப்பீடும் இச்சட்டத்திற்கான குறிப்பீடு ஒன்றாக பொருள் அமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்;

(ஆ) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் (26 ஆம் அத்தியாயமான) இலஞ்ச சட்டத்திற்கான ஒவ்வொரு குறிப்பீடும் இச்சட்டத்தில் அடங்கியுள்ள நேரொத்த ஏற்பாடுகளை குறிப்பீடு செய்கின்றவாறு பொருள் அமைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துதல் சட்டத்திற்கான ஒவ்வொரு குறிப்பீடும் இச்சட்டத்திற்கான குறிப்பீடு ஒன்றாக பொருளமைத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**164.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

**அட்டவணை அ**

[பிரிவுகள் 41]

| | | | |
|---|---|---|---|
| 1. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் | - | வலிந்து பறித்தல் |
| | 372 மற்றும் 378 ஆம் பிரிவுகள் | - | வலிந்து பறித்தல் |
| 2. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 386 ஆம் பிரிவு | - | ஆதனத்தின் நேர்மையற்ற கையாடல் |
| 3. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 388 ஆம் பிரிவு | - | குற்றவியல் நம்பிக்கை துரோகம் |

| | | | |
|---|---|---|---|
| 4. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 389 ஆம் பிரிவு | - | குற்றவியல் நம்பிக்கை துரோகத்துக்கான தண்டனை |
| 5. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 390 ஆம் பிரிவு | - | காவுநர் ஒருவரினாலான குற்றவியல் நம்பிக்கை துரோகம் |
| 6. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 391 ஆம் பிரிவு | - | எழுதுவினைஞர் ஒருவரினாலான அல்லது சேவையாளர் ஒருவரினாலான குற்றவியல் நம்பிக்கைத் துரோகம் |
| 7. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 392 ஆம் பிரிவு | - | பகிரங்க சேவையாளர் ஒருவரினாலான அல்லது வங்கியாளர்களினாலான, வணிகரினாலான அல்லது முகவரினாலான குற்றவியல் நம்பிக்கைத் துரோகம் |
| 8. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 392அ என்னும் பிரிவு | - | பணம் அல்லது பணமீதி தொடர்பில் பகிரங்க சேவையாளர் ஒருவரினாலான குற்றவியல் நம்பிக்கைத் துரோகம் |
| 9. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 398 இலிருந்து 403 ஆம் பிரிவு வரை | - | ஏமாற்றுதல் |
| 10. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 406 ஆம் பிரிவு | - | நேர்மையின்மை அல்லது பிரதிபயன்பற்றி பொய்யானவற்றைக் கொண்டுள்ள அறுதி உறுதியின் மோசடியான உறுதி நிறைவேற்றம் |
| 11. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 452 ஆம் பிரிவு | - | போலி ஆவணம் |

| | | | |
|---|---|---|---|
| 12. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 453 ஆம் பிரிவு | - | பொய்யான ஆவணம் ஒன்றை ஆக்குதல் |
| 13. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 454 ஆம் பிரிவு | - | போலி ஆவணத்திற்கான தண்டனை |
| 14. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 455 ஆம் பிரிவு | - | நீதிமுறை பற்றிய நீதிமன்றம் ஒன்றின் அல்லது பிறப்புகள் பற்றிய பகிரங்க பதிவேடு ஒன்றின் போலிப் பதிவேடு முதலியன |
| 15. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 457 ஆம் பிரிவு | - | ஏமாற்றும் நோக்கத்திற்கான போலி ஆவணம் |
| 16. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 458 ஆம் பிரிவு | - | போலியான ஆவணம் |
| 17. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 459 ஆம் பிரிவு | - | போலியான ஆவணம் ஒன்றினை நேர்மையாகப் பயன்படுத்துதல் |
| 18. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 462 ஆம் பிரிவு | - | நேர்மையாக பயன்படுத்தும் உட்கருத்துடன் போலியான பதிவேடு அல்லது பெறுமதிவாய்ந்த பிணையம் அல்லது போலியாக இருப்பதாக அறியப்படும் உயில் உடைமையில் வைத்திருத்தல் |
| 19. | (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் 467 ஆம் பிரிவு | - | கணக்குகளைப் பொய்யாக்குதல் |

**அட்டவணை ஆ**

[*பிரிவு 41*]

1. *(19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் XI ஆம் அத்தியாயத்தின் கீழான ஏதேனும் தவறு;*

2. *1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பகிரங்க ஆதன சட்டத்திற்கெதிரான தவறுகளின்கீழான ஏதேனும் தவறு;*

3. *2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கணணி வழிக் குற்றச் சட்டத்தின் கீழான ஏதேனும் தவறு.*

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*